# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தரம் - 12

இந்த ஆசிரியர் வழிகாட்டியானது, தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவையினது அனுமதிக்கு கட்டுப்பட்ட நிலையில் முன்வைக்கப்படுகின்றது.

சிங்களமொழித் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**
**தரம் 12 - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**

© **தேசிய கல்வி நிறுவகம்**
முதற் பதிப்பு 2013

ISBN

ஊடகக் கல்விச் செயற்றிட்டம்
சிங்களமொழித் துறை
மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

# முன்னுரை

2007 ஆம் ஆண்டில் 6 ஆம் 10 ஆம் தரங்களில் அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சி மைய கற்றல் - கற்பித்தல் பிரவேசம் முறையே 7, 8, 9 ஆம் தரங்களின் கலைத்திட்டத்திலும் பயன்படுத்தப்பட்டதுடன், 2009 இல் அதனை கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புக்களுக்கான கலைத்திட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதில் தேசிய கல்வி நிறுவகத்தின் கலைத்திட்ட அமைப்புக் குழு வெற்றியடைந்துள்ளது. எனவே, 12 – 13 ஆம் தரங்களின் பல்வேறு பாடங்களிலுமான பாடத்திட்டங்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூல்கள் மாணவர்களிடையே மேம்படுத்த வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் பற்றிய விரிவான தகவல்களை முன்னெடுத்துள்ளது. இத் தகவல்கள் தம் பாடம் தொடர்பான கற்றல் - கற்பித்தலின் போது ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

க.பொ.த உயர்தரப் பாடங்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரித்தலில் கலைத்திட்ட அமைப்பாளர்கள் கனிஷ்ட இடைநிலைக் கலைத்திட்டத்தையும், சிரேஷ்ட இடைநிலைக் கலைத் திட்டத்தையும் தயாரிக்கும் போது பின்பற்றிய பிரவேசத்தை விட மாற்றமான ஒரு பிரவேசத்தைக் கையாண்டுள்ளனர் என குறிப்பிட விரும்புகின்றேன். 6, 7, 8, 9, 10, 11 ஆம் தரங்களில் பாட விடயங்களைக் கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய கற்றல் - கற்பித்தல் பிரவேசம் தொடர்பாக ஆசிரியர்கள் ஒரு மாதிரிக்குள் வழிப்படுத்தப்பட்டாலும் க.பொ.த உயர்தரப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தயாரிப்பின் போது ஆசிரியர்கள் தம் விருப்பப்படி செயலாற்றவும் சுதந்திரமாக நடக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் போது ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுவது ஒவ்வொரு பாட அலகிலுமுள்ள தேர்ச்சிகளை அல்லது தேர்ச்சி மட்டங்களை விருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள கற்றல் முறைகளில் தாம் விரும்பிய முறையைப் பயன்படுத்துவதாகும். தாம் பயன்படுத்தும் கற்பித்தல் முறையைத் திருப்தியாகவும் விளைதிறனாகவும் கையாண்டு எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களை அடைந்து கொள்வது ஆசிரியரினால் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய பணியாகும். இத்தகைய சுதந்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது உயர்தரப் பரீட்சையின் முக்கியத்துவம் மற்றும் அப்பரீட்சை குறித்த சமூக அக்கறை, உணர்ச்சி என்பவற்றைக் கருத்திற் கொண்டாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, ஆசிரியர்களுக்கான ஓர் அரிய கைந்நூலாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ள தகவல்கள், முறைகள், அறிவுறுத்தல்கள் என்பன எமது சிறார்களின் அறிவுக் கண்களைத் திறப்பதற்கு ஆசிரியர்களை வழிப்படுத்தும் என நம்புகிறேன்.

**பேராசிரியர். லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்

# முகவுரை

இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2009 முதல் தரம் 12 இல் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை ஒழுங்கமைத்துக் கொள்ள ஆசிரியர்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.

இந் நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டத்தில் இருந்து வேறுபட்டதாகும். இதிலுள்ள தேர்ச்சிகளை இதே தரத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. சிலவேளை இதற்கு அதிக காலமெடுக்கலாம். ஆயினும் தேர்ச்சி மட்டங்களையும் ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தின் கீழும் உள்ள கற்றற் பேறுகளையும் இதே தரத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே, இத்தரத்துக்கான பாடங்களைத் திட்டமிடும் போது தேர்ச்சி மட்டங்களும் கற்றற் பேறுகளும் பெரிதும் பயன்படும். இக் கற்றற் பேறுகள் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் ஒவ்வொரு குறிக்கோளையும் அமைத்துக் கொள்ளவும் வகுப்பறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டுச் செயற்பாட்டுக்கான நியதிகளை அமைத்துக் கொள்ளவும் பெரிதும் பயன்படும். இப்பாடத்தைக் கற்பதில் பயன்படுத்தக்கூடிய மேலதிக புத்தகங்கள், இணையத்தளங்கள் பற்றி மாணவர்களுக்கு அறிவுறுத்தவும் இவ்வாசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி உங்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.

இந்நூலிலுள்ள செயற்பாடுகள் நீங்கள் ஓர் ஆக்க ரீதியான ஆசிரியராகச் செயற்படும் எதிர்பார்ப்புடன் மாதிரிகளாக முன்வைக்கப்பட்டவை என்பதைக் கவனத்திற் கொள்ளவும். ஆசிரியர் மைய வகுப்பறைச் செயலொழுங்கை, மாணவர் மையமாக மாற்றுவதே விஷேடமாக எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, மாணவர்கள் பல்வேறு நூல்களையும் இணையத்தளங்களையும் பயன்படுத்தி தேடலில் ஈடுபடும் வாய்ப்புக்களை முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உருவாக்கவேண்டும். கற்பித்தலின் போது மரபு ரீதியாக குறிப்புக்களை வழங்குவதைத் தவிர்த்து கவர்ச்சிகரமான நவீன கோட்பாடுகளை முன்வைக்க வேண்டும். அதற்காக தொழில் நுட்பத்தை முடியுமான அளவு பயன்படுத்தும் வகையிலான தொடர்பாடல் உபகரணங்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் செலுத்த வேண்டும். முடியுமான அளவு தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் விதமான ஆக்கத்திறன் தன்மை அவசியமாகும்.

தரம் 12 இல் இப்பாடத்தைக் கற்பிக்க ஆரம்பிக்கும் போதே பாடத்திட்டத்தை நன்கு தெளிவுபடுத்துங்கள். வருடம் பூராவும் நீங்கள் மேற்கொள்ள இருக்கும் கற்பித்தல் திட்டத்தை அறிமுகப்படுத்துவது மாணவர்களின் ஊக்கத்தை அதிகரிக்கும். முழுப் பாடத்திட்டத்தையும் நிறைவு செய்து கொள்ளும் வகையில் மாணவர்கள் பாடசாலை மீது கவரப்படுவர். இக் கலைத்திட்ட மறுசீரமைப்பு வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பாடத்திட்டத்தையும் உத்தேச செயலொழுங்குகளையும் உங்கள் ஆக்கத்திறன் ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

இவ் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த அனைத்து அறிஞர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தேசிய கல்வி நிறுவக உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. இப்பணிக்கு வழிகாட்டிய பணிப்பாளர் நாயகம் பேராசிரியர். லால் பெரேரா அவர்களுக்கும் அச்சுப்பணிகளைப் பொறுப்பேற்று நிறைவு செய்த கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் உட்பட ஆளணியினருக்கும் எனது விஷேட நன்றிகளைச் சமர்ப்பிக்கிறேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான நேர் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை ஊடகக் கல்வி செயற்றிட்டத் தலைவருக்குக் கிடைக்கச் செய்தால் நன்றியுடையவனாய் இருப்பேன்.

**விமல் சியம்பலாகொட**
உதவிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

# அறிமுகம்

தரம் 12 இன் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்திட்டத்தின் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கை நிறைவு செய்து கொள்வதற்காக ஆசிரியர்களுக்குச் சரியான வழிகாட்டலை வழங்குவது இந்நூலின் நோக்கமாகும். இதனை முறையாகப் பயன்படுத்துவதற்காக பின்வரும் விடயங்கள் தொடர்பான விளக்கம் அனைத்து ஆசிரியர்களிடமும் இருத்தல் வேண்டும்.

(1) தரம் 12, 13 இற்கான தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்திட்டம் பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது 2008 ஆம் ஆண்டிலாகும். அதற்கு முன்பு 2006 ஆம் ஆண்டில் தரம் 10 இலும் 2007 இல் தரம் 11 இலும் இப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும், க.பொ.த உயர்தரத்தில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்ற பாடத்தைக் கற்பதற்கு அதனை க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்ற அவசியம் இல்லை. தரம் 12 இல் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் 11 ஆம் தரங்களின் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்ற புத்தகங்களை வாசிக்கக் கொடுப்பது பயனுடையதாகும்.

(2) தரம் 12, 13 இற்கான தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடம் ஒரு சமூகவியற் பாடமாகும். கற்பித்தல், நேரசூசி அமைக்கும் போது அதனை சமூகவியற் பாடப் பரப்பின் கீழான கலைப் பாடங்களுடன் இணைக்க வேண்டும். எவ்வாறாயினும் இப்பாடத்தை அழகியல், வர்த்தக, கலைப் பிரிவுகளின் ஒரு பாடமாகத் தெரிவு செய்வதற்கு சுற்றுநிருபங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3) தரம் 12,13 இற்கான தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்திட்டம் தயாரிக்கப் பட்டிருப்பது நான்கு குறுக்குக் கலைத்திட்டக் கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டாகும். அதாவது சௌஜன்யம், அபிவிருத்தி, ஊடக அறிவு, தொடர்பாடற் தேர்ச்சி என்பவையாகும். அதன்படி கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் கருப்பொருள்களுக்கேற்ற உதாரணங்கள், மாதிரிகள், செய்முறைச் செயற்பாடுகள், ஒப்படைகள் என்பவற்றை உருவாக்குவதனூடாகக் குறிப்பிட்ட கருப்பொருள்களின் உள்ளடக்கத்தை நிறைவேற்றிக் கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

(4) எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்துக்கு மாணவர்களைக் கொண்டு செல்வதும் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி மட்டங்களை அடைவதற்குத் தேவையான மனப்பாங்கு விருத்தியையும் வாழ்வதற்காக தொடர்பாடலையும் ஊடகத் தேர்ச்சியையும் விருத்தி செய்து கொள்ள உதவி செய்வதும் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. பாடத்திட்டத்தின் மொத்தத் தேர்ச்சிகளையும் அடைந்து கொள்ள முடியுமாவது உரிய முறையில் சரியான அறிவைப் பெற்றுக் கொள்வதன் மூலமாகவும் உரிய மனப்பாங்கு, திறன்களை விருத்தி செய்து கொள்வதனாலுமாகும்.

(5) மாணவர்களிடம் மொத்த வளர்ச்சி அடையப்பட வேண்டுமானால், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் வகுப்பறைக்குள்ளும் வகுப்பறைக்கு வெளியேயும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அத்துடன் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயுமான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வெளியக வளவாளர்களைப் பயன்படுத்துவதன் மூலம் உண்மையான பயனுள்ள அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்துதல் வேண்டும். இது ஆசிரியருக்கு கிடைக்கும் ஒரு மேலதிக வசதியாகும்.

(6) ஒவ்வொரு நாளும் ஆசிரியர் குறிப்பிட்ட வகுப்பறைக்குச் செல்லும் போது தயாரிக்கப்பட்ட செய்முறை ரீதியான கற்றல் - கற்பித்தல் பிரவேசங்களுடன் செல்ல வேண்டும். மாணவர்கள் ஆசிரியரின் வருகையை எதிர்பார்த்திருக்கும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும். தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தைக் கற்பது மாணவர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக அமைவதற்கு ஆசிரியர் விஷேட கவனத்துடனும், ஆக்கச் சிந்தனையுடனும் கருமமாற்ற வேண்டும். ஒவ்வொரு நாளும் பாடம் முடிவடையும்போது தான் அன்று பயன்படுத்திய ஆக்கத்திறன் வாய்ந்த முறைகள், விதங்கள் பற்றிய ஓர் அறிக்கையை வைத்திருப்பதன் மூலம் அடுத்த வருடத்தில் மேலும் ஆக்கத்திறன் வாய்ந்த முறைகளைக் கையாளக் கூடியதாக இருக்கும்.

(7) பாடத்துடன் தொடர்பான இணைந்த பாடச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்காக பாடசாலை ஊடகக் கழகமொன்றை அமைத்து நடத்த வேண்டும். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ளபடி பல்வேறு இணைப் பாடச் செயற்பாடுகளில் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்குதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

(8) விஷேடமாக ஊடகக் கல்வி வாரம் என்ற வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதும் ஊடக வேலைப் பயிற்சி வேலைத்திட்டத்தில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்வதும் அவசியமாகும். அதற்கான அறிவுறுத்தல்கள் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

பொதுவாக, ஆசிரியர் கவனம் செலுத்தப்பட வேண்டியது புதிய செயற்பாட்டுக் கற்றல் அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்காகும்.

**பந்துல பீ. தயாரத்ன**
ஊடகக்கல்விச் செயற்றிட்டத் தலைவர்

**2013**

**நூலாக்கக் குழு**

| | |
|---|---|
| **பணிப்பு:** | பேராசிரியர். லால் பெரேரா<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **ஆலோசனை:** | திரு.விமல் சியம்பலாகொட<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **நெறிப்படுத்தல்:** | திரு.பந்துல பீ. தயாரத்ன<br>ஊடகக்கல்விச் செயற்றிட்டத் தலைவர்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **உதவி:** | திருமதி பி.டி.எம். ரத்னாயக்க<br>உதவிச் செயற்றிட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம் |
| **வளப்பங்களிப்பு:** | பேராசிரியர். சந்திரசிரி ராஜபக்ச<br>பீடாதிபதி, களனிப் பல்கலைக்கழகம் |
| | பேராசிரியர் சனத்த மகேந்திர<br>வெகுஜன ஊடகவியல் பீடம், களனிப் பல்கலைக்கழகம் |
| | பேராசிரியர். தம்மிக கங்காளந்த திஸாநாயக்க<br>சிங்களம் மற்றும் வெகுஜன ஊடகவியல் பீடம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.டியுடர் வீரசிங்க<br>வளாகத்தலைவர், ஸ்ரீபாலி வளாகம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| | கலாநிதி. மாப்பா திலகரத்ன<br>விஷேட விரிவுரையாளர்<br>வெகுஜன ஊடகவியல் பீடம், களனிப் பல்கலைக்கழகம் |
| | திரு.கமல் வலேபொட<br>பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம் |
| | கலாநிதி.அஜந்தா ஹப்புஆராச்சி<br>சிரேஷ்ட விரிவுரையாளர் |

வெகுஜன ஊடகவியல் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

**எழுத்தாளர் குழு:**

திரு. ஆனந்த பண்டார அபேசிங்க, கைகாவல ம.வி – மாத்தளை
திரு. கே.எம்.டி.பி திசாநாயக்க, மகாசேன தே.பா - நிக்கவரட்டிய
திருமதி. கங்கா ஹரோசினி சமரசேகர, குருவிட்ட - ம.ம.வி குருவிட்ட
திருமதி. ரேணுகா பிரியதர்சினி, தேசிய பாடசாலை - கடுகண்ணாவ
திருமதி. வாசனா பிரியங்கனி, புனித சிறுவர் மகளிர் கல்லூரி - பத்தேகம
திருமதி. அரோஷா மலலசேகர, கிரில்லவல, ம.ம.வி. கிரில்லவல

**தமிழ் மொழி பெயர்ப்பு:**

எம்.எம்.எச். ஹஸன்
பிரதம செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு பெற்ற)
தேசிய கல்வி நிறுவகம்

**கணினி வடிவமைப்பு:**

திருமதி. எப்.ஏ.எப். நிஸ்மியா
தொழினுட்ப உதவியாளர்

திருமதி.நாதியா ஹிஸான்
தொழினுட்ப உதவியாளர்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

**பதிப்பாசிரியர் (தமிழ் மொழி)**

வ.விஜயலெட்சுமி
பணிப்பாளர்
தமிழ்மொழித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | iii |
| முகவுரை | iv |
| அறிமுகம் | v-vi |
| நூலாக்கக் குழு | vii-viii |
| பாடத்திட்டம் (சுருக்கமானது) | 01 |
| குறுக்கு (கிடை)க் கலைத்திட்டக் கருப்பொருள் | 01 |
| எதிர்பார்க்கப்படும் விருத்திகள் | 02 |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 03 |
| பாட விடயங்களை விளங்கிக் கொள்வதற்குரிய குறிப்புக்களும் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளும் | 04 - 90 |
| கற்றல் - கற்பித்தற் செயலொழுங்குக்கான மாதிரிச் செயற்பாடுகள் | 91 - 106 |
| பாடசாலை மட்ட மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 107 - 108 |



**பின்னிணைப்பு**


| | |
|---|---|
| 1. உங்கள் பாடசாலையில் ஓர் ஊடகக் கழகத்தை ஆரம்பியுங்கள். | 109 |
| 2. ஊடகப் பயிற்சிக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் பிள்ளைகளைப் பங்கு கொள்ளச் செய்யுங்கள் | 118 |
| 3. ஊடகக் கல்வி - ஒரு வார நிகழ்ச்சித் திட்டம் | 120 |
| 4. யுனெஸ்கோ உலகப் புத்தக தின நிகழ்ச்சித் திட்டம் | 121 |
| 5. எமது பாரம்பரியம் - பாடசாலை நிலையம் | 122 |

## தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் - தரம் 12

| அலகு / பாடப்பரப்பு | தேர்ச்சி |
|---|---|
| 1. தொடர்பாடல் கற்றல் பிரவேசம் | 1.0 தொடர்பாடலின் இயல்பு, செயலொழுங்கு வகைகளையும் விதங்களையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார். |
| 2. தொடர்பாடலும் சமூகமும் | 2.0 தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையே யுள்ள தொடர்பையும் சமூக வகிபாகத்தை யும் நவீன உலகமயமாக்கல் சமூகத்தின் தொடர்பாடற் போக்குகளையும் தர்க்க ரீதியாக விளக்குவார். |
| 3. தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும் | 3.0 உள்ளக ஆளிடை, கூட்டு மற்றும் உபகரணங்களுடன் கூடிய தொடர்பாடற் தேர்ச்சிகளை வெளிப்படுத்துவார். |
| 4. மொழியும் வெகுஜன ஊடகப் பயன்பாடும் | 4.0 மொழியின் இயல்பு பற்றி விளக்கி, பல்வேறு ஊடகங்களில் மொழி பயன்படுத்தப்படு மாற்றை ஒப்பீட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்வார். |
| 5. பொதுசனத் தொடர்பு (பொது மக்கள் தொடர்பு) | 5.0 பொதுசனத் தொடர்புத் திட்டமொன்றை நடை முறைப்படுத்துவதற்காகப் பல்வேறு முறை களையும் கருவிகளையும் பயன்படுத்து வதைச் செய்து பார்ப்பார். |
| 6. ஊடகக் கலாசாரம் | 6.0 ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, பரவல், செல்வாக்கு, சந்தையுடனான தொடர்பு என்பவற்றை விளக்குவார். |

## குறுக்கு(கிடை)க் கலைத்திட்டக் கருப்பொருள்கள்
## Cross – Curricula Themes



# எதிர்பார்க்கப்படும் விருத்திகள்

## அறிவு

1. தொடர்பாடல் ஊடகங்களின் அடிப்படைச் செயலொழுக்குகளுடன் தொடர்புடைய பல்வேறு பாட விடயங்களை அறிதல்.
2. சகவாழ்வுடன் கூடியதாக வாழ்வதுடன் தொடர்பான பாடப்பரப்புகளை அறிதல்.
3. தொடர்பாடல், ஊடகப் பயன்பாடு தொடர்பான விடயங்களை அறிதல்.
4. அபிவிருத்திக்கான தொடர்பாடலைப் பயன்படுத்துவது தொடர்பான பல்வேறு விடயங்களை அறிதல்.
5. தொடர்பாடல் ஊடகத் தேர்ச்சிகள் தொடர்பான பல்வேறு விடயங்களை அறிதல்.

## மனப்பாங்கு

1. தொடர்பாடலையும் ஊடகச் செயல்களையும் உரிய முறையில் அறிந்து கொள்ளுதல் அனைவருக்கும் அவசியம்
2. சகவாழ்வுடன் கூடியதாக வாழ்வதற்காக தொடர்பாடற் தேர்ச்சி அனைவருக்கும் தேவை
3. தொடர்பாடல் மற்றும் ஊடகப் பயன்பாட்டுக்கான அறிவு அவசியம்.
4. தொடர்பாடலுக்கான ஊடகப் பாவனை ஒரு சவாலான விடயம்.
5. தொடர்பாடல் ஊடகத்திறன் விருத்தி என்பது தனிப்பட்ட ஒரு விடயம்.

## திறன்

1. வாழ்வதற்குத் தேவையான அடிப்படைத் தொடர்பாடற் திறன்கள்.
2. ஏனையவர்களுடன் சகவாழ்வுடன் கருமமாற்றுவதற்குத் தேவையான முறைகள் தொடர்பான திறன்கள்.
3. தொடர்பாடல், ஊடக ஒளிவு மறைவின்மை காணும் மற்றும் தெரிவு செய்யும் திறன்.
4. அபிவிருத்திக்காகத் தொடர்பாடலை பயன்படுத்தும் ஆக்கத்திறன்.
5. தொடர்பாடல் மற்றும் ஊடகப் பணிகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான தனிப்பட்ட திறன்.

## பாடத்திட்டத்தின் பிற நோக்கங்கள்

1. தேசிய அபிவிருத்திச் செயலொழுங்கில் நேரடியாகப் பங்கு பற்றுவதற்குரிய அபிவிருத்தியை மையமாகக் கொண்ட தொடர்பாடல், ஊடகக் கற்கைத் தேர்ச்சிகளை கட்டிளமைப் பருவத்தினரிடையே விருத்தி செய்தல்.
2. எதிர்காலப் பிரஜைகளாக வரும் இன்றைய இளஞர்களிடையே ஊடக தகவல் அறிவை விருத்தி செய்தல்.
3. பயனுறுதியுள்ள குடும்ப அலகு மற்றும் சமூகத் தொகுதியில் சகவாழ்வுடன் வாழ்வதற்குத் தேவையான தொடர்பாடல் ஊடகத் தேர்ச்சியை விருத்தி செய்தல்.
4. கூட்டு மொத்தமாக உயர் ஊடகத் தேர்ச்சிகளுடன் கூடிய மனித நேயமுள்ள, உயிர்ப்பான பிரஜைகளை பாடசாலையில் இருந்து சமூகத்துக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அத்திவாரத்தை இடல்.

# பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

1. பாடசாலை ஊடகக் கழகமொன்றை (School Media Club) செயற்பாட்டு ரீதியாக நடத்திச் செல்லல்.
2. அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஊடக வேலைப் பயிற்சி வேலைத்திட்டத்தில் ( Development oriented media work Experience programme) பங்கு பற்றல்.
3. பாடசாலை ஊடக வாரமொன்றை (Media Education week) வருடாந்தம் நடத்துதல்.
4. வருடாந்தம் ஏப்ரல் 23 ஐ மையமாகக் கொண்ட யுனெஸ்கோ உலக புத்தகத் தினத்தை (UNIESCO World Book Day) க் கொண்டாடுதல்.
5. குறுக்குக் கலைத்திட்டக் கருப்பொருள்களை மையப்படுத்திய மாத விரிவுரைகள்/ கருத்தரங்குகள் / விவாதங்கள் போன்ற இணைந்த பாடச் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்தல்.
6. அபிவிருத்தித் திட்டமொன்றை ஆராய்வதற்கான ஒரு கல்விச் சுற்றுலாவில் ஈடுபடல்.
7. பொலிஸ் நிலையத்துடன் இணைந்து சமூக மற்றும் குடும்பத்தில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கொண்டு நடத்துதல் தொடர்பான யதார்த்த நிலையை ஆராய்தல்.
8. பாடசாலையில் எமது பாரம்பரியப் பாடசாலை மையம் ( Our Heritage School Center) ஒன்றை நிறுவுதல்.
9. தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்திக் கருப்பொருள் ஒன்றின் கீழ், மகஜர் ஆக்கம் மற்றும் விருத்தி வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
10. பாடசாலை நூலகத்தில் ஊடகத்துறை சார்ந்த நூல்கள், அறிக்கைகள், வாசிப்பு ஆவணங்கள், பல்லூடக உபகரணங்களைச் சேர்க்கும் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தல்.
11. உள்ளக நூல்நிலையமொன்றை அமைக்கும் திட்டத்தை வகுத்தல்.
12. உயர்தர ஊடகச் செய்திகள் உட்பட தகவல்களை உள்ளடக்கிய ஒரு சுவர்ப் பத்திரிகையை இரண்டு வாரங்களுக்கொரு முறையேனும் வெளியிடல்.
13. வேறு பாடசாலைகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
14. இனங்களுக்கிடையிலான சகவாழ்வை அடிப்படையாகக் கொண்ட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
15. ஊடகக் கல்வி வாரத்தில் ஒரு நாளை "பாடசாலைச் புன்னகைத் தினம் " (School smile day) என்ற பெயரில் தொடர்பாடல் மேம்பாட்டு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
16. ஊடகங்களுக்கு ஆக்கங்களை/ சித்திரங்களை/ புகைப்படங்களை முன்வைத்தல்.
17. ஊடக அறிவு வேலைத்திட்டங்களை மாதாந்தம் / வாராந்தம் நடத்துதல்.
18. ஊடகங்களுக்கான நூல்களை வழங்கும் செயலொழுங்கை பாடசாலையில் திட்டமிட்டு நடத்துதல்.
19. ஆரம்பப் பாடசாலைப் பெற்றோர்களுக்கான ஊடக அறிவை (ஊடகப் பயன்பாடு) வளர்ப்பதை கருப்பொருளாகக் கொண்ட வேலைத்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
20. சுய பலத்தை அடிப்படையாகக் கொண்ட சுய வெற்றிக்காகக் கருமமாற்றல் தொடர்பான பல்வேறு தொடர்பாடல் வேலைத்திட்டங்களைப் பரீட்சித்துப் பார்த்தல்.
21. ஊடகங்களில் தொடர்பாடப்படும் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சிகள் பற்றிய கற்றலை மேற்கொள்ளல்
22. பாடத்துடன் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் தொடர்பாடற் செயற்திட்டச் சுருக்கத்தை உள்ளடக்கியதாக ஒரு வருடாந்த நூலை வெளியிடல்.

# அலகு 01 - தொடர்பாடல் கற்றல் பிரவேசம்

**தேர்ச்சி 1.0** : தொடர்பாடலின் இயல்பு, செயலொழுங்கு வகைகளையும் விதங்களையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : தொடர்பாடலைக் கற்பதற்காக அதன் பரவல், இயல்பு, வரைவிலக்கணங்கள், எண்ணக்கரு என்பவற்றை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 8

**பாட உள்ளடக்கம்** : தொடர்பாடற் பிரவேசம்
1. தொடர்பாடல் அறிமுகம்
2. தொடர்பாடலின் பரவல்
3. தொடர்பாடல் எண்ணக்கருக்களும் வரைவிலக்கணங்களும்
4. தொடர்பாடலின் இயல்புகள்

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறு:**
1. தொடர்பாடல் என்றால் என்ன? என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
2. தொடர்பாடலின் விருத்தியை கலந்துரையாடலுடன் பகுப்பாய்வு செய்வார்.
3. தொடர்பாடல் எண்ணக்கருக்களையும், வரைவிலக்கணங்களையும் விளக்குவார்.
4. தொடர்பாடலின் இயல்பு எத்தகையது என்பதை முன்வைப்பார்.

**அறிமுகம்**

தொடர்பாடல் எப்போது ஆரம்பித்தது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆயினும் மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளில் இருந்து தொடர்பாடல் ஆரம்பித்திருக்கும் என்று கூறலாம். அதன்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொடர்பாடல் விருத்தியடைந்துள்ளது என்பது தெரிகிறது. மனிதன் தனித்து வாழ முடியாதென்பதால் கூட்டாகவே வாழ வேண்டியேற்பட்டது. ஒவ்வொருவருக்குமிடையிலான தொடர்பு தொடர்பாடலினூடாகவே நிகழ்ந்தது. மிக அடிப்படையான தொடர்பாடல் முறைகள் தொடக்கம் நவீன தொழில்நுட்ப ரீதியான தொடர்பாடல் முறை வரை, தொடர்பாடல் விருத்தியடைந்துள்ளது.

தொடர்பாடல் என்றால் என்ன என்பதை சமூகவியலாளர்கள், கல்வியிய லாளர்கள், அரசியலறிஞர்கள், விஞ்ஞானிகள், வேறு துறை சார்ந்த அறிஞர்கள் பிற்காலத்தில் ஆராயத் தொடங்கியதுடன் அது தொடர்பான பல்வேறு எண்ணக்கருக்களை அமைக்கவும் முன்வந்தனர். அதன்படி தொடர்பாடல் என்றால் என்ன என்பதை அறிய முடிந்தது.

தற்காலத்தில் தொடர்பாடல் என்பது வெறும் தகவற் பரிமாற்றம் என்பதிலிருந்து வெகுதூரம் சென்றுள்ளது. ஒரு சமூகத்தைக் கையாளும் உபகரணமாக இன்று தொடர்பாடல் பயன்படுத்தப்படுகிறது. மக்களின் விருப்பு வெறுப்புக்கள், கருத்துக்கள், மனப்பாங்குகள், மக்கள் கருத்துக்கள், கலாசாரங்களை மாற்றியமைப்பதற்கு, விருத்திசெய்வதற்கு மட்டுமன்றி உடைத்தெறிவதற்கும் தொடர்பாடல் இன்று பயன்படுத்தப்படுகிறது. இதன்படி தொடர்பாடலை ஆழமாகக் கற்பதற்கான அத்திவாரத்தை இடுவது மிக முக்கியமாகும். இந்த ஆரம்பப் பாடத்தின் மூலம் அந்த அத்திவாரம் இடப்படுகிறது. அதன் மீது இருந்து கொண்டு தொடர்பாடல் பற்றி விரிவாகக் கற்கும் வாய்ப்பு உட்படுத்தப்படும்.

## பாட விடயத்தை விளக்குவதற்கான துணை

### 1. தொடர்பாடல் அறிமுகம்

- தொடர்பாடல் நடவடிக்கைக்கு மனிதனின் ஐம்புலன்களும் பயன்படுத்தப்படுகிறது.
- தொடர்பாடல் பற்றிய பல வரைவிலக்கணங்களுண்டு.
- மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் கூட தொடர்பாடலில் ஈடுபடுகின்றன
- தொடர்பாடல் மனித சமூகத்தின் நிலவுகைக்கு இன்றியமையாத ஒரு காரணி.
- அடிப்படையில் தொடர்பாடலின் மூலம் கருத்துக்கள், தகவல்கள் பரிமாறப்படுகின்றன.

### 2. தொடர்பாடலின் வரலாற்று ரீதியான வளர்ச்சி

- ஆரம்ப காலத்தில் சமிக்ஞைகள், குறியீடுகள், அடையாளங்கள் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்பட்டன.
- அதனையடுத்து தீ, புகை, மேளம், நிறங்கள் என்பன தொடர்பாடலுக்காகப் பயன் படுத்தப்பட்டன.
- முதலில் மொழியும் இரண்டாவதாக அரிச்சுவடியும் மூன்றாவதாக எழுத்தும் உருவாக்கப்பட்டன.
- முதலில் பேச்சும், இரண்டாவது எழுத்தும் இடம் பெற்றது.
- இதற்குச் சமாந்தரமாக சித்திரம், உருக்கள் வரைதல் ஆரம்பமானது.
- எழுதுவதற்கான கற்பாறைகள், களிமண் தட்டுக்கள், ஓலைகள், பப்பிரஸ் ஓலைகள், தோல், புடவை, மரப்பட்டைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டன.
- பிற்காலத்தில் கடதாசி கண்டுபிடிக்கப்பட்டது.
- அச்சுக்கலை கண்டுபிடிப்பு தொடர்பாடல் வரலாற்றில் திருப்புமுனையாகும்.
- பிற்காலத்தில் அச்சுக்கலை விருத்தி, தொலைபேசி முறை, கம்பியுடன் கூடிய, கம்பியில்லாத ஒலித் தொடர்பாடல்கள், தொலைக்காட்சி மற்றும் நவீன ஊடகங்கள் தோன்றியமையால் தொடர்பாடல் விருத்தியடைந்தது.

### 3. தொடர்பாடல் எண்ணக்கருக்களும் வரைவிலக்கணங்களும்

- தொடர்பாடல் எண்ணக்கருக்களும் வரைவிலக்கணங்களும் மேலைத்தேயக் கண்டு பிடிப்பன்று.
- **தொடர்பாடல் தொடர்பான ஆறு எண்ணக்கருக்கள்** உருவாகியுள்ளன.
    - **அதிகார வாதத் தொடர்பாடல் எண்ணக்கரு** மூலம் கூறப்படுவது சமூகத் தலைவர்கள்/ ஆட்சியாளர்களினால் தொடர்பாடல் மற்றும் ஊடகச் செயல் ஒழுங்குகள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
    - **சுதந்திரமான தொடர்பாடல் எண்ணக்கரு** மூலம் கூறப்படுவது தொடர் பாடல் ஊடகச் செயல் ஒழுங்குகளுக்குச் சுதந்திரமாக இயங்க இடமளிக்க வேண்டும் என்பதாகும்.
    - **சோவியத் சமவுடமை தொடர்பாடல் எண்ணக்கரு** மூலம் கூறப்படுவது பொது நலனை அடிப்படையாகக் கொண்டு தொடர்பாடலையும் ஊடகச் சுதந்திரத்தையும் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதாகும்.
    - **சமூகப் பொறுப்பு தொடர்பான தொடர்பாடல் எண்ணக்கரு** மூலம் கூறப்படுவது அரசாங்கத்தைப் போன்று ஊடகமும் சமூகப் பொறுப்புடன் தொடர்பாடலையும் ஊடகத்தையும் கையாள வேண்டும் என்பதாகும்.

- **அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு** மூலம் கூறப்படுவது தேசிய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தொடர்பாடல்களைக் கையாள வேண்டும் என்பதாகும்.
- **ஜனநாயகத் தொடர்பாடல் எண்ணக்கரு** மூலம் கருதப்படுவது ஜனநாயக ரீதியான பொதுமக்களின் பிரதிநிதித்துவத்துடன் தொடர்பாடலையும் ஊடகத்தை யும் கையாளுதல் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதே யாகும்.

- தொடர்பாடல் எண்ணக்கருக்களின் அடிப்படை இயல்புகளை மட்டும் கற்பது போதாது
- ஹால்ட் லஸ்வெல், ஷனன் வீவர், வில்பர் ஸ்ராம், எட்வட் ஷபி, என்போர் தொடர்பாடல் வரைவிலக்கணங்களை வெளியிட்டுள்ளனர். (வேறு வரைவிலக்கணங் களும் உண்டு. ஆயினும் இந்த நான்கும் போதுமானவை.)

## 4. தொடர்பாடலின் இயல்பு

- ஒரு வழியாக அல்லது இரு வழியாக நடைபெற முடியும்.
- இயற்கையான ஒரு செயலொழுங்கு.
- தொடர்பாடலுக்காகத் தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டாலும் இயல்பு மாற்றமடையாது.
- கோலங்கள் தனியார் சார்ந்தது.
- தருணத்துக்கேற்ற ஒரு செயலொழுங்கு.
- சமூக கூட்டிணைப்பு, சகவாழ்வு என்பவற்றைக் கொண்டு நடத்த முடியும்.
- ஒருவரின் துக்கங்கள், கவலைகளைப் போக்குவதற்காக பயன்படுத்த முடியும்.
- தனி நபர் முதல் சமூகம் வரையிலான நடத்தைகளைத் தீர்மானிக்கும் ஒரு காரணி.
- பல்வேறு தடைகள் காரணமாக தொடர்பாடல் செயற்பாடு தோல்வியடையலாம்.
- தொடர்பாடுவரைப் போன்று அதனைப் பெறுவோரும் தொடர்பாடலின் போது முக்கியமான ஒரு பிரிவினர் ஆவர்.
- தொடர்பாடல் சில மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டதாகும்.
- மட்டுப்படுத்தப்பட்ட செயலொழுங்கில் வாயில் காப்போன் என்ற ஒரு எண்ணக்கருவும் தோன்றியுள்ளமை.
- வாயில் காப்போனால் தொடர்பாடல் கட்டுப்பாடு பல வழிகளில் நடைபெறும்.
- வாயில் காப்போன் எண்ணக்கரு, தொடர்பாடலில் ஒரு இயற்கை நிகழ்வாகும்.

## அலகு 01 - தொடர்பாடல் கற்றல் பிரவேசம்

**தேர்ச்சி 1.0** : தொடர்பாடலின் இயல்பு, செயலொழுங்கு வகைகளையும் விதங்களையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : தொடர்பாடலின் அடிப்படைகள், மாதிரிகள், பணிகள் என்பவற்றை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 6

**பாட உள்ளடக்கம்** : தொடர்பாடல் செயலொழுங்கு
தொடர்பாடல் அடிப்படை
தொடர்பாடல் மாதிரிகள்
தொடர்பாடலின் பணிகள்

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறு:**

1. தொடர்பாடலின் அடிப்படைகளை விபரிப்பார்
2. தொடர்பாடல் மாதிரிகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
3. தொடர்பாடலின் பணிகளைப் பட்டியற்படுத்துவார்.

**அறிமுகம்**

தொடர்பாடல் ஒரு செயலொழுங்காகும். அது செவ்வனே செயற்படுவது, அதற்குரிய அடிப்படை அம்சங்கள் அனைத்தும் உரிய முறையில் தொடர்புபட்டுச் செயற்பட்டால் மட்டுமே. ஒரு முனையில் தொடர்புபடுபவனும் அடுத்த முனையில் பெறுவோனும், இருப்பதுடன் தொடர்பாடல் இருவழியாக நடைபெறும் போது தொடர்பாடலும் பெறுபவனும் என்ற வகிபாகங்கள் மாற்றமடையும். இதிலிருந்து தெரிய வருவது தொடர்புபடுபவன், பெறுவோன் என்போர் சந்தர்ப்பத்துக்கேற்ப இனங்கண்டு கொள்ள வேண்டிய பிரிவினராவர். எவ்வாறாயினும் இவ்விரு பிரிவினர்க்கிடையே செய்தி பரிமாறப்படுவது கட்டாயம் நிகழும். செய்தி, பயணம் செய்ய ஓர் ஊடகம் தேவை. அத்துடன் இச் செயலொழுங்கில் ஒலித்தடைகளும் கருத்துத்தடைகளும் ஏற்படும்.

இவ்வடிவத்தை, ஒரு மாதிரியாக உருவாக்க பிற்காலத் தொடர்பாடல் ஆராய்ச்சியாளர்கள் முன் வந்தனர். அதன்படி தொடர்பாடற் செயலொழுங்கு சீராக விளங்க முடிந்தது. ஒவ்வொரு ஆய்வாளரும் ஒவ்வொரு விதமாக இத்தொடர்பாடற் செயலொழுங்கை மாதிரியாக அமைத்தனர். அவற்றுள் சில மிகவும் சிக்கலானவை. எனவே, எளிமையான சில மாதிரிகளுடாக தொடர்பாடற் செயலொழுங்கை விளக்க முடியும். தொடர்பாடலின் பணிகளைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. அதற்கான காரணம் சமூக ஓட்டத்துடன் தொடர்பாடற் பணிகளும் மாற்றமடைந்து கொண்டும் விரிவடைந்து கொண்டும் வருவதாகும். எவ்வாறாயினும் நான்கு அடிப்படைப் பணிகள் தொடர்பாடலின் மூலம் எதிர்பார்க்கப் படுவதை விளங்கிக் கொள்வது போதுமானது.

## பாட விடயங்களை விளங்கிக்கொள்வதற்கான துணை

### 1. தொடர்பாடல் அடிப்படைகள்

- தொடர்பாடற் செயலொழுங்கு அடிப்படை அம்சங்களால் ஆனது.
- செய்தி மூலத்தின் வாயிலாக செய்திக்கான தகவல்கள் கிடைக்கும்.
- தொடர்புபடுபவனால் செய்தி உருவாக்கப்படுகிறது.
- செய்தி என்பது முன்வைக்கும் தகவலாகும்.
- செய்தியைக் கொண்டு செல்வதற்காக ஓர் ஊடகம் அல்லது அலைவரிசை தேவை.
- செய்தி பெறப்படுவது பெறுவோரினாலாகும்.
- செய்தியை ஏற்போன் அதற்கான துலங்களைச் செலுத்துவான்.
- இவ்வாறு துலங்குவது தொடர்பாடலுக்கான பின்னூட்டலாகும்.
- தொடர்பாடல் அடிப்படைகளின் செயற்பாடுகளுக்குத் தடைகள் ஏற்படும்.
- இந்த ஒவ்வொரு அம்சம் தொடர்பிலும் வெவ்வேறாகக் கற்க வேண்டும்.

### 2. தொடர்பாடல் மாதிரிகள்

- தொடர்பாடல் அடிப்படைகள், அதன் செயற்பாட்டின்படி வரிசைப்படுத்தப்பட்டுத் தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் ஒரு மாதிரியை உருவாக்கலாம்.
- பல்வேறு ஆய்வாளர்கள் பல மாதிரிகளை உருவாக்கியுள்ளனர்.
- சில மாதிரிகள் நேர்கோட்டில் அமைந்துள்ளன. சில மாதிரிகள் அவ்வாறு அமையாது.
- சில மாதிரிகள் தொடர்பாடற் கட்டமைப்பைக் காட்டுவதாகவும் சில மாதிரிகள் தொடர்பாடல் செயற் தொகுதியை காட்டுவதாகவும் இருக்கும்.
- ஹரல்ட் லஸ்வெல் (1948), ஷனன் மற்றும் வீவர் (1949), ஒஸ்குட் மற்றும் ஸ்ராம் (1954), பர்லோ (1960) ஆகியோர்களினால் உருவாக்கப்பட்ட தொடர்பாடல் மாதிரிகளை மட்டும் கற்றல் இங்கு போதுமானது. (வேறு பல இருப்பினும் இந் நான்கும் போதுமானவை.)

### 3. தொடர்பாடலின் பணிகள்

- தொடர்பாடல் மனித நாகரிகத்தின் உண்மையான ஒரு பணியை நிறை வேற்றுகின்றது.
- வெறும் செய்தி, தகவல், கருத்துக்களைப் பரிமாறுவது மட்டும் தொடர்பாடல் பணியாகாது.
- தொடர்பாடல் மூலம் பல்வேறு நோக்கங்கள் நிறைவேற்றப்படுதல் எதிர்பார்க்கப் படுகிறது.
- தொடர்பாடற் பணிகள் பல இருப்பினும் அதில் பிரதானமாக சில பணிகளைக் கற்பது போதுமானது.
  - செய்தி உருவாக்கம்
  - கல்வி
  - கலாசாரப் பணி
  - கருத்து ரீதியான பணி
  - சமூக ஒழுங்கமைப்புப் பணி
  - நிலை நிறுத்துதல்
  - ஊக்குவிப்பு

- தகவல் உருவாக்குவதன் மூலம் மக்களுக்குத் தொடர்ந்தேர்ச்சியான சூழல் பற்றிய கரிசனையுடன் இருக்க முடிதல்.
- பொதுவாக சமூகத்திற்கும் குறிப்பாகத் தனி மனிதனுக்கும் தனித்தனியாகக் கல்வியை வழங்குதல் தொடர்பாடலின் முக்கிய பணியாகும்.
- சமூகத்தில் பல்வேறு கருத்துக்கள் உருவாகுதல், சமூக நிலவுகைக்கு அவசியமாக இருப்பதுடன் அது தொடர்பாடலின் ஒரு பணியாகவும் உள்ளது.
- பல்வேறு நவீனமயப்படுத்தல்களுக்காக சமூகத்தை ஒழுங்குபடுத்தல் தொடர்பாடலின் பணியாகும்.
- பொதுவாக சமூகத்தையும் குறிப்பாகத் தனி மனிதனையும் நிலை நிறுத்துவது தொடர்பாடலின் பணியாகும்.
- நிலை நிறுத்தும் பணியில் அறிவுபூர்வமான பொழுதுபோக்கையும் மற்றும் எளிமையான பொழுது போக்கையும் வழங்க முடியும்.
- தனித்தனியாகவும் பொதுவாகவும் பொது நோக்கங்களுக்காக ஊக்குவித்தல் தொடர்பாடலின் பணியாகும். (பிழையான வழியில் தூண்டுவது சமூகத்தின் முன்னேற்றத்துக்குத் தடையாகும்.)
- சமூகத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்குவிப்பு அவசியம்.

## அலகு 01 - தொடர்பாடல் கற்றல் பிரவேசம்

**தேர்ச்சி 1.0** : தொடர்பாடலின் இயல்பு, செயலொழுங்கு வகைகளையும் விதங்களையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : தொடர்பாடலின் பல்வேறு வகைகளை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**பாட வேளைகள்** : 11

**பாட உள்ளடக்கம்** : தன்னகத் தொடர்பாடல்
ஆளிடைத் தொடர்பாடல்
கூட்டுத் தொடர்பாடல்
வெகுஜனத் தொடர்பாடல்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறு:

1. தன்னகத் தொடர்பாடற் செயலொழுங்கை விளக்குவார்.
2. ஆளிடைத் தொடர்பாடற் செயலொழுங்கை விளக்குவார்.
3. கூட்டுத் தொடர்பாடற் செயலொழுங்கை விளக்குவார்.
4. வெகுஜனத் தொடர்பாடற் செயலொழுங்கை விளக்குவார்.
5. தொடர்பாடல் வகைகளைப் பகுப்பாய்வு செய்வார்.
6. ஒவ்வொரு தொடர்பாடல் வகைகளையும் வினைத்திறனுடன் பரீட்சிப்பார்.
7. ஒவ்வொரு தொடர்பாடல் வகைகளின் பயன்களை விளக்குவார்.

### அறிமுகம்

சமூக அனுபவங்களின் ஒளித்தெறிப்பாக தொடர்பாடல் செயலொழுங்கு ஆரம்பமாவது மனித மனங்களிலாகும். அது மூளையுடன் இணைந்து செயற்படுகிறது. மனிதனின் செயற்பாடாக அமைவதும் பல்வேறு தகவல்களைச் சேகரித்துக் கொள்வதும் அவற்றைத் தேவைக்கேற்பப் பயன்படுத்துவதாகும். தன்னகத் தொடர்பாடல் என்பது அதனையே குறிக்கும். தொடர்பாடலுக்கான தொழில்நுட்ப உபகரணங்கள் காணப்பட்டாலும் அவற்றைக் கையாள்வதும் மனிதனே. எனவே, தொடர்பாடல் பற்றிக் கற்கும்போது மனிதாபிமானங்களின் நடத்தை பற்றிக் கற்றல் முக்கியம்.

ஒருவர் மற்றவர்களுடன் தொடர்பாடும் போது ஆளிடைத் தொடர்பாடலும் கூட்டுத் தொடர்பாடலும் இடம் பெறும். ஆளிடைத் தொடர்பாடலில் இருவருக்கிடையில் தகவல்கள் பரிமாற்றப்படும். இதனைச் சோடித் தொடர்பாடல் என்றும் அழைப்பர். சோடித் தொடர்பாடல் என்பது வாழ்க்கையில் பொதுவாக இடம் பெறும் ஒன்றாகும். சோடியைத் தாண்டிச் செல்லும் போது அங்கு கூட்டுத் தொடர்பாடல் ஏற்படும். அது சிறு குழுவாக அல்லது பெரும் கூட்டமாகக் கூட இருக்கலாம். அல்லது மாபெரும் கூட்டமாகவும் இருக்கலாம். ஒரு சிறிய கூட்டத்துடன் நேருக்கு நேர் தொடர்பாடலில் ஈடுபட முடியும். பெரிய கூட்டமெனின், மனிதவலு போதுமானதாக இல்லை என்பதால் ஒலிபெருக்கியைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். மிகப் பெரும் கூட்டம் என்பது தமக்கு எதிரில் இல்லாத தமது கண்களுக்குத் தென்படாதவர்களாகவும் இருக்கும். அது ஒரு சனத்தொகையாகும். அல்லது மக்கள் கூட்டமாகும். இங்கு மக்கள் என்பதற்கு (Mass) என்ற ஆங்கிலப் பதம் பயன்படுத்தப்

படுகிறது. எனவே, பெருங் கூட்டத்தோடு மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் வெகுஜனத் தொடர்பாடல் எனப்படும். வெகுஜனத் தொடர்பாடலுக்காக உபயோகிக்கப்படும் ஊடகம் வெகுஜன ஊடகம் எனப்படும். பூகோளத் தொடர்பாடல் வெகுஜனத் தொடர்பாடலின் உச்ச நிலையாகும். பூகோளத் தொடர்பாடலை வெகுஜன ஊடகத்துடன் இணைத்தோ அல்லது தனியாகவோ கற்கலாம்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. தன்னக (உள்ளக)த் தொடர்பாடல்**

- ஓர் ஆளுக்குள் நிகழும் சுய தொடர்பாடல்.
- ஒவ்வொருவரும் குழந்தைப் பருவம் முதலே ஐம்புலங்களினாலும் தகவல்கள் சேகரிக்கின்றனர்.
- திரட்டப்படும் தகவல்களில் அனேகமானவை அடி மனதில் பதியப்படும்.
- சில தகவல்கள் குறுங்கால ஞாபகத்துடன் நீங்கி விடும்.
- அடி மனதில் பதிந்துள்ள தகவல்களை வாழ்க்கையின் போது நினைவுபடுத்திக் கொள்ளலாம்.
- உள்ளகத் தொடர்பாடலின் போது தம்மிடமுள்ள தகவல்களைப் பயன்படுத்திக் கொள்வார்.
- உள்ளகத் தொடர்பாடலின் போது தீர்மானம் எடுத்தல் ஒரு பிரதான பணியாக அமையும்.
- தம்மிடமுள்ள தகவல்கள் சிறந்ததாயின் தீர்மானம் எடுத்தல் சிறப்பாக அமையும்.
- தம்மிடமுள்ள தகவல்கள் முக்கியமற்றவைகளாக இருப்பின் தீர்மானம் எடுத்தல் வெற்றியளிக்காது.
- மிகச்சிறந்த தகவல்களை முடியுமான அளவு திரட்டிக்கொள்ள வேண்டும்.
- ஒருவர் தம்மைப் பற்றி ஏற்படுத்திக் கொள்ளும் சுய பார்வைக்கு இத்தகவல்கள் காரணமாக அமையும்.
- சுய எண்ணக்கரு உருவாக்கம் தம்மிடமுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே நிகழும்.
- சுய பார்வை, சுய எண்ணக்கரு என்பன உள்ளகத் தொடர்பாடலில் முக்கியத்துவம் வாய்ந்தவை.
- மன எழுச்சி காரணமாக உள்ளகத் தொடர்பாடல் சரியாகச் செயற்படாதிருக்கும்.
- பல்வேறு மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் ஒருவரிடமுள்ள ஆற்றல், உள்ளகத் தொடர்பாடலைப் பண்புத்தரம் மிக்கதாக்கும்.

**2. ஆளிடைத் தொடர்பாடல்**

- இது ஆட்களுக்கிடையிலான தொடர்பாடல் என்றும் கூறப்படும்.
- இருவருக்கிடையே நிகழும் தொடர்பாடலே இதன் மூலம் கருதப்படும்.
- பொதுவாக இது நேருக்கு நேர் செய்யும் தொடர்பாடலாகும்.
- நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டால் இதன் வடிவம் மாற்றமடையும்.
- தொலைபேசியூடாக, இணையத்தினூடாக அல்லது குறுஞ் செய்தியூடாக இது நடை பெறலாம்.
- நவீன தொழில்நுட்பத்தின் உதவியால் தொலை தூரத்தில் இருக்கும் இருவர் நேருக்கு நேர் பேசிக்கொள்ள முடியும்.

- ஆளிடைத் தொடர்பாடல் இருவருக்கிடையில் நடைபெறுவதாகும்.
- அனைவரும் அன்றாட வாழ்வில் எப்போதும் ஆளிடைத் தொடர்பாடலில் ஈடுபட வேண்டி யேற்படும்.
- ஆளிடைத் தொடர்பாடலின் போது செய்தியாளர், செய்தி பெறுவோர் என்ற வகிப்பாகங்கள் மாறி மாறி வரும்.
- சிலவேளை ஆளிடைத் தொடர்பாடல் ஒரு வழியாக அமையும்.
- ஆளிடைத் தொடர்பாடலில் பல நோக்கங்கள் உள்ளன
    - தகவல் பெறல்.
    - சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளல்.
    - அறிவைப் பெறலும் வழங்கலும்.
    - பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளல்.
    - உதவிகளைப் பெறலும் வழங்கலும்.
    - வழிகாட்டல்.
    - ஆலோசனை.
    - குற்றச் சாட்டுக்களை முன்வைத்தல்.
    - எச்சரிக்கை விடுத்தல்.
    - குறைகூறல்.
    - இரகசியங்களை அறிந்து கொள்ளல்.
    - செயல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
    - வேறு
- ஆளிடைத் தொடர்பாடல் பயனுறுதி வாய்ந்ததாக அமைவது அதில் ஈடுபடுபவர் களிடையேயுள்ள முதிர்ச்சியின் படியாகும்.
- சீரான ஆளிடைத் தொடர்பாடல் மூலம் ஒரு சமூகத்தின் செயலொழுங்கு சீரடைகிறது.

## 3. கூட்டுத் தொடர்பாடல்

- தொடர்பாடலானது இருவரைத் தாண்டும் போது அது கூட்டமாக அல்லது குழுவாக மாறும்.
- ஒரு குழு சிறிய, நடுத்தர, அதிக எண்ணிக்கை கொண்டதாக அமையலாம்.
- கூட்டுத் தொடர்பாடலில் ஒருவழி, இருவழி என்றவாறு அமையலாம்.
- கேட்டல் அல்லது செவிமடுத்தல் கூட்டுத் தொடர்பாடலின் முக்கிய அம்சம்.
- கூட்டுத் தொடர்பாடலில் பல வடிவங்கள் உண்டு.
- கூட்டு என்பதில் குழு அல்லது கும்பல் அடங்கும்.
- கூட்டுத் தொடர்பாடலில் ஐந்து வகைகளுண்டு.
    1. எழுமாறான குழு
    2. தெரிவு செய்த குழு
    3. கற்றற் குழு
    4. கொள்கைக் குழு
    5. செயற்படும் குழு
- எழுமாறான குழு என்பது திடீரென அல்லது எழுமாற்றாக ஏற்படும் குழுவாகும்.
- தெரிவு செய்த குழு என்பது தம் மன எழுச்சியின்படி ஒன்று கூடுபவர்கள்.
- கற்றற் குழு என்பது கற்றலை நோக்காகக் கொண்டு ஒன்று சேர்வது.
- கொள்கைக் குழுக்கள் தீர்மானங்கள் எடுக்க ஒன்று கூடுவது.
- செயற்படும் குழு என்பது ஒன்றைச் செயற்படுத்துவதற்காக ஒன்று சேரும்.
- எழுமாறான குழு, முறை சாராததாக இருக்கும்.

- தெரிவு செய்த கற்றல், கொள்கை வகுப்பு, செயற்படும் குழுக்கள் பெரும்பாலும் முறைசார்ந்த குழுக்களாக இருக்கும்
- குழு எத்தகையதாக இருப்பினும், அதன் நோக்கம் எதுவாக இருப்பினும் குழுவின் நிலவுகை தொடர்பாடலுக்கு முக்கியமானது.

**4. மக்கள் தொடர்பாடல் (வெகுஜன)**

- பெருந்தொகையான மக்களுடன் நிகழும் தொடர்பாடல், வெகுஜனத் தொடர்பாடல் எனப்படும்.
- வெகுஜனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பன வெகுஜன ஊடகங்களாகும்.
- வெகுஜனத் தொடர்பாடலின்போது செய்தி பெறுவோர் யார் என்பதைச் செய்தி வழங்குபவர் திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியாது.
- வெகுஜனத் தொடர்பாடல் பொதுவாக நிறுவன மயப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.
- ஒவ்வொரு வெகுஜன ஊடகமும் சிறப்பியல்புகள் கொண்டதாகக் காணப்படும்.
- வெகுஜன ஊடகம் மூலம் பெருந்தொகையான மக்களுக்கு ஒரே தடவையில் தகவல்களைக் கொண்டு செல்ல முடியும்.
- வெகுஜன ஊடகம் என்பது இன்று மக்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக உள்ளது.
- பத்திரிகையைக் கையாள்வதற்கு எழுத்தறிவு வேண்டும்.
- வானொலிப் பாவனைக்கு கேட்டல் ஆற்றல் வேண்டும்.
- தொலைக்காட்சிப் பாவனையாளர்களுக்கும் கேட்டல், பார்த்தல் ஆகிய இரண்டு ஆற்றல்களும் இருத்தல் வேண்டும்.
- பொதுவாக வெகுஜன ஊடகப் பாவனைக்கு ஊடக அறிவு அவசியம்.
- தனது செய்தியை இலக்குக் குழுவுக்கு மட்டும் முன்வைக்க வெகுஜன ஊடகத்தினால் முடியாது.
- வெகுஜன ஊடகச் செய்தி திறந்து விடப்படுவதினால் சமூகத்தில் பாரிய செல்வாக்கை ஏற்படுத்தும்.
- வெகுஜன ஊடகங்களில் தொலைக்காட்சியே ஜனரஞ்சகமாகவுள்ளது.
- தொலைக்காட்சி, வானொலி என்பன காணப்பட்டாலும் மக்களுக்கு பத்திரிகையும் அவசியமாகவேயுள்ளது.
- வெகுஜன ஊடகத்துக்கு பயிற்சி பெற்ற ஊடகவியலாளர்கள் தேவை.
- ஊடகவியலாளர் (Media person) தயாரிக்கும் பத்திகளை (Text) ஆராய்ந்து அதனூடாக பகுத்தறிவை விருத்தி செய்து கொள்பவர் வெகுஜன ஊடகவியலாளர்கள் (Media Expert) ஆவார்.
- ஊடகவியலாளர் என்பவர் அடிப்படை ஊடகச் செய்தியைத் தயாரிப்பார்.
- வெகுஜன ஊடகத்துக்கு உயர் தொழில்நுட்பம் தேவை.
- வெகுஜன ஊடகம் முழு உலகையும் உட்படுத்தும் போது, அது பூகோள வெகுஜன ஊடகமாக மாறும்.

## அலகு 01 - தொடர்பாடல் கற்றல் பிரவேசம்

**தேர்ச்சி 1.0** : தொடர்பாடலின் இயல்பு, செயலொழுங்கு வகைகளையும் விதங்களையும் ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : பல்வேறு தொடர்பாடல் விதங்களை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : வாய் மொழித் தொடர்பாடல்
வாய் மொழியல்லாத தொடர்பாடல்
எழுத்துமூலத் தொடர்பாடல்
கட்புலத் தொடர்பாடல்
செவிப்புலத் தொடர்பாடல்
முறைசார், முறைசாராத் தொடர்பாடல்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறு:

1. வாய் மொழித் தொடர்பாடலைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
2. வாய் மொழியல்லாத தொடர்பாடல்களைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
3. எழுத்துமூலத் தொடர்பாடலைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
4. கட்புலத் தொடர்பாடல் முறைகளைப் புலனாய்வு செய்வார்.
5. செவிப்புலத் தொடர்பாடல் முறைகளைப் புலனாய்வு செய்வார்.
6. முறைசார் தொடர்பாடல் முறைகளைப் புலனாய்வு செய்வார்.
7. முறைசாராத் தொடர்பாடல் முறைகளைப் புலனாய்வார்.
8. அனைத்துத் தொடர்பாடல் முறைகளையும் ஒப்பிட்டு மதிப்பிடுவார்.

### அறிமுகம்

மனிதன் வரலாற்றுக்கு முந்திய காலந்தொட்டே அன்றாட சமூகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தொடர்பாடலில் ஈடுபட்டுள்ளான். இவ்வாறு தொடர்பாடலுக்காகப் பயன் படுத்திய பல்வேறு விதங்கள் அல்லது வடிவங்களை தொடர்பாடல் நிபுணர்கள் வகைப் படுத்தியுள்ளனர். இவ்வகைகள் தொடர்ச்சியாக மனித சமூகத்தின் தொடர்பாடற் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலும் நிகழுவது வாய் மொழியல்லா மற்றும் கட்புலத் தொடர்பாடலாகும். இங்கு வாய் மொழித் தொடர்பாடல் என்பதனால் கருதப்படுவது சொற்களைப் பயன்படுத்திப் பேசுவதாகும். வாய் மொழித் தொடர்பாடலுடன் வாய்மொழியல்லாத தொடர்பாடலும் சேரும். அதனூடாகவே தொடர்பாடல் எழும். எழுத்துமூலத் தொடர்பாடல் என்பது பிற்காலத்தில் வந்த ஒன்றாகும். கட்புலத் தொடர்பாடலுக்கு நீண்ட வரலாறு உண்டு. அல்றா மிரா, லஸ்கோ, கற்குகைச் சித்திரங்கள் இதற்கான சிறந்த சான்றாகும். இலங்கையிலும் சீகிரிய ஓவியங்கள், தொரவக்க, புதுருவ கல போன்ற விகாரைகளில் காணப்படும் சுவரோவியங்கள் கட்புலத் தொடர்பாடல் சார்ந்தவையாகும். இலங்கையில் கட்புலத் தொடர்பாடல் பற்றி விசாரிக்கும் போது தெரிய வருவது அது மிக உயர்ந்த ஒரு மரபாக இருந்தது என்பதாகும். செவிப்புல தொடர்பாடல் என்பது வானொலியை மட்டும் குறிக்காது. வானொலி என்பது பிற்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பக் கருவியாகும். இதனை விட செவிமடுக்கக்கூடிய அனைத்தும்

இதில் அடங்கும். செவிப்புல தொடர்பாடலைச் சேர்ந்த முறைசார் தொடர்பாடல் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நெறிப்படுத்தலுடன் நடைபெறுவதுடன் முறைசாராத் தொடர்பாடல் என்பது அங்கீகரிக்கப்படாத முறையின் கீழ் நிகழ்வதாகும். ஒழுங்கமைப்புக்களின் நிலவுகைக்கு முறைசார் - முறைசாராத் தொடர்பாடல்கள் இன்றியமையாதவை. இவ்வனைத்து தொடர்பாடல் விதங்கள் அல்லது வடிவங்களும் இன்றைய சமூக நிலவுகைக்குத் அவசியமாகும். மேற்கூறப்பட்ட தொடர்பாடல் வடிவங்களை விட புதிய ஊடகங்களினூடாக புதிய வடிவங்கள் உருவாகின்றன. உதாரணமாக செல்லிடத் தொலைபேசியூடாக அனுப்பப்படும் குறுஞ் செய்திகள், மின்னஞ்சல் என்பவற்றைக் கூறலாம். இவை பற்றிய போதிய அளவு விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் இன்னும் நடைபெறவில்லை. எதிர்காலத்தில் இவற்றிலும் சிறப்பான தொடர்பாடல் வடிவங்களாகக் காட்ட வேண்டி ஏற்படும்.

### பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. வாய்மொழித் தொடர்பாடல்

- சொற்களினூடாகச் செய்யும் தொடர்பாடல்.
- பரந்த கருத்தில் எழுத்தால் சொற்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனைத்துத் தொடர்பாடல்களையும் குறிக்கும்.
- இங்கு வாய்மொழி என்பது பேசுவதைக் குறிக்கும்.
- வாய்மொழித் தொடர்பாடலுக்கு மொழியை அறிந்திருத்தல் அவசியம்.
- மொழி பற்றிய தேர்ச்சி தேவைப்படாது.
- பேச முடியுமான எல்லோரும் வாய்மொழித் தொடர்பாடலில் ஈடுபடலாம்.
- எல்லோரும் வாழ்க்கையில் எப்போதும் போல் வாய்மொழித் தொடர்பாடலில் ஈடுபடுகின்றனர்.
- இன்று செவிடர்களுக்குக்கூட பேச்சுப் பயிற்சி வழங்கப்படுகிறது.
- வாய் மொழித் தொடர்பாடலில் ஈடுபடும் இருவரும் குறிப்பிட்ட மொழியைத் தெரிந்திருத்தல் வேண்டும்.
- செய்தியை வழங்குபவரின் மொழியை விட, அதனைப் பெறுபவரது மொழியிலேயே வழங்க வேண்டும்.
- வாய்மொழித் தொடர்பாடலின்போது நேர்க்கணியமான பிரயோகங்கள், கருத்துக்களைப் பயன்படுத்துவது பொருத்தமாக அமையும்.
- வாய்மொழித் தொடர்பாடலின் போது சரியாகக் கேள்விகளை முன்வைக்க வேண்டும்.
- பேசும்போது சொற்களை உடைத்து, குழப்பமான முறையில் முன்வைக்கக் கூடாது.
- பொறுப்பில்லாத விதத்தில் மொழியைப் பயன்படுத்தக் கூடாது.
- வாய்மொழித் தொடர்பாடலின் போது முன்னாயத்தம் பயனுடையதாக அமையும்.
- வாய்மொழித் தொடர்பாடல் திடீரென ஏற்படுவதால் எப்போதும் முன்னாயத்தம் சாத்திய மில்லை.
- வாய்மொழித் தொடர்பாடலின் போது சொல்லை வெளியிட முன் ஒருமுறைக்கு இருமுறை யோசிப்பது நல்லது.
- பேசிய வார்த்தையை எப்படியும் மீளப் பெற முடியாது.
- வாய்மொழித் தொடர்பாடலின் போது சொற்கள் 7% வீதமும் தாளலயம் 38% வீதமும் வாய்மொழியல்லாத சமிக்ஞைகள் 55% வீதமும் இடம் பெறும்.

## 2.வாய்மொழியல்லாத தொடர்பாடல்

- எல்லோரும் அன்றாடத் தொடர்பாடல்களில் வாய்மொழியல்லாத தொடர்பாடலில் அதிகம் ஈடுபடுகின்றனர்.
- கலீ, மற்றும் லெதர்ஸ் 1976 இல் கூறியதற்கேற்ப வாய்மொழியல்லாத தொடர்பாடல் பின்வரும் பணிகளை நிறைவேற்றும்.
  1. ஆளிடைத் தொடர்பாடலின்போது கருத்தை விளங்கிக் கொள்ள உதவும்.
  2. வாய்மொழி முன்வைத்தலை விட நன்கு உணர்வுடன் வெளிப்படுத்தல்.
  3. கருத்தையும் நோக்கத்தையும் குழப்பமின்றி வெளியிடல்.
  4. வாய்மொழியல்லாத சமிக்ஞைகள், அடையாளங்கள் காரணமாக உயர் தொடர்பாடல் மட்டமொன்று ஏற்படுதல்.
  5. வாய்மொழி அடையாளங்களைவிட, வாய்மொழியல்லாத அடையாளங்கள் வினைத் திறன் வாய்ந்தவை.
  6. ஒன்றை உணர்வும், முன்மொழிவதற்கும் மிகப் பொருத்தமான ஊடகம்.
- வாய்மொழியல்லாத தொடர்பாடல் தொடர்ச்சியாக நிகழும்.
- வாய்மொழியல்லாத தொடர்பாடலில் பல முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- சில வாய்மொழியல்லாத தொடர்பாடற் செய்கைகள், தன்னை அறியாமல் அல்லது பழக்க தோஷத்தில் நிகழ்பவை.
- வாய்மொழியல்லாத தொடர்பாடலுக்கு எதுவித இலக்கணங்களோ, சட்டங்களோ கிடையாது.
- வாய்மொழியல்லாத தொடர்பாடற் செய்கைகள் தனியாள் மயமானது.
- தோற்றம், உடை, உடல் அசைவுகள், உணர்வுகள், சமிக்ஞைகள், முகபாவ வெளிப்பாடுகள், கண்தொடர்பு, கூர்மையான பார்வை, தொடுகை, மணம், பேச்சின் வேகம், பேச்சின் ஒலிக் கோலம், தாளம், நிசப்தம், அவகாசம், சூழல் என்ற பல்வேறு வாய்மொழியல்லாத தொடர்பாடல்கள் உள்ளன.
- மற்றவர்கள் பேசும் விதத்தை ஆராய்வதன் மூலம் வாய்மொழியல்லாத முறைகளை இனங்கண்டு கொள்ள முடியும்.

## 3. எழுத்து மூலத் தொடர்பாடல்

- மொழியைப் பயன்படுத்தி எழுதுதல் இதன் மூலம் கருதப்படுகிறது.
- பலமுறைகளில் எழுதலாம் (கையெழுத்து / கனிணி / தட்டச்சு)
- எழுதுவதற்காகப் பயன்படுத்தும் முறை அல்லது தொழில்நுட்பம் எதுவானாலும் எழுத்துக்கு ஒரு குறிக்கோளுண்டு.
- பயன்படுத்தும் முறை அல்லது தொழில்நுட்பத்துக்கமைய எழுத்தின் வடிவம் தீர்மானிக்கப்படுகிறது
- பல்வேறு எழுத்துக்களுக்கான பல்வேறு மாதிரி பயன்படுத்தப்படுகிறது.
  - ○ அறிக்கைகள்
  - ○ கடிதம் (தனிப்பட்ட / உத்தியோகம்)
  - ○ ஆக்கக் கட்டுரை
  - ○ அறிவித்தல்
  - ○ அறிவுறுத்தற் பத்திரம்
  - ○ உயிர்ப்புத்தரவுப் பத்திரம்
  - ○ துண்டுப் பிரசுரம்
  - ○ மடக்கோலை
  - ○ புத்தகங்கள், சிறு பிரசுரங்கள்
  - ○ பத்திரிகைக் கட்டுரைகள்
  - ○ பத்திரிகைகள்
  - ○ தொழில் விண்ணப்பங்கள்
- ஒவ்வொரு ஆவணமும் அதற்கேயுரிய தனித்தன்மைகள் கொண்டது.
- ஒவ்வொரு ஆவணத்துக்கும் பயன்படுத்தும் மொழி, மாதிரி, கூற்றுகள் தனித்துவமானவை.

- எழுத்துப் பரிச்சயம் ஏற்பட பல்வேறு எழுத்தாக்கங்களில் ஈடுபட வேண்டும்.
- ஆவண ஆக்கம் என்பது தொழில்வாண்மை மட்டத்தில் கணிக்கப்படுகிறது.
- எழுத்து மூலத் தொடர்பாடலில் ஆயத்தம் செய்வதற்கான நேரம் உண்டு.
- உயர் ஆவணமொன்றிலிருந்து ஒரு சொல்லையேனும் நீக்க முடியாது.
- ஆவணத்துக்கான அடிப்படையான திறன்கள் வாசிப்பினாலேயே ஏற்படும்.
- ஓர் ஆவணத்தைப் பல தடவை சரியாக்கும் போது உயர் மட்டத்தை அடையும்.

## 4. கட்புல தொடர்பாடல்


- கண்ணால் பார்ப்பதன் மூலம் நிகழும் தொடர்பாடலே இதனால் கருதப்படுகிறது.
- கண்களினால் பார்ப்பதற்கு ஒரு எல்லை கிடையாது.
- தொலைக்காட்சி, சித்திரம், பாதைச்சமிக்ஞைகள், சினிமா, புகைப்படம், சிற்பம் என்பன கட்புலத் தொடர்பாடலில் அடங்கும்.
- மனித சமூகத்தின் ஆரம்பம் முதலே கட்புலத் தொடர்பாடல் காணப்பட்டது.
- உருக்கள், வரைபுகள், சுவரொட்டிகள் என்பனவும் கட்புலத் தொடர்பாடலாகும்.
- கட்புலத் தொடர்பாடலில் கிராமியக் கலைகள் போன்ற மரபு ரீதியான முறைகளும் பயன்படுகின்றன.
- முறையான திட்டமிடலின் மூலம் கட்புலத் தொடர்பாடலின் உயர் மட்டத் தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.
- நவீன தொழில்நுட்பத்தினால் கட்புலத் தொடர்பாடலை உருவாக்க முடியும் (கணினி, எறிவைகள் மற்றும் எறிவையல்லாத உபகரணங்கள்)
- கட்புலத் தொடர்பாடலை மக்கள் பெரிதும் விரும்புவர்.
- மூட நம்பிக்கைகள், சடங்குகள் என்பவற்றுடன் கட்புலத் தொடர்பாடல் தொடர்புபடும்.
- கட்புலமுறைகளுக்கான பொதுக் கருத்தும் சிறப்புக் கருத்தும் இருக்கலாம்.
- கட்புலமுறைகளுக்கான உள்நாட்டு, வெளிநாட்டுக் கருத்துக்களும் இருக்கலாம்.

## 5. செவிப்புலத் தொடர்பாடல்

- கேட்டலுக்குட்படுபவை செவிப்புலத் தொடர்பாடலில் அடங்கும்.
- பல்வேறு ஒலிகள், சப்தங்கள், இசை என்பவற்றால் தொடர்பாட முடியும்.
- வானொலி செவிப்புலத் தொடர்பாடலின் ஒரு பிரதான ஊடகமாகும்.
- ஒலிப்பேழைக் கருவி, ஒலி நாடா இயந்திரம், ஒலிபெருக்கி இயந்திரம் என்பனவும் செவிப்புலத் தொடர்பாடல் வகையைச் சார்ந்தவையே.
- ஒவ்வொரு செவிமடுத்தல் முறைகளும் சிறப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப் படுகின்றன.
- செவிப்புலத் தொடர்பாடல் இயற்கையாகவும், திட்டமிட்ட அடிப்படையிலும் நிகழும்.
- மூட நம்பிக்கை, வழிபாடு என்பவற்றுடன் செவிப்புலத் தொடர்பாடல் தொடர்புபடும்.
- செவிமடுத்தல் முறைகளுக்கான பொதுக் கருத்தும், சிறப்புக் கருத்தும் இருக்கலாம்.
- செவிமடுத்தல் முறைகள் தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டுக் கருத்துக்களும் இருக்க முடியும்.
- பல்வேறு நிர்வாக நடவடிக்கைகள், சமிக்ஞைகளுக்காக செவிப்புல ஊடகங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.(தொங்கும் மணி, மேசை மணி, சைரன், தீயணைக்கும் இயந்திரத்தின் ஓசை, நோயாளர் வாகனங்களின் ஒலி, சுனாமி எச்சரிக்கை ஒலி)

## 6. முறைசார் - முறைசாராத் தொடர்பாடல்

- முறைசார் தொடர்பாடல் மேலிருந்து கீழ் நோக்கியும், கீழிருந்து மேல் நோக்கியும், குறுக்காகவும் நிகழும்.
- முறைசாராத் தொடர்பாடல் முறைசாரா வழிகளில் ஒழுங்கின்றிச் செல்லும்.
- திறமையான ஒருவருக்கு முறைசாராத் தொடர்பாடலை நிறுவனத்தின் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- பொதுவாக முறைசார் தொடர்பாடல் பலவீனமடையும் போது முறைசாராத் தொடர்பாடல் பரவுகிறது.
- முறைசார் தொடர்பாடலை எவ்வளவு பலப்படுத்தினாலும் முறைசாராத் தொடர்பாடலும் காணப்படும்.
- முறைசாராத் தொடர்பாடல் என்பது மனிதனின் ஆர்வத்தை, சந்தேகத்தைப் பயன் படுத்தும் ஒரு தொடர்பாடல் முறையாகும்.
- முறைசார் தொடர்பாடலை விட முறைசாரத் தொடர்பாடல் வேகமானது.
- முறைசார் தொடர்பாடலினால் கிடைக்காத தகவல்கள் முறைசாராத் தொடர்பாடல் மூலம் கிடைக்கும்.
- முறைசாராத் தொடர்பாடல் நிகழும் விதத்தை நான்கு சங்கிலிகளாக காட்டலாம்.
- தனிச்சங்கிலியில் ஒருவரிடமிருந்து மற்றவருக்குத் தகவல் செல்லும்.
- வதந்திச் சங்கிலியில் ஒருவரிடமிருந்து மற்ற எல்லோருக்கும் தகவல் செல்லுதல்.
- நிகழ்தகவுச் சங்கிலியில் சந்திப்பவருக்குத் தகவலை வழங்குவதுடன் அவரும் அவ்வாறே செய்வார்.
- கோட்டச் சங்கிலியில் ஒருவர் தகவலை வழங்குவது குறிப்பிட்ட தொடர்பில் உள்ள சிலருக்கு மட்டுமே, அதனைப் பெற்றவரும் அவ்வாறே செய்வார்.
- மேலோட்டமாகப் பார்க்கும் போது நிகழ்தகவு, கோட்டச் சங்கிலிகள் ஒரே விதமாகக் காணப்படினும் அதன் செயற்பாடு ஒன்றுபோலில்லை.




| தனிச் சங்கிலி | வதந்திச் சங்கிலி | நிகழ்த்தகவுச் சங்கிலி | கோட்டச் சங்கிலி |
|---|---|---|---|
| Single Strand Chain | Gossip Chain | Probability Chain | Cluster Cahin |

## அலகு 02 - தொடர்பாடலும் சமூகமும் - (50 பாட வேளைகள்)

**தேர்ச்சி 2.0** : தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையேயுள்ள தொடர்பையும் சமூக வகிபாகத்தையும் நவீன உலகமயமாக்கல் சமூகத்தின் தொடர்பாடற் போக்குகளையும் தர்க்க ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, கட்டமைப்பு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி சமூகச் சம பலத்தையும் அதன் அறிவுத் தேடலின் இயல்பையும் விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : சமூகப் புரிந்துணர்வு
சமூகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (3 பாடவேளைகள்)
சமூகக் கட்டமைப்பு (3 பாடவேளைகள்)
சமூக வளங்களும் சமூகப்பலத்தின் மையமும் (3 பாடவேளைகள்)
அறிவைக் கண்டறிதல்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி தர்க்கரீதியாகக் கருத்துரைப்பார்.
2. சமூகக் கட்டமைப்பின் அம்சங்களை இனங்கண்டு விளக்குவார்.
3. சமூக வளங்களை இனங்கண்டு விளக்குவார்.
4. பலம் மையப்படுத்தப்பட்டுள்ள விதத்தையும் மையப்படும் விதத்தையும் பகுப்பாய்வு செய்வார்.
5. அறிவுத்தேடலை மேற்கொள்ளும் விதத்தைச் சரியாக விபரிப்பார்.

### அறிமுகம்

எவ்வித தாக்கங்களும் கட்டுப்பாடுகளுமின்றி சுதந்திரமாக காடுகளில் சுற்றித் திரிந்த மனிதன், தனது எளிமையான தேவைகள் விரிவடைந்தமை, பல்வேறு குழுக்கள் காடுகளின் ஒவ்வொரு பகுதியிலும் இருந்து உருவாதல் என்பன காரணமாக அவர்களிடையே மோதல்கள் எழத்தொடங்கின. அதற்கான மாற்று வழியாக ஆரம்பச் சமூகம் உருவானது. அங்கு உடற்பலத்தை அடிப்படையாகக் கொண்டு தலைமைத்துவம் கட்டியெழுப்பப்பட்டது. தலைமைத்துவத்தை மையமாகக்கொண்டு இனக்குழுக்கள் உருவாயின.

அவ்வாறு உருவான குழுக்களின் இயல்புகளின்படி அவர்களை பலமான குழு, பலவீனமான குழு என்று வகைப்படுத்த முடிந்தது. பலமான குழு, பலவீனமான குழுவை அடிமைப் படுத்தியதினால் பலம் என்ற எண்ணக்கரு சமூகமயமானது.

வாய்மொழியல்லாத வழிகளில் ஆரம்பமான தொடர்பாடல், மொழி, எழுத்து, அச்சுக்கலை போன்ற கருவிகளினூடாக ஒவ்வொருவருக்கிடையிலான தொடர்புகள் பலப்படுத்தப்பட்டன. சமூகத்தின் பலத்தை அடிப்படையாகக் கொண்டு பூகோள எல்லைகளைக் கடந்து பலம் என்ற எண்ணக்கரு விரிவடைவது மனித சிந்தனை விரிவாக்கத்தின் பிரதிபலனாகவேயாகும். அதனால், சமூகத்தின் நிலையைத் தீர்மானிப்பதில் முக்கிய பணியை நிறைவேற்றுவது முன்னேற்றமான, நவீன தொடர்பாடல் முறைகளினால் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

இதன்படி நவீன தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் காரணமாக உலகம் சுருங்கிக் கொண்டிருப்பதாகவும், முழு உலகும் ஒரு மானிட கிராமமாக மாறிக் கொண்டிருப்பதாகவும், தொடர்பாடல் நிபுணரான மாஷல் மக்லுஹன் கூறியுள்ளார். இதன்படி சமூகத்தின் பலமும் அறிவும் விரிவடைவதையும் அது தொடர்பாடல் மையப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறலாம்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை:**

## 1. சமூகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

- சமூகம் என்பது மாறும் ஓர் அமைப்பு
- சமூகம் உருவாகியிருப்பது மனிதன் தனிமையில் வாழ முடியாமையினாலாகும்.
- இன்றுள்ள சமூகம் வரலாற்று ரீதியான, படிமுறையான, படிமுறையற்ற வளர்ச்சியின் பெறுபேறாகும்.
- படிமுறையான வளர்ச்சியில் பல கட்டங்கள் காணப்பட்டன (ஆரம்ப, அடிமை, மானியமுறை, முதலாளித்துவ, சமவுடமை என்ற)
- படிமுறையான, படிமுறையற்ற என்ற இரண்டு வளர்ச்சிகளுமே இயற்கையான நிகழ்வுகளே.
- சமூகம் என்பதை சமூகவியல், அரசியல், உளவியல் ரீதியாக வரைவிலக்கணப் படுத்தலாம்.
- சமூக வளர்ச்சியுடன் தொழில்நுட்ப வளர்ச்சியும், தகவல்களும், அறிவும் இணைந்து கொண்டன.
- மனிதனின் மட்டுப்பாடான தேவைகள் எல்லையற்றதாக மாறியமை சமூக வளர்ச்சியுடனேயாகும்.
- சமூகத்தோற்றம், வளர்ச்சி என்பவற்றில் தொடர்பாடலின் பங்கு முக்கியம்.

## 2. சமூகக் கட்டமைப்பு

- சமூகம் என்பது ஓர் இயற்கையான ஒழுங்கமைப்பு.
- தனிமனிதன், குடும்பம் என்பவற்றின் அடிப்படையிலேயே சமூகம் உருவானது.
- சமூகக் கட்டமைப்பிலுள்ள குடும்பம் ஓர் இயற்கை அலகாகும்.
- சமூகக் கட்டமைப்பில் வேறு பல அமைப்புகளும் உண்டு.
- அத்தகைய அமைப்புகள் தனிமனித, சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே தோன்றின.
- பல்வேறு சமூக அமைப்புக்களை பொருளாதார, அரசியல், கலாசாரம், சமயம் என வரைவிலக்கணப்படுத்தலாம்.
- சமூகக் கட்டமைப்பு, சமூகப் பிரமாணத்துக்கேற்ப பல்வேறு விதங்களில் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன.
- சமூகக் கட்டமைப்பில் பல அதிகாரக் குழுக்கள் நிலவுகின்றன.
- சகல சமூகங்களும் இன அடிப்படை, முயற்சி அடிப்படை என்ற இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

## 3. சமூக வளங்களும் அதிகார (பலம்) மையமும்

- ஒரு சமூகத்தின் வள உரித்து அதன் மையத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது.
- சமூகத்தின் மிகப் பெறுமதி வாய்ந்த வளம் மனித வளமாகும்.
- மனித வளம் புலமை வளத்தை உருவாக்கும்.
- புதிய பௌதிக வளங்களை உருவாக்குவதும் மனித வளமே.
- வள உரித்துடமையை அடிப்படையாகக் கொண்டே சமூக வகுப்புக்கள் உருவாகின்றன.
- பல்வேறு பரிணாம வளர்ச்சிக் கட்டங்களின் போது சமூகத்தின் வள உரித்து பல்வேறுபட்டதாக இருந்துள்ளது. (கோத்திர நிர்வாக முறை, மன்னராட்சி, ஜனநாயக ஆட்சி, சமவுடமை அரசு என்றவாறு)
- சமூகக் கட்டமைப்பில் பொருளாதார, உற்பத்தி அதிகார மையங்கள் காணப்படுகின்றன.
- உயர் சமூகக் கட்டமைப்பில் அரசு, சமயம், வெகுஜன ஊடகம், கலை, அரசியல் என்பன காணப்படும்.
- சமூகத்தின் அதிகார மையம் மாற்றமடைய கல்வி விஷேட செல்வாக்கைச் செலுத்தியுள்ளது
- சமூக அதிகார மையங்களுக்குச் சவால் விட வெகுஜன ஊடகங்களினால் முடியும்.

## 4. அறிவைக் கண்டறிதல் (தேடல்)

- அறிவுதேடல் மனிதனின் உலகைக் கண்டறியும் முயற்சியின் விளைவாகும்.
- அறிவுதேடல் ஒரு வரலாற்று ரீதியான செயலொழுங்கு.
- இன்று காணப்படும் சமூக அறிவு நீண்ட நாட் தேடலின் பிரதிபலனாகும்.
- தொடர்பாடல், புலக்காட்சி, பிரதிநிதித்துவம், எண்ணக்கரு, தீர்மானம், முன்னோடி நடவடிக்கை என்பன அறிவுத் தேடலின் பணிகளாகும்.
- அறிவுத்தேடலில் பல்வேறு நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. (அவதானிப்பு, பகுப்பாய்வு, தொகுப்பாய்வு, பரிசோதனை போன்ற)

## அலகு 02 - தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி 2.0** : தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்புகளையும் வகிபாகத்தையும் நவீன உலகமயமாக்கல் சமூகத்தின் தொடர்பாடல் போக்குகளையும் தர்க்க ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பு
சமூகத்தினதும் தொடர்பாடலினதும் விருத்தி
உள்நாட்டுத் தொடர்பாடலுக்கிடையிலான அறிவு
தொடர்பாடலின் சமூகச் செல்வாக்கு
தொடர்பாடல் முன்னோடி நடவடிக்கைகள்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. சமூகத் தொடர்பாடல் விருத்திகளிடையேயுள்ள தொடர்பை இனங்கண்டு விளக்குவார்.
2. உள்நாட்டுத் தொடர்பாடல்களுக்கிடையிலான அறிவைத் தெளிவாக விபரிப்பார்.
3. தொடர்பாடல், சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை பகுப்பாய்வு ரீதியாகக் கூறுவார்.
4. தொடர்பாடல் முன்னோடி நடவடிக்கைகள் பற்றியும் அவை சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதம் பற்றியும் விளக்குவார்.

### அறிமுகம்

எந்த ஒரு சமூகத்திலும் தனிமனிதர்களை இணைத்து வைத்திருக்கும் கம்பியாக தொடர்பாடல் செயற்படுகிறது. அத்தகைய சமூகத்தில் இருந்து தொடர்பாடலுக்கான ஊடகங்கள் உருவாவது அச்சமூகத்தில் நிலவும் மனப்பாங்குகள், நம்பிக்கைகள், சமயம், பழக்க வழக்கங்கள் போன்ற கலாசார அம்சங்களின் அடிப்படையிலாகும். அதனூடாக ஒரு சமூகத்தின், நாட்டின் தொடர்பாடல் இயல்பை ஆராயும் போது அந்நாட்டில், சமூகத்தில் வாழும் மக்களின் சமூகத் தேவைகள், மனப்பாங்குகள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள் போன்ற சமூகத்தில் நிலவும் நிலைமைகள் தொடர்பான விளக்கத்தைப் பெற முடிகின்றது. தனி நபர் அச்சமூகத்துடன் இயைபாக்கம் பெறுவதும் அறிவில் தேர்ச்சி பெறுவதும், அந்நாட்டுக்கும் சமூகத்துக்கும் பொருத்தமானவராக மாறுவதும் அச்சமூகத்தின் தொடர்பாடல் ஊடாகவேயாகும்.

தொடர்பாடலின் சமூகச் செல்வாக்கு மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. இன்று சமூகத்தை கொண்டு நடத்தும் பிரதான செயற்பாட்டுக் காரணியாக தொடர்பாடல் மாறியுள்ளது. அது மட்டுமன்றி ஒவ்வொரு சமூகத்தினதும் இயல்புகளை விசாரிக்கும் போது அதற்கேயுரிய அறிவுப் புலம் தொடர்பாகப் போதியளவு கவனம் செலுத்தப்பட்டதாக இல்லை. இதன்படி சமூகம் மற்றும் தொடர்பாடல் பற்றிய ஓர் அடிப்படை மட்டத்திலான ஆய்வொன்றை மேற்கொள்வது முக்கியமானதாகும்.

## பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. சமூக மற்றும் தொடர்பாடல் விருத்தி

- சமூகத்துக்கும் தொடர்பாடல் விருத்திக்குமிடையே பரஸ்பரத் தொடர்பு காணப்படுகிறது.
- சமூக நிலவுகைக்குத் தொடர்பாடல் அவசியமாக இருப்பதால் சமூகமும் தொடர்பாடலும் முன்னேற்றம் அடைகின்றன.
- தொடர்பாடல் விருத்தியடைவதால் மக்களின் கருத்து வெளிப்பாடு உயர் மட்டத்தை அடைகிறது.
- சமூகத்தில் இடைத்தொடர்பு மேம்பட தொடர்பாடல் விருத்தி உதவியாக அமைகிறது.
- பல்வேறு சமூகச் சந்தர்ப்பங்களின் போது தொடர்பாடலைப் பயன்படுத்தும் முறைகள், வடிவங்கள் விருத்தியடைந்துள்ளன.
- தொடர்பாடல் விருத்தியடைந்தமையால் சமூகச் செயற்பாடு வேகமடைந்தது.
- தொடர்பாடல் விருத்தியால் சமூகம் சுருங்கியது.
- துணைக் கலாசாரங்களுக்கிடையே நிலவும் இயல்புகளுக்கேற்ப தொடர்பாடல் தனித்துவம் பெறுகின்றது.

### 2. உள்நாட்டுத் தொடர்பாடல் அறிவுப் புலமை

- எந்த ஒரு நாட்டிலும் தமக்கேயுரிய தொடர்பாடற் கோலமொன்று விருத்தியடைந் திருக்கும்.
- ஒரு சமூகத்தை தற்போதுள்ள நிலவுகைக்கு கொண்டு வந்தது அதற்கேயுரிய தொடர்பாடற் கோலமாகும்.
- இதன்படி இலங்கையிலும் உள்நாட்டு தொடர்பாடல் அறிவுப் புலமையொன்று காணப்படுகிறது.
- தொடர்பாடல் மூலம் உள்நாட்டின் பல்வேறு கலாசார இயல்புகள் வெளிப்படுகின்றன.
- ஒவ்வொரு கலாசாரத்தையும் கொண்டு நடத்துவதற்கு தொடர்பாடல் காரணமாய் அமைந்துள்ளது.
- உள்நாட்டுச் சிந்தனை, உள்நாட்டுத் தொடர்பாடல் அறிவுப் புலமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், சமூக மனப்பாங்குகள், கலை என்பன தொடர்பாடற் புலமையை வெளிப்படுத்தும் அம்சங்களாக உள்ளன.
- உள்நாட்டு மக்களின் நிலவுகை, உள்நாட்டுத் தொடர்பாடல் அறிவுப் புலமையின் மீதே தங்கியுள்ளது.

### 3. தொடர்பாடலின் சமூகச் செல்வாக்கு

- தொடர்பாடல் சமூகத்தின் மீது பாரிய செல்வாக்கைச் செலுத்தும்.
- சமூகச் செயற்பாடுகள் தொடர்பாடல் மூலம் கையாளப்படுகிறது.
- உறவினர் தொடர்புகள், நட்பு, நேசம் ஆகிய சமூக நிகழ்வுகள் தொடர்பாடலின் மீதே நிலவுகின்றன.
- தனி நபர்களிடையே தொடர்பை வெளிக்காட்டுவது தொடர்பாடலாகும்.
- சமூக அபிவிருத்திக்காக மக்களை ஊக்குவித்தல் தொடர்பாடலின் மூலம் மேற் கொள்ளப்படுகிறது.

## 4. தொடர்பாடல் முன்னோடி நடவடிக்கைகள்

- பல்வேறு தொடர்பாடல்கள் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தைக் கற்க வேண்டும்.
- தொடர்பாடலுக்கு குறுங்கால, நீண்டகால நோக்கங்களும் வெளிப்படையான, மறைவான நோக்கங்களும் இருக்கும்.
- சமூக விருத்திக்காகத் தொடர்பாடலைச் சரியான வழியில் கொண்டு நடத்த வேண்டும்.
- தொடர்பாடலின் வர்த்தக இலக்குக்கும் சமூக இலக்குக்குமிடையே இடைவெளி காணப்படும்.
- தொடர்பாடலின் சமூக இலக்கை அடைவதே முன்னோடிகளின் குறிக்கோள்.
- பல்வேறு முன்னோடி நடவடிக்கைகள் தொடர்பாடலின் மீது செல்வாக்குச் செலுத்து கின்றன. (மரபு ரீதியான நடத்தைகள், புதிய முன்னோடி அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், குடும்பம், பாடசாலை ஆகியன.)

## அலகு 02 - தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி 2.0** : தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்புகளையும் வகிபாகத்தையும் நவீன உலகமயமாக்கல் சமூகத்தின் தொடர்பாடல் போக்குகளையும் தர்க்க ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : தொடர்பாடலின் சமூக வகிபாகத்தை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : தொடர்பாடலின் சமூக வகிபாகம்
தனி மனித தேவைகளுக்கான தொடர்பாடல்
சமூகத் தேவைகளுக்கான தொடர்பாடல்
தகவற் சேகரிப்புப் பணி
சமூக மயமாக்கம்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. தனி மனித தேவைகளுக்காகத் தொடர்பாடலைப் பயன்படுத்தும் விதத்தை அலசி ஆராய்வார்.
2. சமூகத் தேவைகளுக்காக தொடர்பாடலைப் பயன்படுத்தும் விதத்தை விளக்குவார்.
3. தகவற் சேகரிப்புக்குத் தொடர்பாடலை உபயோகிப்பது பற்றி ஒப்பீட்டு ரீதியாகக் கற்பார்.
4. சமூகமயமாக்கத்தில் தொடர்பாடலின் வகிபாகத்தைக் கண்டறிவார்.
5. பொதுவாகத் தொடர்பாடலின் சமூக வகிபாகத்தை விளக்குவார்.

### அறிமுகம்

மனித சமூகத்தில் தொடர்பாடல் ஆரம்பித்தது, தனி மனிதனுக்குத் தன் தேவைகளைத் தனியே நிறைவேற்றிக்கொள்ள முடியாது போனமையினாலாகும். ஏனையோரின் கருத்துகளும் உதவி, ஒத்துழைப்பும் மனிதனின் நிலவுகைக்கு அவசியமாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதால் ஏனையோருடன் சேர்ந்து வாழும் போது ஒரு பொது உடன்பாடு இருப்பது அவசியமான ஒரு காரணியாகும். அதனைப் பூரணப்படுத்துவது தொடர்பாடலாகும்.

ஆரம்ப சமூகத்தில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான தொடர்பாடல் அவர்களின் சமூகத் தேவைகளின் மட்டத்திலேயே காணப்பட்டது. எனினும், சமூகத் தேவைகள் விரிவடைந்தமை, தேவைகள் சிக்கலடைந்தமை காரணமாக தொடர்பாடல் பல மாற்றங்களுக் குட்பட்டது. அதன்படி தொடர்பாடலின் பணியும் விரிவடைந்தது.

மனித சமூகத்தின் நிலவுகைக்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் வழங்கும் சமூகத்தை நெறிப்படுத்துபவனின் நிலைக்கு, தொடர்பாடல் உயர்த்தப்பட்டது இதனாலாகும். அதன்படி சமூகத்துக்கேற்றபடி உறுப்பினர்களை உருவாக்கும் பணி தொடர்பாடலினாலேயே மேற்கொள்ளப்படுகிறது.

## பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. தனி மனித தேவைகளுக்கான தொடர்பாடல்

- மனித சமூகத்தில் பொதுவான தேவைகள் இருப்பதுடன் தனி மனித தேவைகளும் முரண்பட்ட விதத்தில் காணப்படுகின்றன.
- ஒருவர் தனது தேவையை நிறைவேற்றிக்கொள்ள ஏனையோருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.
- ஏனையோருடன் தொடர்பு கொள்ளும் போது, தொடர்பாடல் ஓர் அத்தியாவசிய கருவியாக அமையும்.
- தொடர்பாடற் கோலம் ஒருவருக்கொருவர் வேறுபடும்.
- பொருத்தமான தொடர்பாடல் முறை பயன்படுத்தப்படாவிட்டால் உரிய நோக்கம் நிறைவேறாது.
- தனி மனித தேவைகள் நிறைவு செய்வதில் புலக்காட்சியில் ஏற்படும் முரண்பாடுகள் தடையாக அமையும்.
- பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் முறைகள், வடிவங்கள் ஏராளமுண்டு.

### 2. சமூகத் தேவைகளுக்கான தொடர்பாடல்

- தொடர்பாடலின் மூலமே சமூகம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- சமூகத்தைக் கொண்டு நடத்துவதற்கு தொடர்பாடல் அத்தியாவசியமானது.
- சமூகத்துக்குப் பல தேவைகளுண்டு.
- சமூகத்தின் தனி மனிதர்களும் பல் வகைப்படுவர்.
- பயன்படுத்தப்படக்கூடிய தொடர்பாடல் முறைகளும், வடிவங்களும் பல் வகைப்படும்.
- தேவைகளுக்கும், ஆட்களுக்கும் ஏற்றபடி தொடர்பாடல் முறைகளையும், வடிவங்களையும் பயன்படுத்த வேண்டும்.
- சமூகத் தேவைகளை அடைந்து கொள்வதற்குத் தொடர்பாடல் எவ்வளவுக்கு உதவியானது என்பதைக் கண்டறிதல் எளிதன்று.
- தொடர்பாடலைப் பிழையாகப் பிரயோகிக்கும் போது குழப்பங்கள் ஏற்பட முடியும்.
- சமூகத்தின் சீரான நிலைப்பாடே தொடர்பாடலின் நோக்கமாக இருக்க வேண்டும்.

### 3. தகவல் திரட்டல் பணி

- சமூக நிலைப்பாட்டுக்கு தகவல்கள் அவசியம்.
- மக்கள் எப்போதும் தகவற் தாகத்துடன் இருப்பர்.
- உடலுக்கு உணவு போன்று மனதுக்குத் தகவல்கள் தேவை.
- பல்வேறு தகவல் ஊடகங்கள் மூலம் மக்களுக்குச் செய்தி கிடைக்கும்.
- முறைசார் ஊடகங்கள் மூலமும் முறைசாரா ஊடகங்கள் மூலமும் மக்களுக்குத் தகவல்கள் கிடைக்கும்.
- தகவலொன்றில் பிரதானமாக நம்பகத் தன்மை இருத்தல் வேண்டும்.
- ஒரு தகவல் நம்பகரமாக அமைவதற்கு அது உண்மையாக இருப்பதுடன் உரிய நிறுவனத்தினால் வெளியிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- முறைசாராத் தகவல்களும் சமூக நிலைப்பாட்டுக்கு உதவும்.
- முறைசாராத் தகவல்களின் சீரற்ற செல்வாக்கினால் சமூகம் குழப்பமடையும்.
- சரியான தகவல் மூலங்களின் மீது மக்களது கவனம் திரும்ப வேண்டும்.
- சமூகத்துக்குத் தகவல் கிடைக்கும் பிரதான வழியாக ஊடகங்களைக் குறிப்பிடலாம்.
- வெகுஜன ஊடகங்களை விடவும் நவீன ஊடகங்களின் மூலம் அதிக தகவல்கள் வேகமாகக் கிடைக்கின்றன.

## 4. சமூக மயமாக்கம்

- தனது சமூகத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப தம் சமூக வாழ்க்கைச் சந்தர்ப்பங்களின் போது நடந்துகொள்ள வேண்டிய முறைகளைக் கற்பது சமூகமயமாக்கலாகும்.
- இந்த நடத்தையை அல்லது மனிதன் நடந்துகொள்ள வேண்டிய விதத்தைப் பற்றிய கற்றல் ஆரம்பிப்பது மிகச்சிறிய பருவத்திலிருந்தாகும்.
- சமூகமயமாக்கலின் போது விருத்தி செய்து கொள்ளும் நடத்தைக் கோலங்கள் இரண்டு வகைப்படும்.

  (1) தனிநபர் தேவைகளை நிறைவு செய்து கொள்ளல்.

  (2) தனிநபர் அங்கம் வகிக்கும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நடத்தைகள்.
- ஒருவர் சமூகமயமாகும் மூன்று காரணிகளுண்டு.

  போலச் செய்தல் (Identification), பின்பற்றுதல் (Imitation), வகிபாகமேற்றல் (Role playing)
- போலச் செய்வதில் சில இலட்சியவாதிகள் நடத்தையை தம்மிடம் நிபந்தனைப்படுத்திக் கொள்ளல்.
- பின்பற்றுதலில் ஒருவருடன் நெருங்கி வாழ்ந்து, அனைத்து நடத்தைக் கோலங்களையும் தமதாக்கிக் கொள்ளல்.
- வகிபாகமேற்றலில் தாம் பழகும் மனிதர்களின் ஒவ்வொரு வகிபாகத்தையும் ஏற்று அது போலச் செய்தல்.
- சமூகத்தில் நிலவும் மரபுரீதியான தொடர்பாடல் முறைகளும் சமூகமயமாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- பொதுவாக வெகுஜன ஊடகம் சமூகமயமாக்கலில் பாரிய வகிபாகமொன்றை நிறைவேற்றுகிறது.
- கருக் குடும்பத்திலும், விஸ்தீரணக் குடும்பத்திலும் சமூகமயமாக்கல் செயற்பாடு வேறுபட்டது.
- குடும்பம், பாடசாலை என்பன சமூகமயமாக்கல் செயற்பாட்டுக்குப் பொறுப்பாக இருப்பினும் வெகுஜன ஊடகங்களினால் ஏற்படும் சமூகமயமாக்கம் பொறுப்பற்றது.

## அலகு 02 - தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி 2.0** : தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்புகளையும் வகிபாகத்தையும் நவீன உலகமயமாக்கல் சமூகத்தின் தொடர்பாடல் போக்குகளையும் தர்க்க ரீதியாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : உலகமயமாக்கலும் தொடர்பாடலும் பற்றி விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : உலக மயமாக்கல் எண்ணக்கரு
அறிவுச் சமூகம்
உலக மயமாக்கலும் புதிய போக்கும்
குடிகளின் ஊடகம்
மாற்று ஊடகமும் எதிர்ப்பு ஊடகமும்

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. உலகமயமாக்கல் ஏற்படுவதன் சமூகப் போக்குகளையும் எண்ணக்கருக்களையும் விபரிப்பார்.
2. தகவற் தொடர்பாடலின் பெறுபேறாக அறிவுச் சமூகம் உருவான விதத்தை விளக்குவார்.
3. மைய மற்றும் தூர நாடுகளுக்கு உலகமயமாக்கலும் அதன் போக்குகளும் செல்வாக்குச் செலுத்திய விதத்தை ஒப்பீட்டு ரீதியாகப் பகுப்பாய்வு செய்வார்.
4. குடிமை ஊடகம் என்பதன் தன்மை, அதன் விருத்தி, செயற்பாடு என்பவற்றை விளக்குவார்.
5. மாற்று ஊடகம், எதிர்ப்பு ஊடகம் தோன்றிய அடிப்படை, அவற்றின் இயல்புகள், அவற்றின் சமூகச் செல்வாக்கு என்வற்றை விளக்குவார்.

### அறிமுகம்

உலகம் பூராவும் பல்தேசியப் பரிணாமத்தில் பரவியுள்ள மூலப்பொருள் தகவல் தொடர்பு மற்றும் ஊடகத்தொகுதிகளாக விரிவடைந்துள்ளமை தொடர்பாடலின் உலகமயமாக்கல் எனப்படும். தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கையில் அப்போக்கு பல்வேறு கோணங்களிலும் பல்வேறு கோட்பாடுகளின் கீழும் ஆராயப்படுகிறது. பூகோளமயமாக்கலும் தொடர்பாடலும் பற்றி பரிசோதனைகளில் ஈடுபடும் சில அறிஞர்கள், விஞ்ஞானத்திலும் கலாசாரத்தினதும் எதிர்கால விருத்தி காரணமாக பல்வேறு நாடுகளின் இறைமை மற்றும் கலாசாரத் தனித்துவம் அழிவதாகவும் வெகுஜன ஊடகமும் தொடர்பாடலும் மனித நேய நோக்கத்திற் காகச் செயற்படுவதற்குப் பதிலாக, வர்த்தக நோக்கங்களுக்காகவே செயற்படுவதாக கருதுகின்றனர்.

உலகமயமாக்கல் சமூகத்தில் வரலாற்று ரீதியாக ஏற்படும் பல்துறை சார்ந்த ஒரு செயலொழுங்காகும். அது மனிதச் செயற்பாட்டின் பல்வேறு பரப்புகளில் இடைத்தொடர்பையும் (Inter connectendness), இடைச் செயற்பாடு (Interaction), பரஸ்பரம் (Inter dependancy), கூர்மை (Intensification) என்பவற்றை விருத்தி செய்து மொத்த மனித சமூகத்தையும் படிமுறை ரீதியான ஒரு முக நிலவுகையாக மாற்றியுள்ளது. சமகால மனித சமூகம் தனது சமூகப் பரிணாமத்தின் சிறப்பான ஒரு யுகத்துக்குள் பிரவேசித்திருப்பதுடன் நூற்றாண்டு காலமாக நிலவிய மூடிய சமூகமும் தேசிய அரசுக் கட்டமைப்பும் தனது நிலவுகையின்

இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளன. இக்கட்டமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டும் அவற்றைத் தம் ஊட்டல் பிரதேசங்களாக ஆக்கிக் கொள்ளும் நவீன சமூகக் கட்டமைப் பொன்று உருவாகி மனித வாழ்வின் சகல செயற்பாட்டு அவகாசங்களும் அதனுடன் இணைந்துள்ளது. மனித வரலாற்றில் முதற் தடவையாக அப்புதிய சமூகக் கட்டமைப்பு மூலம் முழு மனித சமூகமும் ஒரு முகப்பட்ட சமூகமாக ஆக்கப்பட்டுள்ளது.

பூகோள சமூகத்தில் வெகுஜனத் தொடர்பாடல்கள் மூலமாக நாடுகளின் எல்லை கடந்து நிகழும் தகவல், செய்தி, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளின் விரிவாக்கத்தின் விளைவாக தேசிய, வலய, கலாசாரத் தனித்துவம் நலிவடைந்து சம இன, சமதரத்து, ஒருமுகமான பூகோளக் கலாசார, தொடர்பாடல் சூழல் ஒன்று உருவாகிய வண்ணம் உள்ளது. இது பூகோளப் பரிணாமத்தின் தகவல் முதலீட்டு (Informational capital) தனியுரிமையாகியதன் பெறுபேறாகும்.

இது தகவல் ஒன்றிணைவின் நிகழ்வுகளைத் தெரிவு செய்யும் செயலொழுங்கு மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தி விட்டது. தகவல், ஊடகச் சந்தையின் உள்ளடக்கம் பிரதேசத்துவம், தேசியம், வலயத்துவம் இழிவளவாகும் போக்கை ஏற்படுத்துகிறது. அதற்கிடையில் இந்நிலை பூகோளமய செய்தி பெறுவோர் குழாத்தின் பல்வகைமையாக்கும் போக்கைத் தீவிரப்படுத்தும். இவ்வாறு செய்தி மற்றும் பொழுதுபோக்கை வழங்கும் நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் உலகமய இயல்புகளை அடைந்ததைத் தொடர்ந்து செய்தி பெறுவோரின் இரசனையும் உலகமயமாகும் போக்கு அதிகரிக்கும். இந்நிலையில் செய்தி பெறுவோர் தம் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் நிகழ்வனவற்றின் மீது காட்டும் ஆர்வமும் கவர்ச்சியும் குறைவடைவதுடன் அவர்களின் அவதானமும் ஆர்வமும் பூகோளமய கலாசாரத்தினால் நடைபெறும் நிகழ்வுகளை அறிந்து கொள்வதன் பால் செல்லும் ஊடகக் கலாசாரம் பூகோளமயமாக்கப்பட்டதன் விளைவாக பல்வேறு தேசியங்களின் கலாசாரம் அர்த்தங்களும் பெறுமானத் தொகுதிகளும் சமகாலமயமாக்கல் (Synchronization), தரக்கட்டுப்பாட்டுக்குட்படல் (Standadization) ஒரே இனமாகும் (Homogenization) போக்கு என்பன தீவிரமடைந்து மொத்த வாழ்க்கை அவகாசமுமே ஊடகமயமாகும் போக்கைப் பலப்படுத்தும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. பூகோள மயமாக்கல் எண்ணக்கரு**

- மொழிக்கருத்தில் - உலகமயமாக்கல், பூமிமயமாக்கல், அகிலமயமாக்கல், பூகோளமயமாக்கல், சர்வதேச மயமாக்கல் என்ற பிரயோகங்கள்
- அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொதுக் கோட்பாடு இல்லை
- பன்மை அளவீட்டு, பல்துறை அவகாசமெங்கிலும் பரவியிருக்கும் ஓர் எண்ணக்கரு
- துறைகளுக்கிடையிலான பல்துறை சார்ந்ததாகப் பகுப்பாய்வு செய்யலாம்
- வரலாற்று ரீதியான, இயற்கையான ஒரு செயலொழுங்கு
- மானிட சமூகப் பரிணாமத்தின் ஒரு கட்டம், புதிய வம்சம், புதிய கட்டமைப்பு
- சமூகம் என்பது ஒற்றை அலகாக மனித சமூகத்தை ஒன்றிணைப்பது
- மனித சமூகத்தின் படிமுறை ரீதியான கட்டமைப்பு
- மனித சமூகத்தின் ஒரு படிமுறைக் கட்டமைப்பு
- பொதுவான மனித சமூகத்தின் மீது உருவான மிகைக் கட்டமைப்பு
- மனித சமூகத்தின் பல்வேறு இயல்புகளுக்கிடையிலான பரஸ்பர ஆளிடைத் தொடர்பாடலின் மற்றும் ஆளிடைச் செயற்பாட்டின் ஒரு பெறுபேறு
- பூகோள சமூகத்தின் கால அவகாசத் தொடர்புகள் சுருங்கியதன் ஒரு விளைவு

**2. அறிவுச் சமூகம்**

- தகவலை அடிப்படையாகக் கொண்ட சமூகம்.
- மேலைத்தேய எதிர்கால எண்ணக் கருவில் உதித்ததொன்று (1970 / 1980)
- மனித வரலாற்றின் ஒரு நவயுகம்.
- அறிவுச் சமூகத்தில் பலவீனத்தன்மையற்ற பரவல், ஊடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- அறிவுச் சமூகத்துக்கென வாழ்க்கைப் பாணியும் சிந்தனைச் சிறப்பியல்பும் உண்டு.

**3. உலகமயமாக்கலும் புதிய போக்குகளும்**

- பூகோளமயமாக்கல் ஒரு மாறும் செயலொழுங்கு.
- தேசிய அரசுகள் நலிவடைந்ததன் பெறுபேறாகும்.
- பூகோளமயமாக்கத்துடன் வலயமயமாக்கலும் நிகழும்.
- பண்டப் பொருளாதாரத்தைப் மிஞ்சி, நிதிப் பொருளாதாரம் பலமடைகிறது.
- விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் பொருளாதாரத்தின் தீர்க்கமான ஒரு சக்தியாக மாறுதல்.
- உலகப் பொருளாதாரத்தில் நிதி ஏகாதிபத்தியமொன்று விருத்தியடையும்.
- வெகுஜன ஊடகங்களில் அளவு ரீதியான அதிகரிப்பு நிகழும்.
- வெகுஜன ஊடகச் செயலொழுங்கில் பல்வேறு மோதல்கள் விருத்தியடைதல்.
- பல்வேறு ஊடகங்கள் ஒன்றிணைந்த தொகுதியாக மாறுதல்.
- பூகோள தகவல் அவகாசமொன்று உருவாதல்
- கலாசாரப் பரப்பில் வெகுஜன ஊடகத் தகவல்களின் வகிபாகம் விருத்தியடைதல்.
- வெகுஜன ஊடகங்களுக்கு மேலதிகமான சுய மைய ஊடகங்கள் உருவாதல்.
- புதிய ஊடகங்கள் விருத்தியடைதல்.
- நவீன ஊடகங்களுக்கு பின், நவீன ஊடகங்களுக்கிடையே தொடர்புகள் விருத்தியடைதல்.
- பொதுசனத் தகவல் அவகாசம் வர்த்தகமயமாதல்
- புதிய கலாசார வடிவங்கள் தோன்றுதல்
- கலப்புக் கருக் கலாசாரம் உருவாதல்.

**4. குடிமை ஊடகம் (Civic Journalism)**

- மக்கள் செய்திமயம் என்ற பிரயோகம் பயன்படுத்தப்படுதல்.
- குடிமக்கள் செய்தி அறிவிப்பில் ஈடுபடுதல் இதன் கருத்தாகும்.
- சமூக நோக்கங்களை நிறைவேற்றச் செயற்படல்.
- கடுமையான பொருளாதார, அரசியல், கலாசாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் செயற்படுதல்.
- பங்குபற்றல் ஜனநாயகத்தை மேம்படுத்தல்.
- ஊடகத் தீவிரத்தன்மையை இதன் முதல் ஒரே தடவையில் பயன்படுத்த முடிதல்.
- குடிகளின் குரலைத் தேடிச் சென்று, அதனை வெளிக்கொணர முடிதல்.
- உள்ளடக்கத்தில் முதலில் அரசியலும் பின்னர் குற்றங்கள், தேர்தல் நடவடிக்கைகள், சுகாதாரப் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினை என்பனவும் சேர்த்துக் கொள்ளல்.
- இங்கு மரபு ரீதியான தேடல் சார் பத்திரிகைத் துறையின் இயல்பு காணப்படுதல்.
- நிகழ்வுகளை அறிக்கையிடுதல் பிரபுத்துவ அல்லது அதிகாரவர்க்கக் கோணத்தை விட குடிகளின் கோணத்தில் நிகழ்தல்.
- இதன் மூலம் குடிமக்கள் மேலும் ஜனநாயகச் செயலொழுங்கில் தொடர்புபடுதல்.
- குடிசார் வாழ்வின் பண்புத்தரம் இதன் மூலம் ஊட்டம் பெறுதல்.

## 5. மாற்று ஊடகமும் எதிர்ப்பு ஊடகமும்

- பிரதான நீரோட்டத்துக்கு வெளியே செயற்படும் ஒரு வெகுஜன ஊடகப் பாணி.
- மரபு ரீதியான பலம் பொருந்திய ஊடக நிறுவனங்களுக்கெதிராக உருவாக்கப்படுதல்.
- இங்கு செய்திகள், பொதுவான தகவல்கள், சிறப்பம்சங்கள் முக்கியத்துவம் பெறும் ஒருவர் அல்லது சிலர் சேர்ந்து கொண்டு நடத்துதல்.
- இவ்வூடகங்கள் பிரதான கம்பனிகளினால் நிறுவன ரீதியாக வெளியிடப்படுவதோ அல்லது விநியோகிக்கப்படுவதோ அல்ல.
- வெறும் இலாப நோக்கிலன்றி கொள்கை விடயங்களுக்காக நடத்தப்படல்.
- பயனாளிகள் வட்டம் சிறிதாயினும் சமூகத்தில் கூடிய செல்வாக்குச் செலுத்துதல்.
- உள்ளடக்கம் பிரதான நீரோட்டத்தின் உள்ளடக்கத்தில் இருந்து வேறுபட்டது.
- உலகமயமாக்கல் விரோதம், இனவாத விரோதம், சுற்றாடல் மற்றும் சிறு குழுக் களுடன் கருத்துகள் இவற்றில் பெருமளவில் பிரதிபலிக்கும்.
- நவீன சமூகப் பெறுமானங்கள், அர்த்தங்கள் இதன் மூலம் சமூக மயமாக்கப் படுகின்றன.
- நுகர்வு வாதத்துக்கும் சனரஞ்சக கலாசாரத்துக்கும் வெகுஜன கலாசாரத்துக்கும் எதிராக முன்வருதல்.
- சமூகத்தின் சிந்தனையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துதல்.
- சமூகத்தை ஒரு புதிய திசையில் இட்டுச் செல்ல முயற்சித்தல்.

## அலகு 03 - தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்

**தேர்ச்சி 3.0** : உள்ளக, ஆளிடை, கூட்டு மற்றும் உபகரணங்களுடன் கூடிய தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : உள்ளகத் தனியாள் தேர்ச்சியைப் பயன்படுத்துவார்.

**பாட வேளைகள்** : 14

**பாட உள்ளடக்கம்** : தகவல் திரட்டுதல்
மனதைக் கையாளுதல்
தர்க்கரீதியான சிந்தனையும் தீர்மானம் எடுத்தலும்
சுய எண்ணக்கரு விருத்தி
கற்றல்

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. தகவல் திரட்டல், நினைவு, நினைவுபடுத்தல் என்ற விடயங்களை இனங்கண்டு விபரிப்பார்.
2. மனதைக் கையாளும் தேர்ச்சியை விருத்தி செய்து கொள்வார்.
3. தர்க்கரீதியாக சிந்தனை மற்றும் தீர்மானமெடுத்தல் தொடர்பான பயன்பாட்டை உறுதிப் படுத்துவார்.
4. சுய எண்ணக்கருவை விருத்தி செய்து கொள்வார்.
5. கற்றலை தொடர்பாடற் கோணத்தில் பகுப்பாய்வு செய்வார்.

**அறிமுகம்**

தொடர்பாடற் செயலொழுங்கின் அடிப்படை, உள்ளகத் தனியாள் தொடர்பாடலாகும். அதன் போது தகவல் திரட்டுதல், அவற்றைச் செய்தியாக்கும் பொருட்டு ஆக்கரீதியாகப் பயன்படுத்தல், தருணத்துக்கேற்றவாறு செய்திகளை முன்வைத்தல் என்ற பிரதான பணிகள் நடைபெறும். இங்கு இடம் பெறும் உள்ளகத் தொடர்பாடற் செயலொழுங்கில் மூன்று படிமுறைகளுண்டு அவை;

1 உணர்வு → 2 எண்ணங்கள் → 3 நடத்தை

ஒருவரின் உள்ளகத் தொடர்பாடல் ஏனையவர்களுக்குத் தெரிய வருவது நடத்தை மூலமாகும். நடத்தை என்பது எண்ணங்களின் பெறுபேறாகும். பல்வேறு சிந்தனைகள், மனதில் தோன்றும் உணர்வுகள் காரணமாகவே எண்ணங்கள் தோன்றுகின்றன. இதன் படி உள்ளகத் தொடர்பாடல் என்பது மிகவும் வேகமானதும் சிக்கலானதுமான ஒரு செயலொழுங்காக மாறும்.

உள்ளகத் தொடர்பாடலை மேலும் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்காக வளர்த்துக் கொள்ள வேண்டிய ஐந்து தேர்ச்சிகளைக் கூறலாம். அவை பின்வருமாறு;

1. பல்வேறு மூலாதாரங்களில் இருந்து பல்வேறு தகவல்களை மனதில் பதித்துக் கொள்ளல். ஒருவர் கையாளும் பல்வேறு மூலாதாரங்களில் இருந்து இவ்வாறு தெரிந்தோ தெரியாமலோ தகவல் திரட்டுதல் நடைபெறுகின்றது. அதற்காகப் பயன்படுத்தப்படுவது தனிமனிதனின் ஐம்புலன்களையாகும்.

2. ஒருவர் மனதில் தேக்கிவைத்துள்ள பல்வேறு விடயங்களில் இருந்து தனது செய்திக்குத் தேவையான தகவல்களை மட்டும் தெரிவு செய்தல். இதனைச் செய்வது போதியளவு தகவல்களை மனதில் வைத்திருப்பதும் தேவையான போது அவற்றைத் தெரிவு செய்து நினைவுக்குக் கொண்டு வருவதன் மூலமாகும்.

3. தர்க்க ரீதியாகத் தீர்மானம் எடுப்பதன் மூலம் செய்தியின் இயல்பைத் தீர்மானித்தல். இது உணர்வுபூர்வமான ஒன்றாகவோ, நுண்ணறிவு பூர்வமாகத் தயாரித்ததாகவோ இருக்கலாம். அவையிரண்டும் மனித நடத்தை சார்ந்ததாகும்.

4. தேவைக்குப் பொருந்தும் வகையில் செய்தியை ஆக்குதல். இது மிக வேகமாக நடைபெறுவதாகும். சிலவேளை இந்த வேகத்தை விளங்கிக் கொள்ளவும் முடியாதிருக்கும். மனம் அந்த அளவு வேகமாகச் செயற்படும்.

5. பொருத்தமான விதத்தில் செய்தியை முன்வைத்தல். இங்கு ஒருவரின் நடத்தை வெளிப்படுத்தப்படும். இது வாய்மொழியாக அல்லது வாய்மொழியல்லாததாக நிகழலாம். அது சமிக்ஞைக் குறியீடு மூலம் நடைபெறலாம். செய்தியை முன்வைப்பதற்காக எந்த வகை வழிமுறையைப் பின்பற்றுவது என்பதைத் தீர்மானிப்பது ஒவ்வொருவரும் பெற்றுள்ள அனுபவத்தைப் பொறுத்தாகும்.

சுய எண்ணக்கரு என்பது ஒருவர் தன்னைப் பற்றி உருவாக்கிக் கொள்ளும் கருத்துகளின் தொகுதியாகும். இதன்படி தான் எப்படிப்பட்டவர் என்பதை அவரே தீர்மானிக்கின்றார். குறைந்த வயதில் உள்ள பிள்ளைகளிடையே காணப்படுவது சுய எண்ணக்கரு கட்டியெழுப்பப்படும் இயல்பாகும். அதாவது தான் எப்படிப்பட்டவர் என்பது பற்றி அப்பிள்ளையிடம் ஒரு தெளிவு இல்லை. வயது முதிர்ச்சியுடன் ஒருவர் தனது நடத்தைக் கோலத்தை நிலைப்படுத்திக் கொள்வார். ஒவ்வொருவரினதும் நடத்தை தீர்மானிக்கப்படுவது இந்நடத்தைக் கோலத்தின் படியாகும். அது அவரின் தொடர்பாடல் நடத்தையில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும். ஒருவர் ஒரு விடயத்தை வெளியிடும் விதம், வெளியிடும் உள்ளார்த்ததின் தன்மை, தீர்மானங்களுக்கு வரும் முறை என்பன இதன் அடிப்படையிலேயே தீர்மானமாகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. தகவல் திரட்டல், ஞாபகம், ஞாபகப்படுத்தல்**

- பல்வேறு மூலாதாரங்களினூடாகத் தகவல்கள் திரட்டப்படுகின்றன.
- தகவல் திரட்டும் உபகரணங்களாக ஐம்புலன்களும் பயன்படுத்தப்படுதல்.
- தகவல் பெறுவதில் எல்லைகள் இல்லை.
- நல்ல தகவல்களும் மோசமான தகவல்களும் கிடைத்தல்.
- பயனுள்ள தகவல்களும் பயனில்லாத தகவல்களும் கிடைத்தல்.
- கிடைக்கும் தகவல்களை ஞாபகத்தில் பதியும் ஒரு செயலொழுங்கு உண்டு.
- குறுங்கால ஞாபகத்துக்கும் நீண்ட கால ஞாபகத்துக்குமிடையிலான ஒன்றிணைந்த செயலொழுங்கு இருத்தல்.
- உள் மனம், வெளி மனம் என்ற பிரிவுகள் இருப்பது.
- அனுபவம் மூலம் கிடைக்கும் தகவல்கள் நீண்டகாலம் நினைவில் இருத்தல்.
- ஞாபகமும் ஞாபகப்படுத்தலும் உளவியல் செயலொழுங்காகும்.
- ஞாபகத்தில் உள்ள தகவல்களை வகைப்படுத்தல் வேண்டும்.


- தேவையான தகவல்களை வைத்துக் கொண்டு தேவையற்ற தகவல்களை நீக்கிவிட வேண்டும்.
- தகவற் கோப்புகளை மனதில் உருவாக்க வேண்டும்.
- நீண்ட காலம் நினைவுபடுத்தாத நிலையிலும் நிகழ்வுகள் ஞாபகத்தில் பதிந்திருத்தல்.
- ஞாபகத்தில் வைத்திருத்தலும் ஞாபகப்படுத்தலும் ஒரு நுண்ணறிவுச் செயலொழுங் காகும்.

**ஞாபகத்தின் இயல்பு**

| | |
|---|---|
| வாசித்தவற்றில் | 10% |
| கேட்டவற்றில் | 20% |
| பார்த்தவற்றில் | 30% |
| பார்த்துக் கேட்டவற்றில் | 50% |
| எழுதி வாசித்தவற்றில் | 70% |
| தான் செய்தவற்றில் | 80% |


மூலம்: (Education Media
B.Wiman & J.Nierbhusy)

**ஞாபகப்படுத்தும் ஆற்றல்**




ஞாபகத்தின் இயல்பைக் காட்டும் வீத அளவு, உளவியல் ஆய்வு மூலம் தயாரிக்கப் பட்டதாகும். அதன் மூலம் தெளிவுபடுத்தப்படும் விடயம் கற்றலுக்கு முக்கியமாகும். ஞாபகத்தில் வைத்திருப்பதற்காகச் செவிமடுத்தல் மிகவும் குறைந்த ஞாபகப் பெறுமானத்தையே கொண்டுள்ளது. உயர்ந்த அளவைக் காட்டுவது, தான் செய்த அல்லது ஈடுபட்ட விடயங்களாகும். அதன்படி மிக நன்றாக ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக எத்தகைய முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அத்துடன் ஞாபகத்தில் உள்ளவற்றை ஞாபகப்படுத்த முடியுமான அளவு ஒரு நாளைக்குள் இருபத்தைந்து அல்லது அதற்கும் குறைவான வீதமாகக் குறைவடைவது இங்கு காட்டப்பட்டுள்ளது. இதன்படி ஒன்றை ஞாபகத்தில் வைத்துச் சில நாட்கள் கழிந்த பின் மறந்து போகும் போக்கு அதிகரிப்பது தெரிகிறது. எனவே, கூடிய அளவு ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக எத்தகைய முறைகளைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்? என்பது பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

ஞாபகத்தில் வைத்திருக்கும் ஆற்றலை மேம்படுத்துவது எவ்வாறு?




ஞாபகத்தை மேம்படுத்துவதற்காகத் தம் ஞாபகத்தில் இருப்பவற்றை அடிக்கடி மீட்டல் அவசியம். அதனைச் செய்து வந்தால் நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் உயர் மட்டத்தை அடையும்.


ஞாபகத்தில் பதிவது மூளையின் ஆற்றலினாலாகும். மூளையின் வலது, இடது பகுதிகள் செயற்படும் ஆற்றலை உளவியலாளர் பின்வருமாறு கண்டறிந்துள்ளனர்.

| **இடது மூளை** | **வலது மூளை** |
|---|---|
| பேச்சு | கலைச் செயற்பாடுகள் |
| கணித ஆற்றல் | இசையாற்றல் / தாளம் |
| நுண்ணறிவுப் பகுப்பாய்வு | மனப்பாங்கு |
| வாசிப்பு | இனங்காணல் |
| எழுத்து | விளக்கம் |
| பெயர் குறிப்பிடல் | சிக்கலான கோலங்கள் பற்றிய புலக்காட்சி |
| வகைப்படுத்தல் | அவகாசம் பற்றிய ஆற்றல் |
| படிமுறை | முகபாவம் |
| சிக்கலான இயல்பாக்கப்படிமுறை | உள்ளார்ந்த ஆற்றல் |
| விமர்சனம் | பகுத்தறிவு |
| தர்க்கம் | ஆக்கத்திறன் |
| மதிப்பீடு | உரு |
| | நிறம் |

ஞாபகத்தில் வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய மற்றுமொரு உத்தி திரட்டும் தகவல்களை ஓர் ஒழுங்கு முறையில் கோவைப்படுத்திக் கொள்வதாகும். அதன் மூலம் தனது மனதில் ஒரு கணினியில் போன்று தகவல்களைப் பதிவு செய்ய முடியும். அத்தகைய சில முறைகள் கீழே காணப்படுவதுடன் அவற்றைப் பயில சில காலம் எடுக்கலாம். ஆனால், அவற்றைப் பயிற்சி பெற்ற பின்னர் ஞாபகத்தில் வைத்திருப்பது இலகுவானதும் விருப்பமானதும் ஆக மாறும்.

- ஒரே வகையான தகவல்களை ஒன்றாகத் தொகுத்தல் (உதாரணம்: தகவல் உள்ளடக்கம் ஒன்றைத் தயாரித்தல்)
- பல்வேறு தகவல்களை ஒரு சட்டகத்துள் கொண்டு வரல் (உதாரணம்: தொடர்புடைய தகவல்களை இணைத்தல்)
- எண்ணக்கருப் படம் (உதாரணம்: படிமுறைப்படி பரவல் படம் அமைத்தல்)
- தகவல்களை ஒழுங்குபடுத்தல் (உதாரணம்: தகவலை உரிய தேவைக்கேற்ப எழுதுதல்)
- உவமான உவமேயங்களைப் பயன்படுத்தல் (உதாரணம்: ஒன்றை மற்றொன்றுடன் சமப்படுத்தல்)
- பயிற்சி (ஞாபகத்திலுள்ளவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்தல்)
- கற்பனையாக உருவாக்குதல் (சொற்சோடி, கவிதை, உரு, ஆவணம் போன்றவை.)

**கற்றல் ஞாபகம் தொடர்பான தகவல் அமைப்பு மாதிரி**




மூலம்: Gagne & Driscoll -1988

இவ்வுருவின் மூலம் விளக்கப்படுவது சூழலில் இருந்து நாம் பெறும் தகவல்கள் முதலில் குறுங்கால ஞாபகத்துள் புகுவதாகவும் நீண்டகால ஞாபகத்தின் நுண்ணறிவு அதன் பின்னராகும் என்பதாகும். எனவே, ஞாபகம் வைப்பது என்பது நீண்ட கால ஞாபகமாகும்.

## 2. மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்

- மனம் தொடர்ந்து செயற்படும் ஒரு தொகுதி.
- உணர்வுகளும் எண்ணங்களும் தொடர்ந்தும் ஏற்படுகின்றன.
- ஞாபகக் களஞ்சியத்திலுள்ள பல்வேறு தகவல்கள் எமது காட்டுப்பாட்டை மீறி ஞாபகத்துக்கு வருதல்.
- பல்வேறு வெளிக் காரணிகளால் தூண்டப்படுதல்.
- பல்வேறு உணர்வுகளின்படி எண்ணங்களின் இயல்புகள் தீர்மானமாதல்.
- உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எண்ணங்களைக் கட்டுப்படுத்தலாம்.

- உணர்வுகளையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்துவதன் மூலம் நடத்தையைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.
- உணர்வுகள், எண்ணங்கள் கட்டுப்பாட்டில் பயிற்சி பெற வேண்டும்.
- மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரு முறையாக தியானம் பொருத்தமான செயற்பாடாக விளங்கும்.
- மனதைக் கட்டப்படுத்துதல் மனித சமூகத்தின் நிலவுகைக்கு அவசியம்.
- உணர்ச்சிவசமான ஒரு சந்தர்ப்பத்தில் மனதைக் கட்டுப்படுத்தல் ஒரு சவாலாகும்.
- மனதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் உள்ளகத் தொடர்பாடலைக் கையாள முடியும்.
- மனக் குழப்பம் என்பது மனிதனின் இயல்பாகும்.
- மனதைக் கட்டுப்படுத்துதல் ஒரு நுண்ணறிவுச் செயற்பாடாகும்.
- மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டவனுக்கு சமூகத்தில் உயர்ந்த இடமுண்டு.
- மனதைக் கட்டுப்படுத்துதல் சிரமமான ஒன்றாகும்.

## 3. தர்க்க ரீதியான சிந்தனையும் தீர்மானம் எடுத்தலும்

- ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான காரணிகளைத் தெரிவு செய்து கொள்ளும் ஆற்றல் தர்க்கரீதியான சிந்தனையாகும்.
- ஒருவர் தர்க்கரீதியான விசாரணையை ஆரம்பிப்பது மிகச் சிறிய வயதிலிருந்தாகும்.
- தர்க்க ரீதியான சிந்தனை உயர் உளச் செயற்பாடாகும்.
- அறிவும் அனுபவமும் அதிகரிக்கும்போது தர்க்க ரீதியான சிந்தனையும் அதிகரிக்கும்.
- ஒன்பதாம் வயது முதல் தர்க்க ரீதியான சிந்தனை விரிவடைகின்றது.
- தர்க்க ரீதியான சிந்தனை உயர் தீர்மானங்களை எடுப்பதில் செல்வாக்குச் செலுத்தும்.
- ஒவ்வொருவரும் பல தீர்மானங்களை எடுத்தாலும் அவை அனைத்தும் உயர் தீர்மானங்களாக அமையாது.
- உயர் தீர்மானங்களை எடுப்பது நுண்ணறிவின் அறிகுறியாகும்.
- பல மாற்றுத் தீர்மானங்களில் தருணத்துக்குப் பொருத்தமான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.
- சிலவேளை தீர்மானம் எடுக்க இருக்கும் காலம் மிகக் குறுகியதாக இருக்கும்.
- தன்னால் தீர்மானம் எடுக்க முடியாதபோது அடுத்தவர்களின் ஆலோசனையைப் பெறுதல் வேண்டும்.
- சீரற்ற தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்படுவது சீரற்ற தீர்மானமாக அமையும்.

**தீர்மானம் எடுப்பதன் படிமுறைகள்**

1. ஒரு பிரச்சினை இருப்பதை இனங்காணல்.
2. பிரச்சினையின் இயல்பை பகுப்பாய்வதும் ஆய்வதும்.
3. தீர்மானம் எடுக்கும் அவசியத்தை முடிவு செய்தல்.
4. மாற்றுத் தீர்மானங்கள் சிலவற்றை உருவாக்குதல்.
5. மாற்றுத் தீர்மானங்களை மதிப்பிடுதல்.
6. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் இயல்பாற்றலை மதிப்பிடல்.
7. மிகவும் பொருத்தமான தீர்மானத்தை எடுத்தல்.

## 4. சுய எண்ணக்கரு விருத்தி

- ஒருவர் தான் எப்படிப்பட்டவர் என அறிந்து வைத்திருக்கும் விதம் சுய எண்ணக்கருவாகும்.
- தமது இயல்புகளை விருத்தி செய்து கொள்வது சுய எண்ணக்கரு போதிப்பதாகும்.
- தான் யார் என்பதை இனங்கண்டு வைத்திருப்பது அனைவர்க்கும் முக்கியம்.

- சுய எண்ணக்கரு என்பது சமூகவியலில், உளவியலின் மேலெழுந்த ஒரு கருத்தாகும்.
- சுய எண்ணக்கருவை ஊட்டம் பெறச் செய்வது பற்றி ஆய்வுகள் நடைபெறுகின்றன.
- இவ்வெண்ணக்கரு இப்போதும் விருத்தியடைந்து கொண்டிருக்கின்றது.
- சுய எண்ணக்கரு முன்னைய பிறப்புடன் தொடர்பானதல்ல.
- பிறப்பிலேயே அமைந்திருக்கும் ஒன்றல்ல.
- அது ஒருவர் சுற்றாடலுடன் மோதுவதால் பெறும் அனுபவத்தின்படி உருவாக்கிக்கொள்ளும் ஒன்றாகும்.
- சுய எண்ணக்கரு என்பது ஒருவர் தன்னைப் புலக்காட்சிப்படுத்தி வைத்துள்ள விதமாகும்.

**வரைவிலக்கணம்**

சுய எண்ணக்கரு என்பது ஒருவர் தனது இயல்பு பற்றியும் அவர் வேறு மனிதர்களுடன் தனது வாழ்க்கையின் பல்வேறு துறைகளுடன் கொண்டுள்ள தொடர்புகள் பற்றியும் உருவாக்கிக் கொண்டுள்ள ஒரு பெறுமானத்துடன் கூடிய புலக்காட்சிகளுடன் கூடிய, ஒழுக்கமைக்கப்பட்ட கச்சிதமான எண்ணக்கருத் தொகுதியாகும். (ரொஜர்ஸ் - 1959)

சுய எண்ணக்கரு என்பது ஒருவர் தன்னைப்பற்றி உண்மையாகவே கருதும் பெறுமானங்களுடன் கூடிய நம்பிக்கைகளினால் ஆக்கப்பட்ட செயற்பாட்டுப் பல் தொகுதியாகும். (பர்கி - 1970)

சுய எண்ணக்கரு என்பது ஒருவர் தனது ஆற்றல்கள், தேர்ச்சிகள், தோற்றம், சமூக அங்கீகாரம் பற்றிக் கொண்டுள்ள மனப்பாங்கு, உணர்வுகள், அறிவு என்பவையாகும். (பர்ன் - 1983)

சுய எண்ணக்கரு மூன்று பிரிவுகள் கொண்டது.

1. உடல் இயல்பு பற்றிய சுய எண்ணக்கரு
2. ஆற்றல்கள் பற்றிய சுய எண்ணக்கரு
3. சமூக அங்கீகாரம் பற்றிய சுய எண்ணக்கரு

இதன்படி இம்மூன்றையும் விருத்தியாக்கிக் கொள்வதன் மூலம் ஒருவரின் சுய எண்ணக்கருவை விருத்தி செய்து கொள்ள முடியும். சுய எண்ணக்கரு பற்றிக் கூறக்கூடிய இரண்டு பிரதான விடயங்களாவன:

1. சுய எண்ணக்கருவை மதிப்பீட்டுக்குட்படுத்த முடியும்.
2. சுய எண்ணக்கரு என்பது மாறும் ஒன்றாகும்.

எனவே, ஒருவர் தனது சுய எண்ணக்கரு தொடர்பாக மதிப்பீடு செய்து அதன் ஒவ்வொரு பிரிவுகளை விருத்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒருவருக்கு சமூகத்தில் ஒரு தனித்துவம் வருவது இதன் மூலமாகும். இங்கு அவரின் நடத்தையும் மனப்பாங்கும் முக்கியமானதாகும்.

**5. கற்றல்**

- அனைவரும் கற்க ஆரம்பிப்பது குழந்தைப் பருவத்திலிருந்தாகும்.
- சூழல் கற்றலின் ஒரு பிரதான மூலம்.
- கற்றலில் பல கோலங்களுண்டு.
- வயது முதிர்ச்சியுடன் கற்றல் கோலங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

- ஒருவரின் அறிவும் அனுபவமும் கற்றலில் தொடர்ந்து பயன்படும்.
- கற்றல் என்பது எளிமையான கருத்தில் கூறப்படும் கூற்றைவிட நுண்ணிய ஒரு செயலொழுங்கு.
- கற்றல் என்பது அறிவு, பயன்பாடு அல்லது அனுபவம் ஊடாக நீடிக்கும் நடத்தை மாற்றமாகும்.
- கற்றல் தானாகவே நிகழும் ஒன்று.
- கற்றல் என்பது பாடசாலைக் கல்வியுடன் மட்டுப்பட்டதன்று.
- கற்றல் எவ்வாறு நிகழ்கிறது? என்பது பற்றிப் பல்வேறு ஆய்வுகள் நடந்துள்ளன.
- கற்றல் தொடர்பான இரு பிரதான கோட்பாடுகள் உண்டு.

1. தூண்டல் துலங்கற் கோட்பாடு
2. கள அறிகைக் கொள்கை

இக்கோட்பாடுகள் பற்றி எளிமையாக அறிந்து கொள்வது கற்றலுக்குப் பயனுள்ளதாக அமையும்.

தூண்டல் துலங்கல் கொள்கை மூலம் விவரிக்கப்படுவது பிரதானமாக கற்றல் நடைபெறுவது தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையிலான தொடர்பினாலாகும். அதாவது இங்கு தூண்டலுக்கு ஒருவர் துலங்கல் செலுத்துகையில் கற்றல் நிகழ்கிறது. (இதற்கான உதாரணம் காட்டவும்.)

தூண்டல் துலங்கற் கொள்கையின் மூலம் கற்றல் நிகழ்வது தூண்டலுக்கும் துலங்கலுக்குமிடையிலான தொடர்பாகும். அதன் போது குறிக்கோளுடன் அறிகையை முன்வைத்து கற்றல் நிகழும். இங்கு அறிகை என்பதே அறிவாகும். அதனில் புலக்காட்சி, சிந்தனை விளக்கம் என்பன அடங்கும். புலக்காட்சி என்பது வரைவிலக்கணப்படுத்துவதாகும். ஒவ்வொருவரின் ஆற்றலின்படி இவ்வரைவிலக்கணப்படுத்தலில் சமமின்மை காணப்படும். ஒரே விடயம் தொடர்பான இருவரின் புலக்காட்சி வேறுபட்டதாக இருக்கலாம். (இதற்கு உதாரணம் காட்டவும்.)

தூண்டல் துலங்கற் கொள்கையின் குறைபாடுகளை இனங்கண்டு அதற்கேற்றபடி உருவானதே கள அறிகைக் கொள்கையாகும். இவ்விரண்டு கொள்கைகளின் மூலம் கற்றற் செயலொழுங்கு நிகழும் விதம் ஆராயப்படுகின்றது. இவ்விரு கொள்கைகளும் உள்ளக / தனியாள், தொடர்பாடற் செயலொழுங்குடன் தொடர்புபட்டது. அதாவது ஒருவரின் உள்ளகத் தொடர்பாடல் செயலொழுங்கு பலவீனமானதெனின் தூண்டலை ஏற்கவும் துலங்கலை வெளிப்படுத்தவும் முடியாது போகும். அதே போன்று புலக்காட்சி, விளங்குதல் என்ற பணிகளும் நடைபெறும்.

## அலகு 03 - தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும் - (50 பாட வேளைகள்)

**தேர்ச்சி 3.0** : உள்ளக, ஆளிடை, கூட்டு மற்றும் உபகரணங்களுடன் கூடிய தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : ஆளிடைத் தொடர்பாடற் தேர்ச்சியைப் பயன்படுத்துவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : பயனுள்ள பேச்சு
செவிமடுத்தற் தேர்ச்சி விருத்தி
ஒத்துணர்வு
பண்பாடு

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. பயனுள்ள பேச்சினை விளங்கி, அவற்றைக் கையாளுவார்.
2. செவிமடுத்த தேர்ச்சி விருத்தி முறைகள் பற்றிய விளக்கத்துடன், கேட்டற் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார்.
3. ஒத்துணர்வு என்பதை விளக்கி, அதனை அனுபவரீதியில் புரிந்துகொள்வார்.
4. ஆளிடைத் தொடர்பாடலின்போது பண்பாடாக நடந்து கொள்வார்.

**அறிமுகம்**

ஒரு சமூகத்தின் நிலவுகை ஆளிடைத் தொடர்பிலேயே தங்கியுள்ளது. அனைவரும் தம் அன்றாட வாழ்வில் தொடர்பாடலில் ஈடுபட வேண்டியேற்படும். அது பல்வகைப்படும். பலருடன் அது தொடர்புபடும். ஆளிடைத் தொடர்பாடலின்போது செய்தி வழங்கும் இடமும் செய்தி பெறும் இடமும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும். எனவே, ஆளிடைத் தொடர்பாடல் தேர்ச்சிகளை விருத்தி செய்துகொள்ளும் போதுள்ள முக்கிய பணி, மற்றவரின் பிரச்சினை அல்லது உணர்வை தன்னுடன் நிபந்தனைப்படுத்தி மதிப்பீடு செய்துகொள்ளும் ஆற்றலாகும். அவ்வாறு செய்ய முடியுமாயின் ஏனையோர் தொடர்பில் கரிசனையுடன் செயலாற்ற எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும், ஏனையோருடன் தொடர்படும்போது பண்பாட்டினைக் கடைப்பிடித்தல் என்பது முக்கியமானதாகும். பண்பாடு என்பது சார்பளவுக் கூற்றாகும். ஒவ்வொரு சமூகத்திலும் அல்லது கலாசாரத்திலும் பண்பாட்டைப் பேணும் விதமும் அதனை வெளிக்காட்டும் விதமும் பன்மைத் தன்மை வாய்ந்தன. எவ்வாறாயினும் தருணத்துக்கேற்ற விதமாக பண்பாட்டுடன் கருமமாற்றும் தேர்ச்சி ஒருவரிடம் இருத்தல் வேண்டும். இவை ஒருவரது தனிப்பட்ட வாழ்வுக்கும் தொழில்சார் வாழ்வுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

## 1. பயனுள்ள பேச்சு (மூன்று பாடவேளை)

- ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இருவருக்கிடையில் நிகழும் கருத்துப் பரிமாற்றல் இதுவாகும்.
- மொழியே இதன் அடிப்படையாக அமையும்.
- பேச்சுடன் சமிக்ஞைகளும் குறியீடுகள், அடையாளம் என்பனவும் பயன்படுத்தப்படும்.
- இருவர் பேச்சில் ஈடுபடுவதனால், செய்தியாளரும் பெறுபவரும் இடம்மாறும்.
- தெளிவு, குழப்பமின்மை, மொழி என்பன முக்கியம்.
- விளங்கிக் கொள்ளக்கூடிய வேகத்தில் பேச வேண்டும்.
- பொறுமை, அமைதி என்பன பேச்சுடன் கலந்திருத்தல் வேண்டும்.
- பேச்சு எப்போதும் பெறுபவனை விளங்கிச் செய்யப்படுவதாக இருக்க வேண்டும்.
- பேசுபவருக்கு நேர் துலங்களை காட்டுவது கேட்பவரின் பொறுப்பு.
- உணர்ச்சி வசப்படக்கூடாது.
- தனக்கு நம்பிக்கையில்லாத, தனக்குச் சரியாகத் தெரியாத ஒன்றைச் சொல்லக் கூடாது.
- ஆளிடைப் பேச்சுகளின் நோக்கங்கள் பலவாக இருக்கலாம்.
- ஒவ்வொருவரும் தினமும் பல வகிபாகங்களை ஏற்க வேண்டியிருக்கும்.
- இவ்வகிபாகங்கள் தம் பேச்சில் நேரடியாகவே செல்வாக்குச் செலுத்துவன.
- ஆளிடைத் தொடர்பாடலில் கடினமானவர்களுடன் தொடர்பாடலில் ஈடுபட வேண்டி வரும்.
- அத்தகையவர்களை வெல்வதற்கு பயனுள்ள பேச்சுகளை உபயோகிக்கலாம்.
- அத்தகையவர்களை வெற்றிகொள்வது ஒருவரின் தனிப்பட்ட வாழ்வின் சவாலாக அமையும்.
- பல்வேறு நபர்களின் பேசும் பாணியை ஆராய்வதன் மூலம் தனது பேச்சுப் பாணியையும் நெறிப்படுத்திக் கொள்ளலாம்.

## 2. செவிமடுத்தல் தேர்ச்சி விருத்தி (மூன்று பாடவேளை)

- கேட்டலும் செவிமடுத்தலும் இருவிதமாகும்.
- கேட்டல் என்பது கவனமின்றி தகவல்களைக் கேட்பதாகும்.
- கேட்டல் தேர்ச்சியை விருத்திசெய்துகொண்ட ஒருவருக்கு சீரான முறையில் தகவல்களை உள்வாங்க முடியும்.
- கேட்டற் தேர்ச்சி உயர்மட்டத்தில் இருக்கும்போது ஞாபகச் செயலொழுங்கும் வெற்றியளிக்கும்.
- சீரான ஆளிடைத் தொடர்பாடலுக்கு கேட்டற் தேர்ச்சி பயனளிக்கும்.
- பல்வேறு மன எழுச்சி நிலைமைகள் கேட்டலில் விருப்பத்தகாத பாதிப்புக்களை ஏற்படுத்தும்.
- மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கேட்டலை உயர்மட்டத்துக்குக் கொண்டு வரலாம்.
- கேட்டற் தேர்ச்சி விருத்தி என்பது நீண்டகாலம் பயிற்சிபெற வேண்டியதாகும்.
- மனித உயிரி பிறந்தது முதலே கேட்டலில் ஈடுபடும்.
- பலவீனமான கேட்டலுக்குச் சில காரணங்களுண்டு.
- கேட்டலில் நான்கு கட்டங்களுண்டு.

1. **கேட்டல்:** இதிலிருந்து கருதப்படுவது ஓர் ஒலியைச் செவியேற்பது. அது தானாகவே நிகழ்வது. செவியேற்றலின் பின்னரே அவதானம் ஏற்படும். அது முற்றிலும் ஓர் உடற் செயற்பாடே.

2. **விளங்குதல்:** தான் செவியேற்ற ஒலியை விளங்கிக் கொள்ளல் இரண்டாவதாக நிகழ்வதாகும். ஒவ்வொரு ஒலியையும் விளக்குவதற்கு அவை பற்றிய முன்னனுபவம் வேண்டும். உதாரணமாக ஒருவருக்கு சீனமொழியிலான ஒரு பேச்சுக் கேட்டால் அதனை விளங்கும் ஆற்றல் இல்லாதிருக்கலாம். தான் அறிந்த மொழிகளில் ஒன்றில் இருந்தாலேயே விளங்கும். இதில் மொழி பற்றிய முன்னறிவு பயன்படும். அதன் அடிப்படையிலேயே விளங்குதல் அல்லது விளங்காதிருப்பது நடைபெறும்.

3. **மதிப்பீடு:** மூன்றாவது கட்டத்தில் நிகழ்வது. தான் விளங்கியவற்றை மதிப்பீடு செய்வதாகும். அது ஒரு தகவலாக மாறுவது இக்கட்டத்திலாகும். இதன்படி தகவல் தம்மால் முதலில் குறுங்கால ஞாபகத்துக்கு உட்படுத்தப்படுகிறது.

4. **எதிர்விளைவு:** இறுதிக் கட்டத்தின் போது பொருத்தமான ஓர் எதிர்விளைவு ஏற்படும். அது தனியாள் வேறுபாட்டு எதிர்விளைவாகும். அதாவது கேட்டலின் போது இருவர் காட்டும் எதிர்விளைவுகளுக்கிடையே சமமின்மை இருக்க முடியும்.

கேட்டல் → விளங்குதல் → மதிப்பிடல் → எதிர்விளைவு

### மோசமான கேட்கும் ஆற்றலுக்குச் சில காரணங்களுண்டு

1. தேவையற்ற தன்மை.
2. சரியான கவனமின்மை.
3. புலக்காட்சியில் குறைபாடு.
4. மொழியைப் புரிந்து கொள்வதில் குறைபாடு.
5. மொழியை விளங்குவதில் உள்ள சிரமம்.

### கேட்டற் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கான காரணங்கள்

1. விளக்கத்துக்காக.
2. பிழையின்மைக்காக.
3. கேட்டற் தடைகளை நிவர்த்தியாக்க.
4. ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக.
5. பல்வேறு மன எழுச்சிகளும் கேட்டலுக்குத் தடையாக அமைவதால்.

### கேட்டல் தேர்ச்சியை விருத்தியாக்கும் படிமுறைகள்

1. கேட்கும் விடயத்தில் ஒரு பற்றை ஏற்படுத்திக் கொள்ளல்.
2. கேட்க வேண்டும் என்பதை மனதில் உருவாக்குதல்.
3. கேட்பவற்றை மானசீகமாக விவரித்தல்.
4. பேச்சின் முக்கிய சொற்களை, வாக்கியங்களை மனதில் உட்படுத்திக் கொள்ளல்.
5. தனக்குக் கிடைத்த தகவல்களின் முக்கியத்துவம் அல்லது முக்கியத்துவமின்மை பற்றித் தீர்மானித்தல்.

### கேட்டல் தேர்ச்சி பற்றிய சிறப்பம்சங்கள்

1. தனியாளின் வகிபாகத்தைப் பொறுத்து கேட்பதற்காகப் பயன்படுத்தும் முறை வேறுபடும்.
2. பேசும் ஒருவராக, கேட்கும் குழுவில் ஒருவராக, ஆளிடைத் தொடர்பாடலின் ஒரு பிரிவினராகக் கேட்பதற்கான முறையில் வேறுபாடுண்டு.
3. ஒத்துணர்வு
    - ஒருவரின் மன எழுச்சி உணர்வை தன்னில் ஏற்படுத்தி, அதே அடிப்படையில் உணர்வதே ஒத்துணர்வு எனப்படும்.
    - சமூக வாழ்க்கையை வெற்றிகரமாக்கிக் கொள்ள ஏனையவர்களின் சுகதுக்கங்களை விளங்கிக்கொள்ள வேண்டும்.
    - ஒத்துணர்வுடன் கூடியவர்கள் ஏனையோர் விடயத்தில் அன்பாக நடப்பர்.
    - ஒத்துணர்வுடன் கூடியவர்களுக்குச் சமூகத்தில் ஓர் அங்கீகாரமுண்டு.
    - ஒருவரின் மன எழுச்சி நிலையின் மேலோட்டத்தைப் பற்றி ஆழமாகக் காண இதனால் முடியுமாகும்.
    - ஒத்துணர்வு முன்னேற்றமடையப் பரந்த அனுபவம் வேண்டும்.
    - இலக்கியம் மற்றும் ஆக்க நூல்களை வாசிப்பதன் மூலம் ஒத்துணர்வு அதிகரிக்கும்.

### 3. பண்பாடு (மூன்று பாடவேளை)

- சமூகத் தொடர்பு பற்றிய அங்கீகாரம் பண்பாட்டின் அடையாளமாகும்.
- பண்பாடு என்பது காட்சிப்படும், தெரியும் ஒன்றாகும்.
- பல்வேறு சமூகங்களின் பண்பாட்டு நடத்தைகள் வேறுபட்டவை.
- ஆளிடைத் தொடர்பாடலில் பண்பாடு சமூக நிலையைத் தோற்றுவிக்கும்.
- பண்பாடு மூலம் ஆளிடைத் தொடர்பின் வடிவம் தெரியும்.
- பண்பாடு பரந்த அளவில் சமூகமயமாக்கப்படுவதனால் சமூகத்தில் சமநிலை விருத்தியடையும்.
- சமூகத்தின் தொடரான, நிலையான நிலவுகைக்குப் பண்பாடு ஓர் அத்தியாவசியக் காரணியாகும்.

## அலகு 03 - தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்

**தேர்ச்சி 3.0** : உள்ளக ஆளிடை, கூட்டு மற்றும் உபகரணங்களுடன் கூடிய தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : கூட்டுத் தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : கூட்டுத்தொடர்பாடல் தேர்ச்சிகள்
கூட்டத்தை இனங்காணல்
கூட்டுப்பணி, பொறுப்பு வகை கூறல்
நேர்முகக் கலந்துரையாடல்
கருத்து வேறுபாடும் ஒருமைப்பாடும்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. கூட்டம் என்பதை வரைவிலக்கணம் செய்வார்.
2. பொறுப்பு, வகைகூறல் என்பவற்றின் வேறுபாட்டை இனங்கண்டு அவற்றை மதிப்பார்.
3. சரியான நேர்முகக் கலந்துரையாடலொன்றின் இயல்புகளைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
4. ஏனையோர் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப் பழகுவார்.
5. புதிய கருத்துக்களை முன்வைப்பார்.
6. கூட்டுத் தொடர்பாடலில் பண்பாடாக நடந்து கொள்ளும் விதத்தை ஆராய்ந்து, பரீட்சித்துப் பார்ப்பார்.

### அறிமுகம்

ஒரு சமூகப் பிராணி என்ற வகையில் மனிதன் எப்போதும் அடுத்தவர்களுடன் இணைந்து கருமமாற்றுவார். கூட்டுவாழ்க்கை என்பது மனிதனின் வரலாற்று ரீதியான பழக்கமாகும். ஒவ்வொருவரின் பாதுகாப்புக்கு, நிலவுகைக்கு, கருத்துப் பரிமாற்றலுக்கு கூட்டம் அல்லது மனிதர்கள் தேவை. அது வாழும் கலையாகும். கூட்டம் என்பது ஒரு சிலரை அல்லது பலரைக் கொண்ட மனிதக் குழுவாகும். இவர்களிடையே பல வேறுபாடுகள் நிலவும். வயது, கல்வித்தரம், தொழில், பால், வகுப்பு, நிறம் ஆகியன இவ்வேறுபாடுகளுக்கான காரணங்களாகும். ஈடுபட்டுள்ள பணி அல்லது தொழில் குறித்தும் இப்பல்வகைமை காணப்படும். இதன்படி கூட்டம் மேலும் இரு பிரிவாகப் பிரியும். அவை குழு, கும்பல் என்றாகும்.

எவ்வாறாயினும், மொத்தச் சமூகத்திலும் குழு அல்லது கும்பலுக்கு இடையேயான நிலவுகைக்கு தொடர்பாடல் அவசியமாகும். ஒருவரை மற்றொருவருடன் தொடர்புபடுத்தும் காரணி தொடர்பாடல் என்பதாகும். இதனால் தொடர்பாடல் ஒவ்வொருவருக்கிடையிலான தொடர்பாடலை அதிகரிக்கவும் பிரிக்கவும் காரணமாக அமைகின்றது.

கூட்டுத் தொடர்பாடல் பணியில் தனியாட்கள் தம் பொறுப்புக்கள், வகை கூறல்கள் பற்றிய அவதானத்துடன் கருமமாற்ற வேண்டும். ஒரு தொடர்பு மூலமாகவே பொறுப்பு ஏற்படும். வகைகூறல் என்பதன் கருத்து மற்றொருவரின் தூண்டுதலின்றி தானே தொடர்பு பற்றி ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாம்.

ஆயினும், தானே ஏற்படுத்திக் கொண்ட இணைப்பு என்பதால் வகைகூறலை நிறைவேற்ற ஊக்குவிக்கப்படுவார். கூட்டான வேலைகளிலும் பொறுப்பு, வகைகூறல் என்ற இரண்டு கருத்துக்கள் எழுகின்றன.

நேர்முகக் கலந்துரையாடல் என்பதால் கருதப்படுவது கூட்டத்தினரிடையே ஏற்படும் கலந்துரையாடலாகும். அதில் ஒரு குழு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம். அல்லது ஒருவர் - இருவர், ஒரு குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபடலாம். இதில் எது நிகழ்ந்தாலும் கலந்துரையாடல் என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அது அரட்டையல்ல. அத்தகைய ஒரு கலந்துரையாடலின் நோக்கம் ஒரு விடயத்தில் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதாக இருக்கலாம்.

ஒரு கூட்டத்தினரிடையே ஏற்படும் தொடர்பாடலில் உடன்பாடு போன்றே உடன்பாடின்மையும் ஏற்பட முடியும். உடன்பாடும் உடன்பாடின்மையும் இயல்பே. ஆனால், இங்கு பண்பாடு, முக்கியமானது. உடன்பாடின்மையின் போது அது வன்முறையாக மாறலாம். அப்படி நடந்தால் அங்கு கலந்துரையாடலின் நோக்கம் கெட்டுவிடும். அதன்படி கூட்டுத் தொடர்பாடல் தேர்ச்சியை ஒருவரிடம் விருத்தி செய்தல் ஜனநாயக சமூகத்தின் நிலவுகைக்கு அவசியமான ஒரு காரணியாகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. கூட்டத்தை இனங்காணல் (இரண்டு பாடவேளைகள்)**

- கூட்டம் என்பது ஒன்றாகக் கருமமாற்றும் மனிதர் குழு
- இக்குழுவில் கூட்டுப் பண்புகள் காணப்படுகின்றன.
  - நோக்கங்கள்
  - தொடர்பாடல் முறைகள்
  - உண்மைத்துவமும் பின்பற்றலும்
  - பல்வேறு வகிபாகங்கள்
  - சகவாழ்வு
  - பெறுமானங்களும் நியமங்களும்
  - பிரச்சினை தீர்க்கும் நியமங்கள்
- இக்கூட்டுப் பண்புகள் சிதைவடைவதால் கூட்டம் சிதைவடையலாம்.
- ஒரு கூட்டம் நிலைப்பது சமமான இயல்புகள் கூடிய அளவில் இருப்பதாலாகும்.
- கூட்டத்தினிடையே பல்வகைமை காணப்படும்.

**2. கூட்டாகப் பணியாற்றல், பொறுப்பு, வகைகூறல் (இரண்டு பாடவேளைகள்)**

- கூட்டம் ஒன்றாக இருப்பது, ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவாகும். இதனால் கூட்டான பணிகளும் இருக்கும்.
- கூட்டான வேலைகளை ஒவ்வொருவருக்கிடையே பகிர்ந்து கொள்ளும் பொறுப்புள்ளது.
- தன்மீது பொறுப்பாக்கப்பட்ட ஒரு வேலை குறித்து ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொள்வது வகை கூறலாகும்.
- கூட்டான செயற்பாடுகளின்போது பொறுப்பும் வகைகூறலும் முக்கியம்.
- பொறுப்புடனும் வகை கூறலுடனும் வேலை செய்வதன் மூலம் கூட்டான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

### 3. கலந்துரையாடல் (இரண்டு பாடவேளைகள்)

- நேர்முகக் கலந்துரையாடல் என்பது ஒவ்வொருவருக்கிடையே ஒரு விடயம் குறித்துச் செய்யும் பேச்சு வார்த்தையாகும்.
- பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெறும்.
- கலந்துரையாடல் மூலம் புதிய கருத்துக்கள் உருவாகின்றன.
- பிரச்சினை தீர்ப்பதில் கலந்துரையாடல் பெரிதும் உதவும்.
- கலந்துரையாடல் மூலம் மறைந்திருக்கும் கருத்துக்களை வெளிக்கொண்டுவர முடியும்.
- ஒரு பிரச்சினையைப் பற்றிய, ஒருமுகப்பாட்டுக்கு கலந்துரையாடலை உபயோகிக்க முடியும்.

### 4. கருத்து வேற்றுமையும் உடன்பாடும் (இரண்டு பாடவேளைகள்)

- கூட்டத்தில் உள்ளவர்களிடையே கருத்துகள் பல்வகைப்படும்.
- சுதந்திரக் கருத்துகள் நிலவும் கூட்டத்தில் கருத்து வேற்றுமையும் உடன்பாடும் இருப்பது இயல்பாகும்.
- கடுமையான கட்டுப்பாடுகள் நிலவும் சமூகத்தில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை.
- கருத்து வேற்றுமையும் உடன்பாடும் ஜனநாயகப் பண்புகளே.

### 5. பண்பாடு (இரண்டு பாடவேளைகள்)

- ஒரு கூட்டத்தில் துணைக் கலாசார இயல்புகள் இருக்க முடியும்.
- அதன்படி பண்பாடு கூட்டத்துக்குக் கூட்டம் வேறுபடலாம்.
- கூட்டத்தினரிடையே சீரான தொடர்பைப் பேண பண்பாடான நடத்தை அவசியமாகும்.
- கூட்டதில் புதிதாகச் சேர்பவர்கள் கூட்டத்தின் பண்பாட்டு நடத்தைகளை விளங்கிக் கொள்ள வேண்டும்.
- கூட்டத்தில் அனைவரும் பண்பாடு அற்றவர்களாக இருக்குமிடத்து கூட்டம் முறிவடையும்.

## அலகு 03 - தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்

**தேர்ச்சி 3.0** : உள்ளக, ஆளிடை, கூட்டு மற்றும் உபகரணங்களுடன் கூடிய தொடர்பாடல் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : தொடர்பாடலுக்காகப் பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தும் தேர்ச்சிகளை வெளிக்காட்டுவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : கூட்டுத் தொடர்பாடற் தேர்ச்சிகள்
பேச்சுத் தொடர்பாடல் உபகரணங்கள் பாவித்தல்
எறிவைத் தொடர்பாடல் உபகரணங்கள் பாவித்தல்
எறிவையல்லாத தொடர்பாடல் உபகரணங்கள் பாவித்தல்
சூழல்சார், ஆக்கம்சார் உபகரணங்கள் பாவித்தல்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. பல்வேறு தொடர்பாடல் உபகரணங்களின் உபயோகத்தைப் பரீட்சிப்பார்.
2. எறிவைத் தொடர்பாடல் உபகரணங்களின் உபயோகத்தைப் பரீட்சிப்பார்.
3. பல்வேறு எறிவையல்லாத தொடர்பாடல் உபகரணங்களின் உபயோகத்தைப் பரீட்சிப்பார்.
4. சூழல்சார் அல்லது ஆக்கம்சார் தொடர்பாடல் உபகரணங்களை ஆக்கி, அவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
5. தொடர்பாடல் வெற்றியடைவதில் தொடர்பாடல் உபகரணங்கள் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விசாரிப்பார்.

### அறிமுகம்

தொடர்பாடற் செயலொங்கில் மனித சக்தியின் எல்லைக்கு வந்தவுடன் வெளி உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். அதன் மூலம் மனிதனின் தொடர்பாடல் பணியை வெற்றிபெறச் செய்ய முடிகின்றது. இதற்கென நவீன விஞ்ஞானக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக ஒருவரின் குரலை உயர்த்திப் பேசுதவில் ஒரு எல்லையுண்டு. அதனை மிஞ்சிப் போக வேண்டுமாயின், ஒலிபெருக்கிக் கருவியைப் பயன்படுத்த வேண்டும். தொடர்பாடல் நடைபெறும் இடத்தில் இல்லாதவைகளைக் காட்டுவதற்காக நகல்படம் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டியேற்படும். எனினும் பாரிய அளவிலான நகல் படங்களைத் தயாரித்துக் கொள்வதில் சிரமமுண்டு.

எனவே, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எறிவை உபகரணங்களைப் பயன்படுத்த முடியும். அப்போது கூடிய எண்ணிக்கையினருக்கு ஒன்றைப் பெருப்பித்துக் காட்டலாம். எறிவையில்லாத உபகரணமாக பலகைகள் பயன்படுத்தப்படுகின்றன.

தொடர்பாடலுக்கு எப்போதும் தொழில்நுட்பக் கருவிகள் தேவை என்றில்லை. அதற்கான மரபு ரீதியாகத் தயாரித்த ஆக்க ரீதியானவற்றையும் பயன்படுத்த முடியும். உதாரணமாக சுற்றாடலில் ஒரு மரத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் கிளையொன்றை அல்லது பூவை,

காயை தொடர்பாடலைச் சிறப்பாக அமைப்பதற்காகப் பயன்படுத்த முடியும். அதேபோன்று பொம்மலாட்டம் போன்ற ஆற்றுகை உபகரணங்களையும் பயன்படுத்த முடியும்.

எல்லா வகையான தொடர்பாடல்களின் போதும் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தும் போது அது பற்றிய தேர்ச்சி இருத்தல் வேண்டும். அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான தேர்ச்சி இல்லாத போது அத்தகைய கருவிகள் இருந்தாலும் தொடர்பாடற் பணிகளின் போது பயன்படுத்த முடியாமற் போகும். இவ்வனைத்து வகை உபகரணங்களினதும் பணி தொடர்பாடற் பணியை வெற்றி பெறச் செய்வதற்காகவே ஆகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. பேச்சுத் தொடர்பாடல் உபகரணப் பயன்பாடு (மூன்று பாடவேளைகள்)**

- பல்வேறு பேச்சுத் தொடர்பாடல் உபகரணங்கள் இன்று பாவனையிலுள்ளன.
- ஒவ்வொரு விடயத்துக்கும் பல்வேறு தொடர்பாடல் உபகரணங்கள் பயன்படுத்தப் படுகின்றன.
- கூட்டுத் தொடர்பாடலின்போது ஒலிவாங்கி, மைக்ரபோன் என்பன பயன்படுத்தப் படுகின்றன.
- பலவகை ஒலிவாங்கிகள் உண்டு. (கம்பியில்லாத, கம்பி இணைந்த, கொழுக்கியுடன் கூடிய, தலையில் மாட்டக்கூடிய)
- ஆளிடைத் தொடர்பாடலில் தொலைபேசி பெரிதும் பயன்படுத்தப்படும்.
- பேச்சுத் தொடர்பாடல் உபகரணங்கள் இன்று அத்தியாவசியப் பொருட்கள் வகையில் சேர்ந்துள்ளன.

**2. எறிவைத் தொடர்பாடல் உபகரணப் பயன்பாடு (மூன்று பாடவேளைகள்)**

- எறிவை என்பது நவீன தொழில்நுட்பச் செயலொழுங்கொன்றாகும்.
- எறிவை உபகரணப் பாவனை செலவு கூடிய ஒன்று.
- எறிவை உபகரணங்களைப் பாவிப்பதன் மூலம் கருத்துக்களை விருப்புக்குரியதாகவும் தெளிவாகவும் முன்வைக்க முடியும்.
- தற்காலத்தில் மிகவும் பிரபல்யமாக இருப்பது பல்லூடக எறிவைக் கருவியாகும்.
- பல்லூடக எறிவை கணனியுடன் தொடர்புபட்டது.
- பல்லூடக எறிவையை இறுவட்டு, ஒளிப்பேழைக் கருவிகளோடு இணைக்கலாம்.
- கணனியைப் பயன்படுத்த முடியுமாதலால் பலவற்றையும் மிக உயிர்ப்பாக முன்வைக்க முடியும்.
- மேன்தலை எறிவை ஒப்பிட்டு ரீதியில் செலவு குறைந்த ஒன்று.
- வழுக்கி எறிவைக்குத் தேவையான வழுக்கிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.
- மேன்தலை எறிவைக்கான ஊடுகாட்டிகளும் முன்கூட்டியே தயார்செய்து கொள்ள வேண்டும்.
- எறிவை உபகரணங்களின் அனைத்தும் மின்சாரத்தினால் இயங்குபவை.
- உடன் எறிவைக் கருவி மூலம் புத்தகங்களில் உள்ளவற்றை அவ்வச் சந்தர்ப்பத் திலேயே எறிவைப்படுத்த முடியும்.

### 3. எறிவையல்லாத தொடர்பாடல் உபகரணப் பயன்பாடு (மூன்று பாடவேளைகள்)

- இவை செலவு குறைந்ததும் மின்சாரம் தேவையற்றதுமான உபகரணங்கள்.
- பயன்படுத்துவது இலகுவானதும் எளிமையானதுமாகும்.
- பெற்றுக்கொள்வதும் இலகுவானது.
- பொதுவாக பயன்படுத்தப்படும் எறிவையல்லாத உபகரணங்களாக;
  - கரும்பலகை
  - வெண்பலகை
  - காந்தப் பலகை
  - பக்கப்புரட்டி போன்றவற்றைக் கூறலாம்.
- இவை ஒவ்வொன்றும் தனித்துவமானவை.
- இவற்றைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய முறைகளுண்டு.
- இந்த ஒவ்வொரு உபகரணத்தையும் தனியாகவும் இணைத்தும் பயன்படுத்த முடியும்.

### 4. சூழல் சார்ந்த, ஆக்கரீதியான உபகரணப் பயன்பாடு (மூன்று பாடவேளைகள்)

- சூழலிலுள்ள எந்தவொரு இயற்கைப் பொருளையும் தொடர்பாடற் செயலொழுங்கின் போது தேவையானவாறு பயன்படுத்த முடியும்.
- சூழலில் உள்ள அனேகமானவற்றை ஆக்கத்திறனுடன் பயன்படுத்தலாம். நவீன ஆக்க உபகரணங்களாக பொம்மைகள், கைப்பொம்மைகள் போன்றவற்றை உபயோகிக்கலாம்.
- தொழில்நுட்ப உபகரணங்களைவிட இது போன்ற மரபுரீதியான அல்லது சூழல்சார்ந்த ஆக்கத்திறன் வாய்ந்த உபகரணங்கள் பயன்படுத்துதல் மிகவும் விருப்புக்குரியது.
- தொடர்பாடலுக்கு ஏற்றவிதமாக இவற்றை முன்கூட்டியே தயார் செய்து கொள்ளலாம்.
- இவை மிகவும் செலவு குறைந்த உபகரணங்கள்.

### பொது விடயங்கள்

இப்பகுதியில் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு உபகரணங்கள் பற்றி அறிவையும் அவற்றைப் பயன்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியையும் மாணவர்களுக்கு வழங்குதல் அவசியம். தனித்தனியாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை ஒவ்வொருவருக்கும் வழங்க வேண்டும். அதனைவிட பல்வேறு சூழல்சார், மற்றும் ஆக்கரீதியான உபகரணங்களையும் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தலைப் பரீட்சித்துப் பார்ப்பது அவசியம். அதன் மூலம் செலவு குறைந்ததும் விருப்பமானதுமான உபகரணப் பாவனைக்கான மனப்பாங்கு வளர்க்கப்பட வேண்டும்.

## அலகு 04 - மொழியும் வெகுசன ஊடகப் பயன்பாடும்

**தேர்ச்சி 4.0** : மொழியின் இயல்பு பற்றி விளக்கி, பல்வேறு ஊடகங்களில் மொழி பயன்படுத்தப்படும் விதத்தை ஒப்பிட்டு, பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : மொழியின் இயல்பு, அதன் பயன்பாடு மற்றும் மொழியின் தொடர்பாடல் வகிபாகத்தை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 14

**பாட உள்ளடக்கம்** : மொழியை இனங்காணல்
மொழியின் வரலாற்று ரீதியான பரவல்
மொழியின் தொடர்பாடல் வகிபாகம்
உயிர்ப்பு மொழிப் போக்கு
மொழியின் ஏற்புடைமையும் ஏற்புடைமையின்மையும்
துணை மொழிகள்

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. மொழியின் வரலாற்று ரீதியான பரவலைப் பற்றி தெளிவாக விளக்குவார்.
2. மொழியின் பணியையும் தொடர்பாடல் வகிபாகத்தையும் விளக்குவார்.
3. வாழும் மொழியை இனங்கண்டு, அதன் இயல்புகளை விளக்குவார்.
4. மொழியின் ஏற்புடைமை, ஏற்பு உடைமையின்மை பற்றி விளக்குவார்.
5. துணை மொழி பற்றி தெளிவாக விளக்குவார்.

**அறிமுகம்**

மொழியின் தோற்றம் மனித வரலாற்றின் உன்னதமான ஒரு நிகழ்வாகும். குறியீடுகள், சமிக்ஞைகள், ஒலிகள் மூலம் கருத்துப் பரிமாறல் மனிதனுக்கு மிகப் பரந்த அளவில் கருத்துப்பரிமாறச் சந்தர்ப்பமாக அமைந்தது. அதற்கு பல நூறு அல்லது ஆயிரம் வருடங்கள் எடுத்திருக்கும். உலகில் வரலாற்று ரீதியான நாகரீகம் சார்ந்ததாக உருவான பல்வேறு மொழிகள் பன்முகப்பட்டவை. ஒரே காலப் பகுதியில் பல்வேறு இனங்களுக்காக வேறுபட்ட மொழிகள் உருவாக்கப்பட்டமை வியப்புக்குரியதே.

ஒவ்வொரு இனக்குழுவும் உருவாக்கிய மொழியும் வெவ்வேறாக வளர்ச்சியடைந்தமையை வரலாற்றில் அறிய முடியும். அரிச்சுவடியின் தோற்றம், எழுத்து வடிவத்தை அமைத்தமை, மொழி உச்சரிப்பு என்பன இக்காலப் பிரிவில் முறையாக வளர்ச்சியடைந்துள்ளன. எழுத்துக்கள், இலக்கியம், மொழியாக்கத்தின் கருத்து என்பவற்றின் பெறுபேறாக புதிய ஆக்கரீதியான கருத்துக்கள் உலகில் தோன்றின. பிற்காலத்தில் ஒரே மொழி என்பது ஒரு இனத்தின் தனித்துவ அடையாளமாகக் கருதப்படும் அளவுக்குச் சமூகத்தில் தொடர்புகள் விருத்தியடைந்தன.

ஊடகத் தோற்றத்தில் மொழியின் பங்கு மிகப் பெரியது. முதலில் தோன்றியது பத்திரிகையாகும். அது எழுத்தூடகமாக அமைந்ததுடன் எழுத்துக் குறியீடு அதற்காகப் பயன்படுத்தப்பட்டது. வாசகர்கள் அதனை வாசிக்க வேண்டும். வானொலியினது முக்கிய அம்சமும் மொழிதான். அது பேச்சு மொழியாகும். அதனை மக்கள் செவிமடுக்க வேண்டும். தொலைக்காட்சியில் பேச்சு, எழுத்து ஆகிய இரு மொழித் திறன்கள் பயன்படுத்தப்படுகிறது எனக் கூறலாம்.

இன்று தொடர்பாடல் ஊடகங்கள் மொழி பற்றியும் அல்லது ஊடகங்களில் மொழியைப் பயன்படுத்தும் விதம் குறித்தும் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கான காரணம் மொழியின் பிரதான பணியான தொடர்பாடலை மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் ஊடகங்கள் மொழியின் ஏனைய பணிகளையும் புறக்கணிப்பதாகும்.

எனவே, ஊடகங்களில் மொழி பயன்படுத்தப்படுவது தொடர்பாக புதியதோர் உரையாடல் தொடங்குவதற்கான நேரம் வந்துள்ளது. உயர்தர வகுப்பு மாணவ மாணவிகள் இப்பாடப் பரப்பைக் கற்கும்போது அத்தகைய உரையாடல் தொடர்வதற்காக கலந்துரையாட சூழல் உருவாகும் என்று தெரிகிறது.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

### 1. மொழியின் வரலாற்று ரீதியான வளர்ச்சி (இரண்டு பாடவேளைகள்)

- மொழியின் தோற்றம் மனித சமூகத்தின் அத்தியாவசிய அம்சமாக இருந்தது.
- மொழி என்பது மனிதன் தனது கருத்தை வெளியிடப் பயன்படுத்திய சக்திவாய்ந்த உபகரணம்.
- உலகின் ஒவ்வொரு நாகரிகங்களுக்கும் ஒவ்வொரு விதமான மொழிகள் உருவாகின.
- ஒவ்வொரு மொழிகளுக்குமிடையே வேறுபாடுகளுண்டு.
- மொழியின் வடிவத்துக்கேற்ப உருவ எழுத்துக்கள், குறியீட்டு எழுத்துக்கள் என வகைப்படுத்தலாம்.
- சீன, ஜப்பான் ஆகிய நாடுகளில் இன்னும் பண்டைய உருவ எழுத்துக்களே பயன்படுத்தப் படுகின்றன.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகள் குறியீடு மூலம் கருத்து வெளியிடுகின்றன.
- எழுத்துரு வடிவம் நீண்ட காலமாக மாற்றத்துக்குட்பட்டு வந்துள்ளது.
- எழுத்தின் வடிவ மாற்றம் நின்றுவிடவில்லை.
- மொழிக்கான அரிச்சுவடியே பரிணாமத்தின் முக்கிய நிகழ்வு.
- பல்வேறு மொழிகளின் அரிச்சுவடிகள் மாறுபட்டவை.
- மொழிக்கு இலக்காகும் வேறு பல விதிகளும் உண்டு.
- மொழிக்கான இலக்கணம் கருத்து வெளிப்பாடு என்பன அத்தியாவசியமாகும்.
- மொழி என்பது ஒரு கலையும் விஞ்ஞானமுமாகும்.
- மொழியின் தோற்றம் பற்றி பரிணாமவாத, உருவாக்கவாதக் கோட்பாடுகளுண்டு.

### 2. மொழியின் பயனும் அதன் தொடர்பாடல் வகிபாகமும்

- குழந்தைப் பருவந் தொட்டே மொழி கற்கப்படுகின்றது.
- மொழியை உள்வாங்கலும் கையாளக் கற்பதும் அதன் பயன் ஆகும்.
- ஒரு பிள்ளை சூழலில் உள்ள எந்த ஒரு மொழியையும் கற்கும்.
- மொழியை உள்வாங்கல் குழந்தைப் பருவத்திலிருந்து மரணம் வரை தொடரும்.

- மொழி மனிதனின் தொடர்பாடலுக்கு உதவுவது உள்வாங்கலின் ஊடாகவேயாகும்.
- மொழியில் கருத்தும் (Semantics) உச்சரிப்பும் (Semiotics) என்ற இருவகையுண்டு.
- ஒரு மொழி மட்டும் தெரிந்தவருக்கு இன்னொரு மொழியை விளக்க முடியாது.

### 3. வாழும் (உயிர்ப்பு) மொழிப்போக்கு

- இன்றும் வழக்கிலுள்ள தொடர்பாடல் மொழியே உயிர்ப்பு மொழியாகும்.
- தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலமே மொழி உயிர்வாழும்.
- மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் அது ஊட்டம் பெறுவதுடன் மாற்றமும் அடைகிறது.
- சொற்கள் புதிய கருத்துக்களையும் பெறும்.
- மொழியின் சொற்களின் கருத்து உபயோகத்துக்கேற்ப வேறுபடும்.
- உயிர் வாழும் மொழியின் மூலம் மிக உணர்வு பூர்வமாகவும் ஆக்கத்திறன் மிக்கதாகவும் கருத்து வெளியிட முடியும்.
- மொழி ஊட்டம் பெறுவதால் புலக்காட்சிப் பல்வகைமை ஏற்படும்.
- உலகின் சில மொழிகள் சில காலம் உயிர்ப்பு மொழியாக இருந்து பின்னர் இறந்த மொழியாக மாறும்.
- சில மொழிகள் சில காலம் மொழியாக இருந்து, பின்னர் உயிர்ப்பு மொழியாக மாறும்
- உயிர்ப்பு மொழியில் தனித்துவ இயல்புகளுண்டு.

### 4. மொழியின் ஏற்புடமையும் ஏற்புடமையின்மையும்

- மொழியின் ஏற்புடமை என்பது மக்களால் மரபுகள் ஏற்கப்படுவதாகும்.
- ஏற்புடைமையின்மை என்பது மக்களின் மரபுகளை மீறுவதாகும்.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிக்கு மரபுகளுண்டு. அந்நியமற்ற இயல்புகள் உண்டு.
- ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழி என்பது ஒரு பொது விடயமாகும்.
- ஏற்புடமையற்ற மொழி, ஏற்புடைய மொழியின் மரபுகளை மீறும்.
- மொழி விருத்தியடைகிறது. ஆனால் ஏற்புடையாமை என்பது மொழி விருத்தியன்று.
- மொழியை ஏற்புடைமையற்ற விதத்தில் பயன்படுத்துவது மட்டுப்படுத்தப்பட முடியாது.
- மொழியை ஏற்புடைமையற்ற விதத்தில் பயன்படுத்தும் உரிமை ஊடகங்களுக்குக் கிடையாது.
- அதற்காகப் பல உதாரணங்களுண்டு.
- மொழி ஒரு தேசிய தனித்துவம் என்பதால் அதனைப் பாதுகாக்க வேண்டும்.

### 5. துணை மொழி

- துணைமொழியில் பிரதான மொழியின் இயல்புகளும் துணை மொழியின் இயல்புகளும் காணப்படும்.
- துணை மொழி என்பது பிரதான மொழியில் இருந்து பிரிந்து சென்றது.
- துணைமொழி துணைக் கலாசாரம் சார்ந்தது.
- துணைமொழி தோன்றியது சமூகத் தேவையைக் கருதியாகும்.
- துணை மொழியில் அந்தக் கலாசாரத்தின் சூழல் தென்படும்.
- துணை மொழியில் சில சொற்கள், உவமைகள், வடிவங்கள் தோன்றும்.
- துணைமொழி அந்த இனக் குழுவின் தொடர்பாடலுக்குப் பயன்படும்.

## அலகு 04 - மொழியும் வெகுஜன ஊடகப் பயன்பாடும்

**தேர்ச்சி 4.0** : மொழியின் இயல்பு பற்றி விளக்கி, பல்வேறு ஊடகங்களில் மொழி பயன்படுத்தப்படும் விதத்தை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : மொழியின் பல்வேறு பயன்பாடுகளை ஒப்பிட்டுக் காட்டுவார்.

**பாட வேளைகள்** : 14

**பாட உள்ளடக்கம்** : பேச்சு
ஆற்றுகை
விவரணம்
உரை
பிரதியாக்கம்

### அறிமுகம்

மொழி என்பது மனிதன் கண்டறிந்த உன்னதமான தொடர்பாடல் கருவியாகும். இதன் மூலம் மனிதன் தனது கருத்துக்களையும் உணர்வுகளையும் பல்வேறு வகையில் வெளியிடுவதற்கு முடியுமான முறைகள் காலாகாலமாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளன. இன்று நாம் அந்தப் பரீட்சித்தலின் பெறுபேறாக மொழியைப் பயன்படுத்துகின்றோம்.

மொழி என்பது ஒரு பொது எண்ணக்கருவாக இருப்பினும் விசேட சந்தர்ப்பங்களைப் பொறுத்தே அதனைப் பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படும் தேவையைப் பொறுத்து மொழியைப் பயன்படுத்துவது எவ்வாறு? என்பது பற்றி மனிதன் இப்போது இனங்கண்டுள்ளபடியால் மொழியின் சொற்களுக்கும் கூற்றுக்களுக்கும் கருத்துக்கள் இருந்தாலும் அக்கருத்துக்கள் எப்போதும் ஒரே விதமாகப் பயன்படுத்தப்படுவ தில்லை. அவை சந்தர்ப்பத்துக்கேற்பவும் தனியாட்களைப் பொறுத்தும் வேறுபடும்.

மொழிக்கு அப்பால் செல்லும் அளவுக்குக் கருத்தை வலியுறுத்துவதில், பேச்சில் வாய்மொழியில்லாத தொடர்பாடல் முறைகள் பயன்படுத்துவதில் காட்சிகள் தேவைப் படுகின்றன. அதன் பேறு மொழிக்கு அல்லது வாய்மொழியல்லாத சமிக்ஞைகளுக்கிடையில் வேறுபட்ட கருத்துக்கள் கிடையாது. அங்கு இரண்டும் இணைந்தே கருத்து உருவாகும். இத்தகைய காட்சியாளர்கள் ஆற்றலைப் பெறுவதற்கு நீண்டகால அனுபவம் வேண்டும்.

மொழி என்பது பேச்சு, உரை என இருவகைப்படும். பேச்சு என்பது மற்றொருவருடன் இடம்பெறும் பேச்சுவார்த்தையாகும். உரை என்பது ஒருவர் மேற்கொள்ள ஏனையோர் கேட்பதாகும். பேச்சின் வடிவத்துக்கேற்ப அது முன்வைப்பாக அமையும். இங்கு பேச்சு முக்கியத்துவம் பெறுவது பயனாளிக்குப் பொருத்தமான வகையிலும் தருணத்துக்கேற்ற விதத்திலும் அமைத்துக்கொள்ள வேண்டியிருப்பதனாலாகும்.

மொழியைப் பயன்படுத்துவதில் காட்சிப்படுத்தலுக்கான பிரதி முக்கியமாகும். அதாவது எழுத்துக்கள் மூலம் கருத்து வெளியிடப்படும். இதனால் மொழியின் பல அம்சங்கள் குறித்துக் கூடிய கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அது பயனாளிக்குப் பொருந்தும் வகையில் அமைய வேண்டும். மொழிப் பயன்பாட்டில் எழுத்துக்குள்ள அனுகூலம் யாதெனில், எவ்விதத் தொழில் நுட்பப் பயன்பாடுமின்றி பாதுகாக்கப்படுவதாகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. பேச்சு**

- பரஸ்பரத் தொடர்பாடலுக்காக மொழியை ஒலிப்பதாகும்.
- பேச்சின் வடிவத்துக்கேற்ப அது பல்வேறுபடும்.
- பேச்சு மூலம் கட்டளையிடல், வேண்டுதல், தன் கூற்று என்பவற்றை முன்வைக்க முடியும்.
- பேச்சு மூலம் தனியாட்களுக்கிடையே நல்லுறவைப் பேணும் சூழ்நிலை தோற்றுவிக்க முடியும்.

**2. ஆற்றுகை**

- பேச்சில் உச்சரிப்பு, கொள்நிலை, நடத்தைக் கோலம் என்பன இணைவதால் காட்சி தோன்றும்.
- ஆற்றுகை மூலம் பேச்சின் கருத்து உறுதிப்படும்/வேறுபடும்/புறக்கணிக்கப்படும் நிலை ஏற்படலாம்.
- பரஸ்பரத் தொடர்பாடலில் இது முக்கியம்.
- ஆற்றுகை மூலம் கருத்து நன்கு எறிவைப் படுத்தப்படும்.
- ஆற்றுகை என்பது தனியாள் சார்ந்த ஒரு நிகழ்வு.
- ஆற்றுகை தானாகவே பயிற்றப்படுவதுடன், அறிந்து அதனை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

**3. விவரணம்**

- மொழியின் மூலம் பலவற்றை விவரிக்க முடியும்.
- மானிட சமூகத்தில் விவரணம் ஓர் அத்தியாவசியப் பணியாகும்.
- ஊடகப் பாவனையில் எப்போதும் விவரணம் இடம்பெறும்.
- ஊடகவியலாளரும் பயனாளியும் விவரணத்தில் ஈடுபடுவர்.
- விவரணத்தின் போது மொழி மட்டும் போதாது.
- விவரணத்தின்போது தனிப்பட்ட நோக்கும் கருத்தும் முக்கியம்.
- மொழியை உபயோகித்து, தனிப்பட்ட கருத்தும் நோக்கும் வெளியிடப்படுகின்றது.
- ஒரே விடயத்தைப் பல விதமாக விவரணப்படுத்த, மொழியைப் பயன்படுத்தலாம்.

**4. உரை**

- உரை என்பது சொற்களை ஒலிப்பதால் முன்வைப்பதாகும்.
- பேச்சும், உரையும் ஒரே இயல்புடன் காணப்பட்டாலும் உரை என்பது தனியாள் பணியாகும்.
- மொழியை ஆக்கரீதியாகப் பயன்படுத்தும் ஆற்றல், உரையின்போது முக்கியமாகும்.
- பலரும் உரையின் போது சொற்களை உச்சரிப்பதில் சிறப்பியல்புகளைப் பயன்படுத்துவர்.
- தருணத்துக்கேற்ற பேச்சுக் கோலம், ரிதம், வேகம், முன்வைப்பு என்பவற்றில் சிறப்பியல்புகள் காணப்படும்.

### 5. பிரதி எழுத்து

- பிரதி என்பது, எழுத்துக்களை எழுதுதல் அன்று.
- பிரதிக்கு ஒரு நோக்கமுண்டு.
- பிரதியை அந்த நோக்கத்தை முன்வைத்தே தயாரிக்க வேண்டும்.
- பல்வேறு பிரதியெழுத்துக் கோலங்களுண்டு.
- பிரதியெழுத்துக் கோலங்கள் தொழில்நுட்பத்தினால் மாற்றமடைந்துள்ளன.
- உயர்தர பிரதியில் இருந்து ஒரு சொல்லைத் தானும் நீக்க முடியாது.
- மொழியின் குறிப்பிட்ட மரபுகள், விதிகள், இலக்கணம், நிறுத்தற் குறிகள், கூற்றுக்கள் அத்தியாவசியமாகும்.
- பிரதி மாதிரிகள் பலவுண்டு. அவற்றைக் கற்றறிய வேண்டும்.

## அலகு 04 - மொழியும் வெகுஜன ஊடகப் பயன்பாடும்

**தேர்ச்சி 4.0** : மொழியின் இயல்பு பற்றி விளக்கி, பல்வேறு ஊடகங்களில் மொழி பயன்படுத்தப்படும் விதத்தை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : பல்வேறு ஊடகங்களுக்கேற்ப மொழியைக் கையாளும் விதங்களையும் கோலங்களையும் ஒப்பிட்டுப் பரீட்சிப்பார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : அச்சு ஊடகத்துக்கான எழுத்து
வானொலிக்கான பிரதி
தொலைக்காட்சிக்கான பிரதி (எழுத்தும் பேச்சும்)
நவீன ஊடகங்களில் மொழிக் கையாள்கை

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. பல்வேறு ஊடகங்களில் மொழியைக் கையாளும் விதங்கள், விதிகள் பற்றிப் பரீட்சித்துப் பார்ப்பார்.
2. அச்சு ஊடகத்துக்குப் பொருத்தமான மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலை வெளிக்காட்டுவார்.
3. வானொலிக்குப் பொருத்தமான மொழிக் கையாள்கை ஆற்றலை வெளிக்காட்டுவார்.
4. தொலைக்காட்சி ஊடகத்துக்குப் பொருத்தமான எழுத்து, பேச்சு, பிரதி எழுதுதல் தொடர்பான மொழிக் கையாள்கையைப் பரீட்சித்துப் பார்ப்பார்.
5. நவீன ஊடகங்களில் மொழிப் பாவனையின் போக்கையும் பிரச்சினைகளையும் புலனாய்வு செய்வார்.

### அறிமுகம்

தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் மொழிப் பயன்பாடு பற்றிய புதிய அவகாசங்கள் தோன்றியுள்ளன. அதாவது தொடர்பூடகங்களின் தோற்றமாகும். மிக நீண்ட காலம் ஊட்டம் பெற்று வந்த மொழி மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வழிகளிலேயே பேச்சு மற்றும் எழுத்து என்ற வடிவங்களில் பயன்படுத்தப்பட்டன. ஆனால், தொடர்பூடகங்களின் தோற்றத்துடன் அவற்றில் பயன்படுத்தப்படுவதற்கான மொழி பற்றிய தேடல் ஒன்று இடம்பெற்றது. ஊடகங்களுடன் தொடர்பான ஊடகவியலாளர்களும் ஊடக ஆய்வாளர்களும் ஊடகக் கல்வியில் ஈடுபட்டுள்ளவர்களும் மொழியை ஊடகத்தில் பயன்படுத்துவது தொடர்பான பல்வேறு முறைகளைப் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கினர்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பன முறையே உலகில் தோன்றியதுடன் ஒவ்வொன்றினதும் தனித்துவம் அவற்றிற்கான மொழிப் பயன்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தின. அத்துடன் ஊடகங்களுக்கும் மொழியை ஆக்க ரீதியாகப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. உணர்வுபூர்வமான செய்திகள், வெளியீடுகள் தொடர்பாக மக்கள் காட்டும் ஆர்வம் இனங்காணப்பட்டமையினால் மொழியை உணர்வுபூர்வமாகப் பயன்படுத்த வேண்டிய நிலை ஊடகங்களுக்கும் ஏற்பட்டது.

இங்கு ஊடகங்களில் காணப்படும் மட்டுப்பாடுகள் மொழிப் பாவனையில் செல்வாக்குச் செலுத்தியமையைக் காணலாம். பத்திரிகையை எடுத்துக் கொண்டால் அதன் பிரதான தலைப்புச் செய்திக்கு மிகக் குறுகிய இடமே ஒதுக்கப்படுகிறது. அதற்கென கவர்ச்சியாகவும் தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையிலும் பெரிய எழுத்துக்களை உபயோகித்து மொழியைப் பயன்படுத்த வேண்டியேற்பட்டது. வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் இத்தகைய மட்டுப்பாடுகள் மொழிப் பாவனையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதன் பெறுபேறாக ஊடக மொழி என்ற ஒரு தனித்துவமான மொழிப் பாவனையைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. ஊடகங்களில் காணப்படும் தொடர்பாடல் மற்றும் பயனாளி என்போருக்கு இடையிலான தொடர்பு, மொழியில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. தனது எதிரில் இருக்கும் ஒருவர் தொடர்பாடலில் ஈடுபடும் போது, மொழியைப் பயன்படுத்தும் விதத்துக்கு மாற்றமான முறையில் தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்பாடும் மொழியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, ஊடகங்களில் மொழிப் பாவனை என்பது சிறப்பாக ஆராய வேண்டியதும் இதுவரை பூரண விருத்தியடையாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

ஊடகங்களுக்கிடையிலான போட்டியின் காரணமாகவும் மொழி மிகவும் கீழ் மட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். பயனாளிகளை நெருங்குதல் என்பதைத் தவறாக விளங்கிக்கொண்டுள்ள நவீன இலத்திரனியல் ஊடகங்கள், மனிதர்கள் அன்றாடம் பேசும் மொழியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் மொழியின் தனித்துவத்துக்கும் தேசிய இயல்புக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி அத்தகைய மொழியை உள்வாங்கும் பயனாளிகளின் நடத்தை விருத்தியில் வீழ்ச்சியேற்படுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. ஊடக மொழிப் பயன்பாடு, வர்த்தக நியமங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதே இதற்கான காரணமாகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. அச்சு ஊடகத்துக்கான மொழிப் பாவனை**

- அச்சு ஊடகம் என்பதில் பத்திரிகை, புத்தகங்கள், சஞ்சிகைகள் முதலானவை அடங்கும்.
- பத்திரிகை, புத்தகம், சஞ்சிகை என்பவற்றுக்கான தனி இயல்புகளுண்டு.
- பத்திரிகைகள் தினமும் அல்லது வாரமொருமுறை வெளிவருவதுடன் அவை அவசரமாக வாசிக்கப்படும் ஒன்றாகும்.
- சஞ்சிகைகள் வெளியிடப்பட்ட காலத்தின் பின்னரும் வாசிக்கக்கூடியவை.
- புத்தகங்கள் நீண்ட காலத்துக்கு மீண்டும் மீண்டும் வாசிக்கக்கூடியவை.
- பத்திரிகை, சஞ்சிகை, புத்தகங்கள் என்பவற்றின் தனித்துவத்துக்கேற்ற மொழிப் பாவனை இடம்பெற வேண்டும்.
- புத்தகங்களின் பக்கங்கள் மட்டுப்படுத்தப்படாவிடினும் சஞ்சிகைகள், பத்திரிகைகளின் பக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.
- பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட இடங்களை உச்ச அளவில் பயன்படுத்துவது என்பது சிரமமான காரியமாகும்.
- பத்திரிகை, சஞ்சிகைகளின் மரபுரீதியான பாவனைக்கு மாற்றமான வகையில் மொழி பயன்படுத்தப்படுகின்றது.
- அவசரமாக உள்வாங்கப்படும் வகையிலான கவர்ச்சியான மொழியே பத்திரிகைகளில் பயன்படுத்தப்படுகின்றது.
- பத்திரிகைகளின் மொழி சாதாரண பொது மக்களுக்கு ஏற்றதாக அமைய வேண்டும்.
- பத்திரிகைகள் ஒவ்வொரு இலக்குக் குழுவுக்குமான மொழியைப் பயன்படுத்தும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன.

## 2. வானொலி ஊடகத்துக்கான மொழிப் பாவனை

- வானொலி என்பது ஒரு கேட்டல் ஊடகம்
- வானொலியின் மொழியைக் கேட்டலினால் மட்டுமே உள்வாங்க முடியும்.
- வானொலிப் பயனாளிகள் தாம் கேட்டவற்றை மனதில் உருவகித்துக் கொள்வர்.
- வானொலி கேட்போர் பல மட்டங்களில் இருப்பதனால் எளிமையான மொழியையே பயன்படுத்த வேண்டும்.
- தேவையற்ற விதமான தகவல்கள், தரவுகள் சேர்க்கக்கூடாது.
- வானொலி மொழிப் பாவனை, கேட்போரின் உருவக ஆற்றலை மேன்படுத்துவதாக அமைய வேண்டும்.
- கேட்போரின் அறிவு, அனுபவம், ரசனை, ஆர்வங்களின்படியே அவர்களது புலக்காட்சி அமையும்.
- வானொலி ஊடகத்தில் யார் எழுதினாலும், அதனைப் பயனாளிகளிடம் கொண்டு செல்வோர் கலைஞர்களாவர்.
- வானொலிக் கலைஞர்களிடம் கவர்ச்சிகரமான பேச்சு வன்மை இருக்க வேண்டும்.
- சொற்களை உச்சரித்தல், நெருக்கம், நம்பிக்கை என்பன வானொலிப் பேச்சின் போது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- வானொலிப் பேச்சுகள் பிரதிகளின் அடிப்படையிலும் பிரதிகளின்றியும் இடம்பெறும்.
- பிரதிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பேச்சு எளிமையாக இருத்தல் வேண்டும்.
- வானொலி நிகழ்ச்சிகளின் தன்மைக்கேற்ற மொழி பயன்படுத்தப்பட வேண்டும்.

## 3. தொலைக்காட்சி ஊடகத்துக்கான எழுத்து, பேச்சு, பிரதியாக்கம்

- தொலைக்காட்சி, கேட்டல், பார்த்தல், அசைவு, நிரல்கள் இணைந்த ஓர் ஊடகம்.
- தொலைக்காட்சி நிகழ்வுகள் கூடிய அளவு காட்சி சார்ந்தன.
- காட்சிகளுடன் மொழியும் இணைக்கப்பட்டே தொலைக்காட்சிக் கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.
- தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் கட்புலனாகும் வகையில் தோன்றுவார்.
- தொலைக்காட்சி ஊடகவியலாளரின் சகல தோற்றங்களையும் பார்வையாளர் காண்கின்றார்.
- தொலைக்காட்சிக்காக சிறப்புத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.
- காட்சியும் பேச்சும் பொருந்துவதாக இருப்பது தொலைக்காட்சி ஊடகங்களில் அத்தியாவசிய அம்சமாகும்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக எழுத்துப் பிரதிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிப் பிரதியாக்கம் ஓர் ஆக்கத் தொழிற்பாடாகும்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் இயல்புக்கேற்ப மொழிப் பயன்பாடு இடம்பெற வேண்டும்.

## 4. நவீன ஊடகங்களில் மொழிப் பாவனை

- பிரதானமாக கணினி, செல்பேசி, இணையம் என்பன இதில் அடங்கும்.
- இந்த நவீன ஊடகங்கள் இன்று தொடர்பாடலுக்காகப் பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன.
- நவீன ஊடகத்திலுள்ள இடம், செலவு என்பவை காரணமாக, ஆக்கங்கள் குறுகியதாக இருத்தல் வேண்டும்.
- நவீன ஊடகங்கள் பெரும்பாலும் சர்வதேச மொழிகளில் இயங்குபவை.
- உள்நாட்டு மொழிகளில் நவீன ஊடகங்களை இயங்கச் செய்ய புதிய மென்பொருள்கள் தேவை.
- குறுஞ்சொல் பயன்பாடு, நவீன ஊடகத்தின் சிறப்பம்சமாகும்.
- ஆங்கில எழுத்துக்களில் உள்நாட்டு மொழிகளை எழுதும் போக்கும் உண்டு.
- நவீன ஊடகங்களின் தோற்றத்தினால் உள்நாட்டு மொழிகள் சவால்களுக்கு உட்பட்டுள்ளன.

## அலகு 04 - மொழியும் வெகுஜன ஊடகப் பயன்பாடும்

**தேர்ச்சி 4.0** : மொழியின் இயல்பு பற்றி விளக்கி, பல்வேறு ஊடகங்களில் மொழி பயன்படுத்தப்படும் விதத்தை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : ஊடகத்தில் மொழிப் பாவனையின் பலன்களையும் பலவீனங் களையும் ஒப்பிட்டு விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : ஊடகத்தில் மொழிப் பாவனையின் பலம்
ஊடகத்தில் மொழிப் பாவனையின் பலவீனம்
ஊடகத்தில் மொழிப் பாவனையின் மட்டுப்பாடு

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. பல்வேறு ஊடகங்களில் மொழிப் பாவனையின் பலன்களை ஒப்பிட்டு ரீதியில் விளக்குவார்.
2. பல்வேறு ஊடகங்களில் மொழிப் பாவனையின் பலவீனங்களைக் கண்டறிவார்.
3. பல்வேறு ஊடகங்களின் மொழிப் பாவனையின் மட்டுப்பாடுகளைக் கூறுவார்.

### அறிமுகம்

ஊடகங்களில் மொழிப் பாவனைத் தொழில் நுட்பம் கையாளப்படுகிறது. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்ற மூவகை ஊடகங்களிலும் கூடிக் குறைந்த அளவுகளில் மொழி பயன்படுத்தப்படுகின்றது. பத்திரிகை, வானொலி என்பவற்றில் அதிகமாகவும் தொலைக்காட்சியில் குறைவாகவும் மொழி பயன்படுத்தப்படுவதாகக் கருத வேண்டியுள்ளது. ஆயினும், இம்மூன்று ஊடகங்களிலும் மொழிப் பாவனையின் முக்கியத்துவம் சமமானதே.

ஊடகங்களில் மொழியைப் பயன்படுத்தும் மனிதன் தனது சொந்த வாழ்க்கையில் அதனை வேறு விதமாகப் பயன்படுத்துவதைக் காணலாம். ஊடகங்களில் காணப்படும் சிறப்புத் தன்மைக்கேற்பவே அவற்றில் மொழி பயன்படுத்தப்படுகின்றது. அதன் பேறு அங்கு நிலவும் பலம், பலவீனம், மட்டுப்பாடுகள் என்பவற்றை இனங்கண்டு கருமமாற்ற வேண்டியேற்படும்.

### பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. ஊடகத்தில் மொழிப் பயன்பாட்டின் பலம்

- சுருக்கமாக, கச்சிதமாக, ஆக்கரீதியாக மொழியைப் பயன்படுத்தலாம் என்பது.
- மனங்கவர் விதத்தில் மொழியைக் கையாள முடியும் என்பது.
- பயனாளியின் உணர்வுகளை மேம்படுத்த முடியும் என்பது.
- பயனாளியின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பது.

## 2. ஊடக மொழிப் பயன்பாட்டின் பலவீனம்

- பயன்படுத்தும் மொழி சமூகத்தில் அனைவருக்கும் பொருத்தமற்றதாக இருத்தல்.
- பயன்படுத்தும் மொழி சமூகத்தில் எல்லோராலும் நன்கு விளங்க முடியாதிருக்கலாம்.
- பயன்படுத்தும் மொழியை சில பயனாளிகள் புறக்கணிக்கலாம்.

## 3. ஊடகமொழிப் பயன்பாட்டின் மட்டுப்பாடுகள்

- பத்திரிகையில் இடம் மட்டுப்படுத்தப்பட்டது.
- வானொலியில் முடியுமான அளவு சுருக்கமாகக் கருத்துக்களைக் கூற வேண்டும்.
- தொலைக்காட்சியில் தேவையற்ற விதத்தில் அதிகமாக மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் அதன் ஆற்றுகைத் தன்மை குறையலாம்.
- பயனாளிகளின் மட்டுப்பாடுகளினால் மொழியில் தாக்கம் ஏற்படுத்தப்படும்.
- பண்பாட்டு மட்டுப்பாடுகளினால் மொழியைக் கவனமாகக் கையாள வேண்டும்.

## அலகு 5.0 - பொதுமக்கள் தொடர்பு

**தேர்ச்சி 5.0** : பொதுசனத் தொடர்புத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக பல்வேறு முறைகளையும் கருவிகளையும் பயன்படுத்துவதைச் செய்து பார்ப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையின் சிறப்பியல்பை அடிப்படையாகக் கொண்டு, பொதுமக்கள் தொடர்பு எத்தகையது என்பதை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : மக்கள் தொடர்பு அறிமுகம்
மக்கள் வரைவிலக்கணம்
மக்கள் தொடர்பாடலின் தேவையும் இயல்பும்
மக்கள் தொடர்பு - வரைவிலக்கணம்
மக்கள் தொடர்பு உபயோகம் (இலங்கை தொடர்பாக)

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. ‘பொதுமக்கள்’ என்பதனை வரைவிலக்கணப்படுத்துவார்.
2. பொது மக்கள் தொடர்பின் அவசியத்தைக் கணிப்பிடுவார்.
3. பொதுமக்கள் தொடர்பின் இயல்புகளை விளக்குவார்.
4. பொதுமக்கள் தொடர்பு பற்றிய வரைவிலக்கணங்களை விபரமாகக் கூறுவார்.
5. இலங்கை தொடர்பில் பொதுமக்கள் தொடர்புப் பாவனையின் மரபுரீதியான, நவீன பண்புகளை உதாரணங்களினூடாக விமர்சிப்பார்.

**அறிமுகம்**

பொதுமக்கள் தொடர்பு என்பது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பாடப்பரப்பாகத் தெரிந்தாலும் அதன் பணிகளும் பயன்பாடும் மரபு ரீதியான சமூகத்தில் இருந்தமை தெளிவு. மரபுரீதியான சமூக வாழ்வில் மேற்கொள்ளும் பல்வேறு சமூகப் பணிகளின் போது அவற்றை வெற்றிகரமாக மேற்கொள்ள, மக்கள் தொடர்பு அவசியம் என்பதை அவர்கள் அனுவத்தில் கண்டறிந்தார்கள். எனவே, அவர்கள் பலவிதமான சமூகத் தொடர்பு முறைகளை தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்தினர். திருமணம், மரணம், பல்வேறு சமய, சமூக விழாக்கள், புதுமனை புகுதல், விவசாய நடவடிக்கைகளின் போதும் இவ்வாறான ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுசனத் தொடர்பு முறைகளை அவர்கள் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளனர். இலங்கை பற்றி ஆராயும்போது தெரிய வருவது அத்தகைய பொதுமக்கள் தொடர்பு முறைகளை நகர, கிராமிய, பிரதேச ரீதியிலும் சமய, இன ரீதியிலும் பல வேறுபாடுகளுடன் பயன்படுத்தியுள்ளமையாகும்.

இன்றைய சமூகத்தின் புதிய தேவைகளுக்காகவும் மக்கள் தொடர்பு அதிகமதிகம் பயன்படுத்தப்படுகின்றன. பல ஒழுங்கமைப்புகளுக்கும் தம் நிலவுகைக்காகவும் பொதுசனத் தொடர்பு தேவைப்படும். அதேபோன்று ஒரு வீட்டை எடுத்தாலும் நண்பர்கள், அயலவர்களின் தேவையுண்டு. அரசியல்வாதிகளுக்குத் தம் அரசியல் கருமங்களைச் செவ்வனே நிறைவேற்ற ஆதரவாளர்களும் வாக்காளர்களும் தேவை. இவ்வாறு பல்வேறு தேவைகளுக்காகப் பொதுசனத் தொடர்பு பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

பொதுமக்கள் தொடர்பு என்பதை ஒரு பாடமாக யோசிக்கும்போது தெரியவருவது; அது ஒரு மேம்பாட்டு உபாயமாகும். அதன்போது சந்தைப்படுத்தலில் சேர்கின்றது. சந்தைப் படுத்தலின் ஒரு பிரிவு விற்பனை மேம்பாடு ஆகும். சந்தைப்படுத்தலில் நுகர்வோர் தொடர்பை உயர்மட்டத்தில் வைத்திருக்க வேண்டும். ஒரு மேம்பாட்டு உத்தியாக பொதுசனத் தொடர்பு பயன்படுத்தப்படும். மக்கள் வணிகத்தின் மீது மலர்ச்சியான மனப்பாங்குடன் இருப்பின் அது வணிகத்தின் முன்னேற்றத்துக்குக் காரணமாக அமையும். எனவே பொதுமக்களிடையே அத்தகைய உணர்வை ஏற்படுத்துதலும் அதனைப் பேணுவதும் பல்வேறு உத்திகளினூடாகச் செய்யப்பட வேண்டும்.

பொதுவாக, மரபுரீதியான சமூகத்திலும் நவீன சமூகத்திலும் பொதுசனத் தொடர்புத் தேவை சமமாகக் காணப்படுகின்றது. பொதுசனத் தொடர்புக்காகப் பயன்படுத்தும் முறைகள், வடிவங்களிலேயே வேறுபாடு காணப்படும். ஈற்றில் அவை எல்லாவற்றினதும் நோக்கம் ஒன்றாகவே இருக்கும். அதாவது பொதுமக்களுடன் நல்ல, நட்பு ரீதியான தொடர்பைப் பேணுவதாகும்.

உதாரணமாக ஒரு பாடசாலையை எடுத்தாலும் அதன் பால் ஒரு ஜனரஞ்சகத்தன்மை ஏற்பட மக்கள் தொடர்பே பயன்படுகிறது என்பதாகும். எனவே, நன்கு அறிந்து பொதுசனத் தொடர்பு உத்திகளைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் மூலம் தான் அல்லது தனது நிறுவனம், அல்லது தான் சார்ந்த அமைப்புகளை வெற்றிகரமாக நடத்திச் செல்ல முடியும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**


## 1. ‘பொதுமக்கள்’ வரைவிலக்கணம்

- பொதுமக்கள் தொடர்புப் பணியில், மக்கள் என்று பொதுவான சகல மக்களையும் குறிக்காது.
- பொதுமக்களில் தெரிவுசெய்யப்பட்ட குழுவே இதில் அடங்கும்.
- இதன்படி பொதுசனம் (Publics) என்பது பன்மைக் கருத்தில் வரைவிலக்கணப் படுத்தப்படும்.
- அனைத்து அமைப்புகளிலும் தெரிவுசெய்யப்பட்ட ஒருமக்கள் குழு இருக்கும்.
- அமைப்புச் சார்ந்த மக்கள் குழு, அமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும்.
- ஓர் அமைப்பின் மக்கள் குழு மற்றோர் அமைப்பின் மக்கள் குழுவிலிருந்து மாறுபட்டதாக இருக்கலாம்.
- வணிக அமைப்பை எடுத்துக்கொண்டால் அதில் அடங்கும் மக்கள் குழுக்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
    1. இனக்குழுமங்கள்
    2. ஊழியர்கள்
    3. சேவைகள், பொருட்கள் வழங்குவோர்
    4. முதலீட்டாளர் (வங்கி அல்லது நிதித்தாபனம்)
    5. விநியோகிப்போர்
    6. நுகர்வோர் / பயனாளிகள்
    7. ஆலோசகர்கள்

    இவ்வாறு எந்த ஒரு அமைப்பினதும் மக்கள் குழுவை வகைப்படுத்தலாம்.

## 2. மக்கள் தொடர்பின் அவசியமும் இயல்பும்

- வணிக ரீதியான அல்லது வணிக ரீதியல்லாத எத்தகைய அமைப்பாக இருந்தாலும் அதன் நிலவுகைக்கு மக்கள் அவசியம்.
- ஒரு வீட்டுக்கு, சமய நிறுவனத்துக்கு, பாடசாலைக்கு, வைத்தியசாலைக்குக் கூட அவற்றின் நிலவுகைக்கு மக்கள் தேவை.
- மக்கள் தொடர்பின் தேவை, வணிகத் தேவையை மிஞ்சியதாகும்.




## 3. மக்கள் தொடர்பு வரைவிலக்கணம்

- மக்கள் தொடர்பு, அறிவித்தலில் இருந்து வேறுபடுகிறது என்பதும் அறிவித்தலைப் பயன்படுத்தாவிடினும் எல்லா அமைப்புகளுக்கும் மக்கள் தொடர்பு அவசியம் என்பதும்.
- மக்கள் தொடர்பு சந்தைப்படுத்தலில் இருந்து வேறுபடுகிறது என்பதும் சந்தைப்படுத்தலின் ஒரு பிரிவாக மக்கள் தொடர்பைக் காட்ட முடியும்.
- மக்கள் தொடர்பு சந்தைப்படுத்தல் மேம்பாட்டிலிருந்து வேறுபட்டது.
- மக்கள் தொடர்பு பிரசித்தப்படுத்தலில் இருந்து வேறுபடுவதுடன், மக்கள் தொடர்பு மூலம் பிரசித்தம் கிடைக்கும்.
- பல ஆய்வாளர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர்.
- ஒவ்வொரு வரைவிலக்கணத்தினதும் சொற்கள், விபரிப்பு, கூற்றுகள் வேறுபட்டதாக இருப்பினும் அவற்றின் பொதுவான கருத்து ஒன்றே.

### பிரித்தானிய, மக்கள் தொடர்பு நிறுவனத்தின் வரைவிலக்கணம்

மக்கள் தொடர்பு என்பது ஒரு அமைப்புக்கும் அதனுடன் இணைந்த மக்களுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பை ஏற்படுத்தி, அதனைப் பேணுவதற்காக அறிந்து, திட்டமிட்டுப் பொறுமையாக எடுக்கப்படும் முயற்சியாகும்.

### இந்திய மக்கள் தொடர்பு நிறுவனத்தின் வரைவிலக்கணம்

மக்கள் தொடர்பு என்பது ஒரு அமைப்புக்கும் அதன் மக்களுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வையும் நன்மதிப்பையும் உருவாக்கவும் பேணவுமாக எடுக்கப்படும் திட்டமிட்டதும் நீடித்திருப்பதுமான அனைத்து முயற்சிகளுமாகும்.

இதன்படி மேற்படி வரைவிலக்கணங்கள் மூலம் மக்கள் தொடர்பு என்பதன் மூன்று பிரதான பணிகள் குறித்துக் காட்டப்படுகின்றன.

1. அமைப்புக்குரிய மக்கள் குழுவும் நிலவும் தொடர்புகளும்
2. சீரான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான உபயோக முறைகள்
3. தொடர்புகளின் பண்பும் தரமும்

## 4. மக்கள் தொடர்புப் பயன்பாடு (இலங்கை தொடர்பாக)

- இலங்கை வரலாற்றில் அரசர்கள், ஆட்சியாளர்கள், பொதுமக்களுடன் சீரான தொடர்பைப் பேணுவதற்கு முயற்சித்தமை.
- மக்களிடையே விருப்பை அதிகரித்துக் கொள்வதற்காக அரசர்களால் பல்வேறு சமய நடவடிக்கைகள், கலை நுட்பங்கள், இலக்கியம் போன்ற துறைகளில் சேவையாற்றப்பட்டமை.
- மக்களின் கருத்தை அறிவதற்காக ஆட்சியாளர்கள், அரசர்கள் மாறுவேடம் தரித்து இடத்துக்கிடம் சென்றமை.
- பிற்காலத்தில் இலங்கையின் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிய வெளி நாட்டவர்களும் மக்கள் விருப்பைப் பெற்றுக் கொள்வதற்காக, திட்டமிட்ட மக்கள் தொடர்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- 1948 இல் சோல்பெரி ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் அரசாங்கத் தகவற் திணைக்களம் அமைக்கப்பட்டதன் மூலம் மக்கள் தொடர்பு குறித்த முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டமை.
- தகவற் திணைக்களத்தின் முதலாவது நிர்வாக அறிக்கையின்படி அதன் ஆரம்ப நோக்கம் பின்வருமாறு:
    1. அரசுக்கும் மக்களுக்குமிடையேயான தொடர்பை உயர் மட்டத்துக்குக் கொண்டு வருதல்.
    2. பல்வேறு வெளியீடுகள், கையேடுகள், செய்தி அறிவித்தல்களை வெளியிடல் மூலம் அரசாங்கத்தின் பணிகள் தொடர்பாக மக்களை விளிப்பூட்டல்.
    3. இந்த நாட்டில் தகவல்களை விசாரிக்கும் வெளிநாட்டவர்களுக்கும் உள்நாட்டவர்களுக்கும் பொதுநலவாய நாடுகளுக்கும் இலங்கையின் சார்பில் முன்வரும் தூதுக் குழுவினர்க்கும் தகவல்களை வழங்குதல்.
    4. அரச திரைப்படப் பிரிவின் கருமங்களை ஒழுங்கமைத்தல்.
    5. அரச வெளியீடுகளை வெளியிடல், சந்தைப்படுத்தல்.
- அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களில் மக்கள் தொடர்பு நடவடிக்கை களுக்காக மக்கள் தொடர்பு அதிகாரி, ஊடக உத்தியோகத்தர், செய்தி உத்தியோகத்தர் ஆகிய பெயர்களில் அழைக்கப்படும் அதிகாரிகள் இருப்பர்.
- பல்வேறு மட்டத்திலான மக்கள் பிரதிநிதிகளுக்காக மக்கள் தொடர்பு அதிகாரிகள் ஊடாக உத்தியோகத்தர்கள், தகவல் உத்தியோகத்தர்கள் இருப்பர்.
- பொலிஸ் சேவையில் மக்கள் தொடர்புப் பிரிவொன்றும், பாதுகாப்புச் சேவையில் ஊடகப் பேச்சாளரும் பொதுமக்கள் தொடர்பு விவகாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.
- பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு மற்றும் குற்றத் தடுப்புப் பணியகத்தின் மூலம் நடைபெறும் பணிகள்.
    1. குற்றத்தடுப்பு தொடர்பாக மக்களை விளிப்பூட்டல், பாடசாலை மாணவர்களுக்கு விளிப்பூட்டல், விரிவுரைகள் நடத்துதல்.
    2. பல்வேறு துறைகள் சார்ந்ததாக மக்களை அறிவுறுத்த, தூதுவராலயங்களின் அனுசரணையில் பெற்றுக்கொள்ளும் விவரணப் படங்களைக் காட்டுதல்.

3. பாடசாலைக் காட்சிப்படுத்தல்களுக்காக பொலிஸின் பணிகளை அறிந்துகொள்ளும் வகையிலான கண்காட்சிக் கூடங்களை ஏற்பாடு செய்தல்.
4. பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையேயான தொடர்பை மேம்படுத்துவதற்காக விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்துதல்.
5. குற்றத்தடுப்பு, பொதுசனத் தொடர்பு என்பன தொடர்பாக பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதுவதன் மூலம் மக்களுக்கு விளிப்பூட்டல்.
6. அனர்த்த நிலைமைகளின் போது உதவிகளும் உதவித் தொகைகளும் வழங்க நடவடிக்கை எடுத்தல்.
7. இலங்கையின் பிரதான சமய விழாக்களின் போது மக்களுக்கு உதவுவதற்காக, மக்கள் தொடர்புப் பணியில் ஏதாவது ஒன்றை நடத்துதல்.
8. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை உட்பட ஊடகங்களில் பொலிஸ் திணைக்களம் தொடர்பான செய்திகளைப் பிரசுரித்தல், நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
9. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களில் தகவற் திணைக்களத்துடன் இணைந்து கருமமாற்றல்.
10. பொலிஸ் அதிகாரிகளுக்கு விளிப்பூட்டல், மக்கள் தொடர்பு பற்றிய விரிவுரைகள் நடத்துதல், ஏற்பாடு செய்தல்.

- இலங்கைச் சமூகத்தில் பல்வேறு சமூக சந்தர்ப்பங்களின்போது மக்கள் தொடர்பு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. (திருமணம், மரணம், சமய விழாக்கள், யாகங்கள், வருடாந்த சம்பிரதாய விழாக்கள்)
- ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் குடும்பத்திலும் ஒரு மக்கள் தொடர்புத்திட்டம் இருத்தல் வேண்டும்.
- தனியாட்களும் சமூகமும் தம் இடத்தைக் கொண்டு நடத்துவதற்காக மக்கள் தொடர்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலையிலும் ஒரு பயனுள்ள மக்கள் தொடர்புத் திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூகத்தில் ஜனரஞ்சகத் தன்மையை ஏற்படுத்த முடியும்.

## அலகு 5.0 - பொது மக்கள் தொடர்பு

**தேர்ச்சி 5.0** : பொதுசனத் தொடர்புத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக பல்வேறு முறைகளையும் கருவிகளையும் பயன்படுத்துவதைச் செய்து பார்ப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : மக்கள் தொடர்புக்காகப் பயன்படுத்தக்கூடிய கருவிகள், முறைகளைப் பரீட்சிப்பார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : மக்கள் தொடர்புக் கருவிகள்
அச்சு ஊடகம்
கட்புல, செவிப்புல ஊடகம்
புகைப்படங்கள்
கண்காட்சிகள்
ஊடகத் தொடர்பு
அனுசரணை
சுற்றாடற் கருவிகள்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. மக்கள் தொடர்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள், முறைகள் என்பவை பற்றி விபரிப்பார்.
2. ஒவ்வொரு கருவிகள், முறைகள் என்பவற்றை ஒப்பிட்டு மதிப்பிடுவார்.
3. ஒவ்வொரு கருவிகள், முறைகள் என்பவற்றை மக்கள் தொடர்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் விதத்தை விளக்குவார்.
4. ஒவ்வொரு கருவிகள், முறைகள் என்பவற்றைப் பயன்படுத்தல் தொடர்பான அனுபவத்தைப் பெறுவார்.

### அறிமுகம்

மக்கள் தொடர்பு நடவடிக்கைகளுக்காகப் பல்வேறு கருவிகளை உபயோகிக்க முடியும். அவற்றின் பிரதான கருவிகளான அச்சு ஊடகம், கட்புல, செவிப்புல ஊடகம், புகைப்படம், கண்காட்சிகள், சூழற் கருவிகள் பற்றியும் ஊடகத் தொடர்பு அனுசரணையாளர் என்ற மக்கள் தொடர்பு வடிவங்கள் பற்றியுமான அடிப்படைத் தேர்ச்சிகளையும் பெறுதல் மிகவும் பயனுடையது. இக்கருவிகளும் வடிவங்களும் தனித்துவமான சிறப்பியல்புகள் கொண்டவை. அத்துடன் அவற்றை வெவ்வேறாக மக்கள் தொடர்புக் கருமங்களுக்காகப் பயன்படுத்த முடியும். இவ்வலையமைப்பை உருவாக்குவதற்காக அவற்றின் தனித்துவ இயல்புகளை வெவ்வேறாக இனங்காணல் அவசியம்.

### பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. அச்சு ஊடகம்

- அதிக எண்ணிக்கையான பிரதிகள் தேவைப்படும் அச்சுப் பணிகளின்போது சமதள அச்சு வடிவமே பயன்படுத்தப்படும்.
- குறைந்தளவு பிரதிகள் தேவைப்படும் அச்சு வேலைகளின்போது எண் சார்ந்த (டிஜிற்றல்) அச்சுமுறை இலாபகரமானது.

- சமதள மற்றும் எண்சார் அச்சு முறைகளின் இறுதி வடிவம் நேர்த்தியானது.
- எண்சார் அச்சு முறைகளைப் பயன்படுத்தி பதாகை, சுவரொட்டி போன்றவற்றை கடதாசி, பொலித்தீன், துணி, பிளாத்திக் போன்றவற்றில் அச்சிடலாம். சமதள அச்சில் இவை சற்றுச் சிரமம்.
- அச்சு ஊடகத்தில், சுவரொட்டி, மடக்கோலை, செய்திச் சஞ்சிகைகள், தவணை வெளியீட்டுச் சஞ்சிகைகள், பதாகை, காட்சிப்பலகை என்பனவற்றை ஆக்கலாம்.
- அச்சு ஊடகத்தில் உள்ளடக்கும் சொற்கள், படங்கள் மிகவும் கவனமாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- சொற்களும், படங்களும் மக்கள் தொடர்பை நிறைவேற்றிக் கொள்ளப் பொருத்தமானதா என்பதைக் கணிப்பிட வேண்டும்.
- அச்சு ஊடகக் கருவியைச் சில காலம் பயனாளியிடம் வைத்திருக்க முடியும்.
- கண்கவர் விதத்தில் அச்சு ஊடகம் தயார் செய்யப்பட வேண்டும்.
- ஒவ்வொரு அச்சு ஊடக ஆக்கங்களின் பண்புத்தரம் தொடர்பிலும் தனித்தனியாகக் கவனிக்க வேண்டும்.
- ஒவ்வொரு அச்சு ஊடக ஆக்கமும் வெவ்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

## 2. கட்புல - செவிப்புல ஊடகம்

- கட்புல - செவிப்புலக் கருவிகள், மக்கள் தொடர்புத் துறையில் மிகவும் விளைதிறனுடன் பயன்படுத்தப்படுகின்றன.
- தொலைக்காட்சி, சினிமா போன்ற கட்புல - செவிப்புல ஊடகங்களில், தொலைக்காட்சி மக்கள் தொடர்புக்காகப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.
- தொலைக்காட்சியின் அனைத்து நிகழ்ச்சிகளையும் மக்கள் தொடர்பு நடவடிக்கைகளுக் காகப் பயன்படுத்தலாம்.
  - செய்தி
  - நடப்பு விவகார நிகழ்ச்சிகள்
  - விளையாட்டு நிகழ்ச்சிகள்
  - சிறப்பு நிகழ்ச்சிகள் (சமையல், தோட்ட அலங்காரம், கால்நடை வளர்ப்பு)
  - நாடகமும் நாடகம் சார்ந்த நிகழ்ச்சிகளும்
  - சமய நிகழ்ச்சிகள்
  - கலந்துரையாடல், உரையாடல் நிகழ்ச்சிகள்
  - சிறுவர் நிகழ்ச்சிகள்
  - விஞ்ஞான நிகழ்ச்சிகள்
  - கல்வி நிகழ்ச்சிகள்
  - பிரயாண நிகழ்ச்சிகள்
  - பெண்கள் நிகழ்ச்சிகள்
- இதனைவிட வழுக்கி எறிவை, மேன்தலை எறிவை, பல்லூடக எறிவை என்பனவற்றையும் இறுவட்டு, ஒளிப்பேழை போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

## 3. புகைப்படங்கள்

- பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்திய புகைப்படங்களைப் பல அளவுகளில் பயன்படுத்தலாம்.
- புகைப்படங்களை எளிதாக, குறுங்காலத்துக்குக் காட்சிப்படுத்தலாம்.
- மக்கள் தொடர்புக்காகப் புகைப்படம் நிர்மாணிக்கப்படும்போது மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

- பொருத்தமான புகைப்படங்களை கோப்பிலிருந்து தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.
- பேசும் புகைப்படம் அல்லது இயங்கும் புகைப்படம் மிகப் பொருத்தமானது.
- மக்கள் தொடர்புக்காக புகைப்படம் ஆக்குதல் ஒரு சிறப்புப் பணியாகும்.
- மக்கள் தொடர்புக்காகப் பல்வேறு வகைகளில் புகைப்படங்களைப் பயன்படுத்த முடியும்.
  - புகைப்படக் கண்காட்சியொன்றைத் தொடர்ந்து நடத்துதல்.
  - தேவையானவர்களுக்குப் பிரதியெடுக்கும் வாய்ப்பைக் கொடுத்தல்.
  - செய்தி அறிக்கைகளுடன் புகைப்படங்களையும் வெளியிடுதல்.
  - சிறப்புக் கட்டுரைகளுடன் பிரசுரிப்பதற்காக வழங்குதல்.
  - யன்னல் கண்காட்சிகளாக முன்வைத்தல்.
  - விசேட சந்தர்ப்பங்களின்போது காட்சிப்படுத்தல்.
  - பெருப்பித்து, பொது இடங்களில் காட்சிப்படுத்தல்.
  - நிறுவனத்தின் வார வெளியீடுகளில் பிரசுரித்தல்.
  - பல்வேறு பத்திரங்கள் (துண்டுப்பிரசுரம், மடக்கோலை, மடிப்பு), சிறு நூல்கள், சுவரொட்டிகள், ஊழியர் கைந்நூல், வருடாந்த அறிக்கை போன்றவற்றில் உட்படுத்தல்.
  - சலனமற்ற படமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தல்.
- புகைப்படங்களுக்குத் தலைப்பிடல் மூலம் ஆக்கரீதியான கருத்தை வழங்கலாம்.

## 4. கண்காட்சி

- கண்காட்சிகளின் நோக்கம் அவற்றைப் பார்வையிடுபவர்களின் ஊடாகக் கருத்துக்களைப் பரப்புதல்.
- எந்தவொரு அமைப்பினதும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள திட்டமிட்ட கண்காட்சியை உபயோகிக்க முடியும்.
- கண்காட்சி பல்வகைப்படும்.
  - பூக்கள் கண்காட்சி
  - வர்த்தகக் கண்காட்சி
  - விவசாயக் கண்காட்சி
  - கல்விக் கண்காட்சி
  - வைத்தியக் கண்காட்சி
  - சர்வதேசக் கண்காட்சி
  - இடம் பெயர் கண்காட்சி
  - சிறு கண்காட்சி (யன்னல் கண்காட்சி, கண்காட்சிப்பலகை. போக்குவரத்துச் சாதனங்களில் காட்சிப்படுத்தல் ஆகியன)
- பெரும்பாலும் மாநாடும், கண்காட்சியும் ஒன்றாக நடைபெறல்.
- கண்காட்சியைப் பார்ப்பவர்கள் கொண்டு செல்ல, சில மக்கள் தொடர்புக் கருவிகள் அவசியம்.
- மக்கள் தொடர்புக்காகக் கண்காட்சிகள் பயன்படுத்தப்படுவதுடன் கண்காட்சியை வெற்றி பெறச் செய்வதற்கு மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்கள் அவசியம்.

## 5. ஊடகத் தொடர்புகள்

- மக்கள் தொடர்புத் திட்டத்துக்குரிய தகவல்களை, பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் மக்களை நோக்கி அனுப்புவதற்கும் அது பற்றிய அறிவை, விளக்கத்தை, விருப்பை உருவாக்குவதற்கும் ஊடகத் தொடர்புகள் மூலம் முயற்சித்தல்.
- ஊடகத் தொடர்பு நிகழ்ச்சிகளை நடத்த முன்னர், ஊடகங்கள் பற்றிய தெளிவான விளக்கம் இருப்பது அவசியம்.

- வெற்றிகரமான ஊடகத் தொடர்புக்கான கொள்கைகள் உண்டு.
- மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் அனைத்து ஊடகங்களுடனும் இருவழித் தொடர்பாடலைப் பேணிவரல் வேண்டும்.
- தம் அமைப்பு பற்றி சரியானதும் நம்பகரமானதுமான தகவல்களை, துரிதமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறை பற்றி ஊடகங்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும்.
- ஊடகங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் ஊடகம் மூலம் வழங்குதல்.
- தேவையான போது காலத்துக்குக் காலம் ஊடக மாநாடுகள் நடத்துதல்.
- ஒவ்வொரு தகவல்களையும் உறுதிப்படுத்திக்கொள்ள ஊடகங்களுக்கு வசதி செய்து கொடுத்தல்.
- மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள், அமைப்பின் உயர் முகாமைத்துவம் ஊடகங்களுடனான தனிப்பட்ட தொடர்புகளைக் கூடிக் குறைந்த அளவுகளில் பேணுதல்.
- காலத்துக்குக் காலம் செய்தி அறிவிப்புகளை ஊடகங்களுக்கு வழங்குதல்.
- ஊடகக் கலந்துரையாடல்கள், மாநாடுகள் நடத்துவதன் மூலம் ஊடகத் தொடர்புகளை மேம்படுத்த முடியும்.
- ஊடகத் தொடர்புகளைக் கொண்டு நடத்துவதற்கான ஒரு விசேட உத்தியோகத்தர் ஒவ்வொரு அமைப்பிலும் இருத்தல் வேண்டும்.

## 6. அனுசரணையாளர்

- அமைப்பின் நன்மதிப்பையும் மக்கள் புரிந்துணர்வையும் அதிகரித்துக் கொள்ளும் வகையிலான பல்வேறு செயற்பாடுகளுக்கான நிதி, மானியங்கள் வழங்குதல் இதன் கருத்தாகும்.
- குறுங்காலச் செயற்பாடுகளுக்கும், நீண்டகாலச் செயற்றிட்டங்களுக்கும் அனுசரணை கிடைக்கும்.
- அனுசரணை வழங்குதல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையின் கீழ் நடைபெறும்.
- பல்வேறு துறைகளின் செயற்பாடுகள், செயற்றிட்டங்களுக்கான அனுசரணைகள் வழங்கப்படுகின்றன.
    - விளையாட்டு
    - கண்காட்சி
    - தொழில்சார் நடவடிக்கைகள்
    - கலாசார, சமய நிகழ்ச்சிகள்
    - கல்வி
    - சுகாதார நடவடிக்கை
    - வெளியீடுகள்
    - நன்மையான காரியங்கள்
    - வீடமைப்பு, வீதியமைப்பு
- முறையாகக் கருமமாற்றும் அனேகமான அமைப்புகள், தாம் வருடாந்தம் மற்றும் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் திட்டமிடலுக்கேற்ப அனுசரணையை நடைமுறைப் படுத்தும்.
- ஒரு விளம்பரத்தினால் கிடைக்கும் விளம்பரத்தைவிட அனுசரணை மூலம் கிடைக்கும் மக்கள் விருப்பு உயர் மட்டத்தில் காணப்படும்.
- இலங்கையில் மதுபானம், சிகரட் உற்பத்தியாளர்களுக்கு அனுசரணை வழங்க முடியாது.

## 7. சுற்றாடற் கருவிகள்

- ஒவ்வொரு அமைப்புக்கும் மக்கள், வாடிக்கையாளர் வரும் ஓர் இடம் இருக்கும். (உதாரணம்: வங்கி, தபாற்கந்தோர், வைத்தியசாலை, காரியாலயம், பாடசாலை, விற்பனை நிலையம் போன்றன...)
- ஒவ்வொரு இடங்களுக்கும் வருபவர்களிடையே விருப்பு, நல்லுணர்வு ஏற்படும் வகையில் அவ்விடங்களின் சூழலை உருவாக்க வேண்டும்.
- அழகான கட்டடச் சூழல், பூந்தொட்டி, மீன் தாங்கி, சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், தொலைக்காட்சிப்பெட்டி, காற்றுச் சீராக்கி வசதி, சொகுசான தளபாடங்கள், உபகரணங்கள், மக்கள் தொடர்புக்காகப் பயன்படும் அச்சு ஆவணங்கள் போன்ற பல விடயங்கள் சுற்றாடற் கருவிகளின் கீழ் அடங்கும்.
- எந்தவொரு அமைப்பிலும் இத்தகைய திட்டமிடப்பட்ட சுற்றாடல் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மக்கள் தொடர்பு நோக்கம் நிறைவேறும்.
- ஒரு வீட்டிலாயினும் பொருத்தமான சுற்றாடற் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அங்குவரும் மக்களிடையே மகிழ்வுணர்வை ஏற்படுத்தலாம்.
- சுற்றாடற் கருவி ஆக்கம், பராமரிப்புக்கு பணச்செலவு ஏற்படும்.
- சுற்றாடல் கருவிகள் திட்டமிட்டு உருவாக்கப்படல் வேண்டும்.
- பொலிஸ் நிலையம், வைத்தியசாலை போன்ற இடங்களிலும் பொருத்தமான சுற்றாடற் கருவிகள் அமைக்கப்படுவதன் மூலம் சிறந்த மக்கள் தொடர்பை ஏற்படுத்த முடியும்.

# அலகு 5.0 - பொது மக்கள் தொடர்பு

**தேர்ச்சி 5.0** : பொதுசனத் தொடர்புத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக பல்வேறு முறைகளையும் கருவிகளையும் பயன்படுத்துவதைச் செய்து பார்ப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.3** : மக்கள் தொடர்புக்கான பல்வேறு தேர்ச்சிகளை வெளிக் காட்டுவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : மக்கள் தொடர்புத் தேர்ச்சிகள்
அச்சு ஊடகத் தேர்ச்சி
ஊடக அறிவித்தல்
ஊடகக் கலந்துரையாடல்
சுற்றாடல் உருவாக்கம்
தனியாள் பிம்பம்

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. மக்கள் தொடர்புப் பணிகளுக்காக அச்சு ஊடகத்தைப் பயன்படுத்துவார்.
2. ஊடக அறிவித்தல் வெளியிடலைச் செய்முறையாக மேற்கொள்வார்.
3. மாதிரி ஊடகக் கலந்துரையாடலை நடத்துவார்.
4. மக்கள் தொடர்பு மேம்படும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சூழலை உருவாக்குவார்.
5. மக்கள் தொடர்புப் பணிகளில் தனியாள் பிம்பத்தைக் கட்டியெழுப்பும் விதத்தை எடுத்துக் காட்டுவார்.

**அறிமுகம்**

மக்கள் தொடர்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த அதில் போதியளவு தேர்ச்சிகளை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அச்சு ஊடகத் தேர்ச்சி என்பது ஒரு கையெழுத்துப் பிரதியை அச்சு ஊடகம் மூலம் வெளியிடலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடத்தே அதனைக் கிடைக்கச் செய்தலுமாகும். இங்கு அடிப்படையில் எவ்வகை அச்சுத் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது? என்பது பற்றிய தேர்ச்சி இருத்தல் வேண்டும். இன்று ஓப்செட் அச்சுத் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்படுத்தப்படுவதுடன் தேவையானபோது திரை அச்சும், எண்சார்ந்த அச்சும் பயன்படுத்தப்படுகின்றன. இதன்படி ஒவ்வொரு அச்சு முறையினாலும் பின்பற்றப்படும் தொழில்நுட்பக் கருமங்கள் பற்றியும் ஒவ்வொரு தேவைக்கும் பயன்படுத்தும் அச்சுத்தாள் அல்லது அட்டை மற்றும் துணைப் பொருட்கள் பற்றியும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாகவே ஊடக அறிவித்தல் விடுக்கப்படும். அத்தகைய ஊடக அறிவித்தலொன்றின்போது மொழியைச் சீராகக் கையாள வேண்டும். அத்துடன் தேவையற்ற விதத்திலான ஒரு எழுத்துக்கூட அதில் இடம்பெறக்கூடாது. எனவே, மொழியை ஆக்கரீதியாகப் பயன்படுத்துவது தொடர்பான தேர்ச்சியும் இங்கு முக்கியமானது. அன்றியும் ஊடக அறிவித்தலில் உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் பற்றிய சரியான விளக்கம் பெற்றிருத்தலும் அவசியம். தேவையான தகவல்களை முறையாக உட்படுத்துவதும் அவசியம்.

ஊடகக் கலந்துரையாடலை நடத்தும் தேர்ச்சியை விருத்தி செய்து கொள்ள வேண்டியது, அத்தகையதொன்றை நடத்தி நடைமுறை அனுபவம் பெறுவதனூடாகவே. எனவே பாடசாலையின் விசேட வேலைத்திட்டங்களைத் தொடர்புபடுத்தி ஊடகக் கலந்துரையாடல் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஊடகக் கலந்துரையாடல் நடத்துவது பற்றிக் கலந்துரையாடுவதால் மட்டும் அந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சுற்றாடலை உருவாக்கும்போது தெரிவு செய்யப்பட்ட ஓர் இடத்தில் சுற்றாடலைக் கண்கவர் விதமாக அமைக்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலைக் காரியாலயத்தை இதற்குத் தெரிவுசெய்யலாம். வெளியில் இருந்து வருபவர்களுக்கு அல்லது பெற்றோருக்கு மகிழ்ச்சியாக வந்து, மகிழ்ச்சியாகவே வெளியேறக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும். இதன் மூலம் பாடசாலையில் உயர் மக்கள் தொடர்புக் கலாசாரம் ஒன்றை ஏற்படுத்த முடியும்.

தனியாள் பிம்பத்தை மேம்படுத்த வேண்டியேற்படுவது, தான் சந்திக்கும் மக்களிடம் நம்பிக்கையையும் நல்லுணர்வையும் ஏற்படுத்துவதற்காகும். அதன்படி ஒருவரின் உடல்மொழியும், நடத்தைக் கோலமும், கொண்ணிலையும் பிம்பத்தை ஏற்படுத்த உதவும். அதுமட்டுமன்றி ஊடகத்தைப் பயன்படுத்தி ஒருவரின் பிம்பத்தை உருவாக்கவும் முடியும். அதற்கான உத்திகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். குறிப்பாக ஒரு நிறுவனத் தலைவரின் பிம்பத்தை தூக்கிக்காட்டும் உத்திகளை அறிந்திருத்தலும் அவற்றைப் பரீட்சித்துப் பார்த்தலும் பயனுடையதாகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. அச்சு ஊடகத் தேர்ச்சி**

- குவிவு அச்சு, சமதள அச்சு, திரை அச்சு, எண்சார் அச்சு என்பன தொழில்நுட்ப ரீதியாக வேறுபட்டவை.
- குவிவு அச்சுக்காக ஈய எழுத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- குவிவு அச்சுமுறை படிப்படியாக வழக்கொழிந்து போகின்றது.
- சமதள அச்சுக்காகத் தகடுகள் பயன்படுத்தப்படுகின்றன.
- சமதள அச்சின் மூலம் உயர்தரத்திலான அச்சுப் பிரதிகள் பெறலாம்.
- திரை அச்சு தனியான ஓர் அச்சிடல் முறையாகும்.
- திரை அச்சிடல் மூலம் கடதாசி, துணி, அட்டை ஆகியவற்றில் அச்சிட முடியும்.
- எண்சார் அச்சு தற்காலத்தில் மிகவும் பிரபல்யமாயுள்ளது.
- எண்சார் அச்சு துரிதமாகச் செய்யக்கூடியது.
- எண்சார் அச்சுப் பிரதிகள் மிகக் குறைந்த எண்ணிக்கைப் பிரதிகளைக் கூடப் பெறலாம்.
- எண்சார் அச்சிடல் முறையில் மிக அவசரமாக அறிக்கை போன்றவற்றைத் தயாரிக்கலாம்.
- ஒவ்வொரு அச்சு முறையையும் ஒவ்வொரு தேவைக்காக பல்வேறு விதங்களில் பயன்படுத்த முடியும்.
- ஒவ்வொரு அச்சு முறையினதும் தரம், கிரயம், முடிக்கும் வேகம் என்பன வேறுபட்டவை.

**2. ஊடக அறிவித்தல்**

- ஊடக அறிவித்தல் ஒன்றைத் தயார் செய்ய அடிப்படைத் தகவல்களைக் கண்டறிய வேண்டும்.
- ஊடக அறிவித்தலின் நோக்கத்தை முடிவு செய்ய வேண்டும்.
- தேவையான தகவல்களைக் கவனமாகத் தெரிவு செய்ய வேண்டும்.

- தெரிவு செய்யப்பட்ட தகவல்களை ஆக்கரீதியாகவும் பொருத்தமாகவும் தொகுக்க வேண்டும்.
- அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தும் வகையில் அறிவித்தல் தயார் செய்யப்படல் வேண்டும்.
- அறிவித்தலில் உத்தியோகபூர்வ ஒப்பம் இடப்பட வேண்டும்.
- ஊடக அறிவித்தலை வெளியிடும் போது மின்நகல், மின்னஞ்சல் மிகவும் பொருத்தமானது.

### 3. ஊடகக் கலந்துரையாடல்

- ஊடகக் கலந்துரையாடலின் நோக்கத்தை வகுக்க வேண்டும்.
- ஊடகக் கலந்துரையாடலில் முன்வைக்கும் தகவல்களை உரிய முறையில் தொகுத்துக் கொள்ள வேண்டும்.
- தேவைக்கேற்ப அச்சு அல்லது கட்புல - செவிப்புல மாதிரியில் தகவல்களை மீள் ஆக்கம் செய்ய வேண்டும்.
- ஊடகக் கலந்துரையாடலுக்குப் பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொண்டு அதனை விருப்புக்குரிய விதத்தில் ஆயத்தம் செய்ய வேண்டும்.
- ஊடகக் கலந்துரையாடலுக்காக அனுப்பப்படும் அழைப்பிதழ் உரியவருக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதும் அவர்களின் துலங்கலைப் பெறலும்.
- ஊடகக் கலந்துரையாடலில் பங்குபற்றுபவர்களை நன்கு உபசரிக்க வேண்டும்.
- ஊடகக் கலந்துரையாடலுக்கு வருபவர்களை வரவேற்கும் கருமபீடமொன்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- நேரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, திட்டமிட்ட நேரத்துக்கே கலந்துரையாடலை நிறைவு செய்ய வேண்டும்.
- கலந்துரையாடலில் பங்கு பெறுபவர்களுக்கு வினாக்கள் எழுப்ப வாய்ப்பளிக்க வேண்டும்.

### 4. சுற்றாடல் ஆக்கம்

- வரும் மக்களின் மனதைக் கவரும் வகையில் சுற்றாடலை ஆக்க வேண்டும்.
- அதற்கேற்பத் தெரிவு செய்யும் இடத்தை நன்கு ஆராய வேண்டும்.
- சூழலை ஆக்கும் திட்டம் ஒன்றைத் திட்டமிட வேண்டும்.
- சூழல் தயாரிப்பில் நீண்டகால, குறுங்கால நிலைப்பாடுகளுண்டு.
- சூழலைத் தொடர்ந்து கவர்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.
- சுற்றாடலை நிர்மாணிக்கும், பராமரிக்கும் பணிகளை ஒவ்வொருவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

### 5. தனியாள் பிம்பம்

- ஒருவரின் பிம்பத்தைக் கட்டியெழுப்புதலும் மக்கள் தொடர்புப் பணியாகும்.
- தனியாளின் இயல்பு, நிலவுகை, நடத்தை, தோற்றம் என்பவற்றைப் பொருத்தமாக தயார்ப்படுத்த வேண்டும்.
- சில பணிகளின்போது தனியாள் பிம்பம் மிக முக்கியம்.
- தனியாள் பிம்பத்தைக் கட்டியெழுப்புதல் ஒரு நீண்டகாலப் பணியாகும்.
- ஓர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் பிம்பம் அவ்வமைப்புக்குப் புகழாக அமையும்.
- தம் பிம்பத்தைக் கட்டியெழுப்புவது குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்.
- தமது பிம்பம் கட்டியெழுப்பப்படுவது எத்தகைய பண்புகளால், இயல்புகளால் என்பதை இனங்காண வேண்டும்.
- பொருத்தமான இயல்புகளை, பண்புகளை விருத்தி செய்ய வேண்டும்.

## அலகு 5.0 - பொது மக்கள் தொடர்பு

**தேர்ச்சி 5.0** : பொதுசனத் தொடர்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்து-வதற்காகப் பல்வேறு முறைகளையும் கருவிகளையும் பயன்படுத்துவதைச் செய்து பார்ப்பார்.

**தேர்ச்சி மட்டம் 5.4** : மக்கள் தொடர்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான திட்டங்களைத் தீட்டுவதன் படிமுறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : மக்கள் தொடர்புத் திட்டம்
நிலைமைப் பகுப்பாய்வும் பயனாளிகளை இனங்காணலும்
மக்கள் தொடர்பு இலக்குகளையும் நோக்கங்களையும் உருவாக்குதல்.
முறைகளையும் உத்திகளையும் தீர்மானித்தல்.
திட்டமிடல்
முன்மதிப்பீடு

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. முன்னோடி வேலைத்திட்டத்துக்கான நிலைமையைப் பகுப்பாய்வு செய்து பயனாளிகளை இனங்காண்பார்.
2. மக்கள் தொடர்பு முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்துக்கான இலக்குகள், நோக்கங்களை வகுப்பார்.
3. குறிப்பிட்ட முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொருத்தமான முறைகள், உத்திகளை ஒப்பீட்டு ரீதியில் தெரிவு செய்வார்.
4. முன்னோடி நிகழ்ச்சிக்கான மொத்தத் திட்டமிடலை மேற்கொள்வார்.
5. திட்டம் நடைமுறைப்படுத்தும் நிலையில் உள்ளதா என மதிப்பிடுவார்.
6. முன்னோடி நிகழ்ச்சியைப் பரீட்சித்துப் பார்ப்பார்.

### அறிமுகம்

இந்திய மக்கள் தொடர்பு நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளதற்கிணங்க மக்கள் தொடர்பு என்பது ஓர் அமைப்புக்கும் அதனுடன் தொடர்பான மக்களுக்குமிடையிலான பரஸ்பரப் புரிந்துணர்வினையும் நன்மதிப்பையும் கட்டியெழுப்புவதற்கும் பேணுவதற்குமாக எடுக்கப்படுகின்ற திட்டமிடப்பட்டதும் நீடித்திருப்பதுமான அனைத்து முயற்சிகளுமாகும். இந்த எளிமையான வரைவிலக்கணத்தின்படி தெளிவாகும் ஒரு முக்கிய விடயம் எந்த ஓர் ஒழுங்கமைப்புக்கும் குறிப்பிட்ட மக்களுடன் நல்ல தொடர்பைப் பேணுதல் அவ்வமைப்பின் நிலவுகைக்கு அவசியம் என்பதாகும். அவ்வமைப்புடன் மக்கள் வாடிக்கையில் ஈடுபடும் போது இத்தொடர்பு இரு விதத்தில் செயற்படும். ஒன்று சீரான மக்கள் தொடர்பு மூலம் அனைத்து வகை வாடிக்கையாளர்களதும் மதிப்பைப் பெறுவதாகும். இங்கு அனைத்து வகை வாடிக்கையாளர் என்பது அவ்வமைப்புடன் தொடர்பு கொள்ளும் வெளி மனிதர்கள், உள்ளக மனிதர்களான ஆளணி என்போராகும். எந்த ஓர் அமைப்பையும் வெற்றிகரமாக நடத்திச் செல்ல இந்த மதிப்பு அல்லது நன்மதிப்பு அவசியமாகும்.

குறிப்பாக வணிக முயற்சிகளை நோக்கின் நன்மதிப்பையும் புகழையும் கட்டியெழுப்புதவதற் காக விளம்பரம் பயன்படுத்தப்படும். அதற்கான செலவும் மேற்கொள்ளப்படும். மக்கள் தொடர்பு நடவடிக்கைகளின் போதும் செலவு ஏற்படும். ஆயினும் விளம்பரத்தின் மூலம் கிடைக்கும் புகழ், நன்மதிப்பு என்பவற்றைவிட நிரந்தரமானதும் உறுதியானதுமான ஒரு நன்மதிப்பு மக்கள் தொடர்பினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதனால் நீண்ட கால நோக்கம் கொண்ட அனைத்து அமைப்புகளும் தம் வருடாந்தத் திட்டமிடலில் மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகளை உள்ளடக்குவதுடன் அதற்கான செலவுகளை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கின்றன.

வருடாந்தத் திட்டமிடலை நடைமுறைப்படுத்துவது ஒரு பொறுப்புவாய்ந்த விடயமாகும். அதனை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைச் செலவு செய்தல் என்ற குறுகிய கருத்தில் பார்க்கக்கூடாது. மக்கள் தொடர்பு வேலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பொருத்தமான திட்டங்களைத் தீட்டுவதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் அதன் பிரதிபலன்களை மதிப்பீடு செய்வதும் இதிலடங்கும்.

முதலாவது பணி இருக்கும் நிலைமை எப்படிப்பட்டது என்பதைக் கண்டறிதலாகும். இதன் கருத்து தமது அமைப்பின் தற்போதைய நிலை அன்று. அனைத்துச் சூழ்நிலைகளையும் நன்கு ஆராய வேண்டும். சூழ்நிலை என்பதில் அரசியல், சமூக, பொருளாதார சூழலும் அடங்கும். வேறு அமைப்புகள் நடைமுறைப்படுத்தியுள்ள மக்கள் தொடர்பு நடவடிக்கை களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கும்.

இரண்டாவதாக மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள், இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டும். மூன்றாவதாக அந்த நோக்கங்கள், இலக்குகளை வெற்றி கொள்வதற்கான உத்திகளைப் பயன்படுத்தும் முறைகள், வடிவங்கள் எவை? என்பது பற்றி முடிவு செய்ய வேண்டும். மொத்த மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைப் பொறுத்தும் இதனை நிச்சயப்படுத்த வேண்டும். இறுதித்திட்டம் அதனடிப்படையிலேயே வகுக்கப்பட வேண்டும். அதற்காக காலச் சட்டகம், முறைமை, பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படல், நியதிகள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். வகுக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர், அதனை முன்மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும். திட்டம் எந்த அளவுக்குப் பொருத்தமானது, யதார்த்தமானது என்பதைத் தீர்மானிப்பதே இதன் நோக்கமாகும். நடைமுறைப்படுத்தியதன் பின்னர் மேற்கொள்ளப்படுவது பின் மதிப்பீடாகும். அதுவும் மிக அவசியமானதே. அவ்வாறில்லாதபோது நடைமுறைப் படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் உரிய இலக்கை அடைந்து கொண்டதா? எந்த விடயங்களில் தவறியது; அதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிய முடியாதிருக்கும். பின் மதிப்பீட்டில் கண்டறிதல்களை அடுத்த திட்டமிடலின்போது கவனத்திற்கொள்ள முடியும்.

மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தீட்டுதல், நான்கு நோக்கங்களை நிறை வேற்றுதலை அடிப்படையாகக் கொண்டது.

1. மக்கள் தொடர்பு நோக்கங்களை நிச்சயித்தல்.
2. நிதி, மானிட வளங்களின் தேவையையும் இயல்பையும் கணிப்பிடல்.
3. முன்னுரிமையைத் தீர்மானித்தல்.
4. பொருத்தப்பாட்டைக் கணிப்பீடு செய்தல்.

## பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. நிலைமைப் பகுப்பாய்வும் பயனாளிகளை இனங்காணலும்

- மக்கள் தொடர்பு நிகழ்ச்சித்திட்டம் தனிப்பட்ட ஒரு பணியன்று.
- சகல சூழ்நிலைகளையும் ஆராய்ந்த பின்னரே நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட வேண்டும்.
- சூழ்நிலை என்பதில் உள்ளக, வெளியக நிலைமைகள் அடங்கும்.
- சூழ்நிலை என்பதில் அரசியல், சமூக, பொருளாதார காரணிகள் அடங்கும்.
- குறிப்பாக போட்டி அமைப்புகளின் நிலைமையை ஆராய வேண்டும்.
- மக்கள் தொடர்பு வேலைத்திட்டம் எப்போதும் ஒரு மக்கள் குழுவை இலக்காகக் கொண்டு திட்டமிடப்பட வேண்டும்.
- எனவே, இலக்கு மக்கள் குழுவை இனங்கண்டு, அவர்களது சொந்தப் பண்புகள், இயல்புகளை ஆராய வேண்டும்.
- பயனாளிகள் குழுவை சரியாக ஆராய்வதன் மூலம் பெறப்படும் விடயங்களின்படி நிகழ்ச்சியைத் திட்டமிட வேண்டும்.
- இவ்வாறு நிலைமைப் பகுப்பாய்வு செய்தல் பயனாளியை இனங்காணல் என்பன எளிமையான ஓர் விடயமன்று. விசேட பணியாகும்.
- பாரிய நிறுவனங்களில் இத்தகைய நிலைமைப் பகுப்பாய்வும் பயனாளிகளை இனங்காணலும் தொடர்ந்து ஆய்வுகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
- பல அமைப்புகள் இதற்காக வெளி நிறுவனங்களின் நிபுணர்கள் சேவையைப் பெறுகின்றன.
- மக்கள் தொடர்புச் சேவைகளை வழங்கும் சிறப்பு நிறுவனங்களும் இத்தகைய ஆய்வுகளைச் செய்கின்றன.
- ஆய்வு, அவதானிப்பு, வினாக்கொத்து, கலந்துரையாடல், நிபுணர் அறிக்கை போன்றவை மூலம் இத்தகைய நிலைமைப் பகுப்பாய்வு செய்தல், பயனாளிகளை இனங்காணல் தொடர்பான தகவல்கள், தரவுகள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

### 2. மக்கள் தொடர்பு இலக்குகளையும் நோக்கங்களையும் வகுத்தல்

- நீண்ட காலத்தில் அடைய எதிர்பார்க்கும் நன்மதிப்பைக் கட்டியெழுப்புதல், எதிர்கால வாடிக்கையாளர்களை வென்றெடுத்தல் என்பன நீண்டகால நோக்கங்களில் அடங்கும்.
- குறுங்காலத்தில் அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படும் மக்கள் விருப்பை மேன்படுத்தல், விற்பனை அதிகரிப்பு என்பன குறுங்கால நோக்கங்களில் அடங்கும்.
- நேரடி நோக்கங்களாக ஒரு குறிப்பிட்ட இலக்கு மக்கள் குழுவைக் குறிப்பிட்ட காலத்தில் தமது அமைப்பை நோக்கிக் கொண்டு வருதல் அல்லது தம் அமைப்புக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களிடையே விருப்பை அதிகரித்தல் போன்றவற்றைக் கூறலாம்.
- மறைமுக நோக்கங்களாக வாடிக்கையாளர்களைத் தம் சேவைகள் மீது கவர்ந்திழுத்தல் போன்றவற்றைக் கூறலாம்.
- மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகளைத் திட்டமிடும்போது இவ்வாறு உரிய நோக்கங்கள், இலக்குகளை அமைத்து அவற்றை எடுத்துக்காட்ட வேண்டும்.

### 3. முறைமைகள், உத்திகள்

- மக்கள் தொடர்பு வேலைத்திட்டங்களின்போது கையாளக்கூடிய முறைகள், உத்திகள் வடிவங்களுமுண்டு.
- மிகவும் விளைதிறன் வாய்ந்த முறைகளை, வடிவங்களைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.

- தெரிவு செய்யும் முறை, உபாயம் நோக்கத்துக்குப் பொருத்தமாக இருத்தல் வேண்டும்.
- முறைகளும் உத்திகளும் நிதி ஒதுக்குடன் ஒத்துப்போக வேண்டும்.
- வடிவம் என்பதில் மக்கள் தொடர்புக்காகப் பயன்படுத்தும் அச்சு ஊடக வடிவம், கட்புல - செவிப்புல ஊடக வடிவம், ஊடகக் கலந்துரையாடல், கண்காட்சி என்ற பல விடயங்கள் அடங்கும்.
- உத்திகள் என்பதால் கருதப்படுவது மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களின் போது பயன்படுத்தும் பிரவேசமாகும்.
- உத்தி அல்லது உபாயம் என்பதில் ஒரு கண்காட்சியை ஆரம்பித்து வைக்க ஒரு அரசியல்வாதியைக் கொண்டுவருதல், பயனாளிகளைக் கவருவதற்காக பரிசுகள் வழங்குதல் அல்லது சிறந்த துலங்கலுக்கான ஒரு மதிப்பீட்டு முறையைக் கையாளல் போன்றவற்றையும் கூறலாம்.

## 4. திட்டமிடல்

- மக்கள் தொடர்புத் திட்டம் என்பது தெரிவு செய்யப்படும் முறைசார் உத்திகள், வடிவங்களின் தொகுதியாகும்.
- ஒவ்வொரு முறையும், உத்தியும் வடிவமும் ஒன்றோடொன்று தொடர்ந்து செயற்படுத்தப்படும்.
- ஒவ்வொரு முறையும் உத்தியும் உரிய காலத்தில் ஓர் ஒழுங்கு முறையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.
- மொத்தத்திட்டத்தை சிறிய அலகுகளாகப் பிரித்து ஒவ்வொரு அலகையும் ஒவ்வொருவரின் பொறுப்பில் விட வேண்டும்.
- சிறிய அலகுகள் சரியாக இயங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் நியதிகள் இருக்க வேண்டும்.
- திட்டமிடல் கூட்டாக நடைபெற வேண்டும்.
- திட்டமிடலில் வெள்ளோட்டமிடும் ஒரு திட்டமும் இருக்க வேண்டும்.
- திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு கூட்டாக இருக்க வேண்டும்.
- திட்டத்துக்கான வரவு செலவுத்திட்டம் அமைக்கப்பட்டிருத்தல்.
- திட்டத்தை மாற்றியமைக்கும் அவகாசம் இருத்தல் வேண்டும்.
- சிறந்த தகவல் தொகுதியொன்று திட்டமிடலுடன் இணைந்திருத்தல் வேண்டும்.
- திட்டமிடலுக்கு விஸ்தீரணமான மாதிரியொன்று பயன்படுத்தப்பட வேண்டும்.
- திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரும் திட்டத்தை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

## 5. முன் மதிப்பீடு

- மிக நன்றாகத் தயாரிக்கப்பட்ட திட்டமெனினும் அதனை நடைமுறைப்படுத்த முன்னர், முன் மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும்.
- திட்டம் நடைமுறைச்சாத்தியமானது, வரவு செலவுத் திட்டத்துக்குத் தாக்குப் பிடிப்பது, நோக்கத்துக்குப் பொருத்தமானது என்பதை இறுதியாகக் கணிப்பீடு செய்தலே முன் மதிப்பீடு ஆகும்.
- முன்மதிப்பீட்டை ஒரு வெளிக்குழு செய்ய வேண்டும். திட்டமிடற் குழுவும் சம்பந்தப்பட வேண்டும்.
- திட்டத்தில் மேற்கொள்ளும் மாற்றங்களை மதிப்பீட்டுக்குழு சிபார்சு செய்தல்.
- முன்மதிப்பீடு மூலம் திட்டத்தின் நடைமுறைக் கட்டங்கள், வடிவங்கள் சரியாகக் கணிப்பீடு செய்யப்படுதல்.

## அலகு 6.0 - ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி 6.0** : ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, பரவல், செல்வாக்கு, சந்தையுடனான தொடர்பு என்பவற்றை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, அவசியம், விருத்தி என்பவற்றை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 15

**பாட உள்ளடக்கம்** : ஊடகக் கலாசாரத்தை இனங்காணல்
கலாசாரம் தொடர்பான வரைவிலக்கணங்கள், எண்ணக்கருக்கள்
ஊடகத்துக்கும் கலாசாரத்துக்குமிடையிலான தொடர்பு
ஊடகக் கலாசாரத்தின் சமூக நிலை
ஊடகக் கலாசாரம் மக்கள் கலாசாரத்தின் ஒரு விரிவாக.

**எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:**

1. கலாசாரம் தொடர்பான வரைவிலக்கணங்களை, எண்ணக்கருக்களை விளக்குவார்.
2. ஊடகத்துக்கும் கலாசாரத்துக்கிடையேயுள்ள தொடர்பை விளக்குவார்.
3. ஊடகக் கலாசாரத்தின் சமூகத் தேவையை உறுதிப்படுத்துவார்.
4. ஊடகக் கலாசாரம் மக்கள் கலாசாரத்தின் ஒரு விரிவாக்கமாக அமைந்த விதத்தை விபரிப்பார்.

**அறிமுகம்**

கலாசாரம் என்பது இயங்கும் செயலொழுங்கின் பெறுபேறாகும். இதன் கருத்து கலாசாரம் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கிறது என்பதாகும். கலாசாரம் என்ற பதம் Culture என்ற ஆங்கிலப் பதத்திலிருந்து ஆரம்பித்ததாகும். சமூகவியல், மானிடவியல் அறிஞரான எட்வர்ட் டய்லர் சுட்டிக் காட்டியுள்ளபடி கலாசாரம் என்பது அறிவு, வழிபாடு, நம்பிக்கை, கலை, பண்பாடு, சட்டம், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் மனிதன் தனதாக்கிக் கொண்ட பழக்க வழக்கங்கள், ஆற்றல்கள் அடங்கிய கருத்துத் தொகுதியாகும்.

1936 ஆம் ஆண்டில் ரல்ப் லிண்டன் கூறியதன்படி கலாசாரம் என்பது அங்கத்தவர்களின் வாழ்க்கை முறைக்கு அதாவது அவர்களால் கற்கப்பட்டு சேகரிக்கப்பட்டதும், பங்கிட்டுக் கொண்டு பரம்பரை பரம்பரையாகக் கொண்டு செல்லும் கருத்துக்கள், பழக்கங்களாகும்.

1944 ஆம் ஆண்டில் மானிடவியலாளர் பீ. மலினோவுஸ்க்கி காட்டியதன்படி கலாசாரம் என்பது உபகரணங்கள், நுகர்வுப் பொருட்கள், பல்வேறு சமூகக் குழுக்களின் கட்டமைப்பு இயல்புகள், மானிட எண்ணங்கள், நுட்பங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் இணைந்த தொகுப்பாகும்.

சமூகவியல் ரீதியாக சமூகம் என்பது வரைவிலக்கணப்படுத்தப்படுவது தனியாள் ஆளிடைச் செயற்பாடுகளினால் இணைந்த சமூகக்கூட்டு என்றாகும். கலாசாரம் என்பது அச்சமூகத்தின் வாழ்க்கை முறையின் சாரமாகும். இதிலிருந்து கருதப்படுவது சமூகமும் கலாசாரமும் ஒன்றையொன்று ஒட்டியிருப்பதையாகும். ஒரு சமூகம் நிலைத்திருக்குமானால் அதற்குரிய

கலாசாரம் இருக்க வேண்டும் என்பதுடன் கலாசாரம் நிலைக்க வேண்டுமானால் அதற்குரிய சமூகம் நிலவ வேண்டும் என்பதாகும். அனைத்து தனிநபர்களும் பிறந்தவுடனேயே ஒரு கலாசார ஆளாக மாறுகிறார் என்ற ஒரு கூற்றும் உண்டு. ஆனால், உண்மையில் அந்த ஆள் தாயின் கருவில் இருக்கும் போதே ஒரு கலாசார மனிதனாக மாறுவதை கர்ப்பிணிப் பெண்களுக்கான பல்வேறு சடங்கு, சம்பிரதாயங்களைக் காணும்போது தெளிவாகின்றது.

ஊடகக் கலாசாரம் என்றால் என்ன என்பதை ஆராயும்போது தெரிய வருவது, ஒரு கலாசாரத்தின் வடிவத்தைத் தீர்மானிப்பதில் வெகுஜன ஊடகம் எத்தகைய செல்வாக்கைச் செலுத்துகிறது என்பதை ஆராய வேண்டும் என்பதாகும். வெகுஜன ஊடகங்களின்றி வாழ்ந்த சமூகங்களில் கலாசாரம் குறித்த பெரும் செல்வாக்கைச் செலுத்துவது சமயம், கல்வி, சம்பிரதாயங்கள், மரபுகள், முதியோர் உட்பட்ட சமூகத் தொடர்பாகும். ஆயினும், வெகுஜன ஊடகங்களின் பரவலுடன் இவற்றையெல்லாம் மிஞ்சி கலாசாரத்தின் மீது கடுமையான செல்வாக்கைச் செலுத்தும் பிரதான காரணியாக அது மாறியுள்ளது. ஊடகக் கலாசாரம் என்பதால் கருதப்படுவது அத்தகைய ஊடகச் செல்வாக்கு கடுமையாக உள்ள ஒரு சமூகத்தின் கலாசாரமாகும். அத்தகைய ஒரு சமூகத்தின் அனைத்து நடத்தைக் கோலங்களும் அல்லது பெரும்பாலான நடத்தைக் கோலங்கள் ஊடகங்களால் வழங்கப்படும் செய்திகளினால் கையாளப்படுகிறன. இது தெரிந்தும் தெரியாமலும் நடைபெறும். நவீன யுகத்தில் பூகோள மயமாக்கலின் கீழ், இவ்வாறு ஊடகத்தின் மூலம் பூகோள மட்டத் தெரிவுகள் குறித்து அனைத்து நாட்டு மக்களும் தூண்டப்பட்டுள்ளார்கள். அதன் பெறுபேறாக ஒவ்வொரு நாட்டின் சமூகத்தின் தனித்துவமான கலாசார இயல்புகளை மிஞ்சி, பூகோளக் கலாச்சார இயல்புகள் பரவும் இயல்பு இருப்பது தெரிகிறது. இன்று ஊடகக் கலாசாரம் ஒவ்வொரு சமூகத்தினரதும் சம்பிரதாயபூர்வமான கலாசாரங்களுக்குப் பாரிய சவாலாக மாறியுள்ளது. கலாசாரம் மாற்றமடைகிறது என்பது உண்மையே. அது மாற்றத்துக்குட்பட்ட படிமுறையிலாகும். ஊடகக் கலாசாரத்தில் இப்படிமுறை மீறப்படும். அதற்குப் பதிலாக ஊடகம் உருவாக்கும் பல்வேறு அம்சங்கள் உடனடியாகவே கலாசாரத்தினால் உள்வாங்கப்படும். நிலவும் சம்பிரதாய கலாசாரத்துக்கு அது ஏற்றதா? மாற்றமானதா? என்ற விசாரணைகள் கிடையாது. ஒரு வகையில் அது ஊடகத்தில் காணப்படும் அதிகார பலமாகவும் காணப்படுகிறது.

## பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. கலாசாரம் தொடர்பான வரைவிலக்கணமும் அடிப்படைகளும்

- மானிடவியலாளர்கள் கலாசாரம் பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள், எண்ணக் கருக்களை உருவாக்கியுள்ளமை.
- டய்லர், லிண்டன், மலினோவுஸ்கி ஆகியோரின் வரைவிலக்கணங்களைக் கற்றல் போதுமானது.
- எந்த ஒரு கலாசாரமும் பல அடிப்படைகளைக் கொண்டது.
- துணைக்கலாசாரம், எதிர்க்கலாசாரம், கலாசார உறுதுணை, கலாசாரத் திணிப்பு, கலாசாரத் தேக்கம், கலாசார விரிவு, கலாச்சார விருத்தி என்பன கலாசார அடிப்படைகளாகும்.
- துணைக் கலாசாரம் என்பது பல்வேறு காரணிகள் மீது வேறுபட்டமையும் துணைச் சமூகத்தின் கலாசாரமாகும்.
- எதிர்க்கலாசாரம் என்பது நிலவும் கலாசாரத்துக்கு எதிராகக் கொண்டு நடத்தப்படும் வேறு இயல்புகள் கொண்ட கலாசாரக் குழுக்களைக் குறிப்பதுடன் அது ஒரு இயல்பான சமூக நிகழ்வுமாகும்.
- கலாசார உறுதுணை என்பது ஒரு கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேறு கலாசாரத்தின் நவீன மயப்படுத்தல்கள், அல்லது கண்டுபிடிப்புக்கள் சேர்த்துக் கொள்ளப் படுவதாகும்.

- கலாசாரத் திணிப்பு என்பது செல்வாக்குள்ள ஒரு சமூகம் தம் கலாசாரத்தை பலவீனமான ஒரு சமூகத்தின் மீது திணித்தலைக் குறிக்கும்.
- கலாசாரத் தேக்கம் என்பது கலாசார அம்சங்கள் முன்னேற்றமடையாது ஒரே மாதிரியாக இருத்தலைக் குறிக்கும்.
- கலாசாரப் பிரிவு என்பது மனித சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பலவற்றை உருவாக்கிப் பன்முகப்படுத்தலைக் குறிக்கும்.
- கலாசார விருத்தி என்பது பல புதிய கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் சேர்ந்து ஒரு கலாசாரம் மாற்றமடைதல் அல்லது முன்னேற்றமடைதலைக் குறிக்கும்.

## 2. ஊடகத்துக்கும் கலாசாரத்துக்குமிடையிலான தொடர்பு

- கலாசாரச் செயலொழுங்கின் ஒரு பலமான காரணியாக ஊடகம் காணப்படுதல்.
- ஊடகத்துக்கும் கலாசாரத்துக்குமிடையிலான தொடர்பின் இயல்பு ஒவ்வொரு சமூகத்தின் கலாசாரச் செல்வாக்கு அல்லது பலவீனத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும்.
- சில கலாசாரங்கள் மிகப் பலமாக ஊடகச் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும்.
- ஜனநாயகத்தின் ஓர் இயல்பான ஊடகம் பலமாக இருக்கும்போது அது கலாசாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் போக்கு அதிகமாக இருக்கும்.
- திறந்த நெகிழ்ந்து கொடுக்கும் கலாசாரமொன்றில் ஊடக நடத்தை சுதந்திரமானதாக இருக்கும்.
- கலாசாரத்தின் மீது ஊடகத்தின் செல்வாக்கு அதிகரிப்பதன் பெறுபேறாக ஊடகக் கலாசாரம் உருவாகும்.

## 3. ஊடகக் கலாசாரத்தின் சமூகத் தேவை

- ஊடகக் கலாசாரம் உருவாவது சமூகம் ஊடாக வெளியீடுகளுடன் இசைவாக்கம் அடைவதால் ஆகும்.
- சமூகத்தின் கலாசார நடத்தையைப் பாதிக்கும்; சமயம், பண்பாடு, சம்பிரதாயம், கல்வி என்பவற்றின் செல்வாக்கைவிட ஊடகத்தின் செல்வாக்கை சமூகம் பெற்றுக் கொண்டுள்ளமை.
- நவீனமடைவதில் சமூகத்துக்குள்ள விருப்பம் ஊடகக் கலாசாரத்தினால் நிரூபணமாகிறது.
- சிக்கலான சமூகச் சூழலில் சமூகத்துக்குப் பொதுவான தகவல் பரிமாறலில் ஊடகம் சிறப்பாகக் காணப்படல்.
- நவீன ஊடகம் என்பது ஒரு கருவி என்பதைவிட ஒரு வாழ்க்கை முறை என்பதே உண்மை.
- ஊடகக் கலாசாரம் காரணமாக சமூகத்துக்குப் பூகோளமட்ட நிலவுகை காணப்படல்.
- ஊடகக் கலாசாரத்தில் காணப்படும் கவர்ச்சியை சமூகம் விரும்புதல்.
- சம்பிரதாய கலாசாரத்தின் மட்டுப்பாடுகளை ஊடகக் கலாசாரம் மீறிச் செல்கிறது.
- சமூகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஊடகக்கலாசாரம் உதவுதல்.
- புதிய சமூகத் தேவைகளை ஊடகக் கலாசாரம் உருவாக்குதல்.

## 4. ஊடகக் கலாசாரம், மக்கள் கலாசாரத்தின் விரிவாக்கமே

- கலாசாரத்தை உருவாக்குதலும் பேணுவதும் மக்களே.
- ஊடகக் கலாசாரம் உருவாவது ஊடகங்களினால் வெளியிடப்படும் விடயங்களை மக்கள் வாழ்க்கை நடத்தையாக எடுத்துக் கொள்வதனாலாகும்.
- மக்கள் கலாசாரத்தின் சம்பிரதாய காரணிகளை மீறி, ஊடகக் காரணி மக்களின் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளமை.
- ஈற்றில் ஊடகக் கலாசாரத்தின் அனேக அம்சங்கள், மக்கள் கலாசாரத்துடன் இணைந்து கொள்ளல்.

## அலகு 6.0 - ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி 6.0** : ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, விருத்தி, செல்வாக்கு, சந்தைத் தொடர்பு என்பவற்றை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : ஊடகக் கலாசார விரிவாக்கத்தையும் ஒத்துழைப்பையும் விளக்குவார்.

**பாட வேளைகள்** : 12

**பாட உள்ளடக்கம்** : ஊடகக் கலாசாரத்தின் பரவலும் சுற்றோட்டமும்
ஊடகக் கலாசாரமும் தொழில்நுட்பமும்
ஊடகக் கலாசாரமும் சமூக மாற்றமும்
ஊடகக் கலாசாரச் சுற்றோட்டத்தின் சமமின்மை

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. ஊடகக் கலாசாரத்தின் பரவலினதும் சுற்றோட்டத்தினதும் இயல்பை இலங்கைச் சூழலில் விளக்குவார்.
2. ஊடகக் கலாசாரத்துக்கும் தொழில்நுட்பத்துக்கும் இடையிலான தொடர்பையும் விவாதத்துக்குட்படுத்துவார்.
3. ஊடகக் கலாசாரத்துக்கும் சமூக மாற்றத்துக்குமிடையே நிலவும் பரஸ்பரத் தொடர்பைக் கண்டறிவார்.
4. ஊடகக் கலாசார சுற்றோட்டத்தின் சமமின்மை பூகோள மட்டத்தில் நிலவும் இயல்பை விபரிப்பார்.

### அறிமுகம்

இலத்திரனியல் ஊடகங்கள், நவீன ஊடகங்களின் எழுச்சி மக்கள் கலாசாரத்தில் பாரிய செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். அச்சு ஊடகத்தின் செல்வாக்கு சமூகமயமாக்கப்பட்டாலும் அது மக்கள் கலாசாரத்தின் அடிப்படை கட்டமைப்பை மாற்ற ஏதுவாகவில்லை. அச்சு ஊடகம் மக்கள் கலாசாரத்தைப் போசித்தது. ஆயினும் இலத்திரனியல் மற்றும் நவீன ஊடகங்கள் தம் ஆக்கங்களை மக்கள் கலாசாரத்தின் அடிப்படைகளில் நின்று உருவாக்கவில்லை; மாறாக அவற்றுக்குச் சவால்விடும் வகையிலேயே வெளியிட்டன. இங்கு கவனம் செலுத்த வேண்டிய விடயம் இலத்திரனியல் மற்றும் நவீன ஊடகங்கள் மேலைத் தேசக் கலாசாரத்தைத் திணிப்பதில் ஈடுபட்டது என்பதாகும்.

ஊடகங்களுக்கிடையே போட்டியும் வர்த்தக நோக்கமும் மேலெழுந்தமையினால் இலத்திரனியல் மற்றும் நவீன ஊடகங்கள் உலகம் பூராவிலும் வணிக ஊடக உள்ளகச் சந்தையையே பரப்பின. அதில் பல்வேறு ஆக்க ரீதியான விடயங்கள் உள்ளடக்கப்பட்டாலும் மேலைத்தேசக் கலாசாரத்தினால் மதிப்பிடப்பட்டவைகளும் மேலைத்தேயக் கலாசாரங்களினால் நிச்சயிக்கப்பட்டவைகளுமே அதில் பெரும்பாலும் இருந்தன.

குறிப்பாக அண்மிய இரு தசாப்தங்களில் உலகம் பூராவிலும் ஊடகத் தொழில்நுட்பம் நம்பமுடியாத அளவுக்கு வேகமாகப் பரவியுள்ளது. தொழில்நுட்ப உபகரணங்களுடன் தகவல் பரிமாறும் முறைகளும் மாற்றமடைந்துள்ளன. செய்மதித் தொழில்நுட்பத்தை முழு உலகும் பயன்படுத்தத் தொடங்கியமையே இதன் அடிப்படையாகும். எனவே, முன்னெப்போதுமில்லாத வகையில் மேலைத்தேசக் கலாசாரம் உலகம் பூராவும் வேரூன்றியுள்ளதைக் காணலாம். முக்கியமாக உள்நாட்டுக் கலாசாரத்தைக் குறைவாகக் கருதுதல். மேலைத்தேயக் கலாசாரம் முன்னேற்றமானது, உயர்வானது எனக் கருதுதலும் அவ்வாறு கருதப் பழக்கப்பட்டதும் காரணமாக ஊடகக் கலாசாரம் விரிவடையவும் பரந்த அவகாசம் கிடைத்தது.

ஊடகக் கலாசாரம் என்பது வெறுமனே ஊடகப் பயன்பாடல்ல. அது மொத்த சமூகத்தினதும் வாழ்க்கை முறையை மாற்றுவதாக அமைந்தது. அது எந்த அளவு வேகமாக நடைபெற்றதெனில் அதுபற்றி இரண்டாவது முறையாகச் சிந்திக்கவும் முடியாத நிலைக்குச் சமூகம் தள்ளப்பட்டது. அத்துடன் ஊடகத்தின் இந்த வேகமான விருத்தி தொடர்பான முன் அனுபவம் சமூகத்தில் இல்லாதிருந்தமையால் இத்தகைய நிலையை எதிர் கொள்வது எப்படி என்பதைச் சிந்திக்கவும் சமூகத்தினால் முடியவில்லை.

இதிலிருந்து தெரியவருவது யாதெனில் ஊடகக் கலாசாரச் சுற்றோட்டம் சமமின்றிக் காணப்படுவதாகும். அது மேலைத்தேய வாழ்க்கை முறையை கீழைத்தேயங்களுக்குக் கொண்டு வருவதற்குப் பயன்பட்டதே தவிர கீழைத் தேயக் கலாசாரத்தை மேலைத் தேயங்களுக்குக் கொண்டு செல்வதில்லை. நாம் வாழும் ஆசிய வலயத்தில் நிலவும் உயர் வாழ்க்கைக் கோலங்களையும் வாழ்க்கை அம்சங்களையும் உலக மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்குப் பதிலாக மேலைத்தேச வாழ்க்கைக் கோலத்தையும் வாழ்க்கைக் கூறுகளையும் உலகம் பூராவும் பரப்புவதற்கு ஊடகக் கலாசாரத்தினால் முடிந்துள்ளது. ஈற்றில் ஊடகக் கலாசாரம் என்பதால் நாம் கருதுவதும் மேலைத்தேய கலாசாரத்தினால் உருவாக்கப்பட்ட ஊடகக் கலாசாரத்தையே என்பதும் தெரிய வருகின்றது.

### பாட விடயங்களை விளக்குவதற்கான துணை

### 1. ஊடகக் கலாசாரத்தின் பரவலினதும் சுற்றோட்டத்தினதும் இயல்பு

- ஊடகக் கலாசாரம் குறிப்பாக மேலைத்தேச சமூக கலாசாரத்தை மூலாதாரமாகக் கொண்டவை.
- ஊடகக் கலாசாரத்தினால் நிகழ்வது மேலைத்தேய கலாசார இயல்புகள், அதே அடிப்படையில் அல்லது அதன் போலியாக உலகம் பூராவும் பகிரப்படுவதாகும்.
- ஊடகச் சுற்றோட்டத்தில் ஒரு எதேச்சதிகாரத்தன்மையே காணப்படுகின்றது.
- ஊடகக் கலாசாரச் சுற்றோட்டத்தில் பரிமாற்றம் என்பது மிகக் குறைவாகவே நிகழ்ந்துள்ளது.
- தேசிய கலாசாரத்தின் மீது அபிமானமின்மை ஊடகக் கலாசாரப் பரவலுக்கு அனுகூலமாக அமைந்துள்ளது.
- ஊடகக் கலாசார பரவல், சுற்றோட்டம் என்பதன் பிரதான வகிபாகத்தை நிறைவேற்றுவது ஊடகங்களே.
- ஊடகக் கலாசார விருத்தியும் சுற்றோட்டமும் ஓர் இயற்கை நிகழ்வாக அன்றி திட்டமிட்ட செயற்பாடாகவே காணப்படல்.
- ஊடகக் கலாசாரச் சுற்றோட்டத்தின் மூலம் நவ குடியேற்றவாத அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிந்துள்ளமை.

## 2. ஊடகக் கலாசாரமும் தொழில்நுட்பமும்

- கடந்த இரு தசாப்தங்களில் ஊடகத் தொழில்நுட்பம் நம்பமுடியாத அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.
- ஊடகத் தொழில்நுட்பத்துடன் மின் இலத்திரனியல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் இணைந்துள்ளது.
- இலத்திரனியல் ஊடகங்களுடன் நவீன ஊடகங்களின் விருத்தியும் சேர்ந்துள்ளது.
- தகவல் பரிமாற்றம் தொடர்பான சமூக நடத்தைகள் வெகுவாக மாற்றமடைந்துள்ளது.
- நேரடித் தகவல்களுடன் கலாசார இயல்புகளும் நடத்தைசார் அம்சங்களும் ஒலி / ஒளிபரப்பப்படுகின்றன.
- ஊடகக் கலாசாரம் ஊடகத் தொழில்நுட்பத்தின் நேரடி விளைவாகும்.
- ஊடகத் தொழில்நுட்பம் வளர்ச்சி தொடர்ந்தேர்ச்சியாக நடைபெற்று வருதல்.
- ஊடகத் தொழில்நுட்பம் சமூகமட்டத்தில் எளிமையான பாவனையாக மாறியுள்ளமை.
- ஊடகக் கலாசாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு ஊடகத் தொழில்நுட்பம் துணையாக அமைந்துள்ளது.
- ஊடகக் கலாசாரத்துக்கும் ஊடகத் தொழில்நுட்பத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு.
- ஊடகக் கலாசாரத்தின் பெறுபேறாக சமூகம் ஊடகக் கலாசாரத்தைக் கோருகிறது.

## 3. ஊடகக் கலாசாரமும் சமூக மாற்றமும்

- சமூக மாற்றம் என்பது ஓர் இயற்கை நிகழ்வாகும்.
- சமூக மாற்றம் தொடர்ந் தேர்ச்சியாக நடைபெறுதல்.
- ஊடகக் கலாசாரம் காரணமாக சமூகம் செயற்கையாகவும் துரிதமாகவும் மாற்றத்துக் குட்பட்டமை.
- ஊடகக் கலாசாரம் காரணமாக ஏற்படும் சமூக மாற்றத்தினால் ஒரு கலாசார மோதல் ஏற்படுகின்றது.
- ஊடகக் கலாசாரத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள சமூக மாற்றங்கள் வர்த்தக நோக்கங்களையும் மேலைத்தேசமயமாக்கலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளமை.
- ஊடகக் கலாசாரம் காரணமாக குறிப்பாக இளைஞர், சிறுவர்கள், பெண்களின் நடத்தைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை.
- சமூகத்தின் உணர்வுபூர்வமான நடத்தைகள் மீது ஊடகக் கலாசாரம் கடுமையான செல்வாக்கைச் செலுத்துதல்.
- ஊடகக் கலாசாரத்தின் உபாய ரீதியான பிரவேசங்களில் சமூகம் சிக்கியுள்ளமை.
- ஊடகக் கலாசாரத்தின் மேலோட்டமான நோக்கங்கள் போலியாக இருப்பதுடன் மூன்றாம் உலக நாடுகளின் சமூகக் கருத்தோட்டத்தை மாற்றும் உள்நோக்கத்தையும் கொண்டுள்ளமை.

## 4. ஊடகக் கலாசாரச் சுற்றோட்டத்தின் சமமின்மை

- ஊடகக் கலாசாரத்தை உருவாக்கும் உத்திகளைத் திட்டமிடப்படுவது மேலைத்தேய மயமாக்கலை அடிப்படையாகக் கொண்டாகும்.
- ஊடகக் கலாசாரத்தின் சுற்றோட்டம் ஒருவழிப் பாதையாகவேயுள்ளது.
- உலகின் ஒவ்வொரு கலாசாரங்களிலும் பெறுமதியான அம்சங்களைப் பரிமாறிக் கொள்ளல் ஊடகக் கலாசாரச் சுற்றோட்டத்தினால் நடைபெறுவதில்லை.
- மேலைத்தேசத்தின் நேரடி அல்லது போலி நடத்தை அம்சங்களே சுற்றோட்டத்துக்குட் படுகின்றன.
- குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க வலயங்களின் கலாசாரப் பெறுமானங்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளமையும், குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளமையும் மேலைத்தேசக் கலாசாரம் உயர்வாக மதிக்கப்பட்டுள்ளமையும் ஊடகக் கலாசாரத்தின் பயிற்றுவித்தலாகவும் கீழைத்தேய வாதம் நிந்திக்கப்பட்டு மேலைத்தேய வாதம் சமூக மயமாக்கப்படுவதும் இந்தச் சுற்றோட்ட சமமின்மையின் தோற்றப்பாடுகளே.

## அலகு 6.0 - ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி 6.0** : ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, விருத்தி, செல்வாக்கு, சந்தைத் தொடர்பு என்பவற்றை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 6.3** : ஊடகக் கலாசாரத்தின் செல்வாக்கைச் சமநிலையாக விளக்குவார்.

**பாட வேளைகள்** : 10

**பாட உள்ளடக்கம்** : ஊடகக் கலாசாரத்தின் செல்வாக்கு
கலாசார அதிர்வு
கலாசார ஆக்கிரமிப்பு
கலாசாரப் பரிமாற்றம்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. ஊடகக் கலாசாரத்தின் செல்வாக்கை இலங்கைச் சமூகத்தினூடாக புலனாய்வு செய்வார்.
2. ஊடகக் கலாசாரம் காரணமாக கலாசாரம் அதிர்வுக்குள்ளாகியிருக்கும் விதம் பற்றி விளக்குவார்.
3. பல்வேறு வெளிநாட்டுக் கலாசார அம்சங்கள் உள்நாட்டுக் கலாசாரத்தை ஆக்கிரமித்துள்ள விதத்தை உதாரணங்காட்டி விளக்குவார்.
4. கலாசாரப் பரிமாற்றம் காரணமாக தேசிய கலாசாரம் ஊட்டம் பெற்றுள்ள, சீரழிந்துள்ள விதத்தை இலங்கையை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார்.

### அறிமுகம்

ஊடகக் கலாசாரம் என்பது மக்கள் கலாசாரத்தின் ஒரு விரிவாக்கமாக இருப்பினும் அது மக்கள் கலாசாரத்தின் அம்சங்களைப் பின் தள்ளிவிட்டு விருத்தியடைந்து விரிவடைவதாக உள்ளது. அதன் சமூகச் செல்வாக்கு பல்வகைப்படும். ஒரு கலாசாரத்துக்குரிய காரணிகள் பலமாக இருக்கும்போது ஊடகக் கலாசாரத்துக்கு அதனால் ஏற்படும் தாக்கம் குறைவாகவே இருக்கும். ஆயினும் கலாசாரத்தின் காரணிகள் பலவீனமாக இருக்கும் நிலையில் அல்லது ஊடகக் கலாசார அம்சங்கள் கூடிய செல்வாக்குடன் முன்வரும் போது உள்நாட்டுக் கலாசாரத்தின் மீது அது பாரிய செல்வாக்கைச் செலுத்தும். நவீன ஊடக, தகவல் சமூகத்தில் இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக உள்ளது. அதற்காக இரு பரிகாரங்களுண்டு.

ஒன்று, ஊடகக் கலாசார வடிவங்களை கடுமையான கட்டுப்பாட்டுக்குள்ளாக்குவதாகும். இதற்காக தீவிரவாதக் கொள்கைகளும் பின்பற்ற வேண்டியிருக்கும். அதாவது சமயத்தையும் சட்டத்தையும் இதன் கட்டுப்பாட்டு முறைகளாகப் பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் இதுபோன்று தீவிரவாத முறையில் சமயத்தையும் சட்டத்தையும் கருவியாகப் பயன்படுத்துவது அங்கீகரிக்கப்பட்டதன்று. இதற்கான உதாரணம் ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் ஊடகம் தொடர்பாகப் பின்பற்றும் தீவிரவாதக் கொள்கையாகும். அண்மையில் கூட தாலிபான்கள் குடும்ப விழாவொன்றில் ரப் பாடல் இசைத்தமைக்காகக் கடும் தண்டனை விதித்தனர். இத்தகைய சமூகத்தின் கட்டுப்பாடுகளால் மொத்த மக்களையும் கட்டுபாட்டில் வைத்திருக்க முடியாது.

இரண்டாவது, ஊடக அறிவை சமூகம் தமதாக்கிக் கொள்வதாகும். இதன் மூலம் வெளியீடுகளை யதார்த்தமாக வரைவிலக்கணப்படுத்தி ஏற்றுக்கொள்ளும் தேர்ச்சி சமூகத்தில் வலுவடையும். இது சமூகத்துக்கான பரந்த கல்வி முறையாகும். எனினும், நிலவும் யதார்த்தம் யாதெனில் ஊடக நிறுவனங்கள் தொடர்ந்து ஏற்படுத்திவரும் செல்வாக்கைக் கட்டுப்படுத்த முடியாமையாகும். இதன் மூலம் கலாசார அதிர்வு நடைபெறும். அத்துடன் பலமான அடிப்படையில் இருந்து கலாசார ஆக்கிரமிப்பும் நடைபெறும். எவ்வாறாயினும் கலாசார நிலவுகைக்குத் தேவையான கலாசாரப் பரிமாற்றமும் ஊடகக் கலாசாரம் காரணமாக மிகவும் உயிர்ப்பாக நடைபெறுவதை மறப்பதற்கில்லை. இதன் மூலம் எந்த ஒரு சமூகமும் அபிவிருத்தியடையும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

## 1. கலாசார அதிர்வு

- நிலவும் கலாசாரத்தில் மதிக்கப்படும் அம்சங்கள் வெளிக் கலாச்சாரங்களினால் தாழ்வுபடுத்தப்படும்போது சமூகத்தில் ஏற்படும் உணர்வு கலாச்சார அதிர்வாகும்.
- கலாசார அதிர்வு, மோதல் இயல்பு மூலம் வெளிப்படுத்தப்படலாம்.
- சிலபோது கலாசார அதிர்வு இளைஞர், முதியோர் போராட்டமாகவும் காட்டப்படலாம்.
- புதிய கலாசார அம்சங்களை சமூகத்தில் ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை மற்றொரு சாரார் ஏற்றுக்கொள்ளாமையால் இவ்வதிர்வு ஏற்படும்.
- கலாசார அதிர்வு உலக வரலாற்றில் எல்லாக் காலங்களிலும் சமூகத்தில் கூடிக் குறைந்த அளவுகளில் இருந்ததுடன் எதிர்காலத்திலும் இருக்கும்.
- சமூக சம்பிரதாயங்கள் கடுமையானதாக இருத்தல் கலாசார அதிர்வுக்குக் காரணமாகும்.
- விரோதக் கலாசாரத்தினால் கலாசார அதிர்வு ஏற்படல் உலகின் அனேக நாடுகளில் பெருமளவில் நடைபெற்றுள்ளமை.

## 2. கலாசார ஆக்கிரமிப்பு

- ஒரு கலாசாரத்தின் அம்சங்கள் வேறு ஒரு கலாச்சாரத்துக்குள் வலுக்கட்டாயமாக இணைத்தல் கலாசார ஆக்கிரமிப்பு எனப்படும்.
- திட்டமிட்ட அடிப்படையிலும் திட்டமிடாமலும் கலாசார ஆக்கிரமிப்பு நிகழும்.
- வரலாற்று ரீதியாகக் கலாசார ஆக்கிரமிப்பு அரசியல் நிகழ்வுகளின் நேரடி அல்லது மறைமுகச் செயற்பாடு எனத் தெரிய வந்துள்ளது.
- கலாசார ஆக்கிரமிப்பு நவ காலனித்துவவாத செயற்பாடாகும்.
- கலாசார ஆக்கிரமிப்பின் பின்னணியில் வர்த்தக நோக்கம் உண்டு.
- திட்டமிட்ட அடிப்படையில் நிகழும் கலாசார ஆக்கிரமிப்பில் ஊடகங்களின் ஆதரவு அதற்குக் கிடைக்கும்.
- ஆரம்பத்தில் கலாசார ஆக்கிரமிப்பாக வரும் அம்சங்கள் பின்னர் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாறும்.
- கலாசார ஆக்கிரமிப்பு பலவந்தமாக அல்லது தந்திரோபாயமாக நடைபெறலாம்.

### 3. கலாசாரப் பரிமாற்றம்

- கலாசாரப் பரிமாற்றம் சமூக ரீதியில் மிகவும் பயனுள்ளது.
- வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது கலாச்சாரப் பரிமாற்றம் நிகழ்ந்த அம்சங்கள் காணப்படுகின்றன.
- கலாசாரப் பரிமாற்றம் ஒவ்வொரு கலாசாரத்தினதும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.
- பரிமாற்றப்பட்ட கலாசார அம்சங்கள் பின்னர் அந்தந்தக் கலாசாரத்தின் தனித்துவமான அம்சமாகவே மாறிவிடும்.
- கலாசாரப் பரிமாற்றம் நாடுகளுக்கிடையே நடைபெறும்போது சமூக சகவாழ்வுக்கு அது காரணமாய் அமையும்.
- கலாசாரப் பரிமாற்றம் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு ஏதுவாகும்.
- கலாசாரப் பரிமாற்றம் திட்டமிட்டும், திட்டமிடாதும் நடைபெறும்.
- கலாசாரப் பரிமாற்றத்தின் காரணமாக சமூக அபிவிருத்தி ஏற்படும்.

## அலகு 6.0 - ஊடகக் கலாசாரம் - (50 பாடவேளைகள்)

**தேர்ச்சி 6.0** : ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, விருத்தி, செல்வாக்கு, சந்தைத் தொடர்பு என்பவற்றை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 6.4** : ஊடகக் கலாசாரத்துக்கும் சந்தைக்கும் இடையேயுள்ள இடைத் தொடர்பை விளக்குவார்.

**பாட வேளைகள்** : 10

**பாட உள்ளடக்கம்** : ஊடகக் கலாசாரமும் சந்தையும்
உலகமயமாக்கலும் நவ தாராண்மை வாதமும்
வர்த்தக ஆதிபத்தியமும் ஊடகக் கலாசாரமும்
சந்தைப் பரவலும் ஊடகக் கலாசாரமும்
ஊடக விளம்பரமும் சமூகமும்

### எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகள்:

1. உலகமயமாக்கலினதும் தாராண்மை வாதத்தினதும் தோற்றம், பரவல், செல்வாக்கு என்பவற்றை விளக்குவார்.
2. ஊடகக் கலாசாரத்தின் மீது சந்தை ஆதிக்கம் அல்லது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார்.
3. ஊடகக் கலாசாரத்தைக் கொண்டு நடத்துதல், சந்தைப் பரவலாக்கத்திற்குக் காரணமாக அமையும் விதத்தை இலங்கையின் அனுபவத்தின் ஊடாகப் பகுப்பாய்வு செய்வார்.
4. ஊடக விளம்பரம் சமூகத்துக்கு எத்தகைய நன்மைகளை வழங்கும்? என்பது பற்றியும் அதனால் ஏற்படும் நன்மையான, தீமையான செல்வாக்குகள் பற்றியும் பகுப்பாய்வு ரீதியாக எடுத்துக் காட்டுவார்.

### அறிமுகம்

ஊடகக் கலாசாரத்துக்கும் சந்தைக்குமிடையே பிரிக்க முடியாத தொடர்பு காணப்படுகிறது. ஊடகக் கலாசாரத்தை உருவாக்குவதும், கொண்டு நடத்துவதும் சந்தையின் வர்த்தகச் சமூகமே. சந்தையின் நிலவுகைக்கு ஊடகக் கலாச்சாரம் பாரிய பங்களிப்பை வழங்குகிறது. எனவே, ஊடகக் கலாசாரத்தை தன்பாட்டில் இயங்க வர்த்தக சமூகம் இடமளிப்பதில்லை வளங்கள் மையப்படுத்தப்பட்டிருப்பது வர்த்தகச் சமூகத்திடமேயாகும். ஊடகக் கலாசாரத்தை வெளிப்படுத்தும் அதிகாரம் சந்தைக்குக் கிடைக்க இதுவே காரணமாகும். ஊடகக் கலாசாரத்தில் ஏற்படும் அனைத்து மாற்றங்களின் மூலமுமான நன்மையை சந்தை எதிர்பார்க்கின்றது. எனவே, ஊடக கலாசாரத்தின் சிறிய, பெரிய அனைத்து அம்சங்களையும் தமக்குச் சாதகமாக வைத்திருக்கவே சந்தை விரும்பும்.

சந்தை என்பதில் நுகர்வோரும் அடங்குவர். இங்கு நுகர்வோருக்கு எதுவித அதிகாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. நுகர்வோர் வர்த்தக அதிகாரத்தினால் உருவாக்கப்படும் ஊடகக் கலாசாரத்துக்கு இரையாகின்றார்கள். அவ்வாறு தாம் இரையாகியிருப்பதை நுகர்வோர் அறியமாட்டார்கள். அதற்கான காரணம் சந்தை ஊடகச் கலாசாரத்தை மிகத் துல்லியமான உத்திகளினால் நெறிப்படுத்துவதாகும். அதற்காகச் சந்தை ஊடக ஆய்வுகளையும் ஆக்கச் சிந்தனையையும் ஊடகத் தொழில்நுட்பத்தையும் நன்கு பயன்படுத்திக் கொள்கிறது.

ஊடக விளம்பரங்கள் சமூகத்தின் மீது பாரிய செல்வாக்கைச் செலுத்தும் ஒரு தொகுதியாகும். அது சமூகத்துக்குத் தேவையானதொன்று என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதன் மூலம் பொருட்கள், சேவைகள் பற்றிய தகவல்கள் மக்களிடம் கொண்டு செல்லப்படுவதை விட மேலதிகமான பணிகள் நடைபெறுகின்றன. அதாவது பல்வேறு பொருட்கள், சேவைகள் தொடர்பான மனப்பாங்கைச் சமூகத்தில் கட்டியெழுப்பும் குறுங்கால நோக்கம் இந்த விளம்பரங்களில் பலமாக நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம். வர்த்தக ஏகாதிபத்தியம் அரசுகளின் மீதே கடுமையான செல்வாக்கைப் பிரயோகிக்கும் சூழலில், சமூகத்தில் செல்வாக்கை ஏற்படுத்துவதென்பது ஆச்சரியமான தொன்றல்ல. ஆனால் இந்த சமூகம் ஊடக ஆதிக்கத்தை எதிர்கொள்ளப் பயிற்றப்படாமை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதன் பெறுபேறு ஊடகம் சமூகத்தை வழி நடத்தும் நகர்வுச் சக்தியாக மாறியுள்ளமையாகும்.

**பாட விடயங்களை விளக்குவதற்கான துணை**

**1. உலகமயமாக்கலும் தாராண்மை வாதமும்**

- சமூகத்துக்கும் தொடர்பாடல் விருத்திக்குமிடையே பரஸ்பரத் தொடர்பு காணப்படுகிறது.
- உலகமயமாக்கம் என்பது ஊடகங்களாலேயே உருவாக்கப்பட்ட ஒன்று.
- ஊடக மற்றும் தகவற் தொழில்நுட்பம் காரணமாக உலகம் பூகோளக் கிராமமாகப் மாற்றப்பட்டுள்ளமை.
- அரசு, தேசியம் என்ற எண்ணக்கருக்கள் உலகமயமாக்கத்தின் கீழ் சவாலை எதிர் நோக்குதல்.
- உலகமயமாக்க வடிவத்திற்கேற்ப அது மேற்குலகெங்கும் பரவியுள்ளமை.
- தேசிய தனித்துவம், தேசிய கலாசாரம் என்பன உலகமயமாக்கலின் கீழ் சவாலை எதிர் நோக்கியுள்ளமை.
- உலகமயமாக்கலின் விளைவாக நவீன புதிய தாராண்மை வாதம் உருவாகியுள்ளமை.
- புதிய தாராண்மை வாதத்தின் அடிப்படை உலகமயமாக்கமாகும்.
- புதிய தாராண்மை வாதம் ஐரோப்பிய மேலைத்தேய வர்த்தக ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.
- தேசிய பொருளாதார, சுயாதீனத்துடன் புதிய தாராண்மை வாதம் மோதும் நிலை.
- புதிய தாராண்மை வாதத்தைக் கொண்டு நடத்தல் ஊடகக் கலாசாரத்தின் முக்கிய வகிபாகமாகும்.

**2. வர்த்தக ஆதிக்கமும் ஊடகக் கலாசாரமும்**

- ஊடகம், வர்த்தக ஆதிக்கத்தின் கீழேயே இயங்குகிறது.
- ஊடகம் வர்த்தக ஆதிக்கத்திலேயே தங்கியுள்ளது.
- வர்த்தக அனுசரணைக்கு அப்பால் ஊடகங்களுக்கு சுயாதீன நிலைப்பாடு ஒன்று கிடையாது.
- ஊடகத்தின் அனைத்து வெளியீடுகளும் வர்த்தக ஆதிக்கத்தின் பாதுகாப்பு என்பவைக்குள் காணப்படுகிறது.
- ஊடகக் கலாசாரத்தை தம் தேவைக்கேற்ப கையாள வர்த்தக ஆதிக்கத்தினால் முடியும்.
- சமூக மனப்பாங்கை வர்த்தக ஆதிக்கத்துடன் பொருந்தும் வகையில் செம்மைப்படுத்தலை ஊடகம் செய்கிறது.
- ஊடகக் கலாசாரத்தின் வடிவங்களிற்கேற்ப அதன் வர்த்தக ஆதிபத்தியம் மறைந்து அல்லது கவர்ச்சியான சீரான விதத்தில் தோற்றமளித்தது.
- ஊடகக் கலாசாரத்தை தமக்கேற்றபடி கையாள ஊடக நிலவுகைகள் ஊடக ஆய்வுகளை மேற்கொள்கிறது.

## 3. சந்தை விரிவாக்கமும் ஊடகக் கலாசாரமும்

- சந்தையின் விரிவாக்கத்தில் ஊடகக் கலாசாரம் பெரும் பங்களிப்பை நிறைவேற்றி வருகிறது
- ஊடகக் கலாசாரத்துக்கு உட்படுபவர்கள் தாம் சந்தை விரிவாக்கத்தில் ஈடுபடுகின்றமை பற்றி அறிந்திருப்பதில்லை.
- சந்தை மூலம் விரிவுபடுத்தப்படும் ஊடகக் கலாசாரத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் மரபு ரீதியான கலாசாரக் கருத்துக்களின் குரல் உரத்து ஒலிக்காமை.
- மரபு ரீதியான கருத்துக்களை எப்போதும் சந்தை விரிவாக்கம் புறக்கணிக்க முடியாது. (உதாரணமாக சமயச் சின்னங்கள் போன்றவற்றை பொருட்களின் சுற்றுத்தாள்களுக்காக அல்லது வர்த்தகக் குறியீடுகளுக்காகப் பயன்படுத்துவதை மரபு ரீதியான கலாசாரம் அனுமதிக்காது. அத்துடன் அது போன்ற எண்ணக்கருக்களை உறுதிப்படுத்த ஊடகக் கலாசாரத்தைக் கையாள்வதை சந்தை விரிவாக்கத்தின் போது அவகாசம் கிடைக்காது. மற்றுமொரு உதாரணம் ஹலால் உணவு தொடர்பான குறியீட்டை இடுவது எந்த ஒரு நாட்டிலும் உணவு வர்த்தகத்தின் போது அத்தியவசியமான ஒரு காரணியாக உள்ளது. அப்படியில்லாத போது சந்தை விரிவாக்கத்தை மேற்கொள்ள முடியாது. இது சம்பிரதாயக் கலாசாரச் சிந்தனைக்கு ஊடகக் கலாசாரம் கட்டுப்படும் ஒரு கட்டமாகக் குறிப்பிடலாம்.)

## 4. ஊடக அறிவித்தலும் சமூகமும்

- ஊடக அறிவித்தல் ஒரு சமூகத் தேவை.
- ஊடக அறிவித்தல் ஒரு வர்த்தகத் தேவை.
- ஊடக அறிவித்தல்கள் மூலம் சமூக நடத்தைகள் மாற்றமடையும்.
- சமூக நடத்தைகளை சீரானதாகவும் சீரற்றதாகவும் மாற்ற ஊடக அறிவித்தலால் முடியும்.
- ஊடக அறிவித்தல்கள் வர்த்தகர்களின் நேரடிக் கருத்தை முன்வைப்பதற்கும் மக்கள் சேவைகள் பற்றிய கருத்துக்களை முன்வைப்பதற்கும் மக்கள் கருத்துக்களை மாற்றுவதற்காக அரசியல் ரீதியாகவும் பயன்படுத்த முடியும்.
- ஊடக அறிவித்தலால் ஒவ்வொரு விடயம் தொடர்பாக சமூகத்தில் ஒரு கருத்தாடலை ஏற்படுத்த முடியும்.
- ஒரு பொருள் அல்லது சேவை அல்லது கருத்தை நம்பிக்கையுடன் தெரிவு செய்வதற்கு ஊடக அறிவித்தல் மக்களுக்கு உதவுகின்றது.


## கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்கான மாதிரிச் செயற்பாடுகள்

### (1) அடிப்படை அறிவுறுத்தல்கள்

இந்தப் பகுதியில் கூறப்படுவது கற்றல், செயலொழுங்குக்காகப் பயன்படுத்தக்கூடிய மாதிரிச் செயற்பாடுகளாகும். இவற்றை இதே விதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆசிரியரின் தேவைகளுக்கேற்ப மாற்றங்களைச் செய்து கொள்ள முடியும். அத்துடன் ஒவ்வொரு தேர்ச்சி மட்டம் தொடர்பிலும் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு செயற்பாடு மட்டும் போதுமானதல்ல. மாதிரிச் செயற்பாட்டை ஆராய்ந்து ஒவ்வொரு பாட வேளைகளுக்குரியதாக வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய வேறு செயற்பாடுகளைப் பொருத்தமான வகையில் தயார்செய்து கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறைக்கு வந்த முதல் தினம் விட்ட இடத்திலிருந்து தொடங்குவது போன்ற சுவையற்ற முறைகளைப் பயன்படுத்தக்கூடாது. ஒவ்வொரு பாட வேளையின் போதும் புதிய அனுபவத்தை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையிலான விருப்பத்தை அவர்களிடையே ஏற்படுத்துவதுடன், புதிய அனுபவத்தை வழங்க ஆசிரியர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு பாடவேளையின் போதும் பயன்படுத்தும் புதிய செயற்பாடுகளை முன்கூட்டியே தயாரித்து கோவைப்படுத்திக் கொள்வதுடன் அவற்றை ஒரு முறை பயன்படுத்தி விட்டால் மீண்டும் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்வதற்கும் பலம், பலவீனங்களை இனங்கண்டு குறிப்பெடுத்துக் கொள்ளல் மூலம் ஒரு தடவை தயார் செய்த செயற்பாடுகளை அடுத்த வருடங்களில் பயன்படுத்த முடியுமாகும். ஓர் ஆசிரியரின் தனித்துவமும் சிறப்பும் ஏனையவர்கள் தயாரித்து வழங்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தங்கியில்லை. மாறாக, தனக்கேயுரிய ஒரு செயற்பாட்டுத் தொடரைத் தயார் செய்து கொள்வதாகும். பாடத்தினூடாக புதிய அனுபவத்தை வழங்க வேண்டுமானால் அது குறிப்புகளை வழங்கி மனப்பாடம் செய்து கொள்ளப் பண்ணும் முறையால் முடியாது. மாறாக செயற்பாட்டு ரீதியாகக் கற்றலுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதன் மூலமாகும்.

### (2) கற்றல்-கற்பித்தற் செயலொழுங்கின் கோட்பாட்டு அடிப்படை

வகுப்பறையில் பயன்படுத்தும் ஆசிரியர் மையக் கல்வி முறையும் மாணவர் மையக் கல்வி முறையும், இப்பாடத்தைப் பொறுத்தவரையில் பொருத்தமற்றவையே. பதிலாகப் பயன்படுத்துவது தகவல் ஊடக மையக் கற்றல் - கற்பித்தல் முறையுமாகும்.




TECHNOLOGY - BASED PARADIGM
Branson Model of Learning - 1990

இக் கற்றல் - கற்பித்தல் பாணிக்கேற்ப ஆசிரியரும் மாணவரும் தகவல் மற்றும் ஊடகங்களைக் கையாள்வர். சிலவேளை ஆசிரியருக்கு முன்பே ஒரு தகவல் மாணவருக்குக் கிடைக்கக்கூடும். இதன்படி ஆசிரியர் மாணவர்களை விட தகவல்களைக் கையாள்பவராக மாற வேண்டும். அத்துடன் முடியுமான அளவு தகவல்களை, ஊடகங்களைக் கையாள மாணவர்களைத் தூண்ட வேண்டும். இணையத்தை ஒரு பலமான தகவல் மையமாகப் பயன்படுத்த முடியும். அத்துடன் நாளாந்த, வாரப் பத்திரிகைகளை, புத்தகங்களை, இறுவட்டுக்கள் போன்றவற்றையும் பொருத்தமான விதத்தில் வகுப்பறையில் பயன்படுத்தக் கூடிய ஒரு கற்றல் - கற்பித்தல் சூழலை உருவாக்குவது ஆசிரியரின் பொறுப்பாகும். தகவல் மூலாதாரங்களை இனங்காண்பதும் தகவல்களைத் திரட்டுவதும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதும் குறித்து ஆசிரியர், மாணவர்களுக்கு உதவ வேண்டும். இதன் கருத்து, ஊடகத் தொடர்பாடல் ஆசிரியர் நாளுக்கு நாள் புதிதாக வேண்டும் என்பதாகும். அத்தகைய ஒரு மாற்றத்துக்கு ஆசிரியர் தயாராக வேண்டும்.

இந்த மாற்றத்தை ஏற்படுத்த தேசிய கல்வி நிறுவனமும், கல்வி அமைச்சும் இணைந்து நடவடிக்கைகள் எடுத்துள்ளன. எவ்வாறாயினும் இம் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு தனிப்பட்ட தேவையை, ஆர்வத்தை ஆசிரியர் தன்னில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு சுய எண்ணக்கருவை விருத்தி செய்து கொள்வதன் மூலம் ஏனையோரின் உதவியின்றியே தனது ஆசிரியர் வகிபாகத்தைப் புதுப்பித்துக் கொள்ள அவகாசம் கிடைக்கும்.

பாட அலகு 01 : **தொடர்பாடல் கற்கைப் பிரவேசம்**

**தேர்ச்சி மட்டம் 1.1 :** தொடர்பாடலைக் கற்பதற்கு அதன் பரவலையும் இயல்பையும் பற்றிய வரைவிலக்கணங்களையும் எண்ணக்கருக்களையும் விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** தொடர்பாடல் என்றால் என்ன என்பது பற்றிய தனது கருத்தை எழுதும்படி ஒரு தனி ஒப்படையை வழங்கவும்.

**படி 2 :** மூவர் கொண்ட குழுக்களாக்கி, ஒரு கருத்தை உருவாக்க அறிவுறுத்தல் வழங்கவும்.

**படி 3 :** குழு உருவாக்கிய கருத்தை தாளில் எழுதி, பலகையில் தொங்க விடப் பண்ணவும். ஒவ்வொரு குழுவும் அதனை முன்வைக்க ஏற்பாடு செய்யவும்.

**படி 4 :** ஒவ்வொரு குழுவும் முன்வைத்த முக்கிய சொல் அல்லது கூற்றை வேறுபடுத்தி எழுதப் பண்ணவும்.

**படி 5 :** அந்தச் சொற்களை, கூற்றுக்களைப் பயன்படுத்தி, தொடர்பாடல் பற்றிய ஒரு கருத்தை அல்லது வரைவிலக்கணத்தை உருவாக்கும்படி குழுக்களைப் பணிக்கவும்.

**படி 6 :** ஒவ்வொரு குழுவின் கருத்தையும் முன்வைக்கப் பண்ணவும்.

படி 7 : ஏற்கனவே தயார் செய்து வைத்துள்ள லஸ்வெல்வின் வரைவிலக்கணத்தைக் காட்சிப்படுத்தவும். அதனை எல்லோரும் வாசிக்க இடமளிக்கவும்

படி 8 : தமது குழு தயாரித்த வரைவிலக்கணங்களுக்கும் லஸ்வெலின் வரைவிலக் கணத்துக்கிடையிலான இடைவெளியை இனங்காண அவகாசம் வழங்கவும்.

படி 9 : லஸ்வெலின் வரைவிலக்கணத்தைக் கலந்துரையாடவும்.

படி 10: லஸ்வெலின் வரைவிலக்கணத்தை எழுதிக்கொள்ள வழிப்படுத்தவும்.

**பாட அலகு 01 : தொடர்பாடல் கற்கைப் பிரவேசம்**

**தேர்ச்சி மட்டம் 1.2 :** தொடர்பாடல் அடிப்படை மாதிரிகளையும் அவற்றின் பணிகளையும் விளக்குவார்.

**செயற்பாடு 01 :** நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : லஸ்வெலின் வரைவிலக்கணத்தின் ஐந்து கட்டங்களையும் பெரிய எழுத்துக்களில் எழுதி, தயாரிக்கப்பட்டுள்ள அட்டைகளில் காட்சிப்படுத்த ஐவரை ஏற்பாடு செய்யவும்.

படி 2 : ஐந்து அட்டைகளும் படிமுறை ஒழுங்கில் காட்சிப்படுத்தப்படும் வகையில் ஐவரையும் வரிசையாக நிற்கச் செய்யவும். ஒழுங்கு வரிசையை மாணவர்களின் கலந்துரையாடலின்படி சீர்செய்யும் ஆசிரியர், எந்த அறிவுறுத்தலையும் வழங்கக் கூடாது.

படி 3 : அட்டைகள் ஒழுங்குமுறைப்படி காட்சிப்படுத்திய பின்பு, ஒவ்வொரு அட்டை பற்றி மாணவர்களின் கருத்தைக் கேட்டறியவும்.

படி 4 : ஒவ்வொரு அட்டைக்குரிய தொடர்பாடல் பிரிவினரைக் குறிப்பிட வழிப்படுத்தவும். (தொடர்புபடுபவர், செய்தி, ஊடகம், பெறுபவர் செல்வாக்கு)

படி 5 : ஒவ்வொரு பிரிவினர் பற்றியும் கலந்துரையாடவும்.

**பாட அலகு 01 : தொடர்பாடல் கற்கைப் பிரவேசம்**

**தேர்ச்சி மட்டம் 1.3 :** தொடர்பாடலின் பல்வேறு வகைகளை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.

**செயற்பாடு 01 :** நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : கண்ணை மூடிக்கொண்டு சிறுவயதில் நடந்த நிகழ்வென்றை நினைவுபடுத்தும் படி மாணவர்களிடம் கூறவும்.

படி 2 : தாம் நினைத்த சம்பவத்தைக் கூற விரும்பும் சிலருக்கு இடமளித்தல்.

படி 3 : பல வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒன்று, ஒரு தகவலாக எவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டது என்பதை விசாரிக்கவும்.

படி 4 : அவ்வாறான எத்தனை தகவல்கள் தம் களஞ்சியத்தில் உள்ளன என விசாரிக்கவும்.

படி 5 : நினைவுச் செயலொழுங்கு தானாகவே நிகழும் விரைவான ஒன்று என்பதை விளக்கவும்.

படி 6 : பேனா, குண்டூசி, தாள் என்பவற்றில் ஒருதலைப்பில் இரண்டு நிமிடம் பேச விரும்புகின்றவரை அழையுங்கள்.

படி 7 : பேச்சின் முடிவில் அது பற்றிக் கலந்துரையாடவும். அந்தக் கருத்துக்கள் தங்கு தடையின்றி வந்தது எவ்வாறு? கருத்து வர மறுத்திருந்தால் அது ஏன்? அந்தக் கருத்துக்களை நினைவில் பதித்துக் கொண்டது எவ்வாறு? நினைவில் பதித்தல், நினைத்தல் என்ற இரண்டு செயற்பாடுகள் இருப்பது பற்றி விளக்கவும். அனைவரும் தமது மனதுடன் பேசுவதாகவும் தொடர்பாடலின் ஆரம்பம் அதுவே என்றும் குறிப்பிடுங்கள்.

பாட அலகு 01 : **தொடர்பாடல் கற்கைப் பிரவேசம்**

**தேர்ச்சி மட்டம் 1.4 :** பல்வேறு தொடர்பாடல் விதங்களை ஒப்பிட்டு விளக்குவார்.

**செயற்பாடு 01 :** நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : ஒரு திருமண வைபவத்தை உதாரணமாகக் கொண்டு கலந்துரையாடலை ஆரம்பிக்கவும்.

படி 2 : அங்கு பல விதமான தொடர்பாடல்கள் நிகழ்வதை விளக்கவும்.

படி 3 : ஒவ்வொன்றையும் ஒவ்வொருவர் பலகையில் எழுத இடமளிக்காது, ஒரே விடயத்தை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் எழுத அனுமதிக்கவும்.

படி 4 : பலகையில் எழுதப்பட்ட தொடர்பாடல்கள் நடந்த விதம் பற்றிச் சுருக்கமாகக் கூற மாணவர்களை வழிப்படுத்தவும். ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் எழுதப்பட்டவற்றை நீக்கி விடவும்.

படி 5 : மாணவர்கள் எழுதியவற்றை படிமுறையில் ஒழுங்குபடுத்தி எழுத, சில மாணவர்களிடம் ஒப்படைக்கவும். தேவையான வழிகாட்டல்களை, வழங்கவும்.

படி 6 : ஒவ்வொரு தொடர்பாடல் விதம் பற்றியும் சுருக்கமாக கலந்து செயற்படவும். அந்த ஒவ்வொன்றும் மனித சமூகத்தின் தொடர்பாடற் தேவையை நிறைவேற்றப் பயன்படுபவை என்பதை விளக்கவும்.

**பாட அலகு 02** : தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி மட்டம் 2.1 :** சமூகத்தின் தோற்றமும், வளர்ச்சியும், சமூகக் கட்டமைப்பு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி, சமூகத்தின் அதிகாரச் சம நிலையையும் சமூகத்தின் அறிவுத் தேடலின் இயல்பையும் விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** ரய்டர் ஹகார்ட் எழுதிய ஆபிரிக்க வாழ்க்கையைக் காட்டும் நாவல் போன்ற ஒரு புத்தகத்தை வகுப்பறைக்குக் கொண்டு வரவும். அதனைக் காட்டி வாசித்திருக்கிறீர்களா? என்று கேட்கவும். அதன் கதை பற்றிச் சுருக்கமாகக் கலந்துரையாடவும். அதில் ஆபிரிக்கக் காடுகளில் உள்ள பண்டைய கிராமங்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளதை எடுத்துக் கூறவும்.

**படி 2 :** நாவலின் பிரதான பாத்திரமான க்வாட்டர் மேன் கோத்திர மனிதர்களால் பிடிக்கப்பட்டு, சிறைக்கைதி போல் கொண்டு செல்லப்படும் ஒரு பந்தியை வகுப்பில் வாசித்துக்காட்ட ஒரு மாணவரை ஏற்பாடு செய்யவும். தேவையான வற்றை மீண்டும் ஒரு முறை வாசிக்கப் பண்ணவும்.

**படி 3 :** அந்தப் பந்தியில் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கோத்திர வாசிகளிடம் எத்தகைய இயல்புகள் காணப்பட்டிருக்கும் என்பதை யோசிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும். சிறு குழுக்களாக அக்கருத்தை டிமை கடதாசியில் எழுதப் பண்ணவும். எழுதியவற்றைக் காட்சிப்படுத்த வழிப்படுத்தவும்.

**படி 4 :** அக்கருத்துக்களை பொதுவாகக் கலந்துரையாடி, காடுகளில் வாழ்ந்த மனிதர்கள் பின்னர் கோத்திரவாசிகளாக மாறியமை பற்றியும் அந்தக் கோத்திர சமூகம் நவீன சமூகம் வரை வளர்ச்சியடைவதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கலந்துரையாடவும். அவற்றைப் பலகையில் பட்டியற்படுத்த வழிப்படுத்தவும்.

**பாட அலகு 02** : தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி மட்டம் 2.2 :** தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பை விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** இற்றைக்கு பல நூறு வருடங்களுக்கு முன்னால் கடல் கோள் ஏற்பட்டுள்ளமை மற்றும் விகாரமகாதேவியின் கதையை வகுப்பில் கலந்துரையாடவும். பின்னர் அண்மையில் ஏற்பட்ட சுனாமி பற்றியும் கலந்துரையாடவும்.

**படி 2 :** வகுப்பு மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்கவும்.
***முதலாம் குழு:*** களனியில் ஏற்பட்ட கடல் கோள் நாடு முழுவதும் பரவிய விதம் குறித்தும்.

***இரண்டாம் குழு:*** சுனாமி அனர்த்தம் நாடு பூராவும் பரவிய விதம் குறித்தும் வகிபாகமேற்று நடித்தல் மூலம் செய்து காட்ட வழிப்படுத்தவும். குழுவில் உள்ள அனைவரும் பங்குபெறும் விதத்தில் அது அமைய வேண்டும். ஒரு குழுவின் முன்வைத்தலை மற்றைய குழு அறிக்கையிட வேண்டும்.

**படி 3 :** ஒவ்வொரு குழுவும் கையாண்ட தொடர்பாடல் முறைகளை, பலகையில் பட்டியலிடவும்.

**படி 4 :** முதல் முன்வைப்பின் போது கையாளப்படாத சில தொடர்பாடல் முறைகள் இரண்டாவது முன்வைப்பின் போது கையாளப்பட்டமையும் சில தொடர்பாடல் முறைகள் இரண்டாவது குழுவில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டமை பற்றியும் கலந்துரையாடவும்.

**படி 5 :** இன்னும் ஒரு நூறாண்டுகளின் பின் இச்செயற்பாடு மேற்கொள்ளப்படின் அதில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள தொடர்பாடல் பணிகள் எத்தகையதாக இருக்கும் எனவும் கலந்துரையாடி, மாணவர்களிடமிருந்து வரும் புதிய கருத்துக்களை கரும்பலகையில் எழுதவும்.

**பாட அலகு 02** : தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி மட்டம் 2.3 :** தொடர்பாடலின் சமூக வகிபாகத்தை விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** மகதனமுத்தா வெளி நாடு செல்லவென கடவுச்சீட்டுப் பெற கொழும்புக்கு வந்தமை பற்றி, புதிய கதையொன்றை உருவாக்கவும். அதனை வகுப்பில் முன்வைக்கவும். அந்தப் பயண விபரங்களை மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

**படி 2 :** மகதனமுத்தாவின் பயணத்தில் சில கட்டங்களைப் பட்டியலிடவும்.

1. சீடர்களிடம் விடை பெறல்
2. பஸ்ஸில் பயணம் செய்தல்
3. ஒரு கடையில் தேனீர் குடித்தல்
4. புகைப்படம் எடுத்தல்
5. கடவுச்சீட்டுப் பெறல்

**படி 3 :** ஒவ்வொரு கட்டத்தையும் வகிபாகமாகச் சுருக்கமாக முன்வைக்க மாணவர் குழுக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும்.

**படி 4 :** ஒவ்வொரு கட்டத்தில் மகதனமுத்தாவின் வகிபாகம் மாற்றமடைவதைப் பற்றிக் கலந்துரையாடவும்.

**படி 5 :** ஒவ்வொரு வகிபாகமேற்றலின்படி ஒவ்வொருவரின் நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களைக் காட்ட முடியும் என்பதைக் கலந்துரையாடவும்.

**படி 6 :** ஒருவரின் நாளாந்த வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொடர்பாடல் பயன்படுவதையும் அதனைத் தவிர்த்து ஒன்றையும் செய்ய முடியாது என்பதையும் கலந்துரையாடவும்.

**பாட அலகு 02** : தொடர்பாடலும் சமூகமும்

**தேர்ச்சி மட்டம் 2.4** : உலகமயமாக்கலும் தொடர்பாடற் போக்குகளும் என்பதை விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** நாளாந்த அல்லது வாராந்த பத்திரிகைகள் சிலவற்றை வகுப்புக்குக் கொண்டு வரவும். ஒவ்வொரு பத்திரிகையையும் குழுக்களுக்கு வழங்கவும்.

**படி 2 :** அப்பத்திரிகைகளில் உரிய செய்திகள், கட்டுரைகளை வாசித்து அவை உலகுடன் தொடர்புபடும் விதம், புத்தறிவை முன்வைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள விதம், பல்வேறு எதிர்க்கருத்துக்கள், உடன்பாடுகள், வாசகர்களின் ஊடக ஈடுபாடு என்ற பல தலைப்புக்களில் கருத்துக் கூற குழுக்களை வழிப்படுத்தவும்.

**படி 3 :** மக்கள் இத்தகைய உலகத் தகவல்களின்றி வாழ முடியுமா? என்ற தலைப்பில் மாணவர்களை வாதத்தில் ஈடுபடுத்துக.

**பாட அலகு 03** : தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : உள்ளகத் தனியாள் தேர்ச்சியைப் பயன்படுத்துவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 15 நிமிடங்கள்

**படி 1 :** ஐசக் நியூற்றன் ஈர்ப்புச் சக்தியை கண்டுபிடித்த நிகழ்வை சுவையாக வகுப்பில் முன்வைக்கவும்.

**படி 2 :** ஐசக் நியூற்றன் வகிபாகத்தை ஏற்க ஒரு மாணவனை அழைக்கவும்.

**படி 3 :** மாணவனின் வகிபாகமேற்றல் பற்றிக் கலந்துரையாடவும்.

**படி 4 :** ஐசக் நியூற்றன் தமது மனதுடன் பேசிக்கொண்டு தர்க்கிக்கும் விதத்தை விளக்கவும். இங்கு நியூற்றன் ஒரு தர்க்கரீதியான சிந்தனையை உருவாக்கியமை பற்றியும் அதற்காக அவருக்கு உள்ளத்தில் தேக்கி வைத்திருந்த தர்க்க ரீதியாக தகவல்கள் பயன்பட்டமை பற்றியும் நாமும் இது போன்ற பலவற்றைத் தினமும் சிந்திப்பினும் இது போல தர்க்கிப்பதில்லை என்பதையும் தனது மனதுடன் பேசுவதன் மூலம் பெறுமதிமிக்க பல கருத்துக்களை உருவாக்க முடியும் என்றும் கலந்துரையாடவும்.

**பாட அலகு 03** : தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** ஆளிடைத் தொடர்பை விரிவுபடுத்துவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** பின்வரும் சில சந்தர்ப்பங்களை முன்வைக்கவும். ஒரு வயோதிப ஆண் / பெண் பஸ் நிறுத்துமிடத்தில் தன் பக்கத்திலுள்ளவரிடம் ஏதோ சொல்ல முயற்சிக்கின்றார். ஆனால், அவர் அதனைக் கவனிப்பதாக இல்லை. முன்னையவர் என்ன சொல்ல முயற்சிக்கிறார் என்று ஏனையவர்களுக்குத் தெரியாது.

**படி 2 :** இச்சந்தர்ப்பத்தை வகிபாகமேற்கச் செய்து காட்டும்படி மூன்று குழுக்களை வழிப்படுத்தவும். மற்றுமொரு முன்வைத்தலை அவதானித்துக் கருத்துக் கூற வேண்டும் என்றும் கூறவும்.

**படி 3 :** வகிபாகமேற்றலின் போது பின்வரும் இயல்புகள் முன்வைக்கப்பட்ட விதமும் ஒவ்வொரு குழுவிலும் அது வேறுபட்ட விதமும் பற்றிக் கலந்துரையாடவும்.

- ஒவ்வொருவர் கதைத்த விதம்.
- மற்றவர்கள் கதைத்த விதம்.
- வயோதிபரின் பிரச்சினையில் மற்றவர்கள் காட்டிய உணர்வுகள்.
- அவர்களின் நடத்தையில் காணப்பட்ட பண்பாடு.

**படி 4 :** எல்லோரும் அன்றாட வாழ்வில் ஏனையோருடன் விளைதிறன் வாய்ந்த தொடர்பாடல் பரிமாற்றத்தில் ஈடுபட வேண்டி ஏற்படுவதும் அதற்கான தேர்ச்சி இல்லாதபோது சமூக நிலைப்பாடு பாதிக்கும் எனவும் குறிப்பிடுக.

**பாட அலகு 03** : தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** கூட்டுத் தொடர்பாடல் தேர்ச்சி

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** பின்வரும் சந்தர்ப்பத்தை மாணவர்களிடம் முன்வைக்கவும். புதிய தொலைக் காட்சி நாடகமொன்றுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஒரு கூட்டத்தைக் கூட்டியுள்ளது. சில பணிப்பாளர்கள் இந்த நாடகத்தைத் தயாரிப்பதை விரும்பவில்லை. அதற்கான காரணம் அதன் உள்ளடக்கம் சமூகத்துக்குப் பொருத்தமற்றது என்பதாகும். சமூகத்துக்குப் பொருத்தமற்ற விடயங்களைப் முன்வைத்து பணம் சம்பாதிப்பது இந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் பணியல்ல என்று அவர்கள் கூறுகின்றனர். வேறு சிலர் இந்நாடகம் இரசிகர்களிடையே பெரிதும் ஜனரஞ்சத்தை அடையும் என்றும் அதனால் அதிக வருமானம் கிடைக்கும் என்றும் விளம்பரத்தின் மூலம் அதிக லாபம் பெறலாம் என்றும் கூறுகின்றனர். தீர்மானம் எடுப்பது ஒத்திவைக்கப்பட்ட நிலையில் கூட்டம் முடிவடைகின்றது.

படி 2 : இப்பணிப்பாளர் சபைக் கூட்டத்தை நடத்த மாணவர்களைப் பணிக்கவும். பத்துப்பேர் அளவில் இதில் பங்குபற்றலாம். இருவேறு குழுக்களை வேண்டுமானாலும் ஈடுபடுத்தலாம்.

படி 3 : ஏனைய மாணவர்களை பணிப்பாளர் சபைக் கூட்டத்தை அவதானிக்கச் செய்யவும்.

படி 4 : அவர்களின் அவதானிப்புக்களைத் தனித்தனியே முன்வைக்க வேண்டும் எனவும் கூறவும்.

படி 5 : மாணவர்களின் அவதானிப்பை அடிப்படையாகக் கொண்டு, கலந்துரையாடல் பற்றி கருத்துத் தெரிவிக்கவும்.

படி 6 : கலந்துரையாடலின் பின்பக்க விடயங்களைக் கவனத்திற் கொள்ளவும்

- பணிப்பாளர் சபையின் குழு உணர்வும் பொறுப்புணர்ச்சியும்
- தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பற்றி அச்சகத்தார்களின் மனப்பாங்கு
- கலந்துரையாடல் வைத்த விதம்
- மற்றவர்கள் பேச இடமளித்த விதம்
- கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- பயன்பாடு

**பாட அலகு 03** : தொடர்பாடல் திறன்களும் தேர்ச்சிகளும்.

**தேர்ச்சி மட்டம் 3.4 :** தொடர்பாடலுக்கான பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : பல்வேறு தொடர்பாடல் உபகரணங்களின் படங்களைத் தயார் செய்து வகுப்பிற்குக் கொண்டு வந்து காட்சிப்படுத்தவும். அல்லது மாணவர்களையே அவற்றைக் கொண்டுவரும்படி முன்கூட்டியே அறிவுறுத்தவும். அவ்வாறு கொண்டுவந்த வற்றைக் காட்சிப்படுத்தவும்.

படி 2 : ஒவ்வொரு உபகரணமாகத் தெரிவு செய்து கொண்டுவந்தவற்றைக் காட்சிப் படுத்தவும்.

படி 3 : எளிமையான, பயனுள்ள ஒரு கருவியென மேந்தலை எறிவையை உபயோகிக்க முடியும் என்பதை விளக்கவும்.

படி 4 : மேந்தலை எறிவைக்குத் தேவையான ஊடுகாட்டிகளை தயாரிக்கும் திட்டமொன்றைத் தனித்தனியாகக் கடதாசியில் தயாரிக்க வழிப்படுத்தவும்.

பாட அலகு 04 : மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்

**தேர்ச்சி மட்டம் 4.1 :** மொழியின் இயல்பு, அதன் பயன்பாடு, மொழியின் தொடர்பாடல் வகிபாகம் என்பவற்றை விளக்குவார்.

**செயற்பாடு 01 :** நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** ஏற்கனவே தயார் செய்து கொண்ட சில வானொலிச் செய்திகளை மாணவர்கள் செவிமடுக்க ஏற்பாடு செய்யவும். அதில் ஒன்றாக கட்டாயம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியை உட்படுத்தவும்.

**படி 2 :** ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியை ஏனைய வானொலிச் செய்திகளுடன் ஒப்பிட்டு, மதிப்பீடு செய்ய மாணவர்களை வழிப்படுத்தவும். சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்க அவகாசம் வழங்கவும்.

**படி 3 :** ஒவ்வொரு வானொலிச் சேவையினதும் மொழிப் பாவனையின் அல்லது ஏற்பு, மறுப்பு பற்றிய கருத்துக்களை உருவாக்க மாணவர்களை வழிப்படுத்தவும்.

**படி 4 :** மொழியை ஒரு நாட்டின் தனித்துவச் சின்னமாகக் கொள்ள முடியுமா? என்பது பற்றிய கருத்துக்களை மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

பாட அலகு 04 : மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்

**தேர்ச்சி மட்டம் 4.2 :** மொழியின் பல்வேறு பயன்பாடுகளை ஒப்பீட்டு ரீதியாகக் காட்டுவார்.

**செயற்பாடு 01 :** நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** அந்தரே சீனி சாப்பிட்ட கதையை ஆக்கரீதியாக எழுத மாணவர்களை வழிப்படுத்தவும்.

**படி 2 :** விரும்பிய இரு மாணவர்களை வகுப்பின் முன்னே அழைக்கவும். ஒருவர் கதையைக்கூற மற்றவர் செவிமடுப்பார். செவிமடுப்பவர் பல கேள்விகளைக் கேட்டு கருத்துக்கள் கூறி, கதை கூறலில் பங்கு பெறுவார்.

**படி 3 :** முழு வகுப்புக்கும் கதையைக் கூற முன்பாக மாணவர்களை முன்னே அழைக்கவும். அவருக்கு கதை கூற இடமளிக்கவும்.

**படி 4 :** செவிமடுப்பவர்களின் மனதில் உரிய விடயம் படமாக விழுந்ததா? கதை கூறுபவர் உடல் மொழிகள் கையாண்டாரா? என்று மாணவர்களிடம் வினாவவும்.

**படி 5 :** அந்தரே சீனி சாப்பிட்ட கதையை பற்றி விமர்சிக்க மாணவர்களை வழிப்படுத்தவும்.

**படி 6 :** ஒரே கதையை பல்வேறு விதமாக முன்வைக்கும் போது மொழியை வெவ்வேறு விதமாக கையாள்தல் பற்றிக் கலந்துரையாடவும். அவ்வாறு பலவிதமான உபயோகம் அவசியமான ஒன்று என விளக்கவும்.

**பாட அலகு 04** : மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்

**தேர்ச்சி மட்டம் 4.3** : பல்வேறு ஊடகங்கள் மொழியைக் கையாளும் முறைகள், கோலங்களை ஒப்பீட்டு ரீதியாகப் பரீட்சித்துப் பார்ப்பார்.

**செயற்பாடு 01** : நேரம் - 15 நிமிடங்கள்

**படி 1 :** தொலைக்காட்சியில் பாடல் கேட்டு ஒரு SMS (குறுஞ்செய்தி) எழுதும் படி ஒரு மாணவனை அழைக்கவும்.

**படி 2 :** ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தவும். செய்தி எழுதும் பொருத்தப்பாடு பற்றிக் கலந்துரையாடவும்.

**படி 3 :** நவீன ஊடகத் தொழில்நுட்பங்களால் மொழிப்பாவனையில் ஏற்பட்டுள்ள சவால்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.

**படி 4 :** ஆங்கில எழுத்துக்கள், ஆங்கிலமல்லாத மொழிகள் பயன்படுத்தப்படுவது பற்றியும் அவர்கள் நவீன தொழில்நுட்பநிலை சவாலை எதிர்கொள்ளவில்லை எனவும் தம் சொந்த எழுத்துக்களை தாமாக பயன்படுத்துபவர்களே இத்தகைய சவாலை எதிர்கொள்வார்கள் என்பது பற்றியும் கலந்துரையாடவும்.

**படி 5 :** ஒரு தொலைநகல் அனுப்ப ஆங்கில எழுத்தைப் பயன்படுத்தி, ஒரு செய்தியைத் தயார் செய்யவும்.

**படி 6 :** அதனை அடுத்தவர்களுடன் பரிமாறி வாசிக்கப் பண்ணவும்.

**பாட அலகு 04** : மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்

**தேர்ச்சி மட்டம் 4.4** : வெகுஜன மொழிப் பயன்பாட்டு பலம், பலவீனம் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** நாளாந்த பத்திரிகைகள் சிலவற்றை வகுப்புக்குக் கொண்டு வரவும்.

**படி 2 :** ஒவ்வொரு பத்திரிகையிலும் உள்ள பிரதான செய்தித் தாளினை பலகையில் காட்சிப்படுத்தும்படி மாணவர்கள் சிலரைப் பணிக்கவும்.

**படி 3 :** ஒவ்வொரு தலைப்பின் ஆக்கத்திறன் பற்றி விசாரிக்கவும்.

**படி 4 :** அத்தலைப்புக்கள் வாசகர்களை எவ்வளவு தூரம் கவரும் என்பதைக் கலந்துரையாடவும்.

படி 5 : அச்செய்தித் தலைப்புக்களையும் செய்திகளையும் வேறு விதமாக எழுதும் படி ஒரு ஏற்பாட்டை வழங்கவும் (பிரதேச மொழிகளில்).

படி 6 : சில ஒப்படைகளை மட்டும் வகுப்பில் முன்வைக்கப் பண்ணவும்.

படி 7 : பிரதேச மொழிகளை தேசிய செய்திகளில் பயன்படுத்த முடியாது என கலந்துரையாடவும்.

**பாட அலகு 05** : பொது மக்கள் தொடர்பு

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையை சிறப்பாகக் கொண்டு, பலமான மக்கள் தொடர்பு எத்தகையது என்பதை விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : பண்டிகைத் தினமொன்றில் வீட்டுக்கு வரும் விருந்தினர்களைச் சித்திரிக்க வகிபாகமேற்றல் ஒன்றை முன்வைக்க மாணவர் குழுவொன்றை வழிப்படுத்தவும்.

படி 2 : விருந்தினரை வரவேற்க வீட்டில் இருப்போர் நடவடிக்கை எடுக்கும் விதம், பயன்படுத்தும் சொற்பிரயோகங்கள், சமிக்கைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடவும்.

படி 3 : பண்டைய சமூகத்தில் வீட்டின் முன்பகுதி விருந்தினர்களுக்கென்றே அமைக்கப் பட்டிருந்ததைக் கலந்துரையாடவும்.

படி 4 : விருந்தினரை வரவேற்கும் பல்வேறு சடங்கு முறைகள் இருந்தமை பற்றி கலந்துரையாடவும்.

படி 5 : விருந்தினரை வரவேற்கும் சடங்கு, சம்பிரதாயங்களைக் கலந்துரையாடி அன்றும் இன்றும் எப்படி என ஒப்பிட்டுக் காட்டுங்கள்.

**பாட அலகு 05** : பொது மக்கள் தொடர்பு

**தேர்ச்சி மட்டம் 5.2** : மக்கள் தொடர்புக்காகப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு கருவிகள், விதங்களை பரீட்சித்துப் பார்ப்பார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : பாடசாலையின் ஊடக விழாவுக்காக சான்றிதழ்கள், பரிசுகள், கண்காட்சி நடத்துதல், உபசரிப்பு நடவடிக்கைகள், ஒலிபரப்புக் கருவிகள், மேடைகளமைப்பு, சுவரெட்டி, பதாகை ஆகிய பல்வேறு விடயங்களுக்காக அனுசரணை வழங்கு வதற்காக சில மாணவர்களை ஏற்பாடு செய்யுங்கள்.

படி 2 : பாடசாலை ஊடக அதிகாரிகளாக வேறு சில மாணவர்களை ஏற்பாடு செய்யவும்.

**படி 3 :** ஏனைய மாணவர்களை அவதானிப்பாளர்களாகத் தெரிவு செய்யவும்.

**படி 4 :** அனுசரணையாளர்களுடன் கலந்துரையாடலை நடத்தவும். அடிப்படை நிபந்தனைகள் குறித்து ஒருமித்த கருத்துக்கு வருதல். வர்த்தகர்களின் நிபந்தனைகளைக் கலந்துரையாடவும். ஊடகச் சமூகத்துக்கு கூடிய நன்மைகள் கிடைக்கும் வண்ணம் கலந்துரையாடவும்.

**படி 5 :** கலந்துரையாடல் பற்றி அவதானிப்பாளர்களின் கருத்தைப் பெறவும்.

**படி 6 :** மக்கள் தொடர்பு அனுசரணையாளர்களின் முக்கியத்துவத்தையும் அவர்கள் அனுசரணை வழங்குவதால் நன்மதிப்பு அதிகரிக்கும் அல்லது வர்த்தக விருத்திக்காக என்பதைக் கலந்துரையாடவும்.

| | | |
|---|---|---|
| **பாட அலகு 05** | : | பொது மக்கள் தொடர்பு |
| **தேர்ச்சி மட்டம் 5.3** | : | மக்கள் தொடர்புக்காகப் பல்வேறு தேர்ச்சிகளை வெளிக் காட்டுவார். |
| **செயற்பாடு 01** | : | நேரம் - 30 நிமிடங்கள் |

**படி 1 :** நாளாந்த பத்திரிகைகள் சிலவற்றை வகுப்பில் பகிர்ந்தளிக்கவும்.

**படி 2 :** மாணவர்கள் குழுக்களாக பத்திரிகையை வாசித்து விழாக்கள், திறப்பு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் பற்றி பத்திரிகையில் வந்திருக்கும் செய்திகளை இனங்காண வழிப்படுத்தவும்.

**படி 3 :** ஒவ்வொரு குழுவும் ஒரு செய்தியை உரத்து வாசிக்கப் பண்ணவும்.

**படி 4 :** ஊடகக் கழகத்தில் முன்னால் நடைபெற்ற அல்லது நடைபெறவுள்ள விஷேட நிகழ்வொன்றைப் பற்றி, பத்திரிகைச் செய்தியொன்றை வெளியிடுவதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடவும்.

**படி 5 :** தெரிவு செய்யப்பட்ட ஒரு விடயம் அல்லது பணி பற்றிய ஓர் ஊடக அறிவிப்பைத் தயார் செய்யப் பணிக்கவும்.

**படி 6 :** ஒவ்வொரு குழுவும் தயாரித்த ஊடக அறிவிப்புக்களைக் காட்சிப்படுத்த வழிப்படுத்தவும். அனைத்து மாணவர்களும் வந்து அவற்றை வாசிக்க வழிப்படுத்தவும்.

**படி 7 :** குழுக்களின் அறிவிப்புக்களை ஒன்று திரட்டி, ஒரே அறிவிப்பாகத் தயாரித்து அவற்றை அனைவரும் எழுதிக்கொள்ள வழிப்படுத்தவும்.

**படி 8 :** இந்த அறிக்கையை ஊடகங்களுக்குத் தபால் மூலம் அனுப்புவதற்காக அவற்றின் முகவரிப் பட்டியலொன்றைத் தயார் செய்து வருமாறு ஓர் ஒப்படை வழங்கவும்.

**பாட அலகு 05** : பொது மக்கள் தொடர்பு

**தேர்ச்சி மட்டம் 5.4 :** மக்கள் தொடர்பு நிகழ்ச்சியொன்றைத் திட்டமிடும் படிமுறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** பாடசாலையின் ஊடக விழாவொன்று நடத்துவது பற்றிக் கலந்துரையாடவும்.

**படி 2 :** அவ்விழாவில் பங்குபெறச் செய்யும் மற்றும் கவனத்தைப் பெற விரும்பும் பிரிவினர் யார் என்பதைப் பலகையில் எழுத மாணவர்களை வழிப்படுத்தவும்.

**படி 3 :** அந்த விழாவுக்கு அதிதிகளை அழைக்க வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கவும். பிரதம அதிதியின் பயன் யாது? கலந்துரையாடவும்.

**படி 4 :** பாடசாலை ஊடாக விழாவில் பிரதேசத்திலுள்ள பிரதான ஊடகவியலாளர்களை அழைத்து பாராட்டு வழங்குவது எவ்வளவு பயனுள்ளது என்று கலந்துரையாடவும்.

**படி 5 :** அவ்வாறு வழங்கப்பட வேண்டியவர்கள் யார்? என்ற பட்டியலில் குறைந்தது ஐவரின் பெயர் அடங்கியதாக தயாரிக்கப் பண்ணவும்.

**படி 6 :** அந்த ஐவர் பற்றிய தகவல்களைத் திரட்ட ஓர் ஏற்பாட்டை வழங்கவும்.

**பாட அலகு 06** : ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி மட்டம் 6.1 :** ஊடகக் கலாசாரத்தின் இயல்பு, தேவை, பரவல் என்பவற்றை விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** இன்றைய இளைஞர்களின் ஜனரஞ்சகமான நடத்தை கோலங்கள் சிலவற்றை பலகையில் எழுத வழிப்படுத்தவும்.

**படி 2 :** ஒவ்வொரு நடத்தையும் ஏன் அவர்களுக்கு முக்கியமாக அமைகின்றது எனக் கலந்துரையாடவும்.

**படி 3 :** அத்தகைய நடத்தைகள் அவர்களை வந்தடைந்தது எந்த வழியாக என்பதைக் கலந்துரையாடவும். அது வெகுஜன ஊடகத்தால் என்பதை உறுதிப்படுத்தவும்.

**படி 4 :** அத்தகைய நடத்தைகளை இளைஞர்களிடையே ஸ்தாபிப்பதற்கான தேவை, வெகுஜன ஊடகங்களுக்கு ஏற்படக் காரணம் எது என்பதைக் கலந்துரையாடவும்.

படி 5 : வெகுஜன ஊடகத்தின் பின்னணியிலுள்ள வர்த்தக சமூகத்தினரால் இளைஞர்களின் நடத்தை கையாளப்படுவது, வர்த்தக நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்வதற்காகவெனக் கலந்துரையாடவும்.

படி 6 : வெகுஜன ஊடகங்களில் வரும் பல்வேறு நடத்தைகள் மிகவும் கவர்ச்சி கரமானது என்றும் அவை புறக்கணிக்க முடியாதபடி முன்வைக்கப்படுகிறது என்பதையும் கலந்துரையாடவும்.

படி 7 : சமூக நடத்தையைத் தீர்மானிப்பதில் சமயம், கல்வி, மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை விட, ஊடகம் செல்வாக்குச் செலுத்துவதை உறுதிப்படுத்தவும்.

படி 8 : மக்கள் வாழ்க்கையை கையாளும் அதிகாரம் ஊடகத்தினால் கைப்பற்றப் பட்டுள்ளமை, ஊடகக் கலாசாரம் தோன்றக் காரணம் என்பதை உறுதிப் படுத்தவும்.

**பாட அலகு 06** : ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி மட்டம் 6.2** : ஊடகக் கலாசாரத்தின் பரவலையும் அதன் கட்டமைப்பையும் விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

படி 1 : சமூக நடத்தைகளில் மாற்றம் ஏற்படுவது தொடர்பான கட்டுரைகள் அல்லது செய்திகள் அடங்கிய பத்திரிகைகள் சிலவற்றை வகுப்பில் கொண்டு வந்து, குழுக்களுக்கு வழங்கவும்.

படி 2 : அத்தகைய மாற்றங்கள் நிகழும் இயல்பு பற்றி, ஒரு கலந்துரையாடலை மேற் கொள்ளவும்.

படி 3 : அந்த ஒவ்வொரு கட்டுரைச் செய்திகளினூடாக ஏற்பட்டுள்ள நடத்தை மாற்றங்களை இனங்கண்டு, பட்டியலிட குழுக்களை வழிப்படுத்தவும்.

படி 4 : ஏற்பட்டுள்ள மாற்றங்களை முன்வைக்க குழுக்களுக்கு நேரம் வழங்கவும்.

படி 5 : தெரிவு செய்யப்பட்ட சில மாற்றங்களை பலகையில் பட்டியலிடவும்.

படி 6 : அத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்த விதம் பற்றியும் அதில் ஊடகங்களின் தொடர்பு பற்றியும் கலந்துரையாடவும்.

**பாட அலகு 06** : ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி மட்டம் 6.3** : ஊடகக் கலாசாரத்தின் செல்வாக்கை ஒப்பிட்டு, சமநிலையில் விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** ஒரு வானொலிப் பெட்டியை இயக்கி, மொழியைக் கொச்சைப்படுத்தும் புதிய பாடல் ஒன்றைச் செவிமடுக்க ஏற்பாடு செய்யுங்கள்.

**படி 2 :** அந்தப் பாடலில் கையாளப்பட்டுள்ள பேச்சுத் தமிழ் பற்றிய ஒரு கலந்துரை யாடலை மேற்கொள்ளவும்.

**படி 3 :** அந்தப் பாடலில் மொழியின் கலாசார ஆக்கிரமிப்பு பற்றி கலந்துரையாடவும்.

**படி 4 :** மரபு ரீதியான சமூகத்தில் அத்தகைய கலாசார ஆக்கிரமிப்பினால் ஏற்பட்டுள்ள அதிர்வுகளின் இயல்பு பற்றி கலந்துரையாடவும்.

**படி 5 :** அந்த வானொலி எத்தகைய சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதைக் கலந்துரையாடவும்.

**படி 6 :** கலாசாரப் பரிமாற்றத்தினால் ஒரு கலாசாரம் செறிவடைவதுடன் கலாசார ஆக்கிரமிப்பினால் கலாசாரம் கடுமையாக மாற்றத்துக்குட்படுவதையும் விளக்கவும்.

**பாட அலகு 06** : ஊடகக் கலாசாரம்

**தேர்ச்சி மட்டம் 6.4** : ஊடகக் கலாசாரத்துக்கும் சந்தைக்குமிடையேயுள்ள இடைத்தொடர்பை விளக்குவார்.

**செயற்பாடு 01** : நேரம் - 30 நிமிடங்கள்

**படி 1 :** சில பத்திரிகைகளை மாணவரிகளிடையே பகிர்ந்தளிக்கவும்

**படி 2 :** அவற்றின் விளம்பரங்கள் பற்றிய ஓர் ஆய்வை மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கவும். அதில் விளம்பரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம், அது பத்திரிகையின் மொத்த இடத்தின் விகிதம், விளம்பரத்தின் அளவுகள், விளம்பர தாரர்கள், விளம்பரங்களின் உள்ளடக்கம், விளம்பரங்களின இயல்பு, விளம்பர உத்தி, ஆக்கத்திறன், நிறங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

**படி 3 :** ஓர் அறிக்கை தயாரித்து வகுப்பில் முன்வைக்கும்படி குழுக்களை வழிப்படுத்தவும்.

**படி 4 :** ஒரு பெரிய விளம்பரத்தை மாணவர்களின் விருப்பப்படி தெரிவு செய்து கொள்ளவும்.

**படி 5 :** அதனைப் பலகையில் காட்சிப்படுத்தி, ஊடகம் சமூகத்தில் ஏற்படுத்தும் செல்வாக்கைக் கலந்துரையாடவும்.

# பாடசாலை மட்ட மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்

**தேர்ச்சி 1.0 (பாடப்பரப்பு – தொடர்பாடற் கற்கைப் பிரவேசம்)**

**குழு ஒப்படை:** பாடசாலையின் தொடர்பாடல் பணிகளை இரண்டு மணித்தியாலங் களில் ஆராய்ந்து அறிக்கையிடவும்.

**தனி ஒப்படை:** தொடர்பாடல் வகைகள், தொடர்பாடல் விதங்கள் உள்ளடங்குகின்றன என்ற விதத்தில் ஓர் உருவை A.3 தாளில் வரையவும்.

**தேர்ச்சி 2.0 (பாடப்பரப்பு – தொடர்பாடலும், சமூகமும்)**

**குழு ஒப்படை:** பத்துப் பேர்களுடன் கலந்துரையாடி தொடர்பாடலுக்கும், சமூகத்துக்கு மிடையேயுள்ள தொடர்பைப் பற்றி அவர்களது கருத்தையும் அது பற்றிய ஒரு மதிப்பீட்டையும் உள்ளடக்கத்தில் ஓர் அறிக்கை தயாரிக்கவும்.

**தனி ஒப்படை:** பத்துப் பேர்களுடன் கலந்துரையாடி தொடர்பாடல் ஏன் தேவைப் படுகிறது என்பது பற்றிய அவர்களது கருத்தையும் அது பற்றிய மதிப்பீட்டையும் அறிக்கையிடவும்.

**தேர்ச்சி 3.0 (பாடப்பரப்பு – மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்)**

**குழு ஒப்படை:** ஊடுகாட்டித் தாள்கள் நான்கினைப் பயன்படுத்தி மேந்தலை எறிவை ஊடாக ஒரு முன்வைப்பைச் செய்யவும்.

**தனி ஒப்படை:** நான் யார்? என்ற தலைப்பில் 4 பக்கங்களில் கட்டுரை எழுதுக.

**தேர்ச்சி 4.0 (பாடப்பரப்பு – மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்)**

**குழு ஒப்படை:** பண்பலை (F.M) வானொலி அலைவரிசைகள் மூன்றின் செய்திக ளுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியை ஒப்பிட்டு ஓர் அறிக்கை தயார் செய்க. உதாரணம் காட்டி அறிக்கையை வகுப்பில் முன்வைக்கவும்.

**தனி ஒப்படை:** ஒரு பத்திரிகையிலிருந்து அபிவிருத்திசார் செய்தியொன்றைத் தெரிவு செய்து, அதனை வானொலிச் செய்தியை மாற்றி எழுதுக.

**தேர்ச்சி 5.0 (பாடப்பரப்பு – மக்கள் தொடர்பு)**

**குழு ஒப்படை:** திருமண வைபவமொன்றில் பயன்படுத்தப்படும் மக்கள் தொடர்பு முறைகள் (பழைய, புதிய) பற்றி ஆராய்ந்து ஓர் அறிக்கை தயாரிக்குக.

**தனி ஒப்படை:** ஒரு வைத்தியசாலை, அரசாங்கக் காரியாலயம், ஒரு வர்த்தக வங்கி, ஒரு கூட்டுறவுக் கிளை, ஒரு புடவைக்கடை, தேனீர்க்கடை போன்றவற்றில் இரண்டு இடங்களைத் தெரிவு செய்து, அவற்றில் மக்கள் தொடர்பு செயற்படும் விதத்தை ஒப்பிட்டு அறிக்கையிடுக.

**தேர்ச்சி 6.0 (பாடப்பரப்பு – ஊடகக் கலாசாரம்)**

**குழு ஒப்படை:** இரு வயோதிப உறவினர்களுடன் உரையாடி, அவர்களின் சிறு பராயத்தில் இருந்ததை விட இன்றைய சமூகத்தின் பழக்க வழக்கங்கள், உடை அணிகள், உணவு, பானங்கள் என்பவற்றில் கலாசார அம்சங்கள் மாற்றமடைந்துள்ள விதத்தையும் அந்த மாற்றத்தில் வெகுஜன ஊடகத்தின் பங்கையும் காட்டும் அறிக்கை யொன்றைத் தயாரிக்கவும்.

**தனி ஒப்படை:** தொலைக்காட்சி விளம்பரங்கள் ஐந்தைக் குறிப்பிட்டு, அவற்றை ஆராய்ந்து அவை மக்களுக்கு வழங்கும் செய்தியையும் ஊக்குவிப்பு உத்திகளையும் பற்றிய ஒரு விமர்சன ரீதியான அறிக்கை தயாரிக்க.

**அறிவுறுத்தல்கள்**

1. மாணவர்களின் ஒப்படையின் ஒரு பிரதியை பாடசாலை நூலகத்தில் அல்லது ஊடகப் பிரிவில் அல்லது வகுப்பு நூலகத்தில் வைக்கவும். அடுத்த வருடங்களில் வரும் மாணவர்கள் அதனைப் படிக்க ஏற்பாடு செய்யவும்.

2. தேவையானபடி இவ்வொப்படைகள், செயற்பாடுகள் என்பவற்றின் தலைப்புகளை மாற்றிக்கொள்ள ஆசிரியர்களுக்கு முடியும்.

   (தேர்ச்சி மட்டம் 4 – 3 புள்ளிகள், தேர்ச்சி மட்டத்தைவிடக் குறைவு 2 – 1 என்ற வகையில் புள்ளிகள் வழங்கவும்.)


**பின்னிணைப்பு**

1. உங்கள் பாடசாலையில் ஓர் ஊடகக் கழகத்தை ஆரம்பிக்கவும்.

**பின்னணி**

தொடர்பாடல் மற்றும் ஊடகச் செயற்பாடுகள் முன்னெப்போதுமில்லாத வகையில் இன்றைய சமூகத்தில் அதிக செல்வாக்கைச் செலுத்துவதுடன் அச் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதையும் காணலாம். தொடர்பாடல் ஊடக நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட பாரிய நிறுவனங்களாக இருப்பதுடன் அவற்றின் செல்வாக்கிலிருந்து ஒருவரும் விடுபட முடியாது என்ற நிலையே காணப்படுகிறது. எனவே, தொடர்பாடல் ஊடகங்களைப் பகுப்பாய்வு செய்து கொள்வதற்கும் அவற்றைத் தெரிவு செய்து புரிந்து கொள்வதற்கும் தேவையான போதனைகளை மாணவர்களுக்கு வழங்குவது கல்வித் தொகுதியின் கடமையாகும். மறுபுறமாகத் தொடர்பாடற் தேர்ச்சி இல்லாமல் தமது தனிப்பட்ட வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதும் கொண்டு நடத்துவதும் கூட முடியாத காரியமாக உள்ளது. எனவே, ஒரு வாழ்க்கைத் தேர்ச்சியாக தொடர்பாடற் தேர்ச்சியை அமைத்துக் கொள்வது அத்தியாவசியமாயுள்ளது. மேலும், ஆக்கத்திறன் வாய்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தொடர்பாடல் ஊடகச் சூழல் மூலம் பல நன்மைகளை அடைந்து கொள்ள முடியும். பாடசாலை ஊடகக் கழகத்தை அமைப்பதன் நோக்கம் அதுவாகும்.

ஒரு பாடசாலையின் சாதாரண அல்லது உயர் தரத்தில் தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் என்ற பாடத்தை கற்பதாயின், அப்பாடசாலையில் ஓர் ஊடகக் கழகத்தை அமைத்து நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். வகுப்பறைச் செயற்பாடுகளுக்கு சமாந்தரமாக செய்முறைப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பாடசாலை ஊடகக் கழகம் அவசியம். பாடசாலை ஊடகச் கழகத்தின் உத்தேச அமைப்பைப் பின்வருமாறு காட்டலாம்.



### (01) உள்ளகக் குழு

ஊடகக் கழகத்தின் உச்சத்தில் உள்ள நெறிப்படுத்தும் குழுவே இப் பெயரால் அழைக்கப்படும். அதன் பிரதானி அதிபராவார். கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதி அதிபர், ஊடகக் கழகப் பொறுப்பாசிரியர்கள் இதில் அங்கம் வகிப்பர். அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் சேர்த்துக் கொள்ளவும். அதிபருக்கு முடியும். உதாரணமாக சங்கீத, சித்திர, நடன ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளலாம். இவ்வாறு உள்ளகக்குழு பாடசாலை ஆசிரியர்களை அதிகமாகக் கொண்டிருத்தல் அதன் நடவடிக்கைகளை இலகுபடுத்தும். உதாரணமாக ஊடகக்கழகத்தின் செயற்றிட்டங்கள் சார்ந்ததாக ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதால் அதன் ஒவ்வொரு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். உள்ளகக் குழுவின் பணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. ஊடகக் கழக நடவடிக்கை தொடர்பான இறுதித் தீர்மானங்களை எடுத்தல்
2. வருடாந்த திட்டமிடலின் இறுதி அங்கீகாரத்தை வழங்தல்
3. ஊடகக் கழகத்தின் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ளவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
4. தருணத்துக்கேற்ப அனுமதிகளை வழங்குதல்.
5. ஊடகக் கழகக் கூட்டங்களில் பங்குபற்றல்
6. ஊடகக் கழகத்தின் வெளியக நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்தல்.
7. அதிபர் விரும்பும் ஏனைய ஈடுபாடுகள்.

### (02) வெளியகக் குழு

ஊடகக் கழகத்தின் நடவடிக்கைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக வெளியக அனுசரணையைப் பெற்றுக் கொள்வது வெளியகக் குழுவினது / அமைப்புக்களின் நோக்கமாகும். பாடசாலை மட்டத்தில் ஓர் ஊடகக் கழகத்தை நடத்தும் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் பல தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான அனுசரணை தேவையாகும். உதாரணமாக ஒரு நிகழ்ச்சித் திட்டத்துக்கான பயிற்சியாளர் ஒருவரைப் பெற்றுக் கொள்ளல், மாநாடு ஒன்றுக்கு பேச்சாளர் ஒருவரை பெற்றுக்கொள்ளல், போட்டி நிகழ்வுக்கான சான்றிதழ்களைப் பிரசுரித்தல், விஷேட வேலைத்திட்டமொன்றிக்கான பதாகை யொன்றைத் தயாரித்தல், ஊடக விழாவுக்கான விருதுகளை ஆக்கிக் கொள்ளல் போன்றவற்றைக் கூறலாம். இத்தகைய தேவைகள் ஏற்படும் போது அனுசரணையாளர்களைத் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்படும். இந்தச் சிரமத்திலிருந்து விடுபட, பாடசாலை ஊடகக் கழகத்தின் நலன் விரும்பிகள் சிலரை கழகத்தின் ஆரம்பத்திலிருந்து இணைத்துக் கொள்ளல் வெளியகச் சமூகத்தின் அமைப்பின் நோக்கமாகும். இதற்காக பின் வருபவர்களைத் தனித்தனியாக இனங்கண்டு கொள்ள வேண்டும்.

1. பழைய மாணவ, மாணவிகள்
2. பெற்றோர்
3. இலக்கிய வாதிகள்/ கலைஞர்கள்
4. அறிஞர்கள்
5. ஊடக உரிமையாளர்கள், ஊடகவியலாளர்கள்
6. வர்த்தகர்கள்
7. அரச உத்தியோகத்தர்கள்
8. அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள்
9. முன்னைய ஆசிரியர்கள், அதிபர்கள்
10. மக்கள் பிரதிநிதிகள்

**வெளியகக் குழுவை பின்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்**

1. வெளியகக் குழுவை அமைப்பதற்கான ஒரு குழுவை ஊடகக் கழகத்தில் இருந்து தெரிவு செய்து கொள்ளவும்.
2. அக்குழு கூடி பொருத்தமான தனியாட்கள் அல்லது நிறுவனங்களின் பட்டியலொன்றைத் தயாரித்தல்.
3. அப்பட்டியலை ஊடகக் கழகப் பொறுப்பாசிரியரிடம் காட்டி, கலந்துரையாடி திருத்திய மைத்து ஆரம்ப அங்கீகாரத்தை பெறல்.
4. அதிபரிடம் பட்டியலைக் கொடுத்து அங்கீகாரம் பெறல்.
5. பட்டியலில் உள்ளவர்களின், நிறுவனங்களின் தகவல்களை முடியுமான அளவு திரட்டிக் கொள்ளவும். அவற்றுள் உரியவரின்
   - பெயர், சொந்த முகவரி, உத்தியோக முகவரி, தொலைநகல் முகவரி
   - பதவி, துறை
   - தொலைபேசி எண்
   - பாடசாலையுடன் உள்ள தொடர்பு
   - வேறு பொருத்தமான தகவல்கள் - உள்ளடங்க வேண்டும்
6. தயாரிக்கப்பட்ட விபரமான ஆவணத்தை ஊடகக் கழகப் பொறுப்பாசிரியரிடம் / அதிபரிடம் ஒரு கோப்பில் இட்டு, எழுத்து மூல அங்கீகாரம் பெற்றுக் கொள்க.
7. அப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுக்கு ஒரு கடிதம் எழுதல். அதற்கு அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டமை, ஊடகக் கழகத்தில் தீர்மானிக்கப்பட்டமை, ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றமை போன்ற விடயங்களைக் குறிப்பிட வேண்டும்
8. ஊடகக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தத் திட்டமிடலின் பிரதியொன்றையும் கடிதத்துடன் அவர்களுக்கு அனுப்புதல்.
9. ஊடகக் கழகக் கூட்டத்தின் சுருக்க அறிக்கைகள், எதிர்காலத் திட்டங்கள் போன்ற வற்றையும் அனுப்பவும்.

10 . ..........................................................................................

இவ்வாறு வெளியகக் குழுவை, தொடர்ந்து விழிப்பூட்டல் செய்வதன் மூலம் அவர்களிடையே ஊடகக் கழக நடவடிக்கைகள் பற்றிய ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தலாம். அதனடிப்படையில் ஊடகக் கழகத்துக்கு தன்னால் முடியுமான பங்களிப்பை செய்ய முன் வருபவர், அத்துடன் பல உதவிகளைக் கேட்டு எழுதவும் ஊடக சமூகத்துக்கு முடியும். இங்கு விஷேடமாகக் குறிப்பிட வேண்டிய விடயம் யாதெனில், வெளியகக் குழுவை இணைக்கும் பணியை உள்ளகக் குழுவே செய்ய வேண்டும் என்பதாகும். எனவே, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஊடகக் கழக ஊழியர், உள்ளகக் குழுவின் அனுமதி பெறாது வெளியகக் குழு அங்கத்தவர்களுடன் எவ்விதத் தொடர்பையும் கொள்ளக் கூடாது. அனுப்பும் கடிதங்களிலும் அதிபர்/ ஊடகக் கழகப் பொறுப்பாசிரியரிடம் அனுமதி பெறப்பட வேண்டும்.

### (03) தலைவர் / பிரதித் தலைவர் / உப தலைவர்

ஊடக சமூக தலைவர்களின் முக்கிய பணி கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதாகும். மற்றும் கடிதத்தில் கையொப்பமிடவும் வேண்டும். தலைவர் கழகத்தின் வருடாந்த திட்டமிடலைத் தயாரித்து பொதுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். பாடசாலையில் உள்ளகக் குழுவை உத்தியோகபூர்வமாக இணைத்தலும் இவர்கள் பொறுப்பாகும். ஊடகக் கழகத்தின் நடவடிக்கைகள் பற்றி தேடிப்பார்ப்பதும், விடயங்களைத் திட்டமிடுவதும் ஒழுங்கமைப்பதும் நடைமுறைப்படுத்துவதும் இவர்களின் பொறுப்பாகும். ஊடக விழா, யுனெஸ்கோ ஊடகத் தினம், ஊடக வேலைப் பயிற்சி வாரம் என்பவற்றை நடைமுறைப் படுத்தல் தலைவரின் பணியாகும்.

### (4) செயலாளர் / இணைச் செயலாளர் / பிரதிச் செயலாளர் / உதவிச் செயலாளர்

ஊடகச் சமூக செயலாளர் அணியின் பிரதான பணி ஊடகக் கழகத்தின் ஆவணங்களை உரிய முறையில் பேணுவதாகும். அவற்றில் அறிக்கைப் புத்தகங்கள், அறிவிப்புக்கள், அறிவித்தல் பலகை என்பன பிரதானமாகும். கூட்டங்களுக்கு அழைத்தல், முன்னைய கூட்ட அறிக்கைகள் சமர்ப்பித்தல், கூட்டங்களில் அனுமதிக்கப்பட்ட அறிவித்தல்களை விடுத்தல், கூட்ட அறிவித்தல்களை அறிவித்தற் பலகையில் காட்சிப்படுத்தல், அங்கீகாரம் பெற்று ஊடகக் கலந்துரையாடல் நடத்துதல், மக்கள் தொடர்பு நடவடிக்கைகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், ஊடகக் கழகத்தின் பெயர்ப்பலகையைப் பேணல், அங்கத்துவ அடையாள அட்டை, இலச்சினை என்பன பெற்றுக் கொடுத்தல், ஊடகச் சமூகத்தின் கீதத்தைப் பாடப் பயிற்சியளித்தல் என்பனவும் செயலாளர் / ஆளணியின் கடமையாகும். இவர்கள் தமது கடமைகளைச் செய்யும்போது கணினியைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்தது.

### (5) பொருளாளர் / பிரதிப் பொருளாளர் / உதவிப் பொருளாளர்

ஊடகக் கழகத்தின் அங்கத்துவப் பணம் சேகரித்தல், நிதி சேகரிப்பு உட்பட பணம், சொத்து தொடர்பான அனைத்துப் பணிகளும் பொருளாளர் ஆளணியின் கடமைகளாகும். கணக்கேடுகளை உரிய முறையில் பேணல், பற்றுச்சீட்டுக்கள் வழங்குதல், சேகரிக்கப்பட்ட வற்றை பிரதான பொருளாளராக இருக்கும் ஆசிரியரிடம் ஒப்படைத்தல் அல்லது ஊடகக் கழகக் கணக்கில் இடலும், பணம், சொத்துக்கள் சார்ந்த அனைத்து ஆவணங்களை முன்வைத்தல், திட்டமிடல் என்பனவும் பொருளாளர் அவர்களின் பொறுப்புக்களாகும். இவற்றிற்காக கணினியைப் பயன்படுத்துவது சிறப்பானது.

### (6) செயற் குழு

ஊடகக் கழகத்தின் விருப்பத்தின் பேரில் வகுப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆண், பெண் பிரதிநிதித்துவம் பேணப்படும் வகையில் செயற்குழு அமைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஊடகச் சமூகத்தின் உத்தியோகப்பூர்வ கலந்துரை யாடல்களில் பங்குபற்றல், தமது வாக்கை அளிப்பதன் மூலம் ஊடகக் கழகக் கூட்டத்தில் தமது கருத்தைத் தெரிவித்தல், அங்கத்துவ விண்ணப்பங்களை அங்கீகரித்தல், கழகத்தின் இடைக்காலத் தீர்மானங்களை அமுல்படுத்துதல் செயற்குழு உறுப்பினர்களின் கடமையாகும். அத்துடன் அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களும் ஏதாவது ஒரு செயற்திட்டப் பணி களுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதுடன் தான் பணியாற்றும் செயற்திட்டத்தை பொதுக் கூட்டத்தில் அறிவித்து, அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

### (7) பிரதான அமைப்பாளர் / பிரதி அமைப்பாளர்

இப்பதவிகள் நேரடியாக ஊடகக் கழகத்தின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபட்டவை. அதாவது ஏழு செயற்திட்டங்களின் பணிகளை உரிய முறையில் நெறிப்படுத்துவது தொடர்பில் பிரதான பிரதியமைப்பாளர்கள் வகைகூற வேண்டும். ஒவ்வொரு வருடத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின், அதன் கௌரவமும் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனின் அதன் பொறுப்பும் இவர்களையே சாரும்.

## (8) செயற்றிட்ட அமைப்பாளர் / பிரதி அமைப்பாளர்

ஒவ்வொரு செயற்றிட்டத்துக்கும் அமைப்பாளர் மற்றும் பிரதி அமைப்பாளர் நியமிப்பதும் ஊடகக் கழகத்தின் பொதுக் கூட்டத்தின் போது நடைபெறும். அவர்களது பிரதான பணி. பொறுப்புக்கள் செயற்றிட்டத்தின் வருடாந்த திட்டமிடலைத் தயாரித்து நடைமுறைப் படுத்துவதாகும். அந்த வருடத்தில் போதிய அளவு செயற்திட்ட நடைமுறை இடம் பெற்றிருப்பின் அது தொடர்பான கௌரவமும், செயற்படுத்தப்படவில்லையெனின் அதற்கான பொறுப்பும் அவரையே சாரும். செயற்திட்டத்தின் வருடாந்தத் திட்டத்தை தயாரித்து ஊடகக் கழகக் கூட்டத்தில் அனுமதி பெறலும் நடைமுறைப்படுத்தத் தேவையான உதவிகளை வழங்குவதும், நெறிப்படுத்தலும் இவர்களின் பொறுப்பாகும்.

## (9) செயற்றிட்ட அங்கத்துவம்

ஊடகக் கழகத்தின் கீழ், ஏழு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதற்காக நிரந்தரமான அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியும். அவ்வாறு சேர்த்துக் கொள்ளாதிருக்கவும் முடியும். ஊடகக் கழகத்தின் விருப்பத்தின் பேரில் அது நடை பெறும். நிரந்தர அங்கத்தவர் குறிப்பிடப்பட்டாலும் இல்லாவிட்டாலும் ஊடகக் கழக உறுப்பினர் எவருக்கும் செயற்றிட்டதில் இணைந்து செயற்பட முடியும். இதன் கருத்து செயற்றிட்ட அங்கத்துவம் என்பது ஒரு திறந்த விடயம் என்பதாகும். இந்த ஏற்பாட்டுக்கான காரணம் நிரந்தர அங்கத்துவம் இல்லாதிருந்தும் ஏதாவது செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்களைச் செயற்றிட்டத்தில் இணைத்துக் கொள்வதாகும்.

## 10.1 ஆய்வு மற்றும் தேடல் செயற்றிட்டம்

ஊடகக் கழகத்தின் கீழ் உள்ள முதலாவது செயற்திட்டம், நிருவாகம், ஆய்வுத் தேடல் என்ற பிரயோகங்கள் சரிந்து கடுமையானதாகக் தோன்றவும் கூடும். மிகத் தெளிவான ஆய்வு மற்றும் தேடலில் ஈடுபட ஊடகக் கழகத்தினால் முடியும். ஆய்வு, தேடல் மூலம் புத்தறிவு ஏற்படும். பாடசாலையில் புத்தறிவைத் தேடும் சிறிய ஆய்வு மற்றும் தேடல்களின் ஊடகக் கழக அங்கத்தவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் பாரிய ஆராய்வினைச் செய்யும் அடிப்படை அனுபவத்தை அவர்கள் பெற்றுக் கொள்வர். பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய எளிமையான ஆராய்சி, மற்றும் தேடல்கள் பின்வருமாறு:

- பாடசாலையில் பத்திரிகை வாசிப்பது தொடர்பான ஓர் ஆய்வு
- பாடசாலை மாணவர்களிடையே ஜனரஞ்சமாகவுள்ள பத்துப் பாடல்களை இனங்காணும் ஓர் ஆய்வு
- கிராமிய வீடுகளில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்பவற்றின் பாவனை தொடர்பான ஒரு தேடல்
- கிராமக் கடையில் கொள்வனவு செய்யும் பத்திரிகையை வாசிப்பவர்களைப் பற்றி ஓர் ஆய்வு
- பாடசாலை நூலகத்தில் வாசிப்பவர்கள் பற்றிய ஓர் ஆய்வு
- மாணவர்கள் கற்றலுக்காகத் தொலைக்காட்சியை பயன்படுத்துவது தொடர்பான ஓர் ஆய்வு

ஓர் ஆய்வை அல்லது தேடலைச் செய்யும் போது குழுவாக இருப்பது மிகவும் பயனுடையது. அதன் மூலம் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு இலகுவாகச் செய்ய முடியும். ஆய்வு அல்லது தேடலின் முடிவுகளை ஊடகக் கழகத்தில் முன்வைப்பது சிறந்தது. அதன் மூலம் அதில் கண்டறிந்தவற்றை அனைவரும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அத்துடன் ஆய்வறிக்கையின் பிரதிகளை ஆய்வு அங்கத்தவர்களுக்கு வழங்க வேண்டும். மற்றும் பிரதிகளை நூலகம், உள்ளக, வெளியகக் குழுக்களுக்கு வழங்குவதும் பொருத்தமானது. இங்கு அறிக்கை என்பது அதிகமான பக்கங்களைக் கொண்ட ஆவணமாக எதிர்பார்க்கப் படுவதில்லை. மிகவும் சுருக்கமாக இருந்தால் போதுமானது.

## 10.2 திறன் விருத்திச் செயற்றிட்டம்

இச் செயற்றிட்டத்தின் கீழ், ஊடகக் கழக அங்கத்தவர்களின் திறன்களை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்த எதிர்பார்க்கப் படுகிறது. பயிற்சி நெறிகளின் காலம் எவ்வளவு என்பதை தீர்க்கமாகக் கூற முடியாது. அது சில மணித்தியாலங்களாக அல்லது சில நாட்களாக அமையலாம். தேவையைப் பொறுத்தும் நடைமுறைப்படுத்தும் சாத்தியத்தைப் பொறுத்தும் காலத்தைத் தீர்மானித்துக் கொள்ளலாம். அதிபரின் விருப்பத்தின் பேரில், அயற் பாடசாலையின் ஊடகக் கழக அங்கத்தவர்களையும் இத்தகைய பயிற்சி நெறிகளில் கலந்து கொள்ளச் செய்யலாம். ஊடகக் கழகத் தலைவர்களிடையே விருத்தி செய்யப்பட வேண்டிய நிகழ்வுகளைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. அதனைப் பயிற்றுவிப்பாளர்களும் கழகமும் தீர்மானிக்கும். சில உதாரணங்களை வழங்க முடியும்.

- செய்திச் சேகரிப்பு பற்றியது
- நிழற்படம் எடுப்பது
- நகைச்சுவை நடிப்பு
- காட்டூன் ஆக்கம்
- கவிதை எழுதுதல்
- சிறு கதை எழுதுதல்
- சுவர்ப்பத்திரிகை ஆக்கம்
- அறிவிப்பாளர் நுணுக்கங்கள்
- செய்திப் பதிப்பாக்கம்
- ........................................

திறன் விருத்திப் பயிற்சிகள் நடத்தும்போது ஏற்படும் இரு பிரச்சினைகளுண்டு. ஒன்று பொருத்தமான வளவாளர்களைப் பெறுவது. இரண்டாவது தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வது. இதற்காக அதிபரின் உதவியுடன் வெளியகக் குழுவின் பங்களிப்பைப் பெற முடியும். வெளியக உதவியைப் பெறுவதானால் பயிற்சிநெறி பற்றிய பூரண விளக்கம், உத்தேசச் செலவு என்பவற்றை முன்வைக்க வேண்டும். பயிற்சிநெறி முடிவில் ஊடகக் கழகத்தின் பெயரில் சான்றிதழ் வழங்கப்படுவது சிறந்தது. அத்துடன் பயிற்சி பெற்றவர்களின் திறமைகளைக் காட்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

## 10.3 ஆக்கச் செயற்றிட்டம்

ஊடகக் கழக அங்கத்துவ மாணவ, மாணவிகளின் பல்வேறு ஆக்கத் திறன்களை முன்வைக்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கான சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஓவியக் கண்காட்சி நடத்துதல்
- காட்டூன் கண்காட்சி
- புகைப்படக் கண்காட்சி
- சிறுகதைப் புத்தகமொன்றினைப் பிரசுரித்து வெளியிடல்
- பத்திரிகை அச்சடித்து வெளியிடல்
- சுவர்பத்திரிகை தயாரித்துக் காட்சிப்படுத்தல்
- இசை நிகழ்ச்சியொன்றை நடத்துதல்
- பாடசாலை வானொலிச் சேவையொன்றை நடத்துதல்

ஆக்கப் பணிகளைத் திட்டமிடுவது முதல் நடைமுறைப்படுத்துவது வரை சில காலம் எடுக்கலாம். ஆயினும், சிறந்த ஓர் ஆக்கத்தை முன்வைத்தலே முக்கியம். அதற்கான ஒரு செலவும் ஏற்படும். அதனை எவ்வாறு ஈடுசெய்வது என்பதையும் விஷேடமாகத் திட்டமிட வேண்டும். உதாரணமாக புத்தகம் வெளியிடும்போது அதனை விற்பனை செய்து பணம் பெறலாம். ஆயினும், அச்சடிக்கும் செலவை ஆரம்பத்திலேயே செய்ய வேண்டியிருக்கும். அதற்கான ஒரு முறையை யோசிக்க வேண்டும். எனவேதான் செயற்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த சிறிது காலம் எடுக்கும். இச்செயற்பாட்டில் ஈடுபடும் ஒருவர் அல்லது குழு இதற்கான திட்டத்தைத் தீட்ட வேண்டும். பெற்றோர்களின் உதவியையும் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

## 10.4 இரசனைச் செயற்றிட்டம்

இரசனை என்பது வாழ்க்கையின் ஒரு தேவை. ஊடகங்களின் பிரதான பணியாக அமைந்திருப்பது இரசிகர்களுக்குத் திருப்தியளிக்கும் விடயங்களை முன்வைப்பதாகும். ஆயினும், அவர்கள் பயனாளிக்குப் பொருத்தமான இரசனைக்கு வழிப்படுகின்றார்களா என்ற கேள்வி எழும்புகிறது. நல்லவற்றை இரசிக்கப் பழகிவிட்டால் மோசமானவற்றை புறக்கணிக்கப் பழகுவர். அப்பழக்கம் சிறு வயதிலிருந்தே ஏற்பட வேண்டும். எனவே பாடசாலைக் காலத்திலிருந்தே இவ்விதமான இரசனை உணர்வை ஏற்படுத்தவும், விமர்சிக்கவும் பழக வேண்டும். இரசனை வேலைத்திட்டங்களைத் திட்டமிடுவதில் இரண்டு பிரதான நோக்கங்கள் நிறைவேற்றப்பட முடியும். நல்லது கெட்டதைப் பிரித்தறியும் திறனை அங்கத்தவர்களுக்கு வழங்குவதே இதுவாகும். இந் நோக்கத்தை இரசனை நிகழ்ச்சிகளின் போது நிறைவேற்ற முடியும். ஊடகங்களில் மலிவான இரசனை தொடர்ந்து கிடைப்பதனால் அதன் பண்புத் தரத்தை அறிந்து கொள்வது முக்கியம். இரசனை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மாதிரிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- நூலகத்தில் புத்தகங்கள் சிலவற்றை வாசித்து இரசித்தல்
- நல்ல பாடல்களை இரசித்தல்
- நல்ல தொலைக்காட்சி நாடகங்களை இரசித்தல்
- மலிவான இரசனை நாடகத்தைப் பார்த்து விமர்சித்தல்
- பொருத்தமற்ற ஒரு பாடல் இறுவட்டை கேட்டு விமர்சித்தல்
- நடனமாடுவதற்கான பாடலுக்கும் சிந்திப்பதற்கான பாடலுக்கும் இடையிலான வேறுபாட்டை வரைவிலக்கணப்படுத்தல்
- தொலைக்காட்சி இசை நிகழ்ச்சியொன்றைப் பற்றி விமர்சித்து, இரசனை நிகழ்ச்சியை நடத்தும் போது அங்கத்தவர்களாக மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இதன் மூலம் பாடசாலையில் உயர் இரசனையுணர்வைத் தோற்றுவிக்க முடியும்.

## 9.5 சமூகத் தொடர்பாடல் செயற்றிட்டம்

இது பாடசாலையில் ஒரு புதிய விடயமாகும். மக்கள் என்பதால் விளக்கப்படுவது யார் என்பதை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். பாடசாலைக்குரியவர்கள் என்பதில் ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்குவர். பாடசாலையின் அண்மிய சமூகமாக பெற்றோர் உள்ளனர். சமூகத்தில் ஒரு நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதும் சமூகத் தொடர்பாடலாகும். பொதுவாக சமூகத்தில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த உபயோகிக்கும் முறை அதிகாரப் பிரயோகமாகும். அதில் தண்டனையும் அடங்கும். ஆயினும், அதிகாரப் பிரயோகத்தினால் ஏற்படுத்தப்படும் நடத்தை மாற்றம் நிரந்தரமாக அமையாது. எனவே, உண்மையான நடத்தை மாற்றத்தை, சமூகத்தின் சிந்தனை மாற்றத்தினால் மட்டுமே ஏற்படுத்த முடியும்.

அதன் மூலம் புதிய எண்ணக்கருத்துக்களைத் தோற்றுவிக்க முடியும். அதற்காக எந்த முறையைப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. ஒருவருக்குப் பொருந்தும்முறை, மற்றொருவருக்குப் பொருந்தாதிருக்கலாம். எனவே, பாடசாலைச் சமூகம் பற்றி நன்கு ஆய்ந்த பின்னரே தொடர்பாடல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். எந்த நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது என்பதைச் சரியாக இனங்கண்ட பின்னர் திட்டமிட வேண்டும். சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- பாடசாலைகளில் வலது பக்கத்தால் நடக்கப் பழக்குதல்
- படிகளில் ஏறும்போது வலது பக்கத்தால் ஏறப் பழக்குதல்
- ஆங்காங்கே துப்பும் பழக்கத்தை இல்லாதொழித்தல்
- கழிவுகளை உரிய இடத்தில் இடுவதற்கு பழக்குதல்
- வகுப்பில் நுழையும், வகுப்பில் இருந்து வெளியேறும் வேளைகளில் ஒழுங்கான நடத்தையை ஏற்படுத்துதல்.

சமூகத் தொடர்பாடல் நிகழ்ச்சி ஏனையவற்றைவிட சற்றுச் சிரமமானது. நடத்தை மாற்றம் என்பது இலகுவான விடயமன்று. எனினும், ஒரு குழு தம் முயற்சியைச் சரியாக அறிக்கையிட்டால் மற்றக் குழு அவ்விடத்தில் இருந்து ஆரம்பிக்கலாம். வேறு ஒரு முறையில் பரீட்சித்துப் பார்க்கலாம். எதனையும் சிரமம் என்று கைவிடத் தேவையில்லை.

## 10.6 சமாதானத் தொடர்பாடல் செயற்றிட்டம்

இன்று சமூகத்தில் ஒவ்வொரு வகையில் அமைதி, ஒத்துழைப்பு, சிதைந்து போவதனைக் காணலாம். அது கவலைக்குரிய விடயம். ஒவ்வொருவருக்கிடையில் நட்பையும் ஒத்துழைப்பையும் தோற்றுவிக்கக்கூடிய சிறந்த இடம் பாடசாலையாகும். இதற்கான பல நிகழ்ச்சிகளை நடத்தலாம். இதன் இறுதி இலக்காக அமைய வேண்டியது பாடசாலை மாணவர்களிடையே சமாதான உணர்வை விருத்தி செய்வதும் மோதல்களை இழிவளவாக்குவதும் ஆகும். பாடசாலையில் வன்முறைகளைத் தவிர்க்க முடியுமானால் அது பெரும் வெற்றியாகும். இதற்கான வேலைத்திட்டங்கள் ஓரிரு நாட்களில் நடத்தி முடிக்க முடியாது. வருடம் பூராவும் சிறிய நிகழ்ச்சிகளைத் தொடர வேண்டும். பல குழுக்கள் இதில் ஈடுபட வேண்டும். சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுகின்றன.

- பொலிஸ் சமூகப் பிரிவின் ஒத்துழைப்புடன் விழிப்பூட்டல்
- சமயத் தலைவர்களை அழைத்து, சமாதான வாழ்வின் பெறுமானம் பற்றிய அறிக்கை செய்தல்
- சமாதானம் தொடர்பான சுவரொட்டிகளைத் தயாரித்து ஒட்டுதல்
- சமாதானத்தைத் தொனிப்பொருளாகக் கொண்ட பாடல்களை ஆக்குதல்
- சமாதானத்தைத் தொனிப்பொருளாகக் கொண்ட இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

## 10.7 அனர்த்த / ஆபத்து தொடர்பாடற் செயற்றிட்டம்

இது பாடசாலைக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் செயற்றிட்டமாகும். அனர்த்தங் களை எதிர்கொள்வது தொடர்பான பயிற்சிகளை வழங்குவதும் ஆபத்தான சூழ்நிலைகள் பற்றிய தேர்ச்சிகளை விருத்தி செய்வதும் இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். அனர்த்தங்களை கட்டுப்படுத்தல், ஆபத்துக்களில் இருந்து தவிர்த்துக் கொள்ளல் என்பன இதன் நோக்கமாகும். எல்லா இடங்களிலும் ஆபத்து நேரலாம். அவதானமாகச் செயற்படலே இதற்கான பரிகாரம்.

பாடசாலையில் அங்குமிங்கும் ஓடும் போது விழுந்து விட முடியும். விஞ்ஞான கூடத்தில் உரிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றாமையால் ஆபத்துக்கள் ஏற்பட முடியும். இருவர் மோதிக் கொண்டால் காயமடைய முடியும். காலில் வழுக்கி விழுந்து விட முடியும். பஸ்ஸில் அவசர நிறுத்துகையின் போது, முன்னுள்ள ஆசனத்தின் விளிம்பில் முகம் மோத முடியும்.

அனர்த்தம் என்பது கூட்டாக எதிர்கொள்ள வேண்டிவரும் ஒன்று. அனர்த்தங்களைக் குறைக்க அல்லது கட்டுப்படுத்த முடியும். அதனைத் தெரிந்து வைத்திருந்தால் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும். அனர்த்தங்களை எதிர்கொள்ள ஆயத்தமாகுவதும் முக்கியமாகும். தீ, வெள்ளம், புயல் போன்ற நிலைமைகளை எதிர்கொள்வது எவ்வாறு? கவனயீனமாக நடந்து கொண்டால் பாரிய இழப்புகள் ஏற்படலாம். அனர்த்தங்கள், ஆபத்துக்கள் என்பன பாடசாலையுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது எங்கும் நடக்கலாம் என்பன வீட்டிலும் அது நடக்கலாம்.

எனவே, அனர்த்த ஆபத்து தொடர்பாடற் செயற்றிட்டத்தின் கீழ் பல்வேறு அனர்த்தங்கள், ஆபத்துக்கள் தொடர்பான அறிவை வழங்குவதோடு அவற்றை எதிர்கொள்ளப் பழக்குதல், அது பற்றிய புத்தகங்களை வாசிக்கச் செய்தல், நிபுணர்களைக் கொண்டு கருத்தரங்கு நடத்துதல் என்பவற்றை ஒரு குழு செய்யலாம்.

## (11) அங்கத்துவம்

பாடசாலையின் ஊடகக் கழகத்தின் அங்கத்துவம் இரு வகையில் காட்டப்படும். அங்கத்துவம் என்பது பொறுப்புடன் கூடியது என்பதை மாணவர்களுக்கு விளக்குவதே இதன் நோக்கம். அங்கத்துவப் படிவத்தை வழங்குவதன் மூலம் மட்டும் அங்கத்தவராக முடியாது. மாறாக பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதே அங்கத்துவமாகும்.

1. பூரண அங்கத்துவம் - இது ஆங்கிலத்தில் Full Member என்னும் சுருக்கமாக FM என்றும் அழைக்கப்படும். தொடர்பாடல் பாடத்தைக் கற்கும் மாணவர்களும் தொடர்பாடல் ஊடகத் தேர்ச்சியுள்ள மாணவர்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம். ஊடகக் கழகத்தின் உத்தியோகத்தர்களாக இவர்களே வர முடியும்.

2. துணை அங்கத்துவம் - இது ஆங்கிலத்தில் Associate Member என்றும் சுருக்கமாக AM என்றும் அழைக்கப்படும். தொடர்பாடல் ஊடகத் துறையில் ஈடுபாடுள்ள எவரும் இதனைப் பெறலாம். ஊடகக் கழகத்தின் உத்தியோகத்தர்களாக இவர்களால் முடியாது. எனினும் செயற்றிட்டங்களில் செயற்பட முடியும். துணை அங்கத்துவம் பெற்று மூன்று மாதத்தில் பூரண அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்க முடியும். கழகத்தின் பொதுக் கூட்டம் அதனை முடிவு செய்யும். அங்கத்துவப் பத்திரத்தில் FM, AM என்று பெரிய எழுத்தில் எழுதப்படும்.

## (12) வருடாந்தத் திட்டமிடல்

ஊடகக் கழகத்துக்குப் புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, ஒரு மாதத்தில் ஒரு வருடாந்தத் திட்டமிடலை மேற்கொண்டு கூட்டத்தில் முன்வைத்தல் வேண்டும். இது தலைவரின் பொறுப்பில் நடைபெறுவதுடன் அதில் சகல உத்தியோகத்தர்களும் பங்கு பற்ற வேண்டும். ஊடகக் கழகப் பொறுப்பாசிரியர்களின் அறிவுறுத்தலின் படியே வருடாந்த திட்டமிடல் தயாரிக்கப்பட வேண்டும். கழகத்தில் முன்வைக்க முன்னர் அதனை அதிபரிடம் காட்டி அனுமதி பெறப்பட வேண்டும். திட்டத்தின் இரண்டு பிரதிகளை பிரிஸ்டல் அட்டைகளில் தயாரித்து ஒன்றை அதிபரின் காரியாலயத்தில் வைக்க வேண்டும். இரண்டாவதை ஊடகக் கழக அறையில் காட்சிப்படுத்த வேண்டும்.

## (13) ஊடகக் கழகத்தின் அறிக்கைப் பத்திரம்

பொதுச்சபை, விஷேட கூட்டம், செயற்குழுக் கூட்டம் ஆகிய கூட்டங்களைச் சரியாக அறிக்கையிடல் செயலாளரின் பொறுப்பாகும். இதற்காக ஒரு சி. ஆர் (C. R) புத்தகத்தைப் பயன்படுத்தலாம். முடியுமானால் கணினி மயப்படுத்தலாம். அறிக்கைகள் தலைவர், ஊடகக் கழகப் பொறுப்பாசிரியரின் ஒப்பமிட்டு அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

## 02. ஊடகப் பயிற்சி கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் பிள்ளைகளைப் பங்கு கொள்ளச் செய்யுங்கள்

1. **அறிமுகம்** - ஊடகப் பயிற்சி வேலைத்திட்டம் 2006 ஆம் ஆண்டில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இதில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கையை ஒரு பாடமாகக் கற்கும் தரம் 10 மாணவர்களும் தரம் 12 இன் இறுதித் தவணை மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இம் மாணவர்கள் பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஒரு காரியாலயத்தில் வேலைப் பயிற்சி பெறுதலே இவ் வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக பின்வரும் அடிப்படையில் மாணவர்கள் ஈடுபடுத்தப் படுகின்றனர்.
   (1) தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஏதாவது ஓர் அரசாங்க காரியாலயத்தில்.

   (2) தரம் 12 இல் கல்விகற்கும் மாணவர்கள் சமுர்த்திக் காரியாலயத்தில்

2. **நோக்கம்** - தரம் 10 இல் தொடர்பாடல் ஊடகக் கற்கைப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு தொடர்பாடல், ஊடக உலகம் பற்றிய நேரடி அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்தலும், தரம் 12 இல் தொடர்பாடல் ஊடகக் கற்கையைப் பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கு அபிவிருத்தி, தொடர்பாடல், வேலையுலகம் பற்றிய நேரடி அனுபவத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பளித்தலுமாகும்.

3. **ஒழுங்கமைக்கும் முறை** - பொறுப்பாசிரியரினால் அதிபரின் அனுமதியுடன் இது ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

   - பொருத்தமான காரியாலயத்தைத் தெரிவு செய்தல்
   - காரியாலயப் பிரதானிகளின் அனுமதி பெறல்
   - பாதுகாப்பு ஏற்பாடுகள், சுகாதார வசதிகளைத் தேடிப்பார்த்தல்
   - மாணவர்களின் ஒப்புதலையும் உறுதிப்பாட்டையும் பெறல்
   - பெற்றோரின் அனுமதியைப் பெறல்
   - வேலைத்திட்டத்தை வலயக் காரியாலயத்துக்கு முன்வைத்து அனுமதி பெறல்
   - பெற்றோர், மாணவர் கூட்டமொன்றை நடத்துதல்
   - உரிய மாணவர்களை காரியாலயங்களுக்கு வழிப்படுத்தி அனுபவம் பெறச் செய்தல்
   - உரிய மேற்பார்வைகளைச் செய்தல்
   - வேலைத்திட்ட முடிவில் பாடசாலையில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்தல்
   - இறுதி அறிக்கையைத் தயாரித்து உரிய வகையில் முன்வைத்தல்

முன்னைய அனுபவத்தின்படி, இவ் வேலைத்திட்டத்திற்கு அரசாங்கக் காரியாலயங்கள் பூரண ஒத்துழைப்பை நல்கியதாகவும் பெரும்பாலான மாணவர்கள் இதில் பங்கு பற்றியமையும் தெரிய வந்துள்ளது. 10 ஆம், 12 ஆம் தரத்தில் கற்கும் ஏனைய பாட மாணவர்களும் இதில் இணைந்து கொள்ள விரும்பும் பட்சத்தில் அதிபரின் அனுமதியுடன் அவர்களையும் சேர்த்துக் கொள்வது பொருத்தமானது.

4. **பொது விடயங்கள்** - இவ் வேலைத்திட்டத்தில் கலந்து கொள்வதும் கலந்து கொள்ளாததும் ஒவ்வொரு மாணவரின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். அத்துடன் பெற்றோரின் ஒப்புதலும் வேண்டும். வேலைப் பயிற்சி, குறிப்பிட்ட ஒரு விஷேட பயிற்சி என்பன எதிர்பார்க்கப்படுவதில்லை. காரியாலயத்தில் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அது நடைபெறும் விதத்தைப் பற்றிய ஓர் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. **வேலைப் பயிற்சி தினக்குறிப்பு –** அனைத்து மாணவரும் குறிப்பிட்ட பயிற்சித் தினத்தின் போது, ஒரு குறிப்பேட்டில் எல்லா விடயங்களையும் பதித்துக் கொள்ள வேண்டும். இதற்கென ஒரு சிறிய ஸீ. ஆர். புத்தகத்தைப் பயன்படுத்தலாம்.

6. **வேலைப் பயிற்சிக் காலப் பிரிவு –** பொதுவாக வருடத்தில் ஜுன் மாத இறுதி வாரத்தில் ஐந்து தினங்களை இதற்காக ஒதுக்கலாம். எனவே, ஜுனில் இருந்து ஏற்பாடுகளைச் செய்யலாம். பாடசாலையின் வசதிப்படி இக்காலப் பிரிவை அமைத்துக் கொள்ள முடியும்.

## உறுதியுரையும் பெற்றோர் கூற்றும்

**மாணவர் உறுதியுரை**

இதன் கீழ்க் கையொப்பமிடும் ......................................... வித்தியாலயத்தின் 10/12 ஆம் தரத்தில் கற்கும் ........................................................................................................... என்ற முகவரியில் வசிக்கும் .................................................................... ஆகிய நான் 20..... ஆண்டு .............. மாதம் ................................ திகதிகளில் நடைபெறும் ஐந்து நாள் பாடசாலை வேலைப் பயிற்சி நிகழ்ச்சிகளில் விருப்பத்துடன் பங்குபற்றுவேன் எனவும் அப் பயிற்சி காலத்தில் நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் கட்டுப்பாட்டுடனும் ஏனையவர்களுடன் ஒற்றுமையுடனும் அன்பாகவும் நடந்து கொள்வேன் எனவும் இப்பயிற்சித்திட்டம், எனது எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டுக்கொள்ள உதவும் ஒன்றாகக் கருதி, பொறுப்புடன் நடந்து கொள்வேன் எனவும் இவ்வேலைப் பயிற்சி வேலைத்திட்டத்தின் உச்ச பயனை பெறுவேன் என்றும் உறுதியளிக்கின்றோன்.

திகதி .......................    கையொப்பம் ..................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் கூற்று**

மேலே கையொப்பமிட்டுள்ள..................................................................................... ..................................................... வித்தியாலயத்தின் 10 / 12 தரத்தில் கல்வி பயிலும் .................................................................................................. என்ற மாணவன் / மாணவி ............................................................ இல் நடைபெறும் ஐந்து நாள் பாடசாலை வேலைப் பயிற்சி நிகழ்ச்சியில் ...................................................... ஆம் திகதிகளில் பங்குபற்றுவது குறித்து எனது விருப்பத்தை இத்தால் தெரிவிக்கிறேன். அவரை காலையில் உரிய இடத்துக்கு அழைத்து வந்து மீண்டும் அழைத்துச் செல்லும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றும், இவ் வேலைத்திட்டத்தில் அவர் பங்குபற்றுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

.....................................................

திகதி .......................................    தாய் / தந்தை / பாதுகாவலர்

பெயர் .........................................

முகவரி ...................................................................................................

ஒப்பம் ...................................................................................................

(ஊடகப் பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பான விளக்கங்கள் அதற்காகத் தயாரிக்கப் பட்ட கைந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.)

## 03. ஊடகக் கற்கை ஒரு வார நிகழ்ச்சித்திட்டம்

**1. அறிமுகம்** - தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் என்ற பாடத்தை எடுக்காத மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் ஊடகக்கல்வி பற்றிய ஒரு தெளிவை வழங்கவும், அவர்களின் மனப்பாங்கு விருத்திக்காகவும் இது நடத்தப்படுகிறது. இது முதல் தடவையாக 2009 இல் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இதன் இறுதி நோக்கம் திறனாய்வு ரீதியான ஊடகப் பயனாளிகளை பாடசாலையில் இருந்து சமூகத்துக்கு வழங்குவதற்கான அடிப்படைகளை ஏற்படுத்துவதாகும்.

**2. ஒழுங்கமைப்பு** - தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தைக் கற்கும் மாணவர்களும் அதனை கற்பிக்கும் ஆசிரியர்களும் இணைந்து இதனை ஏற்பாடு செய்வர். இதற்கான உதவிகளை ஏனைய ஆசிரிய, மாணவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பாடத்தை கற்கும் மாணவர்களின் உதவியை நாட வேண்டும்.

**3. காலப் பிரிவு –** 2009 ஊடகக் கல்வி வாரம் ஒக்டோபர் 26 – 30 தினங்களில் இடம் பெற்றது. இதன்படி தொடர்ந்து வரும் வருடங்களில் அதே திகதியை ஏற்பாடு செய்து கொள்ள முடியும். இருந்தும் பாடசாலையின் வசதியை பொறுத்து மாற்றிக் கொள்ள அவகாசமுண்டு.

**4. நிகழ்ச்சிகளின் இயல்பு**

**1 ஆம் நாள்**

ஆரம்பதினம் - சுவரொட்டி, சித்திரம் முதலான ஆக்கங்களைத் திறந்து வைத்தலை இத்தினத்தில் செய்ய முடியும். ‘‘பொறுப்புடன் ஊடகத்தைக் கையாளல்’’ என்ற கருத்தரங்கை பாடசாலையில் நடத்தலாம்.

**2 ஆம் நாள்**

ஆற்றுகைத் தினம் - நாடகம், இசை நிகழ்ச்சி, வகிபாகமேற்றல்.

**3 ஆம் நாள்**

பாடசாலையின் சிறப்புத் தினம் - பற் சுகாதார சிகிச்சை நடத்துதல், உளச் சுகாதார அறிவை வழங்கும் கருத்தரங்கை நடத்துதல். (பொருத்தமான வளவாளர் மூலம்)

**4 ஆம் நாள்**

ஊடக எழுத்தறிவு தினம் / ஆரம்ப வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஊடகமும் பிள்ளையும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்துதல், கலந்துரையாடல் நடத்துதல், இதில் ஊடகக் கல்வியை கற்கும் மாணவர்களின் விரிவுரைகள் இடம்பெற வேண்டும். பொருத்தமான வளவாளர்களையும் அழைத்துக் கொள்ளவும்.

**5 ஆம் நாள்**

ஊடக நடை பவனி – புத்திசாதுரியமாகவும், பொறுப்புள்ளவராகவும் ஊடகத்தைப் பயன் படுத்துவதை வலியுறுத்தும் பதாகை, சுவரொட்டி ஏந்தியபடி, குறிப்பிட்ட அனுமதியுடன் அதனை நடத்தலாம்.

# 4. யுனெஸ்கோ உலகப் புத்தக தின நிகழ்ச்சித்திட்டம்

**1. அறிமுகம் -** யுனெஸ்கோ நிறைவேற்று சபை 1995 ஆம் ஆண்டில் எடுத்த தீர்மானத்தின்படி 1996 இருந்து ஒவ்வொரு ஏப்ரில் 23ஆம் திகதியையும் உலக புத்தக தினமாகப் பிரகடனம் செய்தது. அதன்படி 2010 ஆம் ஆண்டில் 15வது உலகப் புத்தக தினம் கொண்டாடப்பட்டது. பாடசாலை ஊடகக் கழகத்தின் ஒரு நிகழ்ச்சியாக உலகப் புத்தக தின நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுதல்.

2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பாவனை இலக்காகப் புத்தக தினம் என்று பெயர் குறிப்பிடப்பட்டாலும் உலக புத்தக மற்றும் வெளியீட்டுரிமையுடன் தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெறும். ஏப்ரில் 23 ஆம் திகதி முதலாம் தவணையின் பின்பு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு முதலாம் வாரமாக இருக்கும் (முஸ்லிம் பாடசாலைகளில் வித்தியாசமாக இருக்கலாம்.) எனவே, தொடர்ந்து வரும் ஒரு வியாழக்கிழமையை இதற்காக ஒதுக்கலாம். உலகப் புத்தக தின நடப்புகள் பற்றிய உங்கள் கேள்விகளுக்கான விடையை அறிய, உலக நாடுகளில் இத்தினத்தில் மேற்கொள்ளப்படும் நிகழ்வுகளை அறிதல் பொருத்தமாகும்.

### மாதிரி வேலைத்திட்டம்

(1) தெரிவு செய்யப்பட்ட சில புத்தகங்களில் சில பாத்திரங்களை மாணவர்களை வகிபாகமேற்கச் செய்து இதனை ஆரம்பிக்கலாம்.
(2) ஜனரஞ்சமான 10 புத்தகங்களை வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்தல்
(3) புத்தகங்களில் உள்ள கதைகளைச் சொல்லும் நிகழ்வை நடத்துதல்
(4) நூலாசிரியர்களைப் பாடசாலைக்கு அழைத்து ஒரு நிகழ்ச்சி நடத்துதல்
(5) நூலக வாரம் ஒன்றை நடத்துதல்
(6) மாணவர்கள் தாம் விரும்பிய பழைய புத்தகத்தின் பாத்திரமாக உடையணிந்து அந்தப் புத்தகத்தையும் கொண்டு வந்து பாடசாலைக்கு ஒப்படைத்தல்
(7) புத்தக வாசிப்புக்காக, திறந்த கூடாரம் ஒன்றை ஒரு வாரத்துக்காக பாடசாலை முன்றலில் அமைத்தல்
(8) சிறுவர் எழுத்தாளர், ஓவியரை பாடசாலைக்கு அழைத்து ஒரு நிகழ்ச்சி நடத்துதல்
(9) புத்தகத்தின் பாத்திரங்களுக்கேற்ப முகமூடியணிதல்
(10) புத்தக நிலையமொன்றுக்காக களப் பயணம் மேற்கொள்ளல்
(11) ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு புத்தாக்கத்தை கூறும் நிகழ்ச்சியொன்றை நடத்துதல்
(12) கதை எழுதும் ஆசிரியர் மூலம் கதை சொல்லும் போட்டியை நடத்துதல்
(13) ஒரு நூலாசிரியரின் சேவை நலன் பாராட்டு நிகழ்வு
(14) பாடசாலை மாணவர் ஒருவரின் அல்லது வேறு பயனுள்ள ஆக்கங்களை வெளியிடும் நிகழ்ச்சியை நடத்துதல்
(15) ஒரு நூலாசிரியரின் நூல்களை மதிப்பிடும் நிகழ்ச்சி
(16) ஒரு புத்தக வெளியீட்டை நடத்துதல்
(17) நூலகத்துக்கான நூல்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி
(18) கவிதை எழுதும் / கவிதை சொல்லும் போட்டியை நடத்துதல்
(19) உலக புத்தக தினம் என்ற தொனிப்பொருளில் சுவரொட்டி / ஓவியப் போட்டி நடத்துதல்
(20) கதை கூறும் மண்டபம் ஒன்றைத் திறத்தலும் கதையில் உள்ள பாத்திரங்களாக மாணவர்களை அணிவித்தல்
(21) கதைகளில் வரும் பாத்திரங்களுக்குரிய வேடமணிந்து கதை கூறவும்
(22) பாடசாலை நூலகத்துக்கு நூல்களை வாங்கும் நோக்கில் புத்தக விற்பனையொன்றை நடத்துதல். பெற்றோர் / பழைய மாணவர்கள் புத்தகங்களை வாங்கி நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்தல்

(23) உலகப் புத்தக தினத்தின் பிறந்த தினத்தை நூலகத்தில் கொண்டாடுதல்
(24) பன்னாட்டுக் கதைகளைக் கூறும் நிகழ்ச்சி நடத்துதல்
(25) புத்தகம் தொடர்பான குறுக்கெழுத்துப் புதிர் போட்டி நடத்துதல்
(26) நாய், பூனை, நரியாக வேடமணித்து அவை சார்ந்த கதைகள் கூறுதல்
(27) புத்தகம் தொடர்பான அறிவுக் களஞ்சியப் போட்டி நடத்தி, புத்தகங்களைப் பரிசாக வழங்குதல்
(28) விரும்பிய நிகழ்ச்சிகளை நடத்த மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கிப் புத்தகங்களை பரிசாக வழங்குதல்
(29) புத்தகம் தொடர்பான இரசனையுடன் கூடிய விமர்சன ரீதியான திறனாய்வு நிகழ்ச்சியை வளவாளர் களம் அமைத்து நடத்துதல்
(30) வீட்டு நூலகம் அமைத்தலை ஆரம்பித்து வைத்தல்

## 5. எமது பாரம்பரியம் - பாடசாலை நிலையம்

**1. அறிமுகம்** - இவ் வேலைத்திட்டம் ஊடகக் கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் தேடல் செயற்றிட்டத்துடன் தொடர்புபட்டது. எமது பாரம்பரிய பாடசாலை நிலையத்தினால் எதிர்பார்க்கப்படுவது பாடசாலையின் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதாகும். அதில் பல விடயங்கள் அடங்கும். சில பாடசாலைகள் மட்டும் தம் பாரம்பரியத்தை ஓரளவு அமைத்துக் கொள்வதைக் காணலாம். ஆயினும், பல பாடசாலைகள் தம் பாரம்பரியம் பற்றிய சரியான கவனத்தைச் செலுத்தவில்லை. இக் குறைபாட்டை நீக்க ஊடகக் கழகம் முன்வர வேண்டும். இதன் மூலம் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், பாடத்தைக் கற்கும் மாணவர்கள் அது பற்றிய தேடலில் ஈடுபடும் அனுபவத்தைப் பெறுவர்.

**பாடசாலைப் பாரம்பரியம்**

| | |
|---|---|
| ஆரம்பமும் அதனுடன் தொடர்பானவர்களும் | வளர்ச்சியும் விஷேட தடைதாண்டல்களும் |
| முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள் | பழைய மாணவர்கள் |
| விஷேட அழைப்பாளர்கள் / ஆசிரியர்கள் | கல்விச் செயலாளர்கள் |

**ஊரின் பாரம்பரியம்**

| | | |
|---|---|---|
| கலாசாரம் | சமூகச்சிறப்புகள் | பூகோளச் சிறப்புகள் |
| உற்பத்திகள் | சிறப்பான இடங்கள் | நீர்ப்பாசனம் |
| மக்கள் வாழ்க்கை | சமூகப் பழக்கங்கள் | .................................... |
| | | .................................... |

மேற்கூறிய தகவல்களைத் தேடல் குழுவாகவும் தனியாகவும் செய்ய முடியும். அதற்கான அடிப்படைத் திட்டத்தைத் தயார் செய்து கொள்ள வேண்டும். எவ்வாறு தகவல்களைப் பெற்றுக் கொள்வது? எங்கிருந்து? யாரிடமிருந்து, என்ற வினாக்களுக்கு விடை காண வேண்டும்.

எமது பாரம்பரியம் - பாடசாலை நிலையம் வேலைத்திட்டத்தைக் கவனிக்க வேண்டியது அது நீண்ட கால வேலைத்திட்டம் என்பதால் ஆகும். எனவே குறுங்கால வேலைத்திட்டத் தினை பகிர்ந்தளித்து படிப்படியாக வளர்த்துச் செல்லமுடியும்.

எமது பாரம்பரியம் - பாடசாலை நிலையம் என்பதற்குத் தனியான ஓர் இடம் தேவையில்லை. நூலகத்தின் ஒரு பகுதியில் அதனை ஆரம்பிக்கலாம். தனியான ஓர் இடம் பெற முடியுமானால் அங்கு ஆரம்பிக்கலாம். முக்கிய விடயம் என்னவெனில் எப்படியாவது இதனை ஆரம்பிக்க வேண்டும் என்பதேயாகும்.